முஸ்லிம்லீக் சரிதை



ஆசிரியர்

மௌலவி அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப்

(முன்னேற்றம் ஆசிரியர்)

இஸ்லாத்தின் போதனை, கொள்கைகள் பற்றிய அற்புதமான ஆராய்ச்சி நூற்கள்.

தர்ஜுமத்துல் குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு (1-ம் பாகம்)	2	0	0
இஷா அத்துல் ஹஸனத் (மார்க்க விதி விலக்குகள் பற்றிய விளக்கம்)	2	0	0
இயற்கை மதம்	0	10	0
சுன்னத்து ஜமா அத்தின் விஸ்வாசம் (3ம்பதிப்பு இஸ்லாமிய கொள்கைகள் விளக்கம்)	0	10	0
அயோத்திய கப்ரிஸ்தானில் ஒரு நற்பாக்கிய ஆத்மா அல்லது குர்ஆனின் அபூர்வ தெய்வீக சக்தி	1	2	0
இஸ்லாத்தின் சிறப்பு (சொற்பொழிவு)	0	2	0
இஸ்லாம் (1-ம் பாகம் ஹனபி)	0	5	0
,, (2-ம் ,, ,,)	0	7	0
,, (1-ம் ,, ஷாபி)	0	6	0
பைபளின் முன்னறிக்கை (1-ம் பாகம்)	0	4	0
,, (2-ம் பாகம்)	0	4	0
சாமவேதத்தின் முன்னறிக்கை	0	4	0
இயேசுநாதர் சிலுவையிலறையப்படவில்லை	0	3	0
கிறிஸ்தவர்களுக்கோர் சன்மானம்	0	6	0
ஆரியமத ஆராய்ச்சி	0	3	0
பர்தா பிரமாணங்கள்	0	6	0
திருக்குர்ஆனும் பிறமதத்தாரும்	0	12	0
ஆறுகோடி மக்கள்	0	4	0
கலிமா விபரம்	0	0	6
இக்பாலின் இதயம் ("ஷிக்வா ஜவாபெஷிக்வா")	0	6	0

சரித்திர சம்பந்தமான நூற்கள்.

நபிகள் நாயகம்	0	5	0
இந்திய முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி	0	10	0
இஸ்லாத்தின் இறுதி நபி	0	1	0
இஸ்லாமிய சரிதை (1-ம் பாகம்)	0	14	0
,, (2-ம் பாகம்)	0	12	0
,, (3-ம் பாகம்)	0	8	0
,, (4-ம் பாகம்)	0	11	0

முஸ்லிம் லீக் சரிதை.

(முதற் பாகம்)

ஆசிரியர்:
மௌலவி, மீ இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப்,
(நூரிய்யி, பாஜில்பாக்கவி)
("முன்னேற்றம்" ஆசிரியர்)
தென்காசி.

வெளியீட்டகம்
இக்பால் பப்ளிஷிங் ஹவுஸ்,
அடியற்கைமங்கலம் :: தஞ்சை ஜில்லா

2
25
29 ஜிரி 1367]

1947

[விலை ரு. 2—0—0

முதற் பதிப்பு. காப்பிகள் 1000.

கிடைக்குமிடங்கள்:

1. இக்பால் பப்ளிஷிங் ஹவுஸ்,
அடியற்கைமங்கலம்.
(தஞ்சை ஜில்லா)

2. மௌலவி அபுல்ஹஸன்ஷாதலி ஸாஹிப்,
"முன்னேற்றம்" ஆசிரியர்.
திருநெல்வேலிப் பேட்டை.

3. முஸல்மான் ஆபீஸ்,
தென்காசி.

4. ஜனுப் K. மதார் ஸாஹிப்,
ஓரியண்டல் நியூஸ் மார்ட்,
166, கெய்ஸர் ஸ்ட்ரீட், கொழும்பு.

5. "முன்னேற்றம்" பத்திரிகையின் ஏஜெண்ட்
களிட, [illegible] ளலாம்.

ஹமீதா பிரஸ், திருநெல்வேலி

முஸ்லிம் லீக் சரிதை

திரட்சி

கவனிக்கவேண்டியவை

பதிப்புரை

இந்தியா சுதந்திர மெய்தியதில் காங்கிரசிற்கு அடுத்த பங்கு முஸ்லிம் லீகினுடையதே. ஆனால் உலகத்தில் ஒரு பெரிய முஸ்லிம் சுதந்திர ராஜ்யத்தை - பாகிஸ்தானை - தோன்றச் செய்த பங்கு பூராவும் முஸ்லிம் லீகினுடையதே. இத்தகைய மகா சபையின் சரிதையை ஒவ்வொரு சுதந்திர இந்தியனும் படித்துணருவது மிக அவசியம். இந்த அவசியத்தைத் தமிழ் மக்கள் சார்பில் பூர்த்தி செய்வதற்குமுன்வந்த "முன்னேற்றம்" ஆசிரியர் **மௌலவி அபுல்ஹஸன்ஷா தலி ஸாஹிப்** அவர்களின் பணி மகத்தானதாகும். இத் தொண்டிற்காகத் தமிழகம் என்றென்றும் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. அக்கடமை இந்நூலை வாங்கி வாசிப்பதன் மூலமும் நிறைவேறுகிறது. அதைத் தமிழ் மக்கள் பூரணமாகச் செய்வார்களென நம்புகிறேன்.

15—8—47
இக்பால் பப்ளிஷிங் ஹவுஸ்,
அடியற்கைமங்கலம்,
(தஞ்சை ஜில்லா.)

S. A.
அப்துர் ரஸ்ஸாக் ஷா காதிரி
(பதிப்பாசிரியன்)

மதிப்புரை

[சென்னை மாகாண முஸ்லிம் லீக் தலைவரும் சென்னை சட்ட சபையின் எதிர்கட்சித் தலைவரும் முஸ்லிம் சமுதாயத்தின் தனிப்பெரும் தளபதியுமான கனம் M. முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் பஹதூர் M L.A. அவர்கள் அளித்த மதிப்புரை.]

அன்பும் ஆதரவுமான அல்லாஹூ-வின் திருநாமத்தால். எந்த சமுதாயமும் ஒன்றுபட்டு முன்னேறுவதற்கு இன்றியமையாதது ஒரு சமூகஸ்தாபனம். அச்சமுதாயத்தின் பலத்தை எடுத்துக் காட்டும் கருவியும் அந்த ஸ்தாபனமேயாகும். இந்திய முஸ்லிம்களுக்கு அவ்வித ஸ்தாபனமாகவும் கருவியாகவும் அமைந்தது முஸ்லிம் லீக். முஸ்லிம் லீகின் சரிதை, முஸ்லிம் சமுதாயத்தின் விழிப்பு, முன்னேற்றத்தின் சரித்திரமாகும்.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்னர், "இந்தியாவில் இரண்டே கட்சியினர்தான் உண்டு; அதில் ஒரு கட்சியினர் ஆளுவோரான பிரிட்டிஷார்; மற்றொருவர் காங்கிரஸ் சபையார்" என்று பண்டித ஜவஹர்லால் நேரு முஸ்லிம்களைப் புறக்கணித்துக் கூறினர். பிரிட்டிஷாரைப்போல் இரண்டரை மடங்கதிகமான முஸ்லிம்களை—பத்துக் கோடி மக்களை—இங்ஙனம் அவமதித்தது ஒரு பெரிய அரசியல் இழுக்காகும். ஆனால் இதுவும் இதுபோன்ற பிறவகைகளும் முஸ்லிம் முன்னேற்ற வேகத்தை அதிகப்படுத்தின; கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தின. உலக சரித்திரத்தில்

வேறெந்த பத்து வருஷத்திலும் வேறெந்த சமுதாயத்தி லும் காணமுடியாத அவ்வளவு உறுதியும், ஒற்றுமையும், காரியசித்தியும் இந்திய முஸ்லிம்களிடையே ஏற்பட்டன. அவர்கள் ஒன்றுபட்டு முஸ்லிம் லீகின்—இஸ்லாமின்— கொடியின்கீழ் உறுதியுடன் வந்து குழுமினர். முஸ்லிம்லீக் இந்திய முஸ்லிம்களின் நிகரற்ற ஏகப் பிரதிநிதித்துவ சபை என்பது உலகப் பிரசித்தமாய் விட்டது. உலகம் அதன் வளர்ச்சியின் வேகத்தையும் பலத்தையும் கண்டு பிரமிக்க லாயிற்று.

இவ்வாறான, மகத்தான, ஸ்தாபனத்தின் வரலாறு தமிழில் இல்லாதிருந்தது ஒரு பெருங் குறையே. அக் குறையை நிவர்த்திக்க, "முன்னேற்றம்" ஆசிரியரும் முஸ்லிம் லீகுக்கும் இஸ்லாமுக்கும் அரியபணி இயற்றிவருபவருமான ஜனாப் மௌலவி அபுல்ஹஸன் ஷாதலி சாஹிபவர்கள் இந் நூலை எழுதியதும், இஸ்லாமுடையவும் முஸ்லிம் லீகுடை யவும் உயரிய பணியின் முன்னணியில் நிற்கும் மற்றொரு சிறந்த ஊழியரான ஜனாப் அப்துர்ரஸ்ஸாக்ஷா-காதிரி சாஹிப் அவர்கள் இந்நூலை வெளியிடுவதும் பாராட்டத் தகுந்ததாகும். அவர்களிருவரும் இயற்கெனவே செய்து வரும் மதிப்புக்குரிய சேவைகளின் வரிசையில் இம்முயற்சி மேலான இடம் பெறும்.

27—4—47 }
சென்னை } மீ. முஹம்மது இஸ்மாயில்

திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் லீகின் கௌரவ
காரியதரிசியும் சிறந்த வழக்கறிஞருமான
கனம்

K. முஹம்மது ஹுஸைன் ஸாஹிப் B.A.B.L., M.L.A

அவர்கள் அளித்த மதிப்புரை

"முன்னேற்றம்" ஆசிரியர் மௌலவி அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிபவர்களால் எழுதப்பட்ட "முஸ்லிம் லீக் சரிதை"யை வாசித்துப்பார்த்தேன். இந்த சரிதையில், முஸ்லிம்லீக் மகாசபை யாரால் எப்பொழுது என்ன நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டதென்பதும் அப்பால் எத்தகைய திட்டங்கள் வகுத்து சேவைசெய்துவந்திருக்கிறதென்பதும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அதைக் கவனிக்கும்பொழுது, ஹிந்து முஸ்லிம் வேற்றுமையால் இப்பொழுது நாடு சின்னாபின்னப்பட்டு சீர்குலைந்து வருவதற்கும் இந்தியா, பாகிஸ்தான், ஹிந்துஸ்தான் ஆகப் பிரிக்கப்படுவதற்கும் லீகுதான் காரணம் என்று காங்கிரஸ்வாதிகள் பறைசாற்றிவருவது துணிகரமான பொய் என்பதை நிரூபிக்கக்கூடியதாயிருக்கிறது.

1905-ல் ஏற்பட்ட வங்கப்பிரிவினையைக் கவனிப்போம். பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் மாகாண ஆட்சியின் வசதிக்காகவும் நிருவாகப்பளுவைக் குறைப்பான் வேண்டியும் டாக்கா, சிட்டகாங், மைமன்சிங் முதலிய ஜில்லாக்களை வங்கத்திலிருந்து பிரித்து அஸ்ஸாமோடு சேர்க்கத் தீர்மானித்தது. இதனை வங்க ஹிந்துக்களும் காங்கிரசும் கடுமையாக எதிர்த்தனர். முஸ்லிம்களையும் தங்களுடன் சேர்த்து பிரிவினையை எதிர்க்கும்படி தூண்டினர். சில தலைவர்களுட்பட பாமர முஸ்லிம்கள் பலரும் காங்கிரஸ்கூறுவதுசரி

பென நம்பி பிரிவினையை எதிர்த்துக் கிளர்ச்சி புரிந்தனர். பின்னர் கவனித்தபொழுது, அப்பிரிவினையால் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக ஒரே மாகாணத்தில் செல்வாக்குடன் வாழ ஏதுவிருப்பதாகக்கண்டனர். இக்காரணங்கொண்டே அவர்கள் பிரிவினையை ஆக்ஷேபிப்பதாகவும் எந்த மாகாணத்திலும் முஸ்லிம்கள் செல்வாக்குடன் வாழ அவர்கள் விரும்பவில்லை என்றும் நன்றாகத் தெரிந்துகொண்டனர். நவாப்ஸலீமுல்லாகான் முதலிய முஸ்லிம் தலைவர்கள் பிரிவினையை ஆதரித்துக் கிளர்ச்சிசெய்ய முற்பட்டனர். 1905–ல் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டும் தனது தீர்மானப்படி வங்கத்தைப் பிரித்தனர்.

இதனைக்கண்ட காங்கிரஸ் கொதித்தெழுந்து எண்ணற்ற கூட்டங்கள் கூட்டி பிரிவினையைப் பலமாகக் கண்டித்தனர். அதிகார வர்க்கத்தை எங்கும் தாக்க ஆரம்பித்தனர். பலவிதத்திலும் பலாத்காரத்தி லிடுபட்டனர். அத்துடன் முஸ்லிம்கள்பேரிலும் துவேஷத்தையும் ஆவேசத்தையும் ஜனங்களிடையே கிளப்பினர். முஸ்லிம்களை நிந்தித்தும் அவர்களை அடக்கி ஒடுக்கி அழித்துவிடவேண்டுமென்ற கருத்துக்கொண்ட விஷந்தோய்ந்த வந்தேமாதரக் கீதத்தை எங்கும் பாட ஆரம்பித்தனர். இதனால் ஹிந்து முஸ்லிம் வேற்றுமையும் பகைமையும் அழுக்காறும் அசூசையும் பறந்தது. முஸ்லிம்கள் கட்டுப்பாடின்றி அரசியல் ஆதிக்கமின்றி இருந்ததால் கிளர்ச்சியைச் சமாளிக்க வழியின்றி, சரியான ஸ்தாபனமின்றி வருந்தி நின்றனர். தங்களுக்குள் கட்டுப்பாடும் சரியான ஸ்தாபனமும் இல்லாமல் எதுவும் செய்ய இயலாதென்று தெளிவாக தெரிந்துகொண்டனர். இந்த விழிப்பை அவ்வமயம் சிறந்த அரசியல் ஞானியாக விளங்கிய நவாப் முஹ்ஸினுல்முல்க் அவர்கள் பயன்படுத்தி முஸ்லிம் போலிட்டிகல் அசோஷியேஷன் என்ற

ஒரு கழகத்தை நிறுவினர். முஸ்லிம்களிடையே கல்வி, அரசியல் ஞானம் இவற்றை பரப்புவதே குறிக்கோளாகக் கொள்ளப்பட்டது. இக்கழகத்தின் மூலம் இந்திய முஸ் லிம்கள் தங்கள் கடமை, உரிமை முதலியவைகளை உணர முடிந்தது. 1906-ல் டாக்காவில் கூடிய அகில இந்திய முஸ்லிம் கல்வி மகாநாட்டில் முஸ்லிம் லீக் என்ற அரசியல் சபை அமைக்கப்பட்டது. அப்பால் முஸ்லிம் லீகின் முதல்மகாநாடு 1907-ல் கராச்சியில் நடைபெற்றது. எனவே முஸ்லிம் லீக் மகாசபை, கிழக்குப் பாக்கிஸ்தானின் தலைநக ராகிய டாக்காவில் பிறந்து பாக்கிஸ்தான் டொமினியனின் தலைநகராகிய கராச்சியில் வேலையைத் துடங்கினது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக முஸ்லிம்கள் ஸ்தாபனரீதியில் தங்கள் வருங்கால விதியை நிர்ணயித்துக்கொள்ள ஒரு பக்கத்தில் பாடுபட்டுவரும்போது, காங்கிரஸ் சபை, இந்திய அரசியல் உலகத்தில் ஹிந்துக்களின் [அதாவது ஆரியர்களின்] ஆதிக் கத்தை நிலைநிறுத்தவும் ஹிந்துக்களின் நன்மைக்கானவை களைச் செய்யவுமே முனைந்திருந்தது. இதை, வங்கப் பிரி வினையை ஆதரித்தும் எதிர்த்தும் நடந்த நிகழ்ச்சிகளி லிருந்து நன்கு தெரிந்துகொள்ளலாம். இந்த நிலைமையில் "ஹிந்து முஸ்லிம் வேற்றுமைக்கு முஸ்லிம் லீகும், தனித் தொகுதியும்தான் காரணம்" என்று அன்று முதல் இன்று வரை பறைசாற்றுகின்றார்கள். லீகும் தனித்தொகுதியும் ஏற்படுவதற்கு முன்னாலேயே காங்கிரஸ் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் எவ்விடத்திலும் செல்வாக்கடைய ஒட்டாமல் தடுப்பதையே கண்ணுங்கருத்துமாய்க்கொண்டு வங்கப் பிரிவினையை எதிர்த்தார்கள். முஸ்லிம்கள்பேரில் துவே ஷத்தை மூட்டும் வந்தே மாதரக் கீதத்தைப் பாடிப் பிரசார மும் செய்தார்கள். இந்து முஸ்லிம் வேற்றுமையை எவ்வி

தம் வளர்த்து வந்தார்களென்து இதற்குப் பின்னுள்ள அரசியல் நடபடிக்கைகளிலும் ஸ்பஷ்டமாகத் துலங்கும்.

கடந்த மகாயுத்தமும் முடிந்தது. கிலாபத் இயக்கமும் ஆரம்பமாயின. அந்த சந்தர்ப்பத்தில் பஞ்சாபில் ஜாலியன் வாலாபாக் படுகொலையும் நடந்தது. அதனால் காங்கிரசும் கிலாபத் கமிட்டியும் ஒன்றுசேர்ந்து கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்தன. கிலாபத் கமிட்டி மௌலானா ஷௌகத்அலி அவர்களின் தலைமையில் 18—4—1920-ல் சென்னையில் கூடிய போது, ஒத்துழையாமைத் தீர்மானம் ஏகமனதாக அதில் நிறைவேற்றப்பட்டது. அதற்கிணங்க சென்னை சட்ட சபை அங்கத்தினரான ஜனாப் யாகூப்ஹஸன் ஸேட், தமது பதவியை உதறித்தள்ளி ஒத்துழையாமைப் போரை ஆரம்பித்தார். இதைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் முஸ்லிமகள் சட்டசபைகள், நீதிமன்றங்கள் சர்க்காரைச்சார்ந்த விருந்துகள் சர்க்கார்கூட்டங்கள் ஆகியவைகளையெல்லாம்பகிரங்கமாக பகிஷ்கரிக்க ஆரம்பித்துவிட்டனர். காங்கிரஸ் கல்கத்தாவில்கூடி கிலாபத் கமிட்டியின் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்தது. அலி சகோதரர்களுடன் காந்திஜீயும் இவ்வியக்கத்தில் ஈடுபட்டார். திலகர், மாளவியா, லஜபதிராய் முதலிய ஹிந்துத் தலைவர்கள் எதிர்த்தும் ஹிந்துக்கள் இவ்வியக்கத்துக்கு ஆதரவுகொடுத்தனர். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை சிறந்து ஓங்கி நின்றது. முஸ்லிம் தலைவர்கள் ஹிந்துக்களைநம்பி இவ்வியக்கத்திற்கு காந்திஜீயையே தலைவராக ஏற்று அவர் ஆணைப்படியே நடந்துவந்தனர். இவ்வியக்கத்தில் ஹிந்துக்களைவிட முஸ்லிம்களே பெரும் பங்கெடுத்து தீவிரமாக செயலிலிறங்கினர். அலிகர் முஸ்லிம் சர்வகலாசாலையிலிருந்து வெளியேறிய முஸ்லிம் மாணவர்களுக்காக டில்லியில் ஜாமியா மில்லியா இஸ்லாமியா என்ற

தேசியகலாசாலையை அமைக்கப்பட்டது. காந்திஜி இக் கிளர்ச்சியை நன்கு பயன்படுத்திக்கொண்டு, அலிசகோதரர் களின் ஒத்துழைப்புடன் திலகர்நிதி என ஒரு கோடி ரூபாய் சேகரித்து காங்கிரசுக்குக் கொடுத்தார். இதேசமயத்தில் தான் கராச்சியில் அலிசகோதரர்கள் மீது சரித்திரப் பிர சித்திபெற்ற விசேஷ விசாரணை நடந்தது. அரசாங்கத்தை எதிர்த்து இவ்வழக்கில் மௌலானா முஹம்மதுஅலி அவர் கள் வாதாடியமுறை, இந்திய மக்களுக்கு ஒரு புத்துணர்ச் சியை உண்டாக்கியது.

1920-ல் கிலாபத்-ஒத்துழையாமை இயக்கத்தை மலே யாள மாப்பிள்ளை முஸ்லிம்கள் தீவிரமாக பின்பற்றலானார் கள். அடக்குமுறை அங்கு தாண்டவமாடின. தங்களின்மத பக்தி, தியாகபுத்தி, சுயமரியாதை ஆகியவற்றின் காரணமாக சற்றும் அச்சமின்றி அதி தீவிரமாக இயக்கத்தைப் பலப் படுத்தினர். இங்கு இவ்வியக்கம், மௌலானா யாகூப் ஹஸன் ஸேட் அவர்களும் பல முஸ்லிம் தலைவர்களும் கைதுசெய்யப் பட்டது முதல் தொடங்கியது. அரசாங்கத்தாரால் பொது மக்கள் பலாத்காரத்தில் இழுத்துவிடப்பட்டனர். இராணு வத்தைக்கொண்டு அவ்வியக்கத்தை அரசாங்கம் அழித்த னர். எண்ணற்ற முஸ்லிம் ஆண் பெண் குழந்தைகள் சுட்டுத்தள்ளப்பட்டனர். பலவிதத்திலும் இம்சிக்கப் பட்டனர். ஆரம்பத்தில் முஸ்லிமகளுடன் சேர்ந்திருந்த ஹிந்துக்கள், ராணுவத்தைக்கண்டதும் முஸ்லிம்களைக் காட்டிக்கொடுத்தனர். கூட்ஸ் வண்டிச் சம்பவமும் இந்த சந்தர்ப்பத்தில்தான் நடந்தது. ஆயிரக்கணக்கானோர் நாடு கடத்தப்பட்டனர்.

இவ்விதமாக ஒத்துழையாமைப்போர் மிக்க உச்சஸ் தானத்தை அடைந்துவரும்போது, வட இந்தியாவிலுள்ள

சௌராசௌரியில் அடக்குமுறையால் ஆத்திரம்கொண்ட ஹிந்துக்கள் அங்குள்ள போலீஸ்ஸ்டேஷனைத் தீக்கிரையாக்கினர். இதனைக்கண்ட காந்திஜீ திடீரென இயக்கத்தை நிறுத்திவிட்டார். இவ்விதம்செய்தது நடுக்கடலில் ஒத்துழையாமை இயக்கத்தை மூழ்கடித்துவிட்டதுபோலாயிற்று.

எனவே கிலாபத்-ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாக நாடெங்கும் அரசியல் உணர்ச்சி அதிகமாக ஏற்பட்டுவிட்டது. உயிரற்றிருந்த காங்கிரஸ்சபை பிரமிக்கத்தக்க வலிமை மிக்க அரசியல் ஸ்தாபனமாக மாறிற்று. இவ்வளர்ச்சிக்குக் காரணம், முஸ்லிம்களால் காங்கிரசுக்கு அளிக்கப்பட்ட புத்துயிர்தான். ஒத்துழையாமை இயக்கத்தை முதன் முதலில் தீர்மானித்தது கிலாபத் கமிட்டி, முதன் முதலில் ஒத்துழையாமையில் இறங்கியவர் ஒரு முஸ்லிம் பிரமுகரான சென்னை ஜனுப் யாகூப்ஹஸன் ஸேட் அவர்களே. ஒத்துழையாமைக்கு இலக்கானது அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலையே. ஒத்துழையாமை இயக்கத்தில் கைதுசெய்யப்பட்டு சரித்திரம் புகழும் விசாரணையில் ஈடுபட்டவர்கள் அலி சகோதரர்கள். அவ்வியக்கத்தில் இரத்தம் சிந்தி உயிர் துறந்த அபார தியாகிகள் மாப்பிள்ளை முஸ்லிம்கள். இந்த நிலைமையில் சுதந்திரப் போரில் ஈடுபட்டவர்களைப் பாராட்டிப்பேசும் காங்கிரஸ் தலைவர்கள், எந்த இடத்திலாவது முஸ்லிம்களின் தியாகத்தைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்களா? சுவாதீனம் பெற்றபின் தியாகிகளுக்குப் பரிகாரமளித்த காங்கிரஸ் மாகாண கவர்ன்மென்ட்கள், இவ்வரிய தியாகிகளுக்கு இதுவரை யாதொரு பரிகாரமும் செய்யவில்லை. இது வகுப்புவாதமா? தேசீமா? என்பது புரியவில்லை. காங்கிரஸின் மனோபாவம்இதிலிருந்து நன்குபுரிகிறதல்லவா? ஹிந்துமுஸ்லிம் வேற்றுமைக்கு காரணஸ்தர்கள்யாரென்பதுபுலப்படவில்லையா? உண்மைஇவ்வித

மிருக்க பிரசாரத்தின் வன்மையாலும் வசதியாலும் உண்மையை மறைத்தும் திரித்தும் "ஹிந்து முஸ்லிம் வேற்றுமைக்கு முஸ்லிம் லீகும் தனிப்பிரதிநிதித்துவமும்தான் காரணம்" என்று பறைசாற்றுபவர்கள், எத்தகைய நேர்மையுள்ளவர்கள் என்பது விளங்காதா?

1927-ல் இந்தியா மந்திரியாக இருந்த லார்டு பர்கன் ஹெட்டின்- "இந்தியர்கள், அரசியல் திட்டத்தை வகுக்கும் ஆற்றலற்றவர்கள்" என்னும்-அறை கூவலுக்குப் பதிலளிக்கும் முறையில் பண்டிதமோதிலால் நெஹ்ரு அவர்கள் தலைமையில் நெஹ்ருகமிட்டி அமைக்கப்பட்டது. இக்கமிட்டியாரால் தயாரிக்கப்பட்ட திட்டம் ஒருதலைப் பட்சமாகவும் ஓர வஞ்சகமாகவும் இருந்தது. இந்திய முஸ்லிம்களின் எதிர்கால வாழ்வை சீர்குலைப்பதாகவும் எந்த மாகாணத்திலும் சுதந்திரத்துடன் வாழமுடியாதபடியும் சூட்சிகரமான முறையில் அத்திட்டம் இருந்தது. முஸ்லிம்கள் அனைவரும் அத்திட்டத்தை ஏகோபித்து எதிர்த்தனர். இத்திட்டத்தை இறுதியாக ஆதரிப்பதற்காக 1928 டிசம்பரில் கல்கத்தாவில் சர்வகக்ஷி கன்வென்ஷன் நடந்தது. காங்கிரசிற்காகவே தன் வாழ்நாளெல்லாம் உழைத்துவந்த உத்தமர் மௌலானா முஹம்மதுஅலி அவர்களைக் காங்கிரஸ் தன்னுடைய பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்க மறுத்துவிட்டாலும் மௌலானா அவர்கள் முஸ்லிம் லீக் சார்பில் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். கன்வென்ஷனில் நெஹ்ருதிட்டத்தைத் திருத்தும்படி லீக் பிரதிநிதிகள் எவ்வளவோ வாதாடியும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் அதில் எவ்விதத் திருத்தமோ மாற்றமோ செய்யமுடியாதென மரியாதையற்ற முறையில் பதிலளித்து விட்டார்கள். இதுபற்றிய விவாதம் காரசாரமாக நடந்துகொண்டிருக்கும்போது, மௌலானா முஹம்மது அலி அவர்கள் தமது சகாக்களுடன்

(மக்ரிபுத்) தொழுகைக்காக வெளியில் சென்றிருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கருதி நேஹ்ரு அத்திட்டத்தை நிறைவேற்றிவிட்டார்கள். இதனைக்கண்ட மௌலானாவும் லீக் பிரதிநிதிகளும் கன்வென்ஷனையே விட்டு வெளியேறினர். இந்திய அரசியல் அரங்கத்தில் காங்கிரஸ் தலைவர்களும் ஹிந்துக்களும், முஸ்லிம்கள்பால் எத்தகைய மனப்பான்மையுடன நடந்துவருகிறார்களென்பது முஸ்லிம்களுக்குத் தெளிவாக விளங்கிற்று.

முஸ்லிம்கள் இனியும் அசிரத்தையுடனும் ஒற்றுமை குலைந்தும் இருப்பது அவர்களை எதிர்காலத்தில் அடிமைகளாக ஆக்க உதவியளிக்கும் என்பதை நன்குணர்ந்த நம் தலைவர்கள், டில்லியில் 1—1—29-ல் ஸர் ஆகாகான் அவர்கள் தலைமையில் முஸ்லிம் சர்வகக்ஷி மகாநாட்டைக் கூட்டினார்கள். பல்வேறு அபிப்பிராயங்கொண்ட பிரமுகர்களும் இம்மகாநாட்டில் கலந்து இந்திய முஸ்லிம்களின் கோரிக்கைகள் என்ன என்பதை ஏகோபித்து நிறைவேற்றினார்கள். இந்தியாவுக்குப் பூரண மாகாண சுயாட்சியுடன்கொண்ட ஒரு சமஷ்டி அரசாங்கமே சிறந்ததென்று முடிவுசெய்தார்கள். இம்மகாநாட்டின் கோரிக்கைகள்தான், ஜின்னாஹ்வின் 14 நிபந்தனைகள் என்று பிரபல்யமடைந்தது. பின்னர் காங்கிரஸிற்கும் லீகிற்கும் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பிளவேற்பட்டு, இரு சமுதாயங்களும் அரசியல் துறையில் தனித்தனியே சுவாதீனத்திற்காக தங்கள் தங்கள் லக்ஷியப்படி போராடினார்கள். அப்பால் நிகழ்ந்தவை அனைத்தும் பாக்கிஸ்தான்-இந்துஸ்தான் என இந்தியா பிரிக்கப்பட்டதும் இந்தியாவில் இரு கவர்ன்மெண்ட்கள் அமைக்கப்பட்டதும் நேற்றைய நிகழ்ச்சிகள், எல்லோரும் அறிந்தவை.

இவ்விஷயங்களனைத்தும் இந்நூலில் சவிஸ்தாரமாக புள்ளி விபரத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பக்ஷ

பாதமற்ற நிலைமையில் திறந்தமனத்துடன் இந்நூலை வாசிப்பவர்களுக்கு, இந்து முஸ்லிம் வேற்றுமைக்கு யார் காரணஸ்தர் என்பதும், இன்று இந்தியாவில் நடக்கும் கோரப்படுகொலைகளுக்கு யாது காரணம் என்பதும் வெள்ளிடை மலைபோல் துலக்கும். இனிமேலாவது அக்காரணங்களை அகற்றி நய வஞ்சகம், சூட்சி, அழுக்காறு, தேசியத்தின் பெயரால் வகுப்புவாதம் நடத்துவது போன்ற தீயசெயல்களை நீக்கி எல்லோரும் சம உரிமையும் சம அந்தஸ்தும் செல்வாக்கும்பெற்று சகோதரர்கள்போல் க்ஷேமமாய் வாழ வேண்டுமென்ற நன் நோக்கத்தோடு பொறுப்புள்ளவர்களும் பொதுமக்களும் நடப்பார்களாக. நன்மைசெய்வதால் நன்மையும் தீமைசெய்வதால் தீமையுமே விளையுமென்பது மறுக்கமுடியாத உண்மை.

K. முஹம்மது ஹுஸைன்
திருநெல்வேலி

முகவுரை

சரித்திரம் என்பது மக்களுடைய தவறுகளையும் தப்பி தங்களையும் பதிவுசெய்திருக்கின்ற ஒரு குறிப்பாகும்" என்று ஒரு ஆங்கிலப் புலவர் கூறியிருக்கின்றார். மனிதன் அற்ப ஆயுளையுடையவன். எனவே ஆயுள்காலத்தில் நடந்தவைகளையே குறிக்கமுடியும். அப்படியே ஒவ்வொரு தலைமுறையிலும் நடந்தவைகளையும் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துவைத்துப் பின்வந்தோர் தெரிந்துகொள்ளுவதற்கு அறிவுள்ள சமுதாயம் வாய்ப்பைச் செய்துவிட்டுப் போகும். எனவே பலவருஷ நீண்ட அனுபவங்களே சரித்திரம் என்று சொல்லப்படுகிறது. ஒரு ஸ்தாபனம் தொடங்கி எத்தனை வருஷமாகிறதோ அத்தனைவருஷ அனுபவம் என்றுதான் சொல்லவேண்டும் அதன் சரிதையை.

சரித்திரப் பயிற்சியால் அடையும் நன்மை என்ன?

நெருப்பைத் தொட்டால் சுடும் என்பது அனுபவத்தாலும் தெரிந்துகொள்ளலாம். அனுபவமுள்ளவர்கள் சொல்வதாலும் தெரிந்துகொள்ளலாம். அதுபோல ஒரு சமுதாயம் இன்னது செய்தது. அதனால் இந்தக் கேட்டை அடைந்தது. இந்த வழியில்சென்றது. இந்த நன்மையை அடைந்தது என்று சரித்திரம்சொல்லுகிறது. அதைப் படிக்கின்ற அந்தச் சமூகத்தின் பின் சந்ததியார் தங்கள் அனுபவத்தில் நன்மை தீமைகளை அறிவதற்குக் காலமாகும்; கஷ்டமும் ஆகும். ஆதலால் முன்னோர் செய்த தவறுகளைத் தாங்கள் மீண்டும் செய்யாது தப்பிக்கொள்வதற்கும் இன்னவை இயற்றினால் இன்பம் அடையலாம் என்று தெரிந்துகொள்வதற்கும் சரித்திரம் பெருந்துணைசெய்கிறது. எனவே

சரித்திரம் படிப்பது பிரபஞ்ச அறிவை விசால மாக்கி வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்துவதற்கு உறு துணையாக இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

எல்லாக்கலைக்கும் சரித்திரமே அடிப்படை

வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருக்கின்ற சரித்திரம் மேல்நாட்டாரால் ஒரு கலை யாகக் கருதப்பட்டு படிக்கப்பட்டு வருகிறது. எல்லா வகைப் படிப்பிற்கும் ஆதாரமாயிருப்பது சரித்திரக் கல்வியே. உதாரணமாக, விஞ்ஞானப் பயிற்சிக்குச்சென்றால், விஞ்ஞா னத் துறையில், இடையறாது உழைத்து அரும் பெரும் நுட்பங்களைக்கண்டு பிடித்த பெரியார்களின் சரித்திரத்தை தெரிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அறிஞர்கள் ஒரு குறிப்பிட்ட பொருட் சத்தியை எவ்வாறு கண்டு பிடித்தார்கள் என்ற வரலாறு தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. பூகோளம் முதலிய எத்துறைக்கல் விக்கும் சரித்திரம் இன்றியமையாதது. எனவே, சரித்தி ரம் இணைந்த செல்லாக்கல்வியே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆதலால்தான் "சரித்திரம் ஒருவனு டைய அறிவைக் கூர்மைப்படுத்துகிறது" என்று ஆன்றோர் சொல்லிச் சென்றார்கள்.

உயிர் நாடி

இன்னது செய்தோம்; இன்ன நன்மைகளைப் பெற் றோம்; இன்னது செய்தோம், இன்ன இன்னல்களை அடைந் தோம் என்று சமுதாயத்தின் லாபநஷ்டங்களைக் கண்ணாடி, பார்க்கிறவர் முகத்தைக் காட்டுகிறது போல் காட்டினால், சரித்திரம் ஒரு காட்டின் அல்லது ஒரு சமுதாயத்தின் உயிர்நாடி என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? எனவே, திடமான, உறுதியான, சுகத்தோடு கூடிய சமு

தாய அமைப்பிற்கு இன்றியமையாதது. வேண்டப்படுவது சரித்திரக் கல்வியே.

சரித்திரம் தெரியாதிருந்ததாலல்லவா தேசியம் தெரியாமலிருந்தோம்; வெள்ளையன் வந்த பிறகு, அவனுடைய மொழிகற்ற பிறகல்லவோ, 'நாமிருக்கும்நாடதனை நமதென் பறிந்தோம்' என்று பாடும் எண்ணம் தோன்றிற்று. காரணம் என்ன? நாட்டின் வரலாறு நன்கு எழுதப்படவில்லை. மொகலாயர் காலத்திலும் மற்றும் முஸ்லிம்கள் ஆட்சிக் காலத்தில்தான் முஸ்லிம் சரித்திரப் பேராசிரியர்கள் சரித்திரங்களை எழுதி வைத்தார்கள். அவர்கள் எழுதி வைத்துவிட்டுப் போன சரித்திரக் குறிப்புகள், எவ்வளவு துணை செய்கின்றன என்பது சரித்திர ஆசிரியர்களுக்கு நன்கு தெரியும்.

இந்து அரசர்களைப் பற்றிய வரலாறு நன்கு தெரியாமல் போவதற்குக் காரணம் என்ன? வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறித்து வைக்கவில்லை, ஒருசில குறிப்புகள் கிடைத்தாலும் அவற்றில் தெளிவு இல்லை. ஒரு சில சரித்திரக் குறிப்புகள் புராணங்களில் பொதிந்து கிடக்கின்றன. அவைகளைத் தேடுவதற்கு எவ்வளவுகாலம் செலவழித்தாலும் உழைப்புக்குத் தகுந்த பலன் அதில் கிடைக்காது.

தற்காலத்தில் அத்தகைய தவறு ஏற்படா வண்ணம் நிகழ்ச்சிகள் வரையப்படுகின்றன. அதனாலல்லவா, சுயராஜ்யம் பெறுவதற்கு எவ்வளவு மகத்தான தியாகங்கள் செய்தோம் என்பது எல்லாருக்கும் தெரிகிறது. இந்த லட்சியத்திற்காகவா இத்தனை வருஷம்? இவ்வளவு போராட்டம்?, இவ்வளவு தியாகம்? இவ்வளவு உயிர்ச் சேதம்? இவ்வளவு பணச் செலவு? என்று தெரிந்து கொள்ளுகிறோம். இத்தனை வருஷ உழைப்பிற்குப் பின்னர், அகண்ட பெரிய, இந்த உபகண்டம், இந்திய யூனியன், பாக்கிஸ்தான் எனப் பிரிக்கப்பட்டு இரு நாடுகளும் சுதந்திரமாக வாழுகின்றன.

சுதந்திரம் பெறுவதற்குக் காரணமாயிருந்த ஸ்தாபனங்கள் யாவை? சரித்திரம் படித்தல்லவோ தெரிந்து கொள்ள வேண்டும்? ஆங்கிலேயருடைய ஆட்சியிலிருந்து, இந்திய யூனியனும் பாக்கிஸ்தானும் சுதந்திரம் பெறுவதற்குக் காங்கிரசும் முஸ்லிம் லீகும்தான் காரணம் எனலாம். காங்கிரஸின் சரித்திர நூல்கள் எண்ணற்ற வகையில் வெளிவந்துவிட்டன. இந்தியாவிலுள்ள எல்லாப் பாஷைகளிலும் வெளிவந்து விட்டன. ஆனால் முஸ்லிம் லீகின் சரித்திரம் நல்ல முறையில் ஒன்று கூட இதுவரையில் தமிழ்மொழியில் வெளிவரவில்லை. வெளிவராத காரணத்தால் பொது மக்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள முடியாது திகைக்கின்றார்கள். முஸ்லிம் லீக் எப்பொழுது ஏற்பட்டது? அதன் திட்டங்கள் யாவை? அது சாதித்தது என்ன? என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல், "எல்லாம் காங்கிரஸ்தான் செய்தது; லீக் நேற்று முளைத்த சபைதானே" என்று ஏனையோர்களால் கூறப்படும் கூற்றுகளுக்குப் பதில் கூற முடியாமலும், தாங்களும் தெரிந்து கொள்ள முடியாமலும் தத்தளித்துத் தயங்குவதைப் பார்த்து வருகின்றோம். சாதாரண மக்களும், பெரும் பேச்சாளர்களும் சரித்திரத்தை நன்கு தெரிந்து கொள்ள முடியாமல், சில சந்தர்ப்பங்களில் தலைகுனிகின்றனர்.

முஸ்லிம்கள் 1000 வருஷங்களாக இந்தத் தேசத்தைத் திறம்பட ஆண்டனர். சுய ஆட்சிக்கு ஆங்கிலேயரோடு அவர்களே முதன் முதலில் போர் தொடுத்தனர். எனினும் பிற்காலத்தில் சிற்சில சமயங்களில் ஏமாந்து விட்டனர். இக்குணம் இந்தியாவுக்கே அமைந்த இயற்கைக் குணமாயிற்று. இந்த உபகண்டத்தில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட, வேறுபட்ட பல சமுதாயங்கள் உண்டு. உலகத்தில் வேறு எங்கும் காண முடியாத சாதி, சமயப் பிரிவுகளும், தொடாதே, அண்டாதே, என்று கூறி மக்களை வைத்து வாழும்

கும்பலும் செயலில் வேப்பங்காயாக இருந்தாலும், பேச்சிலும் எழுத்திலும் இனிக்க இனிக்க எடுத்துக் காட்டும் இயல்புடைய இனங்களும் இங்கு அதிகம். இப்படிப்பட்ட நாட்டில், முஸ்லிம்கள் அரசியல் உணர்ச்சியை மீண்டும் எப்படிப் பெற்றார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? ஆதலால், எல்லாரும் முஸ்லிம் லீக் மகா சபையின் சரிதையை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தேன். அதற்காக என்னாலான முயற்சி செய்தே ஆகவேண்டும் என்ற துணிவுடன் மிகுந்த சிரமத்தோடு ஒருவாறு இச்சரிதையை இறையருளால் எழுதி முடித்தேன்.

பல்வேறு சௌகரியக் குறைவால் இதுவரை கையெழுத்துப் பிரதியாக இருந்துவந்த முஸ்லிம் லீக் சரிதை, இன்று உங்கள் கரங்களில் அச்சுப் பிரதியாகக் காட்சியளிக்கிறது. இதை வெளியிடுவதற்காக முழு ஆதரவும் தந்து, மக்களுக்குத்தக்க சமயத்திலுதவிய தஞ்சை ஜில்லா அடியற்கைமங்கலம் "இக்பால் பப்ளிஷிங் ஹவுஸ்" உரிமையாளரும், லீகின் வளர்ச்சிக்காகப் பல ஆண்டுகளாக அரும்பாடுபட்டு வருபவர்களுமான மௌலானா S. A. அப்துர் ரஜ்ஜாக் ஷா காதிரி அவர்களுக்கு என் உள்ளம் ஆர்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

லீக் சரிதை சிறந்தமுறையில் அமைவதற்கு எல்லா வகைகளிலும் எனக்குப் பேருதவு புரிந்த தமிழ் நாட்டின் தனிப்பெரும்எழுத்தாளரான திருச்சி ஜனாப் T. S. A. ரசூல் அவர்களுக்கும், பல நூல்களின் ஆசிரியரும் சிறந்த பேச்சாளருமான ரவணசமுத்திரம் ஜனாப் R. P. M. கனி B. A., B. L., அவர்களுக்கும், மேற்கோளுக்குவேண்டியபுத்தகங்கள் தந்து உதவிய பெரியார்களுக்கும், பல குறிப்புகள் எடுப்பதற்கு உதவியாகஇருந்த பெரியார் சென்னை "ஸைபுல் இஸ்லாம்" ஆசிரியர் மௌலானா S. S. அஹ்மது ஸயீது

ஸாஹிப் அவர்களுக்கும் சிறந்த முறையில் முன்னுரை தந்து பேராதரவு புரிந்த நம் மாகாணத்தின் தனிப் பெரும் தலைவரும் சென்னை மாகாண முஸ்லிம்லீக் பிரசிடெண்டுமான கனம் M. முஹம்மது இஸ்மாயீல்ஸாஹிப் பஹதூர் M.L.A. அவர்களுக்கும் மதிப்புரை வழங்கிய திருநெல்வேலிஜில்லா முஸ்லிம் லீக் கௌரவக்காரியதரிசியும் சிறந்த வழக்கறிஞருமான கனம் K. முஹம்மது ஹுசேன் ஸாஹிப் B.A., B.L., M.L.A. அவர்களுக்கும் முஸ்லிம் தேசியகவி முத்தமிழ் மதியமிர்தப் புலவர் அவர்களுக்கும் மற்றும் வாழ்த்துக்கள் வழங்கிய பெரியார்களுக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சரிதையை நன்கு அமைக்க என்னால் இயன்ற அளவு முயன்றிருக்கிறேன். புள்ளிவிவரங்களும், ஆண்டு, மாதம், தேதி முதலிய விவரங்களும் மற்றும் விஷயங்களும் நன்கு பரிசிலனை செய்த பின்னர்தான் குறிப்பிட்டுள்ளேன். எனினும் "மனிதன், மறதி, தவறுதல்கள் ஆகியவைகளினால் பிணைக்கப் பட்டவனே" என்ற அரபிப் பழ மொழிப்படி, இந்தச் சரிதையில் காணும் தவறுதல்களைத் தக்க சான்றுகளுடன் தெரிவித்தால், நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டு இன்ஷா அல்லாஹ் மறு பதிப்பில் திருத்திக் கொள்ளும் அவா உடையேன். இன்ஷா அல்லாஹ் இதன் இரண்டாம் பாகம் அதிவிரைவில் வெளியிட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். இறை அருளும் மக்களின் பேராதரவும் இருந்தால், அதிசீக்கிரம், எழுதி முடிக்கப்பெற்ற அடுத்த பாகத்தையும் வெளியிடலாம் என்ற விருப்பமுடையேன்.

(மௌலவி) **மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி,**

15—8—47 ஆக்கியோன்.

முஸ்லிம் தேசிய கவி


முத்தமிழ் மதியமிர்தப் புலவர்

அவர்கள் இயற்றியது.

இரட்டையாசிரிய விருத்தம்

பூமேவுமின்பப் பெரும்புதையலிரு நிதிப்
　　பொக்கிஷ விவேக போதப்
புத்தமுத மெய்மறை சத்திய சன்மார்க்கமாம்
　　புனித சமுதாய மக்கள்
பூர்வீக சொத்தீந்தியாவை யரசாட்சிசெய்
　　பொற்புமிகு அரசிழந்து
புகழ்குன்றி நின்றநா ளிக்பாலெனுங் கவிப்
　　புரவலன் வகுத்த பாதை
நாமேவும் அலி சகோதரர் போன்ற வீரர்குழு
　　நாடதனை மீட்கவேண்டி
நலிவுற்று சிறைசென்று மக்களி தயந்தனில்
　　நம்பிக்கைதனை வளர்த்து
நண்பனுய்ப புறசமூக மக்களொடு கைகோர்த்து
　　நலம்பல புதுக்கி வெற்றி
நம்மிடைவருங்காலந்தன்னிற் பொருமைவழி
　　நாட்டை நடத்து காங்க்ரஸ்
தாமேவு தியகுணங்கண்டு முஸ்லிங்களின்
　　ஸ்தாபனந் தனித்தியங்கத்

தலைவராய்க் காயிதே ஆஜம் ஜின்னா மூமுச்
சக்தியொடுழைத்துலகின்முன்
தாயகங்கண்ட வரலாறு, முஸ்லிம் லீக்குச்
சரிதையை யியற்று பணியைத்
தளராது மூஸ்லிங்கள் சேவைதனி லீடுபடுந்
தன்மையர், முன்னேற்ற மலரின்
தூமேவு மாசிரியர், மௌலவி, மதுகரச்
சொற்பெருக்காற்றும் வலிமைத்
துகளற்ற அபுல் ஹஸன் ஷாதலிசெய்தாரதைத்
தூண்டாத மணிவிளக்காய்த்
தொல்லூழிகாலம் நிலைநிற்க அச்சாக்கிடுந்
தொண்ட னடியற்கை வாழும்
துரை யப்துல் ரஸ்ஸாக்ஷா காதிரி மூஸ்
தோழனென் தோழனாமே (லிங்களின்




முஸ்லிம் லீக் சரிதை

பூர்வ பீடிகை.

நேற்று முளைத்தாற் போலிருக்கிறது முஸ்லிம் லீக். ஆனால் ஏறக்குறைய 40 வருடங்களுக்கு மேலாகி விட்டன. அதற்குள் அது செய்த தியாகங்கள் மகத்தானது. பிரமிக்கக்கூடியது! ஆராயுமிடத்து நாம் அதிசயிக்க வேண்டியதாயிருக்கிறது. ஒவ்வொரு தலைவரும் செய்த அருந்தொண்டும் சேவையும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. இருந்தும், பொதுமக்கள் முன் அவர்கள் தியாகம் எடுத்துக்காட்டாக வாராததற்குக் காரணம், காங்கிரஸ்காரர்களின் சூழ்ச்சி வஞ்சகப் பிரசாரந் தான்!

காங்கிரஸ் சாதித்துவிட்டதாக அடித்துக்கொள்ளும் ஜம்பப் பேச்சு; அது வெறும் வாய்வீச்சு! உண்மை அதில் ஒன்றுமில்லை. எனினும் முஸ்லிம் தலைவர்கள் பலர் அதில் கலந்துழைத்து, பிரமிக்கத்தக்க தியாகங்கள் பல புரிந்து அதை வளர்த்தனர். முடிவு வளர்த்த கடா மார்பில் பாயவாரம்பித்தது பிறகும் விழித்துக்கொள்ளாதிருப்பது மதியீனமன்றோ! எனவே நமது தலைவர்கள் பலர் அதை விட்டு நீங்கத்தாம் செய்தனர். வேஷம் கலைக்கத்தாம் செய்தனர்! வெறும் முலாம் பூச்சு எத்தனை நாட்கள் நிலைத்திருக்க முடியும்? எனினும் காங்கிரஸ் இன்றளவும் ஜம்பம் அடிக்கத்தான் செய்கிறது! ஆயின் ஆவதென்ன? புலியைக் கண்டு சூடுபோட்டுக்கொண்ட பூனையின் கதிதாம் அதற்கு.



முஸ்லிம் லீக் சரிதை

பூர்வ பீடிகை.

நேற்று முளைத்தாற் போலிருக்கிறது முஸ்லிம் லீக். ஆனால் ஏறக்குறைய 40 வருடங்களுக்கு மேலாகி விட்டன. அதற்குள் அது செய்த தியாகங்கள் மகத்தானது. பிரமிக்கக்கூடியது! ஆராயுமிடத்து நாம் அதிசயிக்க வேண்டியதாயிருக்கிறது. ஒவ்வொரு தலைவரும் செய்த அருந்தொண்டும் சேவையும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது இருந்தும், பொதுமக்கள் முன் அவர்கள் தியாகம் எடுத்துக்காட்டாக வாராததற்குக் காரணம், காங்கிரஸ்காரர்களின் சூழ்ச்சி வஞ்சகப் பிரசாரந்தான்!

காங்கிரஸ் சாதித்துவிட்டதாக அடித்துக்கொள்ளும் ஜம்பப் பேச்சு; அது வெறும் வாய்வீச்சு! உண்மை அதில் ஒன்றுமில்லை. எனினும் முஸ்லிம் தலைவர்கள் பலர் அதில் கலந்துழைத்து, பிரமிக்கத்தக்க தியாகங்கள் பல புரிந்து அதை வளர்த்தனர். முடிவு வளர்த்த கடா மார்பில் பாயவாரம்பித்தது பிறகும் விழித்துக்கொள்ளாதிருப்பது மதியீனமன்றோ! எனவே நமது தலைவர்கள் பலர் அதை விட்டு நீங்கத்தாம் செய்தனர். வேஷம் கலைக்கத்தாம் செய்தனர்! வெறும் முலாம் பூச்சு எத்தனை நாட்கள் நிலைத்திருக்க முடியும்? எனினும் காங்கிரஸ் இன்றளவும் டம்பம் அடிக்கத்தான் செய்கிறது! ஆயின் ஆவதென்ன? புலியைக் கண்டு சூடுபோட்டுக்கொண்ட பூனையின் கதிதாம் அதற்கு.

முஸ்லிம் லீக் சரிதையில் இதை எல்லாம் நாம் உணர்ந்து கொள்ளலாம். காங்கிரஸின் கபட நாடகங்கள், முஸ்லிம்களுக்கு அது இழைத்த அநீதிகள்; முஸ்லிம் சமுதாயம் சிறிக்கொண்டெழுந்த சித்திரங்கள், நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள், முஸ்லிம் லீக் தளர்ந்த வரலாறு, ஆங்கிலேயர்கள், முஸ்லிம்களுக்கு இழைத்த அநீதிகள், அலி சகோதரர்களின் கர்ஜனை ஆகியவைகள் பல ஆராய்ந்து ஒருங்கே திரட்டி உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்! தமிழ் முஸ்லிம்கள் இதனை நன்கு மனதிலிருத்த வேண்டும்.

பெரும்பாலான தமிழ் முஸ்லிம்கள், முஸ்லிம் லீக் மகா சபையொன்று உண்டு என்பதை அறிந்தது 1935-ல் தாம். அதற்கேற்றாற்போல 1937-ல் காயிதே அஃஜம் முஹம்மது அலி ஜின்னாஹ் அவர்கள் லக்னௌவிலே நடந்த மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். உணர்ச்சியின் உருவம் உத்வேகம் பெறவேண்டுமானால் கேட்கவும்வேண்டுமா? எங்கும் லீகின் செல்வாக்குப் பலத்தது. மூலை முடுக்குகளிலே எல்லாம் லீகின் கிளைகள் தோன்றவாரம்பித்தன. இந்திய முஸ்லிம் ஒவ்வொருவரும் "முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்" என முழங்க ஆரம்பித்தனர். பத்துக்கோடி முஸ்லிம்களும் ஒரு கொடியின் கீழ் ஐக்கியமாயினர்.

வழிகாட்டியைப் பின் தொடரும் பாமரன் சுயேச்சை வழியைக் கையாளுவானா? எனவே வழிகாட்டியாயமைந்த தலைவர்கள் முதலிலே காங்கிரஸிலே பற்றுக்கொண்டிருந்ததினாலே பின் தொடரும் பாமர பொதுமக்களும் காங்கிரஸிலேயே கலந்துழைத்தனர். உண்மையை மறைக்க முடியாதன்றோ! எனவே தாம் தலைவர்கள் அதைத் தலைமுழுகியதும் பெரும்பாலான பொதுமக்களும் காங்கிரஸை தலைமுழுகினர். ஆனால் ஒருசில முஸ்லிம்கள் 10000-லொன்று

இன்னும் கண்ணை மூடிக்கொண்டு காங்கிரஸைப் பின் பற்று கின்றனர். பரிதாபம்! இன்னும் அவர்களுக்கு ஞானோதயம் பிறக்கவில்லை. (ஒருசமயம் முஸ்லிம்லீகுக்கு திருஷ்டி ஏற்படாமலிருக்க அவர்கள் அப்படி இருக்கவேண்டும் போலும்)

இன்று முஸ்லிம் லீக் தனிச்சிறப்பு கொண்டிலங்கி விற்கின்றது. அதன் சரிதையை ஒவ்வொரு தனி முஸ்லிமும் ஆராய்ந்தறிந்துகொள்ளவேண்டும். அன்றுதாம் அதன் உண்மை மகத்துவம் தெரிந்துகொள்ளமுடியும்! உண்மையைக் கவனிக்கவேண்டும் ஊன்றி நோட்டமிடவேண்டும்! அடுத்து இனி சரிதையைத் தொடங்குவோம்.

1. சிதைந்த சித்திரத்தின் சோரம்!

காலச் சக்கரத்தின் கடுவேகத் தாக்குதலால் இந்தியாவிலே இணையற்று ஈடற்று விளங்கிய இஸ்லாமிய ஆட்சி, சிதைப்பட்ட பின்பு, செங்கோல் சீரழிந்த பின்பு வஞ்சகத்தினுலோ, சூழ்ச்சியினுலோ இந்திய அரசாட்சி ஆங்கிலேயர் கைமாறிய காலம்! சிதைப்பட்ட சித்திரத்தைச் சீர்படுத்துவதுபோல சாகஸங்காட்டி சீரழித்து வந்தனர் முஸ்லிம்களை ஆங்கிலேயர்கள் சிதைந்த முஸ்லிம் சமுதாயமும் மனமொடிந்து உளம் சோர்ந்து வாழாது வாழ்ந்து வந்தது, ஆங்கில அரசாட்சியின் கீழ். மனமிருந்தாலன்றோ மாங்கல்யமும்!

சிப்பாய்க் கலகம்

சிதைந்த சமூகம் சிதைவுடனே காலங்கடத்திவரலாயிற்று. 'பட்டகாலிலே படும்' என்பார்கள். டில்லியிலே கி. பி. 1857-ம் வருடம் பயங்கரமான சிப்பாய் கலகம் (?) மூண்

டது. முஸ்லிம், முஸ்லிமல்லாதார் அனைவரும் அதில் சம்பந்தப்பட்டிருந்தனர். இந்தியாவின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் இக்கலகப்பேய் பயங்கரமாய் நர்த்தனமாடி ஒருவாராக ஓய்ந்தது. அடுத்தவந்தது 'மதப்' பேய்! ஹிந்து முஸ்லிம்களிடையே சிறுகச் சிறுக ஏற்பட்ட விரோத மனப்பான்மை நாளாவட்டத்திலே நன்கு பலப் பட்டுவிட்டது. ஹிந்துக்கள் ஆங்கிலேயருடன் ஒத்து ழைப்பதுபோல் பாவனை பல காட்டி பொறுப்புவாய்ந்த உத்தியோகங்களைப் பெற்றனர். குருவி உட்கார்ந்ததும் பனம் பழம் விழுந்த கதைபோல் இதே சாக்கை வைத்துக் கொண்டு ஆங்கிலேயர்கள், சிப்பாய் கலகம் ஏற்படக் கார ணஸ்தர்களும் முஸ்லிம்களே, என எண்ணி முற்றிலும் முஸ்லிம்களை வெறுக்கவும் புறக்கணிக்கவும் தலைவர்களை இம்ஸிக்க ஆரம்பித்து ஹிந்துக்களுக்கு விசேஷ சலுகை களும் காட்டினர்.

ஆங்கில அரசாட்சியில் முஸ்லிம்களின் வெறுப்பு

அக் காலைய முஸ்லிம்களும், ஆங்கிலேயர்களின் இவ்வ நீதியைக்கண்டு மனம் நொந்துபோய் சினந்து ஆங்கி லேயரின் அரசாட்சி, கலை, நாகரிகம், பாஷை கொள்கை, அனுஷ்டானம் ஆகிய அனைத்திலும் அறுவறுப்புகொண்டு அவர்களை மிகவும் துச்சமாக எண்ணியும், கலந்துறவாடா மலும் உத்தியோகம் பார்க்காமலும் அறவே வெறுத்த தோடல்லாது, இதர முஸ்லிம்களையும் அவ்வாறு செய்யத் தூண்டினர். இதில் முக்கியப் பங்கெடுத்து வேலைசெய்தது முஸ்லிம் அறிவாளிகள் என்பதும், இதரர்கள் இச்சந்தர்ப் பத்தில் முஸ்லிம்களைக் காட்டிக்கொடுத்து அரசாங்கத்து டன் பூரணமாக ஒத்துழைத்து ஆங்கில ஆட்சியை வேரூன் றச்செய்தது குறிப்பிடத்தக்கது.

முள்ளை முள்ளாலே அகற்றவேண்டும்.

இதே வழியிலே சென்றுகொண்டிருந்தால் எதிர் காலத்தில் முஸ்லிம்கள் முன்னுக்குவரமுடியாதென்பதை யறிந்த ஸர் ஸையித் அஹ்மத்கான் போன்ற அறிஞர்கள் ஒன்றுகூடி சிந்தனைடைச் செலுத்தி சீர்பெற வழிகாணுவதிலே திட்டங்கள் பல வகுத்து முள்ளை முள்ளாலேயே அகற்றவேண்டுமென்றெண்ணி, முஸ்லிம்களின் மனத்திலுள்ள துவேஷ ஆத்திர மனப்பான்மையை அகற்றவும் ஆங்கிலேயருடன் கலந்திருந்தே காரியத்தைச் சாதிக்க ஆங்கிலக்கல்வி போதிக்கவேண்டியும், அலிகாரில் உயர்தரக் கல்லூரியொன்றை நிறவி, குறிப்பாக அதில் ஆங்கிலமும் போதித்து வரலாயினர்.

2. காங்கிரஸின் தோற்றம்!

கி. பி. 1885-ம் வருடத்திலே, மிஸ்டர் ஹியூம், மிஸ்டர் வெட்டர்பன் யென்னும் ஆங்கிலேயர்களின் முயற்சியின் பிரதி பிம்பமே இன்றுள்ள காங்கிரஸ் மகாசபை! தோற்றுவித்தவர்கள் ஆங்கிலேய அன்னியரே யாயினும் அனுபவித்தவர்கள் அதிகம் ஆரிய ஹிந்துக்களே! பல ஹிந்து சங்கங்கள், சபைகள் யாவும் இந்தியாவின் பல பகுதியினின்றும் காங்கிரஸுடன் இணைக்கப்பட்டன. பெயர் மட்டும் பல பிரிவினரும் விரும்பும் பொதுப்பெயராக 'காங்கிரஸ்' தோற்றுவிக்கப்பட்டிருந்தாலும் உண்மையிலே அது ஹிந்துக்களின் மறைமுக ஐக்கிய சங்கமே என்பதை நாம் மறக்கலாகாது.

அன்றிருந்த நிலைமை!

வெளி வேஷத்திலே அதன் முக்கிய கொள்கைகள் தேசமக்களின் குறைகளை அகற்றுவது; தேவைகளை அரசாங்கத்தாரிடம் முறையிட்டுப் பெறுவது; பிரதி ஆங்கில வருட இறுதியிலே முக்கிய நகரங்களில் மகாநாடுகள் கூட்டி தீர்மானங்களை நிறைவேற்றுவது; அதிகச் சீர்திருத்த உரிமைகள் இந்தியாவிற்குக் கிடைக்க வேண்டுமென பிரசாரம் புரிவது முதலியன போன்றவை எனலாம். காங்கிரஸின் ஆரம்ப காலத்திலேயே அன்றிருந்த இந்திய இராஜப் பிரதிநிதி லார்ட் டப்பரின் கூட அதற்கு முழு ஆதரவளித்து வந்தார். இம்மாதிரி ஆங்கிலேயர்களின் ஆதரவும் அன்று அதற்குக் கிடைத்ததற்குக் காரணம் இன்றுபோல் "சுயராஜ்யம் வேண்டும்; ஆங்கிலேயர்களை விரட்டவேண்டும்" யென அன்று காங்கிரஸ்காரர்கள் கருதாததேயாம் அன்றெல்லாம் ஆங்கிலேயருக்கு அடிவருடுவதே அதன் முக்கியநோக்கம்.

முக்கிய நகரங்களில் பிரதி வருடமும் நடக்கும் காங்கிரஸ் மகாநாடுகளிலெல்லாம் பிரபல கவர்ன்மெண்ட் உயர்தர உத்தியோகஸ்தர்கள், கவர்னர்கள் ஜட்ஜ்கள் பிரதானோர் கலந்துகொண்டதோடல்லாமல் பிரசங்கமும் புரிந்து கொண்டிருந்தனர். ஒரு சில முஸ்லிம்களும் தனிப்பட்ட முறையிலே அவைகளில் கலந்துழைத்தும் தலைமை தாங்கியும் வந்திருந்தும் அது 1916 வரை அதாவது ஆரம்பித்து 31 வருடகாலம் வரையிலும் முற்றிலும் ஹிந்துக்களின் சர்வாதிகார மயமாயும் ஹிந்துக்களின் தனி நலன்களுக்கே பாடுபடுவதாகவும் இருந்துவந்தது.

பசுத்தோல் போர்த்திய புலி!

அகில இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை என்ற போர்வைக்குள் காங்கிரஸ் புகுந்துகொண்டிருந்தாலும் முற்ற முற்ற அது "காங்கிரஸ் ஒரு ஹிந்துமகாசபை" யாகவே இருந்துவந்ததை ஆங்கிலேய அதிகாரவர்க்கம் அறிந்துகொண்டது. எல்லா சமுகத்தாரின் நலத்தைப் பாதுகாக்கவே பாடுபட்டு வருகிறதாக அது எவ்வளவு தம்பட்டமடித்தும், தம்பிடியளவும் பிரயோஜனமற்றுப் போய்விட்டது. அது ஆரம்பித்த சிறிய கிளர்ச்சிகளும் வெகு சீக்கிரமே நசித்துப்போய்விட்டன. நிறைவேற்றிய தீர்மானங்களும் ஏட்டுச்சுரைக்காயாய் முடிந்தன.

சுருங்கக் கூறுமிடத்து சில தலைவர்களுக்கு அதிகாரவர்க்கத்தார், சில பதவிகளை எடுத்து வீசி வாயடக்கினர். காங்கிரஸ் தலைவர்களும், கோரிக்கைகளைச் சாதித்துக் கொள்ள போதிய சக்தி பெறவில்லையென சோர்ந்துபோய் விட்டனர். இனியும் காங்கிரஸ் விரோதமாய்க் கிளம்பாதென அதிகாரவர்க்கமும் நம்பிவிட்டது. இதுதான் அக்காலைய காங்கிரஸின் ஆக்கவேலைகளும் உண்மை நிலையும்!

3. வங்காளப் பிரிவினை

லார்டு கர்ஸன் அக்காலத்திலே இந்திய கவர்னர் ஜெனரலாயிருந்துவந்தார். பல குறைகள் இவரிடத்திலே பொதிந்துகிடந்தாலும் இந்திய முஸ்லிம்கள்பால் ஓர் அலாதி பிரியம் கொண்டிருந்தார். காரணம் பல இஸ்லாமிய நாடுகளிலே சுற்றுப்பிரயாணம் செய்தும், கீழ்நாட்டுக் கலைகளிலே ஆர்வம் மிகுந்தவராயும் இருந்துவந்ததுதான். அக்காலை இந்தியத் தலைநகரம், கல்கத்தாவாக யிருந்ததால் இவரும் கல்கத்தாவிலேயே வசிக்கலாயிற்று. வங்காள

மாகாண ஸ்திதியைக்கண்டு லார்டு கர்ஸன் ஏக காலத்திலே ஆச்சரியமும் அனுதாபமும் கொண்டார். வங்கமாகாணத்திலே இந்திய முஸ்லிம்களில் மூன்றிலொரு பாகம் வசித்து வந்தும், சிறுபான்மையினராக மைனரிட்டி ஹிந்துக்களுக்கு அடிமைப்பட்டு உணர்ச்சியற்று செல்வாக்கற்று இருந்ததைக்கண்டு பரிதாபப்பட்டார்.

நிலைதவுற்ற வங்காள முஸ்லிம் சமூகத்தைச் செப்பனிட எண்ணங்கொண்ட லார்டு கர்ஸன் சாட்காம் டாக்கா மைமன்ஸிங் ஆகிய பிரதேசங்களை வங்காளத்தினின்று பிரித்து அஸ்ஸாம் மாகாணத்துடன் சேர்க்கவேண்டுமென 1903 டிஸம்பர் மாதத்திலே ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதன் முக்கியகாரணம் மேற்காணும் பிரதேசங்களிலே முஸ்லிம்கள் மிகுந்திருந்ததேயாம். மேலும் முஸ்லிம் ஜமீந்தார்கள், வரி செலுத்துவோர்கள் அதிகமாயிருந்துவந்தனர். லார்டு கர்ஸனின் இச்செய்கை முஸ்லிம் மக்கள் நிறைந்த தனி சமூக உருவாக அஸ்ஸாம் மாகாணத்தை ஆக்கிவிட்டது.

வங்க ஹிந்துக்களின் சீற்றம்!

முஸ்லிம்கள் தம் அடிமைத்தளையினின்று அறுபட்டு தனித்துப் பிரிந்து பெருவாரியாகிய படலத்தைக்கண்டு வங்காள ஹிந்துக்கள், முஸ்லிம்கள் மீது சிற்றமும் கர்ஸன் காட்டிய கருணைக்குக் கடுங் கோபமும் கொண்டனர். எதிராகவும் சதிகள் பல புரிந்தனர். காங்கிரஸ் ஹிந்து சபை கூட 1904-ல் பம்பாயில் கூடிய 20-வது மகாநாட்டில், வங்காளப் பிரிவினையைக் கண்டித்து 14-வது தீர்மானம் ஒன்று நிறைவேற்றியது. இதற்குமுன் நடைபெற்ற சென்னைக் காங்கிரஸிலும் 1903-ல் (9-வது தீர்மானமாக)

வங்காளப் பிரிவினையைக் கண்டித்து தீர்மானம் செய்யப் பட்டிருந்தது.

முஸ்லிம் கருவேப்பிலைகள்!

வங்கப் பிரிவினைக்கு விரோதமாக தேசியத்தின் பெயரால் ஆரம்பித்த இக் கிளர்ச்சியிலே பாமர முஸ்லிம்கள் பலர், தலைவர்களில் சிலர்கூட வங்காளிகளின் சூழ்ச்சியினால் சிக்கிவிட்டனர். ஒன்று கவனிக்கவேண்டும்: பாமர முஸ் லிம்களைக் கருவேப்பிலைகள் போல உபயோகித்துக்கொள் வது ஆரிய ஹிந்துக்களின் தொன்றுதொட்ட வழக்கம் எனினும் முஸ்லிம்கள் அவ்வளவுபேர்களும் ஏககாலத்திலே ஏமாற முடியுமா? எனவேதாம் உண்மை உணர்ந்த பெரும் பாலான முஸ்லிம்கள் வங்கப் பிரிவினையைப் ஆதரித்து எதிரிகளின் முகத்திலே கரியைப்பூசி, அவர்களின் விஷம வேலைகளுக்கு உறுதியான எவ்விதப்பிரதி பலனையும் காண முடியாதவாறு செய்துவிட்டனர்.

1905-ல் கிடைத்த 'பாக்கிஸ்தான்'!

வங்காள ஹிந்துக்களின் சீற்றத்திற்கும் சூழ்ச்சிக்கும் லார்டு கர்ஸன் கிஞ்சிற்றும் கலங்கிவிடவில்லை. மாறாக அவரது உறுதி மேலும் பலங்கொண்டது. அதன் எதி ரொலியே கீழ் காணும் 'பாக்கிஸ்தான்' பிரகடனம்.

"பிரஸ்தாபப் பகுதிகளை வங்காளத்தைவிட்டுப் பிரித்துவிடுவதின் நோக்கம், வங்காள அரசாங்கத் தாருடைய நிர்வாகப் பரிபாலனப் பொறுப்புகளை சற்று இலகுவாக்கிவைப்பது மட்டுமல்ல; அத்துடன் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக ஒரே மாகாணத் திலே மிகுந்திருக்க வேண்டுமென்பதும் அது ஒரு

தனிப்பட்ட இஸ்லாமிய மாகாணமாக இருக்க வேண்டுமென்பதும் சர்க்காரின் நோக்கமாகும்”

1905 மார்ச் 11-ந் தேதி டாக்காவிற்குச் சென்றிருந்தபோது, லார்டு கர்ஸன் விடுத்த வாசகங்கள்தான் மேலே காண்பது! இதைக்கண்டபின்னரே முஸ்லிம் உலகம் விழித்தெழுந்தது; நவாப் ஸலீமுல்லாகான் உட்பட்ட பிரபல தலைவர்களும் பிரிவினைக்குச் சாதகமாக வேலைசெய்ய முற்பட்டனர். கடைசியாக அதிகாரவர்க்கமும் தாம் உறுதியளித்தபடி வங்காளத்தைப் பிரித்தேவிட்டதாக 1905 அக்டோபர் 16-ந் தேதி பிரகடனப்படுத்திற்று.

கோதித்தெழுந்த காங்கிரஸ் ஹிந்துக்கள்!

வங்கப்பிரிவினைப் பிரகடனம், காங்கிரஸ் ஹிந்துச் சபைக்கு எரிகிற நெருப்பில் எண்ணெ வார்த்தாற்போலிருந்தது. தாம் இத்தனைத்தூரம் எதிர்த்தும் தமதுஎதிர்ப்பு செல்லாக் காசாகிவிட்டதேயென மனம் வெதும்பிய காங்கிரஸ் ஹிந்துக்கள், மூலை முடுக்குகளில் பல கூட்டங்களும் மகாநாடுகளும்கூட்டி பிரிவினையைக் கண்டனம்செய்தனர்; லார்டுகர்ஸனை கண்டபடி திட்டினர். இத்துடன் விடவில்லை! வெறிகொண்டவர்கள்போல, வெள்ளையர்களை—அவர்களது சாமான்களைப் பகிஷ்கரித்தனர். உத்தியோகஸ்தர்கள்மீது வெடி குண்டுகளை வீசினர். கொலைகள் கொள்ளைகள் பல நடத்தினர்.

‘வந்தேமாதரம்’ வந்தது?

விஷயம் வலுத்தது, காங்கிரஸின் இக் கிளர்ச்சி வலுக்கவே, அதிகாரவர்க்கமும் தன் கைவரிசையைக் காட்டாதிருக்கவில்லை. அதுவும் விடாது பழிக்குப்பழி பல

வாங்கியது. இச்சமயத்தில்தான் வந்தது, விஷந்தோய்ந்த வஞ்சக சூழ்ச்சி நிறைந்த 'வந்தேமாதரம்' யெனும் வீழ்ச்சிப் பாடல்! இதையே அவர்கள் உற்சாகமூட்டும் தேசிய கீதமாகக் கணித்தனர். கூட்டங்களிலே, ஊர்வலங்களிலே இக் கீதத்தை ஆரம்ப உரையாக மேற்கொண்டனர். வந்தே மாதரகீதம் பாடின உட்கருத்தை நேயர்கள் அறிந்திருப்பார்களாதலால் மேற்கொண்டு அதை இங்கு விவரிப்பது அநாவசியம்! திருஇராஜகோபாலச்சாரியார்சென்னைமுதலமைச்சராயிருந்தபோது (1937 முதல்) சட்டசபை ஆரம்பத்திலேயும் இக் கீதத்தை ஆரம்பவுரையாகப் பாடவேண்டுமென்று வற்புறுத்தியதும், பிறகு சட்டசபை முஸ்லிம் அங்கத்தினர்களின் கடும் எதிர்ப்பால் அக் கீதத்தை அறவே நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

4. முஸ்லிம் லீக் உதயம்!

வங்கப் பிரிவினையின் பின் ஹிந்துக்கள் காட்டிய விரோத மனப்பான்மை, வலுத்த கிளர்ச்சி முஸ்லிம்களை விழித்தெழச்செய்துவிட்டது. தம்மைத்தாமே உணர ஆரம்பித்தனர். மேலும் தங்களை வலுப்படுத்திக்கொள்ள முஸ்லிம்கள் பிரயத்தனம்கொண்டனர். வகைதேடினர். தனித்து நின்று போராட உறுதிகொண்ட முஸ்லிம்களிலே முதன்மையாக முன்வந்து ஆக்க வேலைக்கு வழிகோலியவர், சிறந்த அரசியல் ஞானியான ஹைதராபாத் மாஜி மந்திரி நவாப் முஹ்ஸினுல் முல்க்மீர் மஹ்தீ அலிகான் அவர்களாவர். தமது சொந்த முயற்சியிலே வெகு பிரயாசையின்மீது "முஸ்லிம் பொலிடிகல் அஸோஸியேஷன்" (முஸ்லிம் அரசியல் சபை) என்ற நாமத்துடன் ஒரு ஸ்தாபனத்தை நிறுவி

அதன்மூலம் முஸ்லிம்களுக்கு கல்வி, விழிப்புணர்ச்சி, தன்னம்பிக்கையூட்டி வந்தார்.

அன்று இந்தியா மந்திரியான லார்டுஜான் மார்லி 1906-ன் மத்தியிலே பார்லிமெண்டிலே பேசும்போது,

"இந்தியர்களுக்கு இன்னும் அதிக உரிமைகளை கொடுக்கும்படியான ஒரு அரசியல் திட்டத்தை அளிக்க பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் முடிவுசெய்திருக்கிறது" என்று குறிப்பிட்டார். இதைக்கண்ணுற்று நவாப் முஹ்ஸினுல் முல்க், நவாப் வக்காருல் முல்க் ஆகிய தலைவர்களின் உள்ளத்திலே ஒரு மறுமலர்ச்சி உற்சாகம் உதித்தது. உடனே அவ்விரு தலைவர்களும் தாம் நிறுவிய "முஸ்லிம் பொலிடிகல் அஸோஸியேஷன்" மூலமாக இந்திய முஸ்லிம்களின் தற்கால நிலை, புதிய திட்டத்திலே முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்கப்படக்கூடிய முறைகள், முக்கிய தேவையான கோரிக்கைகள் முதலியவைகள் அடங்கிய ஒரு யாதாஸ்தை தயாரித்து பல்வேறு அபிப்பிராயங்கொண்டவர்களாக ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் சுமார் ஐயாயிரம் பேர்களின் கையெழுத்துக்கள் வாங்கி ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் பொறுக்கியெடுத்த தூது கோஷ்டி, ஸர் ஆகாகான் தலைமையில் அமைத்து 1906 அக்டோபர் முதல் தேதி இராஜப்பிரதிநிதியான லார்டு மின்டோவைச் சந்தித்து அந்த யாதாஸ்தை சமர்ப்பித்து முஸ்லிம்களின் முக்கியக் கோரிக்கைகளையும் எடுத்துவிளக்கும்படிச் செய்தனர்.

யாதாஸ்திற்கு பதிலளிக்கையில் வைஸ்ராய், முஸ்லிம் தூது கோஷ்டியினரைக்கண்டு,

"எதுவரை எனது அதிகாரம் இந்தியாவின் மீதிருக்கிறதோ அதுவரை முஸ்லிம்கள் நிம்மதியாக இருப்

பார்களாக. ஏனெனில் முஸ்லிம்களின் பாத்தியதைகளையும் கோரிக்கைகளையும் பூர்ணமாகக் கவர்ன்மெண்ட் கவனிக்கும்" என்று உறுதிமொழியளித்தார். இதைக் கண்ணுற்ற ஹிந்துக்கள், முஸ்லிம் தூது கோஷ்டியினரையும், அந்த யாதாஸ்த்தையும் தங்கள் ஆத்திரந்தீர கையாண்டி செய்தனர். ஹிந்துப் பத்திரிகைகளும் இதற்குச் சளைக்கவில்லை. காங்கிரஸின் கைப்பொம்மைகளாயிருந்த ஓர் சில முஸ்லிம்கள்கூட, இவர்களை ராஜபக்தர்களின் தூது கோஷ்டி என்று கேலிசெய்தன ரென்றால் கேட்கவும் வேண்டுமா?

முஸ்லிம் லீகின் முதற்கூட்டம்!

காங்கிரஸ் சபை, இந்தியர்களுக்குப் பல சீர்திருத்தங்கள் வேண்டுமென்று கோரிய கோரிக்கைகளிலே, முஸ்லிம்களுக்கு தேவையான சீர்திருத்தங்கள் ஒன்றையும் ஏற்றுக்கொள்ளாது, 'பொதுவாக' வென்று கூறிக்கொண்டு ஏமாற்றிவந்ததை யுணர்ந்த முஸ்லிம்கள், தங்களுக்கென்று அரசியல் சீர்திருத்தங்கள் செய்துகொள்ளவும், வேண்டிய உரிமைகளைப் பெறவும், தனியாக ஒரு சக்திவாய்ந்த அரசியல் ஸ்தாபனம் தேவையென உணர்ந்தனர். மேலும் அன்றைய முஸ்லிம்கள் ராஜீப விஷயங்களிலே பிற்போக்காளர்களாய்—கிணற்றுத் தவளைகளாய்—இருந்தமையால் அரசியல் ஸ்தாபனம் மிக மிக அவசியமென உணர்ந்த நவாப் ஸலீமுல்லாகான் 1906 நவம்பர் 9-ந் தேதியிலே ஓர் அறிக்கை வெளியிட்டார். அதை ஆதரித்து பரோடா சமஸ்தானத்திலே பதவி வகித்துக்கொண்டிருந்த மௌலானா முஹம்மத் அலி அவர்களும் சிறந்த அரசியல் தீவிரவாதியான நவாப்முஹ்ஸினுல் முல்க் அவர்களும் வெகுவாக ஒத்துழைத்து வேலைசெய்தனர். அதேவருட டிஸம்பர் மாத இறுதி வாரத்திலே வழக்கம்போல டாக்காவில் அம்ரோஹா

வாசியான நவாப் வக்காருல் முல்க் அவர்கள் தலைமையின் கீழ் அகில இந்திய முஸ்லிம் கல்வி மகாநாடு நடந்தது. இதில் நாம் பிரபல அறிஞர்கள் ஒன்று கூடி, முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கும், ஆக்க வேலைகட்கும் அரசியல் சபையொன்று ஏற்படுத்தி அதற்கு அகில இந்திய முஸ்லிம் லீக் என பெயரிட்டனர்.

முஸ்லிம் லீகின் முதற்கூட்ட நடவடிக்கைகளைத் தனியாக வெகு அழகான முறையிலே மௌலானா முஹம்மத் அலி அவர்கள் தமது நிலீ கிதாப் யென்னும் புத்தகத்திலே எடுத்துக்காட்டியுள்ளார். இப் புத்தகம் ஏராளமாய் விற்பனையாயிற்று. இந்திய முஸ்லிம் உலகத்திலே புத்துணர்ச்சியும், மறு மலர்ச்சியும் பொது வாழ்வில் ஆர்வமும் ஏற்பட்டதற்குக் காரணமும் அந்தப் புத்தகம்தான் எனலாம். லண்டன் பத்திரிகைகளிலும் முஸ்லிம் லீக் உதயம்பற்றி வெகுவாகச்சர்ச்சை செய்யப்பட்டிருந்தது. சுருங்கக் கூறுமிடத்து, முஸ்லிம் லீக் இந்திய சரித்திர ஏடுகளிலே ஒரு புதிய அத்தியாயத்தையே ஏற்படுத்திவிட்டது.

பிரிட்டனின் சூழ்ச்சியா?

நீதிக்கென்றும், நேர்மைக்கென்றும், சமூகப் பாதுகாப்பிற்காக வென்றும் தோற்றுவிக்கப்பட்ட முஸ்லிம் லீகைக் கண்டதும் சீறி விழுந்தனர், காங்கிரஸ் காரர்களும் வங்காள ஹிந்துக்களும்! பத்திரிகைகள் மூலமாகவும், பிரசாரங்கள் மூலமாகவும் முஸ்லிம் லீக் வங்காளப் பிரிவினை சமயத்திலே உதித்ததால் அது நிச்சயம் பிரிட்டிஷாரின் சூழ்ச்சியால் உதித்ததுதான் என்றும் பொதுமக்களும் குறிப்பாக முஸ்லிம்களும் லீக் மீது தப்பெண்ணங்கொள்ளும்படியும் செய்தனர். எனினும் சில நியாய நோக்கமுள்ள ஹிந்துத் தலைவர்கள், முஸ்லிம் லீக் பிரிட்டனின்

றூண்டுதலால் தோன்றியதல்லவென்றும், அது நேர்மை, நியாயம், சமூகப் பாதுகாப்பு போன்ற அம்சங்கள்கொண்ட சபை என்றும் தம் வர்க்கத்தினருக்கு நன்கு எடுத்துக் காட்டிப் புத்திபுகட்டி வந்தனர்.

போட்டியில் முளைத்த ஹிந்து லீக்!

முஸ்லிம் லீக் உதித்த சின்னாட்களிலேயே போட்டிபோட்டுக்கொண்டு சில ஹிந்துக்கள் ஹிந்துமகா சபைலீக் யென்று ஒரு சபையை முளைக்க வைத்தனர். ஊராலுக்கு ஒருபக்கம் இடி மத்தளத்திற்கு இரு பக்கமும் இடி யென்பதுபோல, முஸ்லிம் லீக் ஆரம்பத்திலேயே காங்கிரஸ் ஹிந்துமகாசபைலீக் ஆகிய இருசபைகளின் பயங்கர எதிர்ப்புக்கிடையே வெற்றி காணவேண்டியதாயிற்று.

5. முஸ்லிம்லீகின் முதற் கூட்டமும் மகாநாடும் (1906)

முஸ்லிம் லீகின் முதற் கூட்டம் 1903-ல் டிசம்பர் 31-ந் தேதி நவாப் வக்காருல் முல்க் அவர்களின் தலைமையின் கீழ் நடந்து, லீகின் சட்டதிட்டங்களியற்ற ஒருஸப் கமிட்டி நிறுவப்பட்டது. அதில் ஜனாப் முஹம்மத்அலி பி, ஏ. (ஆனர்ஸ்) என்றழைக்கப்பட்ட மௌலானா முஹம்மத் அலியும் ஒருவர். லீகின் புதுவருடத்திற்கு மேன்மை தங்கிய ஸர் ஸுல்தான் முஹம்மத் ஷாஹ் ஆகாகான் தலைவராகவும், நவாப் முஹ்ஸினுல் முல்க், நவாப் வக்காருல் முல்க் ஆகியோர்கள் காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

முஸ்லிம் லீகின் முக்கிய நோக்கங்கள்

அன்று முஸ்லிம் லீகின் பிரதானநோக்கங்கள்:—

வாசியான நவாப் வக்காருல் முல்க் அவர்கள் தலைமையின் கீழ் அகில இந்திய முஸ்லிம் கல்வி மகாநாடு நடந்தது. இதில் நாம் பிரபல அறிஞர்கள் ஒன்று கூடி, முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கும், ஆக்க வேலைகட்கும் அரசியல் சபையொன்று ஏற்படுத்தி அதற்கு அகில இந்திய முஸ்லிம் லீக் என பெயரிட்டனர்.

முஸ்லிம் லீகின் முதற்கூட்ட நடவடிக்கைகளைத் தனியாக வெகு அழகான முறையிலே மௌலானா முஹம்மத் அலி அவர்கள் தமது நீலீ கிதாப் என்னும் புத்தகத்திலே எடுத்துக்காட்டியுள்ளார். இப் புத்தகம் ஏராளமாய் விற்பனையாயிற்று. இந்திய முஸ்லிம் உலகத்திலே புத்துணர்ச்சியும், மறு மலர்ச்சியும் பொது வாழ்வில் ஆர்வமும் ஏற்பட்டதற்குக் காரணமும் அந்தப் புத்தகம்தான் எனலாம். லண்டன் பத்திரிகைகளிலும் முஸ்லிம் லீக் உதயம்பற்றி வெகு வாதச்சர்ச்சை செய்யப்பட்டிருந்தது. சுருங்கக் கூறுமிடத்து, முஸ்லிம் லீக் இந்திய சரித்திர ஏடுகளிலே ஒரு புதிய அத்தியாயத்தையே ஏற்படுத்திவிட்டது.

பிரிட்டனின் சூழ்ச்சியா?

நீதிக்கென்றும், நேர்மைக்கென்றும், சமூகப் பாதுகாப்பிற்காக வென்றும் தோற்றுவிக்கப்பட்ட முஸ்லிம் லீகைக் கண்டதும் சீறி விழுந்தனர், காங்கிரஸ்காரர்களும் வங்காள ஹிந்துக்களும்! பத்திரிகைகள் மூலமாகவும், பிரசாரங்கள் மூலமாகவும் முஸ்லிம் லீக் வங்காளப் பிரிவினை சமயத்திலே உதித்ததால் அது நிச்சயம் பிரிட்டிஷாரின் சூழ்ச்சியால் உதித்ததுதான் என்றும் பொதுமக்களும் குறிப்பாக முஸ்லிம்களும் லீக் மீது தப்பெண்ணங்கொள்ளும்படியும் செய்தனர். எனினும் சில நியாய நோக்கமுள்ள ஹிந்துத் தலைவர்கள், முஸ்லிம் லீக் பிரிட்டனின்

தூண்டுதலால் தோன்றியதல்லவென்றும், அது நேர்மை, நியாயம், சமூகப் பாதுகாப்பு போன்ற அம்சங்கள்கொண்ட சபை என்றும் தம் வர்க்கத்தினருக்கு நன்கு எடுத்துக் காட்டிப் புத்திபுகட்டி வந்தனர்.

போட்டியில் முளைத்த ஹிந்து லீக்!

முஸ்லிம் லீக் உதித்த சின்னாட்களிலேயே போட்டிபோட்டுக்கொண்டு சில ஹிந்துக்கள் ஹிந்துமகா சபைலீக் யென்று ஒரு சபையை முளைக்க வைத்தனர். உரலுக்கு ஒருபக்கம் இடி மத்தளத்திற்கு இரு பக்கமும் இடி யென்பதுபோல, முஸ்லிம் லீக் ஆரம்பத்திலேயே காங்கிரஸ் ஹிந்துமகாசபைலீக் ஆகிய இருசபைகளின் பயங்கர எதிர்ப்புக்கிடையே வெற்றி காணவேண்டியதாயிற்று.

5. முஸ்லிம்லீகின் முதற் கூட்டமும் மகாநாடும் (1906)

முஸ்லிம் லீகின் முதற் கூட்டம் 1903-ல் டிசம்பர் 31-ந் தேதி நவாப் வக்காருல் முல்க் அவர்களின் தலைமையின் கீழ் நடந்து, லீகின் சட்டதிட்டங்களியற்ற ஒருஸப் கமிட்டி நிறுவப்பட்டது. அதில் ஜனாப் முஹம்மத் அலி பி, ஏ. (ஆனர்ஸ்) என்றழைக்கப்பட்ட மௌலானா முஹம்மத் அலியும் ஒருவர். லீகின் புதுவருடத்திற்கு மேன்மை தங்கிய ஸர் ஸுல்தான் முஹம்மத் ஷாஹ் ஆகாகான் தலைவராகவும், நவாப் முஹ்ஸினுல் முல்க், நவாப் வக்காருல் முல்க் ஆகியோர்கள் காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

முஸ்லிம் லீகின் முக்கிய நோக்கங்கள்

அன்று முஸ்லிம் லீகின் பிரதானநோக்கங்கள்:—

1. அரசாங்கத்துடைய நிர்வாக முறைகளிலே ஏதேனும் தவறுதல் ஏற்பட்டால் நல்லெண்ணத்துடனே அதைப்பற்றி அறிவித்து குறைகளை நிவர்த்திக்க வழி காண்பது.

2. இந்திய முஸ்லீம் களுடைய அரசியல் பாத்யதை கள், இதர உரிமைகள். முதலியவைகளைப் பாதுகாப்பது, முஸ்லிம்களுடைய அவசியங்களையும், ஆர்வங்களையும் அரசாங்கத்தாரிடம் வினயப்பூர்வமாய் எடுத்துரைத்துவேண்டிக் கொள்வது.

3. முஸ்லிம்லீகின் இதர லட்சியங்களுக்கு தீங்கு நேரிடாத முறையிலே எப்படி இந்தியமுஸ்லிம்கள் இதர சமூகங்களுடன் ஒத்துழைப்பு என்பதுபற்றி போதித்து, அத்தகைய ஒத்துழைப்பால் நேரிடும் தீங்குகளினின்று முஸ்லிம்களைப் பாதுகாப்பது என்பதேயாகும்.

முஸ்லிம் லீகின் முதல் மகாநாடு (1907)

அகில இந்திய முஸ்லிம்லீகின் முதலாவது மஹாநாடு 1907 டிசம்பர் மாதம் 29-ந் தேதியிலே முஸ்லிம்கள் மிகுந்த கராச்சி மாநகரிலே ஸர் ஆதம்ஜீ பீர்பாய் அவர்களின் தலைமையின்கீழ் கூடிற்று. மஹாநாட்டிற்கு இந்தியாவின் பல பாகங்களினின்றும் பிரதிநிதிகள் வந்து குவிந்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருடைய நோக்கமும், இந்திய முஸ்லிம்களின் எதிர்காலக்கதி மோட்சம் வருக்க இம்மஹாநாடே அஸ்திவாரம்'' என்பதாக இருந்ததால் "முஸ்லிம் லீகின் முரசொலி ஒவ்வொரு முஸ்லிமின் செவியிலும் புகுந்து இருதயத்திலே பதியவேண்டு'' மென ஆர்வமுற்றவர்களாய் அவர்கள் அங்குகூடி மகாநாட்டை ஈத் பெருநாள் போன்று கொண்டாடினர். தலைவரின் தலைமைப் பிரசங்கம் மிகச்

சுருக்கமாயிருந்திடினும், கருத்துக்கள் பலநிறைந்திருந்தன. அதிலே, முஸ்லிம்கள் எதிர் காலத்திலே நடந்துக் கொள்ள வேண்டிய பலதிட்டங்கள் விளக்கப்பட்டிருந்தன, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுள் முக்கியமானவையாவன;

இந்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் முஸ்லிம் பிரதிநிதிகள், சுயநலமற்றவர்களாயும், பொது நலப் பிரியர்களாயும இருத்தல் வேண்டும்.

முஸ்லிம் சமுதாயத்திலே, கல்வியையும், தொழில் முறையையும் அதிகம் பரப்ப வேண்டியிருப்பதால், முஸ்லிம் தலைவர்கள், இஸ்லாமியக்கல்விச் சாலைகள், தொழிற் சாலைகள் பல நிருவ முன்வர வேண்டும்.

முஸ்லிம் லீகை ஸ்தாபிப்பதிலே முக்கியப் பங்கெடுத்துக் கொண்ட நவாப் முஹ்ஸினும் முல்க் (அச்சமயத்திலே காலமாய்விட்ட படியால்) அவர்களின் மரணத்திற்கு அனுதாபம் காட்டியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

லீகின் விசேஷ மஹாநாடு (1908)

முதலாவது மகாநாடு கராச்சியிலே நடந்து முடிந்தபின், பல தலைவர்களின் அபிப்பிராயப் படியும், லீகின் தீவிர ஆக்க வேலைக்கு ஆதரவளிக்கக் கருதியும், முஸ்லிம் லீகின் விசேஷ ம கா நா டு, 1908–மார்ச் 18–ந் தேதி அலிகாரிலே, ஜனுப் மியான் ஷாஹ்தீன் சாஹிப், பார் அட்—லா அவர்களின் தலைமையில் கூடியது.

கூட்டத்திலே, கராச்சி மகாநாட்டில் யோசிக்கப் பட்ட பல விஷயங்கள் பற்றி முடிவுசெய்யப்பட்டன. லாஹூர், பாரிஸ்டர் ஜனுப் ஷேய்க் அப்துல்காதிர் சாஹிப் அவர்களால்,

“அரசாங்கத்தார் ஆலோசனையின்கீழ் இருந்துவரும் திட்டத்தின்மீது நாம் நன்காராய்ந்து நமது லீகின் அபிப்பிராயத்தை சர்க்காருக்குத் தெரியப்படுத்த லீக் சார்பிலே ஒரு கமிட்டி நியமிக்கப்படல் வேண்டும்”

என்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் அங்கிகரிக்கப் பட்டு நவாப் வக்காருல் முல்க், பாரிஸ்டர் ஸைய்யித் நபி யுல்லாஹ், ஜனாப் எம். யூஸுப் ஹஸன், மௌலவி ரபீயுத் தீன் (பாரிஸ்டர்) எம். பஜ்லுல் ஹுஸேன் ஆகியோர்களை அந்த கமிட்டியின் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுத்தனர். இரண்டாவது தீர்மானம்,

“ஹைகோர்ட்டுகளிலும், சீப் கோர்ட்டுகளிலும், முஸ்லிம்களையும் ஜட்ஜ்களாக நியமிக்கும்படியும், விகிதாசாரப்படி முஸ்லிம்களுக்கு சர்க்கார் உத்தியோகங் களிலே ஸ்தானம் கொடுக்கும்படியும், சட்டசபைகளிலே முஸ்லிம்களுக்குப் போதிய அளவு பிரதிநிதித்துவம் அளிக்கும்படியும், இந்திய சர்வகலாசாலைகளின் அங்கத்தினர் ஸ்தானங்களிலும், டெக்ஸ்ட் புக் கமிட்டியிலும், முஸ்லிம் களுக்கு ஸ்தானங்கள் அளித்து இஸ்லாமியக் கல்வி அபி விருத்தியடைவதற்கு வசதி செய்யும்படியும், கவர்ன்மெண் டாரை இக்கூட்டம் வேண்டிக்கொள்கிறது”

இது மௌலவி ரபீயுத்தீன் அவர்களால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் மகாநாடும் முடிவடைந்தது.

மந்திரி அளித்த சீர்திருத்தம்!

1906-முதல் இந்தியவைஸ்ராயாக இருந்துவந்த லார்டு மிண்டோ வெளியிட்ட ஒரு அறிக்கையிலே,

"இந்திய அரசியல் சட்டத்தை சற்று விரிவுபடுத்தி, சில குறிப்பிட்ட அதிகாரங்களை இந்தியர்களிடம் ஒப்புவிக்க இந்திய கவர்ன்மெண்டார் சமீபத்தில் ஏற்பாடு செய்வதற்காக ஒரு கமிட்டியை நியமித்து, அவர்கள் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து அறிக்கைவிடுவார்கள்"

என்று குறிப்பிட்டிருந்தார். இதை இந்தியா மந்திரி லார்டுமார்லியும் அங்கீகரித்திருந்தார். பின், கமிட்டி நியமிக்கப்பட்டது. கமிட்டியார், சுற்றுப்பிரயாணம் செய்து நூற்றுக்கணக்கான உத்தியோகஸ்தர்கள்—உத்தியோகப்பற்றற்றவர்கள் ஆகியோர்களின் சாட்சியங்களைச் சேகரித்தனர். முடிவாக இக்கமிட்டியினர், தங்கள் யாதாஸ்தை அரசாங்கத்தாரிடம் சமர்ப்பித்தனர். இத்தகவல், இந்தியா மந்திரிக்கும் அறிவிக்கப்பட்டது. பரிசீலனைசெய்த இந்தியா மந்திரி லார்டு மார்லி 1908–நவம்பர் மாதத்திலே, இந்திய அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாகத் தமது அபிப்பிராயங்கள் சிலவற்றை இந்திய சர்க்கார் மூலமாக வெளியிட்டார். இதிலே பல முக்கிய மாறுதல்கள் காணப்படினும், முஸ்லிம் சமுதாயத்திற்குப் பாதகமான சில பிரிவுகளும் காணப்படாமலில்லை. அவை, முஸ்லிம்கள் முதலிய சிறுபான்மையோர்களுக்கு பொதுத்தொகுதியின் மூலம் சில ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதே நிலையிலேயே முஸ்லிம்லீகின் வருடாந்திர மகாநாடும் கூடவேண்டியிருந்தது.

6. முஸ்லிம் லீக் 2-வது மகாநாடு (1908)

அ. இ. முஸ்லிம் லீகின் இரண்டாவது வருட மகாநாடு பஞ்சாபைச் சேர்ந்த அமிர்தஸரஸிலே, 1908-டிஸம்

பர் 30, 31-ந் தேதிகளில் ஆனரபிள், ஸர் ஸைய்யித் அலி இமாம் அவர்களின் தலைமையின் கீழ் கூடிற்று. இதிலே, வைஸ்ராய் விடுத்துள்ள அறிக்கையைப் பற்றி விவாதிக்கப் படுமென அறிவித்திருந்தபடியால், ஏராளமான தலைவர் களும், பிரதிநிதிகளும் விஜயம்செய்திருந்தனர்.

தலைவர் தமது நீண்ட முன்னுரையிலே, இந்திய அரசியல் சட்டதிட்டங்களிலுள்ள சாதக பாதகங்களை நன்கு விளக்கி முஸ்லிம்களின் குறைகளைத் தீர்த்து நியாயம் வழங்க, வேண்டுமென்றார். பிறகு, தீர்மானங்களைப் பற்றி பலத்த விவாதம் எழுந்தது. பல தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர். மௌலானா முஹம்மத்அலி தம தபிப்பிரா யத்தைப்பற்றி நீண்ட நேரம் விளக்கிய பிறகு, நவாப் வக் காருல் முல்க், டாக்கா நவாப், பஜ்லுல் ஹுஸேன், யாகூப் ஹஸன் சேட் [சென்னை] மஜ்ஹருல் ஹக், மௌலவி ரபியுத் தீன், மௌலானா முஹம்மத் அலி, ஸெய்யது அலி இமாம் (கமிட்டித் தலைவர்) ஆகியோர்களடங்கிய கமிட்டி யொன்று நியமிக்கப்பட்டு இவர்கள் உடனே ஒரு யாதாஸ்தை தயா ரித்து வைஸ்ராய்க்கு அனுப்பி வைப்பதோடு வைஸ்ராயை யும் தூதசென்று காணவேண்டுமென்றும் தீர்மானம் செய் யப்பட்டது. மேலும் "ஒரு தூதுகோஷ்டியை இங்கிலாந் திற்கு மனுப்பி இந்தியா மந்திரியைக் கண்டு பேச முயற் சிக்கவேண்டும்" என்ற மற்றோர் அதிகாரமும் அக் கமிட் டிக்கு அளிக்கப்பட்டது.

முக்கிய தீர்மானங்களின் விபரம்

மகாநாட்டிலே மேற்கொண்டும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகளில் சில கீழே தரப்படு கின்றன.

இந்தியாவிலுள்ள எல்லா முனிஸிபல் ஜில்லாபோர்டு களிலும் முஸ்லிம்களுக்குப் போதிய ஸ்தானங்கள் ஒதுக் கப்படவேண்டும்.

எல்லா மாகாண கவர்னர்கள், வைஸ்ராய் ஆகியவர்க ளின் ஆலோசனை கமிட்டிகளிலே முஸ்லிம்களுக்குப் போ திய பிரதி நித்தவம் கொடுக்கவேண்டும்.

பம்பாய் கவர்னர் பம்பாய் முஸ்லிம் லீகின் வேண்டு கோளை அவசியம் அங்கிகரிக்கவேண்டும்.

இந்தியா மந்திரி ஹிந்து-இஸ்லாமிய சட்டப்படி, நேர் மையான முறையிலே தீர்ப்பளிக்க லண்டன் "பிரிவிகௌன் ஸில்" ஜட்ஜ்களில் ஒரு ஹிந்துவையும் ஒரு முஸ்லிமையும் ஜட்ஜ்களாக நியமிக்கவேண்டும்.

சர்க்கார் உத்தியோகங்களிலே முஸ்லிம்களுக்குப் போதிய பிரதிநிதித்வம் அளிக்க முன்வரவேண்டும்.

'வக்பு' (தரும) சொத்துக்களின் நிலைமையைச் சரி வரப் பரிசீலனை செய்வதற்காக வேண்டி ஒரு கமிஷனை நிய மிக்கவேண்டும்.

மேலும், வங்காளப் பிரிவினையை ஆதரித்தும் அவற்றை எதிர்த்து நியாயமற்ற முறையிலே செய்யப்படும் கிளர்ச்சியைக் கண்டித்தும், தென் ஆப்பிரிக்க இந்தியர் களுக்கு ஆதரவு அளித்தும் பல தீர்மானங்கள்செய்து மகாநாட்டை வெற்றியுடன் முடித்தனர்.

இம் மகாநாட்டையும், செய்யப்பட்ட தீர்மானங்களை யும் ஆதரித்து இந்தியாவின் பல பாகங்களிலுள்ள முஸ் லிம் சங்கங்கள், சபைகள் பல்லாயிரக் கணக்கான கூட்டங்

கள்போட்டுச் செய்த ஆதரிப்புத் தீர்மானங்களை இந்தியா மந்திரிக்கும் வைஸ்ராய்க்கும் அனுப்பிவந்தனர்.

தூது கோஷ்டியினரின் பேட்டி

இரண்டாவது லீக் மகாநாட்டின் தீர்மானப்படி 1909ஆம் வருட ஆரம்பத்திலே மேன்மை தங்கிய ஆகாகான் தலைமையில் லீக் தூதுகோஷ்டி வைஸ்ராயைப் பேட்டிகண்டு லீகின் கோரிக்கைகளையும் இலட்சியங்களையும் தெரிவித்தனர். தன்னாலானதை கவனிப்பதாக வைஸ்ராய் வாக்களித்தார் ஜனாப் ஸைய்யித் அமீர்அலியின் தலைமையின்கீழ் ஒரு தூது கோஷ்டி லண்டனுக்குச் சென்று இந்தியா மந்திரியிடம் தமது கோரிக்கைகளை வற்புறுத்தியது. அவரும் முஸ்லிம்களின் கோரிக்கைகளை அவசியம் கவனிப்பதாகக் கூறினர்.

மிண்டோ மார்லி சீர்திருத்தம்

1909 ஆம் வருட மத்தியிலே "இந்தியன் கௌன்ஸிலர் ஆக்ட்" என்னும் பெயருடன், ஒரு சீர்திருத்தம் பிரிட்டிஷ் பார்லிமெண்டால் இந்தியாவிற்கு அளிக்கப்பட்டது. இதை "மிண்டோ மார்லி சீர்திருத்தம்" என்றும் அழைப்பார்கள். இச்சட்டத்திலே இந்தியர்களின் குறிப்பாக இந்திய முஸ்லிம்களின் பல அரசியல் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

முஸ்லிம் லீகின் முதல் வெற்றி!

முஸ்லிம் லீகின் அபார உழைப்பினாலும், முறையீட்டினாலும், மேற்கண்ட சட்டத்திலே முஸ்லிம்களுக்கு முக்கிய உரிமைகள் வழங்கப்பட்டதும், லீக் தலைவரும், பிரபல வழக்கறிஞருமான ஆனரபின் ஸர். ஸைய்யித் அலி

இமாம் வைஸ்ராய் நிர்வாகசபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் முஸ்லிம் லீகின் பிரதான வெற்றிகளாகும். ஏனெனின், இந்தியர், வைஸ்ராய் நிர்வாக சபையில் அங்கத்தினர் பதவிவகித்தது இதுதான் முதல் தடவை. அரசாங்க உத்தியோகங்களில், முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டுமென லீக் மகாநாட்டில் செய்த தீர்மானப்படி அரசாங்கம் நடந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமன்று; ஆனரபிள் மிர்ஜா அப்பாஸ் அலி பேக் அவர்களுக்கும் இந்தியா மந்திரி நிர்வாக ஆலோசனை சபையில் பிரதிநிதித்வம் கிடைத்தது. முஸ்லிம்களுடைய தனித்தொகுதியுட்பட்ட பல கோரிக்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. எனினும், சில கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுப் போயின. இருந்தும், புதிய அரசியலை ஏற்றுநடந்த முஸ்லிம்கள் சோர்ந்துவிடவில்லை.

காங்கிரஸாரின் வயிற்றெரிச்சல்!

முஸ்லிம் லீக் சார்பாக தூதுகோஷ்டியினர் வைஸ்ராயைக் கண்டு பேசியதை, காங்கிரஸாரும், அதன் தலைவர்களும் முதலில் ஆதரித்தனர். ஆனால், கோரிக்கைகளில் சில அங்கீகரிக்கப்பட்டதும், புதிய அரசியல் திட்டம் நிறுவப்பட்டதும், முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்வம் கிடைத்ததும், காங்கிரசின் ஆதரிப்பைக் குரோத மனப்பான்மையாக பொறாமைப்பேய் அவர்களிடையே கோரமாக நர்த்தனமாடியது. அதன் எதிரொலியாக 1909-ம் வருட இறுதியிலே லாஹூரில் பண்டித மதன் மோஹன மாளவியா தலைமையின் கீழ் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டிலே, முஸ்லிம்களின் (நியாயக்) கோரிக்கைகளைக் கண்டித்தும், அவற்றை ஒப்புக்கொண்ட இந்தியா மந்திரி — வைஸ்ராய் முதலியவர்களைத் தாக்கியும், புதிய அரசியல் திட்டத்தை

ஒப்புக்கொள்ளமுடியாதென்றும், தலைவர் உட்பட பலர், ஆங்கார ரீங்காரத்துடன் பேசி, பலத்த கண்டனங்கொண்ட தீர்மானங்களை நிறைவேற்றினர். இதைக் கண்ணுற்ற முஸ்லிம்கள், காங்கிரஸாரின் குரோத புத்தியையும், ஹிந்து மனப்பான்மையும் உணர்ந்துக்கொண்டு, கோபங்கொள்ளுவதற்கு மாருக, லீகின் அஸ்திபாரத்தைப் பலப்படுத்துவதிலே முனைந்து நின்றனர்.

லண்டனிலும் முஸ்லிம் லீக்!

முஸ்லிம்கள் லீகைப் பலப்படுத்த முனைந்ததினுலே, இந்தியாவின் இதர பாகங்களிலும், மாகாணங்களிலும், லீகின் கிளைகள் ஸ்தாபிதமாயின. 1908-ம் வருட இறுதியில் சென்னைமாகாணத்தில் மாகாண லீக் நிறுவப்பட்டது. இந்தியா மந்திரியை பேட்டிகாண லண்டனுக்குச் சென்றிருந்த தூதகோஷ்டியினர், தாங்கள் லண்டன் வந்ததற்கு அடையாளமாக அங்கும் லீகின் கிளையை ஸ்தாபித்து, அதன் தலைமைப்பதவியை ஜனுப் ஸெய்யித் அமீர் அலிக்கே கொடுத்தனர்.

முஸ்லிம்களின் அரசியல் விழிப்புணர்ச்சியையும், உத்வேகத்தையும், முஸ்லிம் லீகின் வளர்ச்சி - சக்தி இந்தியாவில் பெருகிவருவதையும் கண்ட காங்கிரஸார், முஸ்லிம்களின் ஒத்துழைப்பின்றி எதையும் சாதிக்க முடியாதென்பதை திண்ணமாயுணர்ந்தனர். எனினும், எதிர்க்கும் குரோத மனப்பான்மையும், ஜாதித்திமிரும் அவர்களின் நிழல்போல் தொடர்ந்துவந்தன. காங்கிரஸும் — லீகும் அன்றிருந்த உண்மை நிலையை ஆங்கிலேய அறிஞர் ஸர் பி. டபிள்யூ. ஹோல்டர்ஸன் "இந்தியசமூகமும் பிரச்னைகளும்" என்னும் தமது புத்தகத்திலே மிக அழகாக டுத்துக்காட்டியிருக்கார்.

7. முஸ்லிம்லீகின் 3-வது மகாநாடு(1910)

வழக்கத்திற்கு விரோதமாக 1909-டிஸம்பரில் நடக்காது, 1910-ல் ஜனவரி 29, 30 தேதிகளில் டில்லியில் ஆர்காட் இளவரசர் ஸர். குலாம் முஹம்மத் அலிகான் அவர்களின் தலைமையின்கீழ் முஸ்லிம்லீகின் மூன்றுவது மகாநாடு கூடியது. இம் மகாநாட்டிற்குத் தலைமைவகிக்க ஏற்கனவே, ஸர். ஸைய்யித் அமீர் அலியைத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தது. ஆனால், அவர் இங்கிலாந்திலே பிரிவி கௌன்ஸில் ஜட்ஜ்களிலொருவராக நியமிக்கப்பட்டுவிட்டபடியால் இது சாத்தியப்படாதுபோயிற்று. எனினும், மகாநாட்டின்போது, "மகாநாடு வெற்றிபெற பிரார்த்திக்கிறேன்; ஹிந்து-முஸ்லிம் ஒத்துழைப்பின்றி மாகாண சுயஆட்சி அரசியலைப்பெறமுடியாது" என அவர் செய்தி அனுப்பி வைத்திருந்தார். ஸர். ஆகாகான் அனுப்பிய செய்தியிலே,

"ஆரம்பக் கல்வியை தேசத்தில் அதிகப்படுத்தவும், விவசாய அபிவிருத்திக்குப் பாடுபடவும், தென் ஆப்பிரிக்க இந்தியர்களுக்கு உதவி செய்யவும், இந்திய முஸ்லிம்களுக்காக வேண்டி ஒரு முஸ்லிம் சர்வ கலாசாலையை ஏற்படுத்தவும் லீக் முயற்சிக்கவேண்டும்"

என்று குறிப்பிட்டிருந்தார். இம்மகாநாட்டிற்கு இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும், குறிப்பாககாங்கிரஸ், ஹிந்துத் தலைவர்களும் வந்திருந்தனர். வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஜனாப் ஹக்கீம் அஜ்மல் கான் அவர்களின் வரவேற்புக்குப் பின் தலைவர் தமது நீண்ட சொற்பொழிவை நிகழ்த்தினார். ஒவ்வொரு மாகாணத்திலும் லீக் சார்பில் ஆங்கிலப் பத்திரிகைகளை தோற்றுவிக்கவேண்டுமென்றும், முஸ்லிம் சர்வ கலாசாலை ஏற்படுத்தவேண்டுமென்றும், உருது மொழியை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும், வெற்றுக் கூச்சலுக்

குப் பயந்துபோய் பிரிட்டிஷ் வங்காளப் பிரிவினையை ரத்து செய்யமாட்டார்களென்றும் தலைவர் குறிப்பிட்டார். முஸ்லிம்களின் தனித்தொகுதி போன்ற பல உரிமைகளை ஒப்புக்கொண்ட மின்டோ மார்லி சீர்திருத்தத்தை இந்தியாவிற் களித்தமைக்காகப் பாராட்டி தலைவரால் ஒரு தீர்மானம் பிரேரிக்கப்பட்டு, பல தலைவர்களின் ஆமோதிப்பிற்குப் பிறகு நிறைவேற்றப்பட்டது.

பிறகு மௌலானா முஹம்மத் அலி அவர்களால் "தென் ஆப்பிரிக்க இந்தியர்கள் மீது நிறம் ஜாதித் திமிரால் ஐரோப்பியர் செய்துவரும் கொடுமைகளைக்" கண்டிக்கும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு தென் ஆப்பிரிக்கப் பிரதிநிதியாக மகாநாட்டிற்கு வந்திருந்த மிஸ்டர் ஹென்றி எஸ். பாலக் உட்பட பலரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ஸர். ஆகாகான் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அலிகர் முஸ்லிம் காலேஜை, சர்வகலாசாலையாக மாற்றியமைக்க முடிவுசெய்யப்பட்டது.

உத்தியோகம் காரியாலயம் மாற்றம்!

அன்றைய லீக் காரியதரிசி நவாப் வக்காருல் முல்க் அவர்கள் தமது பதவியைவிட்டு விலகிக்கொண்டதால், மேஜர் ஸைய்யித்ஹஸன் பல்கிரரமி மௌலனா முஹம்மத் அஜீஸ் மிர்ஸா சாஹிப் ஆகியோர் காரியதரிசிகளாய் இருந்தனர். ஆனால் சிறிது காலத்திலேயே முன்னவர் லீக் சார்பாக லண்டன் செல்லவேண்டியிருந்தாலும், பின்னவர் ஹைதராபாத்தில் பொறுப்பான பதவி வகித்துக்கொண்டதாலும் புதிய வருடத்திற்கு ஹாஜி மூஸாகான் சாஹிப் (அலிகர்)பொதுக் காரியதரிசியாகவும் ஸைய்யித்வஜீர்ஹஸன் பி. ஏ. எல். எல். பி. கூட்டுக் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டனர்; அலிகாரிலிருந்த லீக் காரியாலயத்தை இலட்சு

மணபுரிக்கு மாற்றுவதென முடிவுசெய்யப்பட்டது. மறு வருடத்திற்கும் ஸர் ஆகாகான் அவர்களையே லீக் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தருமச் சொத்துக்களை வீணாக்காமல் தடுப்பதற்காகச் சட்ட மியற்றும்படியும் முஸ்லிம் தருமச் சொத்துக்களையும் பரிசிலனைச்செய்ய ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்றும் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மகாநாடு முடிவடைந்தது.

கைமேல் பலன்!

மூன்றுவது மகாநாடு முடிவடைந்த கையோடு லீக் தீவிரமாக உழைக்க வாரம்பித்தது. செய்த தீர்மானங்களை ஏட்டளவோடு நிறுத்தாது காரியாம்சத்திலும் காட்டத் தொடங்கியது. அரசாங்க உத்தியோகங்களிலே முஸ்லிம்களுக்கும் பதவி கொடுக்கவேண்டுமென லீக் அடிக்கடி வற்புறுத்தியதன்பேரில் முஸ்லிம்களின் மனுக்கள் கவனிக்கப்பட்டு ஏராளமான முஸ்லிம்களுக்கு உத்தியோகங்கள் கிடைத்தன. முஸ்லிம் லீக் அரசாங்கத்துடனும் தன் கிளைகளுடனும் தீவிரமாகக் கடிதபோக்குவரத்து செய்ததின் பயனாக கடிதங்களின் எண்ணிக்கை 1910-ல் மட்டும் 6730-க்கு மேற்பட்டுப் போய்விட்டது. இதற்கு முந்திய வருடத்திலே மொத்த கடிதங்கள் 3378 தாம் என்பதை கவனிக்கவேண்டும்.

தருமச் சொத்துக்களைக் காப்பதிலே கவர்ன்மெண்ட் கவலைகொள்ளவேண்டுமென மகாநாடு தீர்மானஞ்செய்ததை யொட்டி அரசாங்கம் 1910-ம் வருஷத்தில் அளித்த பதிலில் "தாங்களாக ஒன்றுஞ்செய்ய முடியாதென்றும் லீகின் சார்பாக மசோதா கொண்டுவரப்பட்டால் கவனிக்கப்படுமெனத்" தெரிவிக்கப்பட்டதையொட்டி ஜனுப் முஹமத் அலி ஜின்னாஹ், "வக்பு அலல் அவ்லாத்" (தங்களின் குழந்தைகள்மீது தர்மமாக எழுதிவைக்கப்படும் விபரங்க

ளடங்கிய) மசோதா'' ஒன்றை தயாரித்துக்கொண்டிருந்தார். இதே சமயத்திலே காங்கிரஸ் ஹிந்துத் தலைவர்கள் உருதுவை அழிப்பதற்கெனக் கங்கணங்கட்டிக்கொண்டு ஹிந்தியைப் பரப்ப தீவிரப் பிரசாரம் புரிந்துவர ஆரம்பித்தனர். எனவே லீக் உத்தியோகஸ்தர்களும் பிரசாரகர்களும் ஏக காலத்திலே உருது அபிவிருத்திக்கென்றும் லீக் அபிவிருத்திக்கென்றும் நாடெங்கும் பிரசாரம் புரிந்து வரலாயினர்.

8. முஸ்லிம் லீகின் 4-வது மகாநாடு(1910)

1910 டிசம்பர் 28-ந் தேதி நாகபுரியிலேயே லக்னோ பாரிஸ்டர் ஸையித் நபியுல்லா சாஹிப் அவர்களின் தலைமையில் அ. இ. முஸ்லிம் லீக் நான்காவது மகாநாடு வெகு விமரிசையாகக் கூடியது. தலைவர் தமது முன்னுரைப் பிரசங்கத்திலே லீகின் சேவைகளை யெடுத்துவிளக்கி ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தைப்பற்றியும் அம்மாதிரி ஒற்றுமைக்கு இரு சமூகத் தலைவர்களும் ஒன்றுகூடி ஆலோசிப்பது நலமென்றும், இது சம்பந்தமாக ஸர் வில்லியம் வெட்டர்பன் எடுத்துவரும் முயற்சியைப் பாராட்டியும் லண்டன் பிரிவிகௌன்ஸிலில் இஸ்லாமியச் சட்டதிட்டங்களுக்கு முரணாக 'வக்பு' (பொதுச் சொத்து) விஷயமாக செய்துள்ள தீர்ப்பைக் கண்டித்தும் அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கோரிக்கொண்டும் முஸ்லிம்களுக்குக் கட்டாயக் கல்வியின் அவசியம் பற்றியும் நீண்டநேரம் விளக்கிக் கூறினர்.

அலஹாபாத் பாரிஸ்டர் ஷேய்க் ஜுஹூர் அஹ்மத் ஸாஹிப் ஹிந்தி-உர்து சம்பந்தமாக ஒரு தீர்மானம் கொண்டுவந்து பேசினர். இதை ஆதரித்து மௌலானா

முஹம்மத் அலி உட்பட பல தலைவர்கள் பேசினர். பம்பாய் பாரிஸ்டர் காஜி கபீருத்தீன் சாஹிப் 'வக்பு' (பொதுச் சொத்து) சம்பந்தமாக விரிவாக விளக்கிக் கூறிவிட்டு ஜனுப் ஜின்னுஹ்வின் 'வக்பு மசோதாவை' சபை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இரு தீர்மானங்களும் ஒப்புக்கொள்ளப்பட்டு வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு மகாநாடு வெற்றிகரமாக முடிவடைந்தது.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை மகாநாடு

லீக் மகாநாடு முடிவடைந்த கையோடு அடுத்த வருட ஆரம்பத்திலேயே அதாவது 1911-ல் ஸர் வில்லியம் வெட்டர்பன் தலைமையின்கீழ் காங்கிரஸின் 25-வது மகாநாடு முடிவுபெற்று, அதே வெட்டர்பன் தலைமையின்கீழ் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை மகாநாடு கூடிற்று. இதில் கலந்துகொள்ள அலஹாபாதிலிருந்து ஸர் ஆகாகான் தலைமையில் பல முஸ்லிம் தலைவர்கள் வந்திருந்தனர். மகாநாட்டில் கலந்துகொண்ட 100 தலைவர்களில் 60 பேர் ஹிந்துக்கள், 40 பேர் முஸ்லிம்கள், ஹிந்துத் தலைவர்களிலே முக்கியத்துவம் பெற்றவர்கள்; ஸர் யதீந்திரநாத் பானர்ஜி, மிஸ்டர் கோகலே, ஸர் சுந்திரலால், பண்டிட் மதன மோஹன மாளவியா, ஸர் தேஜ் பஹதூர் சாப்ரு, பண்டித மோதிலால் நேஹ்ரு, லார்டு ஸின்ஹா, தர்பங்கா மஹாராஜா, ஆகியோர். முஸலிம் தலைவர்களிலே ஸர் ஆகாகான், வக்காருல் முல்க் பஹதூர், ஸர் இப்ருஹீம் ரஹ்மதுல்லா, முஹம்மத் அலி ஜின்னுஹ், மிஸ்டர் ஹஸன் இமாம், மௌலானு முஹம்மத் அலி, ஹக்கீம் அஜ்மல்கான், மிஸ்டர் ஷபீ அஹ்மத்பார் அட்லா, மௌலவி ரபியுத்தீன் அஹ்மத் பார்-அட்லா முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

முடியுமுன் முடிந்தது!

தலைமைவகித்த வெட்டர்பனும், ஆகாகானும் பேசி முடித்ததும், இரு வகுப்புத் தலைவர்களிலும் பலர் பேசி, ஹிந்து - முஸ்லிம் சமாசத்திற்குத் திட்டங்கள் பல தயாரித்தனர். ஆயின் பண்டித மதன் மோகன மாளவியா போன்ற சில சுயநல ஹிந்துத் தலைவர்களினாலே, திட்டங்கள் சிதறடிக்கப்பட்டு சமாசம் சாத்தியப்படாது மகாநாடு முடிவின்றி முடிவுற்றது. அதாவது ஒத்திப்போடப்பட்டது. இருந்தும் இருசமூக உண்மைத் தலைவர்களும் ஒற்றுமையின் அவசியத்தைக் குறித்து துடிதுடித்து நின்றனர். 1916-ல் ஏற்பட்ட காங்கிரஸ் லீக் ஒப்பந்தம் கூட இதன் எதிரொலிதான் என்றால் அது மிகையாகாது.

புயலும் அமைதியும்!

1911-ஆம் ஆண்டு இஸ்லாமிய உலகிற்கே ஒரு பெருஞ் சோதனை ஏற்பட்டது. இந்தியமுஸ்லிம்கள் அதற்கு விதி விலக்கல்ல ஆயின் இதில் அதிசயப்படக்கூடியது என்னவென்றால் எத்தனைக் கெத்தனை சோதனைகள் அதிகப்படுகின்றனவோ அத்தனைக் கத்தனை விழிப் புணர்ச்சியும் மிகைப்பட்டுக்கொண்டிருந்தது முஸ்லிம் உலகிலே! புயலுக்குப்பின் தானே அமைதியும்!

நான்கு வருடங்களாக லீக் செய்துவந்த சேவைகளினாலும், கிளர்ச்சிகளினாலும், நாட்டிலும், அரசாங்கத்திலும் அபார செல்வாக்குப் பெற்றிருந்தது லீக் காலாவிட்ட வேலையைத் தலையால்செய்ய எண்ணற்ற இளைஞர்கள் தயாராய் இருந்தனர். பரோடா சமஸ்தானத்திலே உயர் பதவி வகித்துவந்த மௌலானா முஹம்மத் அலி பி. ஏ. (ஆக்ஸன்) லீகிற்காகவும், சமுதாயத்திற்காகவும் தமது பதவியைப்

பலி கொடுத்தார்; முஸ்லிம்களைத் தட்டி யெழுப்ப கல்கத்தாவிலிருந்து 'காம்ரேட்' (தோழன்) எனும் ஆங்கிலப் பத்திரிகையையும் ஆரம்பித்தார். இஸ்லாமியக் கவிச் சக்கிரவர்த்தி அல்லாமாஸர் முஹம்மத் இக்பால் தமது கவிதாசக்தி கொண்டு படர்ந்திருக்கும் காரிருளிலே கதிரவனை தோற்றுவித்தார். மௌலானா அபுல்கலாம் ஆஜாத் "அல்ஹிலால்" எனனும் உருது வார வெளியீடு மூலம், பேனு முனைக்கொண்டு படுத்திருந்த சமூகத்தை பாரினிலே புகழுடன் விளங்கவைத்தார். மௌலானா ஜபர் அலிகான் 'ஜமீந்தார்' என்னும் உருது தினசரிமூலம், தினந்தோறும் சங்க நாதம் முழங்கினர்.

தலைவர்களின் உழைப்பு வீணாகவில்லை; இஸ்லாமிய உலகம் விழிட்டெழுந்தது! வாகை மாலைசூட வகைகண்டது!! 1910-ல் டில்லியிலே முஸ்லிம் லீக் மகாநாட்டில் ஆற்காடு நவாப் வேண்டுதலால் விழிப்பூட்டும் சிறந்த அழகான பத்திரிகைகளை தலைவர்கள் தோற்றுவித்தார்கள் போலும்!

9. முஸ்லிம்களின் சோதனைகாலம்

இரவிற்குப்பின் பகல் புயலுக்குப்பின் அமைதி. இப்பாதிரியே மாறிக்கொண்டு செல்கிறது உலகம்!

1911 ஆம் ஆண்டு இஸ்லாமிய சரித்திரத்திலேயே ஒரு பெரும் துக்ககரமான ஆண்டு மறக்கமுடியாத-மறக்க முடியாத பல சம்பவங்கள் நிகழ்ந்தன. இந்தியாவிலும்சரி, உலகின் எப்பாகத்திலும்சரி முஸ்லிம்களுக்கு கஷ்டங்களுக்குமேல் கஷ்டங்களாக வந்து குவிந்தன. இத்தாலி, துருக்கி ஆதிக்கத்திற்குட்பட்ட "திரிப்போலி" மீதுபடை

யெடுத்து அங்குள்ள முஸ்லிம்களுக்குத் தாங்கவொண்ணுத் துன்பமிழைத்துவந்தது. அந்த மாதத்திலே ருஷ்யா, ஈரான் தேசத்தைச்சார்ந்த "மஷ்ஹதே முகத்தஸ்" மீது படையெடுத்தது.

வங்காளப் பிரிவினை ரத்து!

"பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும்" என்பார்கள். இதே கதி அன்று இந்திய முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டது. 1911 ஆம் ஆண்டு டிஸம்பர் மாதத்திலே ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு டில்லியில் இந்தியச் சக்கிரவர்த்தியாக பட்டஞ் சூட்டப்பட்டது. சார்ஜ் மன்னர் தம் பட்டஞ் சூட்டிக்கொண்டதன் அடையாளமாக இந்தியாவிலே இரு பெரும் ஞாபகார்த்தக் காரியங்களைச் செய்துவிட்டுச் சென்றார்.

முதலாவது இந்தியாவின் தலைநகரை கல்கத்தாவிற்குப் பதிலாக மொகல் ராஜ்ஜியத்திலிருந்தபடி டில்லிக்கு மாற்றினார். ஆனால் இரண்டாவது காரியம் முஸ்லிம்களின் எதிர்காலக் கோட்டையைத் தகர்த்தெறிவதுபோலிருந்தது. இந்திய முஸ்லிம்கள் மனம் புண்படும்படி வெகு பிரயாசையுடன் வங்காளம் பிரிக்கப்பட்டதை நிமிடத்தில் ஒன்றுபடுத்தி "வங்காளப் பிரிவினை ரத்தாய்விட்டது" என்று பிரகடனப்படுத்தினர். ஆங்கோ அன்று கொதித்தெழுந்த முஸ்லிம்களின் மன உணர்ச்சியை என்னென்று சித்தரிப்பது?

முஸ்லிம் லீகின் முதற் பெருந்தலைவர் நவாப் வக்காருல் முல்க் அவர்கள் இரத்தக் கண்ணீர்விடுத்து உடைந்த குரலில் பிரலாபித்ததாவது.

"அரசாங்கம் செய்த இத் தந்திரச்செயல், ஏழை முஸ்லிம்களின் கூட்டத்தின்மீது பீரங்கிப் பிரயோகம்செய்தது

போலாகும். இந்த ஒரு குண்டு எண்ணற்ற முஸ்லிம் மக்களைப் பிணக் குவியல்களை யொத்த உணர்ச்சியற்ற பிண்டங்களாய்ச் செய்துவிட்டது. தாம் செய்யும் இக் காரியத்தினால் முஸ்லிம்களுக்கு ரோஷம், மானம்; இருக்குமாவென்றுகூட கவனிக்காது'' அவர்கள் உடம்பிலே ஓடுவதுஉதிரமன்று; தண்ணீர் என்று கருதிவிட்டது''

சுருங்கக் கூறுமிடத்து தவறு நம்மிடத்திலேதான் இருந்தது. ஏனெனின் வங்காளப் பிரிவினையை எதிர்த்து ஹிந்துக்கள் செய்துவந்த பிரசாரங்களிலும் ஆக்க வேலைகளிலும், பிரிவினையை ஆதரித்து ஆயிரத்திலே ஒரு பங்கு கூட முஸ்லிம்கள் உழைக்கவில்லை. அப்பாவி முஸ்லிம்கள் ''உலகம் ஒரே நிலைகொண்டது, பிரிட்டிஷார் கடைசிவரை காத்துநிற்பர்'' என நம்பினர்போலும். அந்தோ! அவர்களென்ன அறிவர், உலகம் விநாடிக்கு விநாடி மாறிவருகிறதென்ற, முஸ்லிம்களின் அப்பாவித்தனத்திற்கு அரசாங்கம் தக்கபடி தண்டித்து விழிக்க வைத்தது!

இந்திய அரசாங்கத்தின் இச்செய்கையும், இத்தாலி ரஷ்யா நடந்துகொண்டவிதமும் இந்திய முஸ்லிம்களுக்கு பெருத்த வெறுப்பையளித்தது. முஸ்லிம் லீக் தனது வெறுப்பைக் காட்டிக்கொண்டதோடல்லாது, அந்நாடுகளின் சாமான்களையும் முஸ்லிம்கள் பகிஷ்கரிக்கச்செய்தது.

ஹிந்துக்கள் செய்துவந்த ஆர்ப்பாட்டங்கள்!

வங்காளப் பிரிவினையால் முஸ்லிம்களுக்கு பிரமாதமான நன்மைகள் ஒன்றும் நிகழாவிடினும் ஹிந்துக்கள் பொறுமை நோக்கங்கொண்டு முஸ்லிம்களுக்கு அதனால் பெருத்த இலாபம் கிடைக்கிறதென்றும் சிறிது நாட்களிலே ஹிந்துக்களின் சகல உரிமைகளும் பறிக்கப்பட்டுப் போய்

விடுமென்றும், இந்துக்களிடையே பிரசாரம்புரிந்து, முஸ்லிம்கள்மீதும், அரசாங்கத்தின்மீதும் விரோத மனப்பான்மையைக் கிளப்பிக்கொண்டிருந்தனர்.

இதனல் மூண்டெழுந்த ஹிந்துக்களால், முஸ்லிம்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட துன்பங்கள் அனந்தம், பயங்கரமான சதிச்செயல்கள், கொலை, கொள்ளை, நெருப்பு வைத்தல், பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரித்தல் முதலிய சொல்லொணுத் தொல்லைகள் கொடுத்து 'எல்லாம் வங்காளப் பிரிவினையின் எதிரொலியே' என்றும் கதைகட்டி விட்டனர். இக்கதையின் இரகசியத்தை வெளியாக்கும் தோரணையில்,

"வங்கப் பிரிவினையின் காரணமாகவே ஹிந்து முஸ்லிம் கலவரம் நடக்கிறதென்று விடப்படும்சாடு உண்மையில் திரித்தவை. உண்மை என்னவெனில் தாங்கள் புரிந்து வரும் அரசாங்க எதிர்ப்பு வேலைகளிலே முஸ்லிம்களையும் கலக்குமாறு ஹிந்துக்கள் வற்புறுத்தினர். ஆனல் முஸ்லிம்கள் இணங்காது போகவே அவர்கள் ஹிந்துக்களின் கோபத்திற்கு உட்படவேண்டியதாயிற்று"

என்று சர்க்கார் அறிக்கை யொன்று வெளியிட்டது. ஹிந்துக்கள் இம்மாதிரி அளவிற்குமீறவே அரசாங்கத்தினரும் அடக்குமுறைகளை அதிகரித்தனர் ஹிந்துக்கள் இம்மாதிரி அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சிசெய்த போதும் முஸ்லிம்கள் நன்றியுடனே நடந்துகொண்டதற்குத்தாம் அரசாங்கம், வங்கப் பிரிவினையை ரத்துசெய்தனது . நன்றியறிதலை முஸ்லிம்கள் பால் தெரிவித்துக் கொண்டது போலும்!

பிரிவினை ரத்துக்குப் பாராட்டு!

வங்கப்பிரிவினை ரத்துச்செய்தி கேட்டதுமே ஹிந்துக்களுக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. ஆடினர்! பாடினர்! கும்மாளமிட்டனர்!! காங்கிரஸின் 26-வது மகாநாடு கல்கத்தாவிலே 1911 டிஸம்பரிலே சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் கூடியபோதும் கூட, பிரிவினை ரத்தானதைப் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் தனித்தொகுதி முறையைக் கண்டித்தும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

10. முஸ்லிம் லீகின் 5-வது மகாநாடு (1912)

முன் மகாநாடுகளிலே முஸ்லிம் லீக்செய்த தீர்மானங்களை செயலில் கொண்டுவர பகிரதப் பிரயத்தனங்கள் எடுத்துக்கொண்டது. அரசாங்க உத்தியோகங்களில் அதிகப் பங்களிக்க வேண்டுமென்றும், ஜில்லாபோர்டு, முனிசிபல் முதலிய ஸ்தலஸ்தாபனங்களிலும் போதிய பிரதிநித்துவம் அளிக்கவேண்டுமென்றும் மீண்டும் வற்புறுத்தி அன்று இராஜப்பிரதிநிதியாக இருந்த லார்டு ஹார்டிஞ்சிற்கு ஒரு மகஜர் அனுப்பப்பட்டது. மகாநாட்டில் தீர்மானம்செய்தபடி ஸர் ஆகாகான், அலிகர் முஸ்லிம் காலேஜை சர்வகலாசாலையாக மாற்ற 1910 முதற்கொண்டே பலமாக வேலைசெய்ய ஆரம்பித்தார். அவர் தலைமையில் தேசமெங்கனும் தூது கோஷ்டிகள் சென்று பணம் வசூல் செய்து 1911 மார்ச்சு முடிய 25 இலட்சம் ரூபாய் நிதிதிரட்டின. லீகில் தீர்மானம் செய்தபடி ஆரம்பக் கட்டாயக்கல்வி திட்டத்தை அனுசரித்து திரு கோகலே ராஜாங்க சபையிலே ஒரு மசோதா கொண்டுவந்தார். இதை முஸ்லிம் லீக் பலமாக ஆதரித்ததுடன் மார்க்கக்கல்வி, உர்துபாஷை, பள்ளிக்கூட நிர்வாகபோர்டில் முஸ்லிம்களுக்குப் போதியபங்கு ஆகிய

வைகளையும் சேர்த்து வற்புறுத்தி நிறைவேற்றியது. மேலும் ஜனாப் ஜின்னாஹ் அவர்களால் கொண்டுவரப்பட்ட "வக்பு அலல் அவ்லாத்" (பிள்ளைகளின் மேற்பார்வையில் எழுதி வைக்கப்படும் தருமசொத்து) மசோதாவும், லீகின் பலத்த கிளர்ச்சியாலும் ஹிந்துக்களின் ஆதரவின் மீதும் ஸெலக்ட் கமிட்டிக்கு அனுமதிக்கப்பட்டது.

கடந்த நாகபுரிலீக் மகாநாட்டின் விபரங்களை தெளிவான முறையில் புத்தகரூபமாக வரையப்பட்டு பல பாஷைகளிலும் அச்சடிக்கப்பட்டு வினியோகிக்கப் பட்டது. இதே வருடத்திலே (1911-ல்) லீக் கௌன்ஸில் கூட்டம் எட்டு விடுத்தம் நடத்தப்பட்டது. முஸ்லிம் சர்வ கலாசாலை ஏற்படுத்த லீக் எடுத்துக்கொண்ட முயர்ச்சியைப் போற்றுதார் இல்லை. திரு கோகலேயின் கல்வி மசோதாவைக் கவனிக்கக்கூட்டப் பெற்ற லீக்கௌன்ஸில் கூட்டத்திற்கு, இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டது.

நெருக்கடியில் நடந்த மகாநாடு

உண்மையிலே முஸ்லிம் லீகின் ஐந்தாவது மகாநாடு, பெரும் இஸ்லாமியஉலகநெருக்கடியிலேயே தாம் நடந்தது. 1912 மார்ச் 3, 4-ம் தேதிகளில் கல்கத்தா விலே டாக்கா நவாப் அவர்களின் தலைமையின் கீழ் கூடிற்று. இதுவரை லீகிலே அங்கம்வகிக்காது வந்த ஆனால், லீகிற்கும் முஸ்லிம்களின் நலன்களுக்கும் பெரும் ஆக்கம் தேடிக் கொடுத்து வந்த ஜனாப் முஹம்மதுஅலி ஜின்னாஹ்,1901-முதல் காங்கிரஸில் பிரதான அங்கம்வகித்து வந்தும், கடந்த லீக்மகாநாட்டிலே வக்பு மசோதா பற்றி அர்த்த புஷ்டி கொண்ட ஆற்றல் உரை நிகழ்த்தியதும் 1911-ல் நடந்த ஒற்றுமை மகாநாட்டில் பெரும் பங்கெடுத்துக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கவை. நிற்க,

மகாநாட்டின்தலைவர், பெரும் ஆரவாரத்துக்கிடையே எழுந்து தமது தலைமைப்பிரசங்கத்தை ஆரம்பித்தார். அதில் தனித்தொகுதி, வகுப்புவாரி பிரதிநிதித்வம் டாக்காவிலும், ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டிய அவசியம், வங்க ஹிந்துக்களின் கள்ளக்கூச்சல் ஆகியவைகளைப்பற்றி விளக்கிவிட்டு வங்கப்பிரிவினை ரத்தாகிவிட்டதைப்பற்றி குறிப்பிடுகையில்,

"1905 முதல் 1911 வரை பிரிவினை அமுலிலிருந்தது. ஹிந்து சகோதரர்கள் கற்பனைசெய்துகொண்டபடி முஸ்லிம்களுக்கு அதனால்பெருத்தஇலாபம் ஒன்றும் கிடைத்துவிடவில்லை. எனினும் ஹிந்து சகோதரர்கள் முஸ்லிம்கள் பால்இழைத்த அநீதிகள்அனந்தர். அரசாங்கத்தாருக்கு எதிரிடையாக முஸ்லிம் குடியானவர்களையும் தம்முடன் கலந்து வேலைசெய்யும்படி ஹிந்துத் தலைவர்களும், ஹிந்து ஜமீந்தார்களும் பெரிதும் வற்புறுத்தியும் பிரயோஜனமற்றுப் போகவே, கோபங்கொண்டு முஸ்லிம்கள்மீது கொலை, கொள்ளைகள்பல நடத்தினர். முஸ்லிம்கள் அரசாங்கம்பால் காட்டிய நன்றிக்குத்தாம் அரசாங்கம் தக்கபடி புத்தி கற்பித்து சற்று, அனுகூலமாயிருந்த; பிரிவினையையும் ரத்து செய்தது".

என்று கூறிவிட்டு முஸ்லிம்கள்பால் அரசாங்கம்நடந்து கொண்ட கெட்டசெயலையும் நம்பிக்கைமோசத்தையும் துரோகத்தையும் கண்டித்துப்பேசினர். பிரிவினை ரத்தானது அவர் ஹிருதயத்தையே சுக்குநூறாக்கிவிட்டதென்று கூறி டாக்கா நவாப் கண்ணீர்விட்டார். அன்றுமுதல் அவர் அரசியல் உலகிலிருந்தே ஒரேயடியாகத் துறவறம் பூண்டது யாரும் மறக்கமுடியாதது!

தலைவர் முன்னுரை கூறி முடிந்ததும், கொண்டுவரப் பட்ட பல தீர்மானங்கள்மீது பற்பல தலைவர்கள் பேசினர். வங்கப்பிரிவினை ரத்து செய்யப்பட்டதைக் கண்டித்தும், மன்னருக்குப் பட்டஞ் சூட்டப்பெற்றதைப் பாராட்டியும், தனித்தொகுதியை ஆதரித்தும், டாக்காவில் சர்வகலாசாலை, ஏற்படுத்துவதை ஆதரித்தும், முஸ்லிம் தருமச் சொத்துக் களையும் அதன் நிலைமைகளையும் பரிசிலனைசெய்வதற்காக அரசாங்கம் ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென வற்புறுத் தியும், அரசாங்க உயர் பதவிகளில் இந்தியர்களை அதிலும் முஸ்லிம்களை அதிகம் நியமிக்கவேண்டுமென்றும், இராணுவ உயர்தர உத்தியோகங்களிலும் இந்தியர்களுக்கும் முஸ்லிம்க ளுக்கும் வேலைகொடுக்க வேண்டுமென்றும் திரிப்போலியில் இத்தாலியும் ஈரானில் ருஷ்யாவும் செய்த அட்டூழியங்களைக் கண்டித்தும், குடியேற்றநாடுகளிலே நிறத்திமிரால் இந்தியர் படும் அவதிகளைக் கண்டித்தும் பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

ஸர் ஆகாகான் இதுவரை தலைமைவகித்துச்செய்த சேவைகளைப்பாராட்டி அடுத்தவருடத்திற்கும் அவரையே, லீகின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. பொதுக் காரியதரிசி, கூட்டுக் காரியதரிசிகளாக சென்ற வருடத்தை யவர்களையே மீண்டும் நியமிக்கப்பட்டது. இத்துடன் இம் மகாநாடு இனிது பூர்த்தியுற்றது.

11. பால்கன் யுத்தம்-லீகின் சேவைகள்

1912-ன் இறுதியிலே திடீரென்று பால்கன் நாடுகள் அனைத்தும் எதிர்பாராவிதமாய் துருக்கியின்மீது பாய்ந்தன. துருக்கி திணறியது, பல இடங்களில் தோல்வியும் கண்டது இருந்தும் ஊக்கத்தை கைவிடவில்லை. பால்கன்நாடுகளை

பிரிட்டன்போன்ற கிறிஸ்தவநாடுகள் பூராவும் ஆதரித்து துருக்கியை நசுக்கிவிடப் பெரிதும் உதவிபுரிந்தன. இவை களின் அந்தரங்கநோக்கம், கிறிஸ்துவ ஐரோப்பியக் கோட்டைக்குள் ஒரு முஸ்லிம் நாட்டைவிட்டு வைக்கக்கூடாது என்பதே. ஆனால் அகில மெங்கனும் சத்திய இஸ்லாம் பரவியிருக்கவேண்டுமென இறைவனின் இச்சையாயுளதே' இதற்கென்ன செய்வது?

பால்கன் நாடுகளை பிரிட்டன் ஆதரித்து நிற்பதை இந்திய முஸ்லிம்கள் விரும்பவில்லை, கொதிப்படைந்தனர். உள்ளம் பதறினர் லண்டனிலிருக்கும் லீன் கிளை ஸ்தாபனம் இதைக்கண்டனஞ்செய்து பெருத்த கிளர்ச்சியையும் உண்டுபண்ணியது. திரிப்போலி, பேர்ஷியா போன்ற இஸ்லாமிய நாடுகள் தாக்கப்படுவதைக்கண்டு இஸ்லாமிய உலகமே சிறிக்கொண்டிருந்தது. இருந்தும் பிரிட்டன் துருக்கி மீது கொண்டிருந்த மனப்பான்மையை தளரவிடவில்லை. இந்திய இஸ்லாமிய பத்திரிகைகளான "காம்ரேட்" "அல்ஹிலால்" "ஜமீந்தார்" ஆகியபத்திரிகைக்கெல்லாம் துருக்கிமீது அனுதாபம் காட்டிவந்தன. மௌலானா முஹம்மது அலியின் "காம்ரேட்" என்ற ஆங்கிலப் பத்திரிகையின் உத்வேகத்தைக்கண்டு சினந்து அரசாங்கம் 2000 ரூபாய் ஜாமீன் பெற்றது. அப்பொழுதும் அதன் உத்வேகம் தணிந்த பாட்டைக் காணேம்.

துருக்கிக்கு வைத்திய கோஷ்டி

லீக் தலைவர்களிலொருவரான டாக்டர் முக்தார் அஹ்மத் அன்ஸாரி காயமடைந்த துருக்கியர்களுக்கு உதவி செய்ய இந்திய முஸ்லிம்கள் சார்பிலிருந்து வைத்தியத்துது கோஷ்டி யொன்றை அனுப்பிவைக்க முனைந்தார். இக் கொள்கைக்கு "காம்ரேட்" பத்திரிகை பெரிதும் ஒத்து

மைத்து வேலைசெய்தது. முஸ்லிம் லீகின் சிறந்த முயற்சியால்எண்ணிய பலன்கிட்டியது.பல முஸ்லிம் பிரமுகர்களின் பலத்த ஆதரவின்பேரில் டாக்டர் அன்ஸாரியின் தலைமையிலேயே ஒரு தூதுகோஷ்டி துருக்கியைநாடி புறப்பட்டது. இதில் மௌலானா முஹம்மத் அலியும் பங்கெடுத்துக்கொண்டார். மௌலானா ஜாபர் அலிகான் ஏராளமான பொருளை துருக்கி சுல்த்தான் சமூகத்திலே சமர்ப்பிக்கவும், துருக்கி முஸ்லிம்களின் உண்மை நிலைமையை நேரில்அறியவும் தூது கோஷ்டியுடனேயே தாமும் புறப்பட்டார். இத்தூது கோஷ்டியை வரவேற்பதிலே. துருக்கி சுல்தானும் தேச மக்களும்காட்டிய ஆர்வமும்செய்த உபசாரங்களும் பாராட்டத்தக்கன.

பிரிட்டனின் அநீதி!

ஒருவாராக பால்கன் யுத்தம் முடிவடைந்தது. 1913-ல் சமாதான மகாநாட்டை பிரிட்டனே கூட்டியது; எனினும் அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மிக அநீதம் வாய்ந்தவை. பல பாகங்களை அதனால் துருக்கி இழக்க நேரிட்டது. நேர்மையாக நீதி புரியும்படி பிரிட்டனை முஸ்லிம் லீக் எவ்வளவோ வேண்டியும் பிரயோஜன மற்றுப் போய்விட்டது. இதனால் இந்திய முஸ்லிம்களின் இரத்தம் கொதிக்கத்தாம் செய்தது; ஆயினும், யாது செய்ய முடியும்? அடிமை வாழ்வு அவர்களின் கரங்களில் விலங்கை பூட்டி யிருந்தது.

லீகின் மறு மலர்ச்சி.

அன்று வைஸ்ராயாகவிருந்த லார்டு ஹார்டிஞ்ச் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில்,

“மிண்டோ மார்லி சீர்திருத்தத்திலே சில திருத்தங்கள் செய்வது; பெடரல் மத்திய ஆட்சி, மாகாணசுயவாட்சி,

இதர டல உரிமைகள் இந்தியாவுக்கு அளிப்பது, இதைப் பற்றி ஆலோசிக்க ஒரு ராயல் கமிஷனை நியமிப்பது''

என்பது பற்றி அதிலே குறிப்பிட்டிருந்தார். இதை யுணர்ந்த லீக் தலைவர்கள், அளிக்கப்போகும் புதியசீர்திருத்தச் சட்டங்களிலும், முஸ்லிம்களின் நியாய உரிமைகளுக்கு உழைக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். இதை யொட்டி, லீக்மகாசபை தனது எல்லாக்கிளை ஸ்தாபனங்களுடனும்கலந்தாலோசித்தது. அச்சமயத்திலே துரதிருஷ்டவசமாக அ. இ. மு. லீக் காரியதரிசியான ஜனுப் அஜீஸ் மிர்ஸா ஸாஹிப் (1922-மார்ச்சில்) காலஞ்சென்றுவிட்டபடியால் புதியகாரியதரிசியாக உணர்ச்சியே உருவாயமைந்த ஸய்யித் வஜீர் ஹுஸைன் தேர்ந்தெடுக்கப்பட்டார். புதிய காரியதரிசி ஏப்ரலிலேயே எல்லா மாகாண லீகுகளுக்கும் வைஸ்ராயின் சீர்திருத்தச் சட்டத்தை யொட்டி, முஸ்லிம் லீகின்கொள்கைகளை மாற்றி அதை மறுமலர்ச்சிபெறவைக்க வேண்டுமென்றும் அதைப்பற்றி அவைகள் தத்தம் அபிப்பிராயங்களை அறிவிக்கவேண்டுமென்றும் சுற்றறிக்கை அனுப்பிவைத்தார் சிற்சில இடங்களில் சாத்தியப்பட்டவரை தாம் நேரில்சென்று அபிப்பிராயங்கள் அறிந்து வந்தார்.

முஸ்லிம் லீகிலேயே ஒரு சிலர் காங்கிரஸின் இலட்சியம்போலவே லீகிலும் குடியேற்றநாட்டந்தஸ்து இலட்சியம் வேண்டுமென்றும் மற்றும் சிலர்

"இந்த அந்தஸ்து கானடா, தென்னாப்பிரிக்கா முதலிய ஒரேஜாதியைக்கொண்ட நாடுகளுக்குத் தகுதியேதவிர பல ஜாதி, பல பிரிவு கொண்ட இந்தியாவுக்குத் தகுதியன்று''

என்றும் அபிப்பிராயப்பட்டனர். காரியதரிசி பல தலைவர்களையும், சபைகளையும் கலந்து இறுதியாக லீகின் இலட்சியங்களையும் கொள்கைகளையும் மாற்றி தெளிவான முறையிலே ஒரு மசோதாவைத் தயாரித்தார்.

முஸ்லிம்லீக் கௌன்ஸில் கூட்டம் (1912)

லீகின் புதிய இலட்சியங்களைப்பற்றி விவாதிக்க லக்ஷ்மணபுரியிலே 1912 டிஸம்பர் 31-ந் தேதி மே. த. ஸர் ஆகாகான் தலைமையின்கீழ் லீக் கௌன்சில், "கைஸர்" பூங்கா வனத்திலே கூடியது. ஏராளமான தலைவர்கள் கூடின தோடல்லாது, உருப்பினரல்லாத பல முஸ்லிம் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர். புதிய கொள்கைகள் பற்றி நெடுநேரம் பலத்த விவாதங்கள் நிகழ்ந்து கீழ்கண்டபடி தீர்மானிக்கப்பட்டது.

1. தேசமக்களிடையே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது நன்றியான உணர்ச்சியை உற்பத்திசெய்தல்.

2. இந்திய முஸ்லீம்களின் ராஜீய மத சம்பந்தமான உரிமைகளையும், இதர உரிமை, பாத்தியதைகளையும் பாது காத்து அபிவிருத்திசெய்தல்.

3. இந்திய முஸ்லிம்களுக்கும், இதர சமூகங்களுக்குமிடையில் சிநேகபான்மை, ஐக்கியம் வளர்த்தல்.

4. பிரிட்டிஷ் இராஜாங்கத்தின்கீழ் இந்தியாவிற்கு அதற்கேற்ற சுய ஆட்சி அரசியலைபெற முயலல் ஆகியவை. லீக்கௌன்ஸில் செய்த தீர்மானங்களை லண்டன் கிளை லீக் கூட மனப்பூர்வமாய் ஆதரித்தது. சில தீவிர முஸ்லிம்கள் "தீர்மானங்கள் மிதமாயுள்ளன" வென அபிப்பிராயப்பட்ட

னர். எனினும் இது அக்காலத்திற்கு மிகவும் ஏற்ற தென்றே எங்கும் அபிப்பிராயம் இருந்தது.

12. முஸ்லிம் லீகின் 6-வது மகாநாடு (1913)

1912 டிஸம்பரிலேயே நடக்கவேண்டியிருந்த அ. இ. மு. லீக் 6-வது மகாநாடு தலைவர் ரைட் ஹானரபில் ஸெய்யித் அமீர் அலி இங்கிலாந்திலிருந்து வரவியலாததை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டு 1913 மார்ச்சுவரையிலும் அவர் வர சாத்தியப்படாததை யறிந்து மகாநாட்டிற்கு புதிய தலைவராக கான் பஹதூர் மிய்யான் முஹம்மதுஷபீ அவர்களைக்கொண்டு 1913 மார்ச் 22-ந் தேதி லக்னோவிலே ஆரம்பமாயிற்று. மகாநாட்டிற்கு கடந்த வருடங்களைவிட ஏராளமான பிரதிநிதிகள், விசேஷத்தலைவர்கள் இதர சமூகத் தலைவர்கள் பிரசன்னமாயிருந்தனர். திருமதி சரோஜினி நாயுடுவும் இதில் விஜயஞ்செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தலைவரின் அர்த்தபுஷ்டிகொண்ட தலைமையுரைக்குப் பின் லீக் கொள்கை விஷயமான பலத்த விவாதம் எழுந்தது. ஜனுப் முஹம்மது அலி ஜின்னாஹ் உட்பட பலபெரும் தலைவர்கள் இதிலே பங்கெடுத்துக்கொண்டனர். ஜனுப் ஜின்னாஹ் லீகின் மறு மலர்ச்சி கொள்கையை ஆதரித்து நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினுர்.

பிறகு "தனித்தொகுதியை ஆதரிப்பது, ஐ. ஸி. எஸ். பரீட்சையை இந்தியாவிலேயே ஏற்படுத்தும்படி பிரிட்டனை வேண்டுவது, ஜனுப் ஜின்னாஹ்வின் 'வக்பு' மசோதாவை ஆதரிப்பது, அதற்குவேண்டி அவர் எடுத்த முயற

சிக்கு பாராட்டுவது, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை வற்புறுத்துவது'' போன்ற பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் மகாநாடு வெற்றியாக முடிந்தது.

மீண்டும் துருக்கிக்கு உதவி

துருக்கி விஷயத்திலே, பிரிட்டன், துருக்கி வெற்றிகள் பல பெற்றும் ஆரம்பத்திலே தோல்வியுற்றதைச் சுட்டிக் காட்டி அநீதியாய் அதன் பல பாகங்களைப் பிடுங்கிக்கொண்டதல்லவா? அதனால் எழுந்த கிளர்ச்சி மென்மேலும் வலுத்துக்கொண்டே சென்றது. மௌலானா முஹம்மது அலி, மௌலானா ஷௌகத் அலி, செய்யித் வஜீர் ஹுஸைன், மௌலானா அபுல்கலாம் ஆஸாத், மௌலானா ஹஸ்ரத்மோஹானி, மௌலானா ஜபர் அலிகான் போன்ற பல பெருந்தலைவர்கள் கிளர்ச்சியிலே முக்கியத்துவம் பெற்றதோடல்லாது, மௌலானா அப்துல் பாரி, மௌலானா ஷௌகத் அலி ஆகியோர்களால் 1913-மே மாதத்திலே, "குத்தாமே கஃபா'' (கஃபா ஊழியர் சங்கம்) தோற்றுவிக்கப்பட்டது. "சேம்பிறை'' சங்கமும் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் இலக்ஷக்கணக்கான ரூபாய்கள்வசூலிக்கப்பட்டு, துருக்கிக்கு சகாயநிதியாக அனுப்பப்பட்டது.

கான்பூர் மஸ்ஜித் சம்பவம்.

1913-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 3-ந்தேதி கான்பூர் மஸ்ஜித் விஷயமாக ஒரு பெருத்த கிளர்ச்சி ஏற்பட்டது. அதன் சாரம் யாதெனில்:

கான்பூர் மச்சலிகடைவீதி வழியிலுள்ள பள்ளிவாயிலை ரோடுபோடும் பொருட்டு (பள்ளியின் ஒரு பாகத்தை) இடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் அதிகாரிகளுக்கு ஏற்பட்டது.

ஆயினும், முஸ்லிம்களின் எதிர்ப்பிற்கஞ்சி ஸ்தம்பித்திருந் தனர். எனினும் உருட்டல், மிரட்டல்கள் பல செய்து, அதன் முத்தவல்லியை அதிகாரிகள் பணியவைத்து இசை யச்செய்தனர். அனுமதிகிடைத்ததும், அதிகாரிகள் இடிக்க முற்படும் சேதிகேட்டு ஆங்குள்ள பிரபல முஸ்லிம்களும், மார்க்கத்தலைவர்களும் பெரிதும் தடுத்து நின்றனர். முனிசி பாலிட்டியாரிடமும், கலைக்டரிடமும் உதவிசெய்யுமாறு வேண்டினர். மாபெரும் முஸ்லிம்கள் தடுத்து நின்றும், அதிகாரிகள், தங்களின் அதிகாரத் திமிர், போலீஸ் உதவி ஆகியவைகளுடன், பள்ளியின் ஒரு பாகத்தைத் தகர்த் தெறிந்தனர். கிளர்ச்சி, புரட்சியாக வலுத்தது; முஸ்லிம் கள் கொதித்தெழுந்தனர். இடிந்த பாகத்தை உடனே கட்டித் தரவேண்டுமென எவ்வளவு கோரியும் பயனில்லாது போகவே, தாமாகவே கட்டிக்கொள்ள முனைந்தனர். இதனை யறிந்த அதிகாரிகள், உடனே அங்குவந்து தடுத்து, கலைக்க முயற்சித்தும் வீணாய்ப்போகவே, போலீஸைக்கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யச்செய்தனர். இதனால் பல முஸ்லிம்கள் வீரமரணம் (ஷஹீத்) ஆனார்கள்!

கான்பூர் எங்கும் இது எதிரொலித்தது எங்கும் அல்லோலகல்லோலம்! மௌலானா மஜ்ஹருல் ஹக் உடனே கான்பூர் விஜயஞ்செய்து மக்களை சாந்தப்படுத்தும் விஷயத் திலே முயற்சி எடுத்தும், அரசாங்கம் கான்பூர் பள்ளி சம் பவத்தை யொட்டி பல ஆண் - பெண், பால்யர் - முதியோர் உள்பட ஏராளமானவர்களைக் கைதுசெய்தது. கைது செய் யப்பட்டவர்களிலே மௌலானா ஆஜாத் ஸுப்ஹானியும் ஒருவராவர். இவ்வளவு நடந்தும், இனியும் மேற்கொண்டு சும்மாயிருக்க முடியாத நிலை ஏற்படவே, முஸ்லிம் லீக் இதிலே தலையிடும் நிர்ப்பந்தமேற்பட்டது. மௌலானா

முஹம்மது அலி அவர்களின் தலைமையின்கீழ் பல முக்கியஸ்தர்களடங்கிய தூதுகோஷ்டி ஐக்கிய மாகாண கவர்னர் ஸர் ஜேம்ஸ் மேஸ்டனைப் பேட்டிகண்டது. கவர்னருக்கு கான்பூர் பள்ளி சம்பவம், ஆதியோடந்தமாக விளக்கப்பட்டது. இருந்தும், தூதுகோஷ்டியினரின் கோரிக்கை கவர்னரால் நிராகரிக்கப்பட்டது. எனவே, இம்மாதிரி கிளர்ச்சிகளினாலே பிரயோஜனப்படாதென்று கண்டறிந்த லீக் தலைவர்கள், லண்டனிலே இதைப்பற்றி கிளர்ச்சி ஏற்படுத்தவேண்டுமென்றெண்ணி, அப்போதிருந்த லீக் காரியதரிசி ஜனாப் செய்யித் வஜீர் ஹுஸைன், மௌலானா முஹம்மத் அலி ஆகியோர்களை இங்கிலாந்திற்கு அனுப்பிவைத்தனர்.

இங்கிலாந்து சென்றதும் இவ்விருவர்களும், லண்டனிலே பல பெரும் பொதுக்கூட்டங்கள் கூட்டி, பெரும் கிளர்ச்சி செய்தனர். இந்தியாமந்திரியையும், மாஜி ஐக்கிய மாகாண கவர்னர் ஸர் ஜேம்ஸ்லாட்ச்யையும கண்டு கான்பூர் பள்ளி விஷயமாகப் பரிகாரமளிக்கும்படி வேண்டினர். கடைசியிலே இறைவனருளால் அவர்களின் வேண்டுகோள் ஒப்புக்கொள்ளப்பட்டு, இராஜப்பிரதிநிதி லார்டு ஹார்டிஞ்ச் கான்பூர் விஷயத்தை நேரில் பார்க்கும்படியும், இங்கிலாந்திலிருந்து உத்தரவுவந்தது. லார்டு ஹார்டிஞ்ச் 14-10-1913ல வந்து கவர்னரைக்கலந்து, பல முஸ்லிம்லீக் தலைவர்களையும் கலந்து பேசி, கடைசியிலே கான்பூர் பள்ளியை மீண்டும் சர்க்கார் செலவிலே கட்டிக்கொடுக்கவேண்டுமென உத்திரவிட்டுச்சென்றார் இது செய்தி கேட்டு லண்டனிலிருந்த ஸெய்யித் வஜீர் ஹுஸைன், மௌலானா முஹம்மத் அலி உட்பட கான்பூர் முஸ்லிம்கள் பெரிதும் திருப்தியுற்றனர்; பலரின் தியாகம் வீண்போகவில்லை.

13. முஸ்லிம்லீகின் 7-வது மகாநாடு (1913)

அ. இ. மு. லீகின் 7-வது மகாநாடு 1913-டிஸம்பர் இறுதியிலே ஆக்ராவில் ஸர். இப்ராஹீம் ரஹ்மத்துல்லா அவர்களின் தலைமையின்கீழ் மிகச் சிறப்பாகக் கூடிற்று. இதுவரை நடந்திராத பிரமாண்டமான ஊர்வலங்களும் இதிலே நடத்தப்பட்டன. பல பெரும் பெரும் தலைவர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

தலைவர் தமது முன்னுரையிலே, கான்பூர் பள்ளி விஷயத்திலே, முஸ்லிம்கள் அடைந்த மா பெரும் வெற்றியைப் பாராட்டியும், துருக்கி பால்கன் யுத்த விஷயம்பற்றியும், தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டித்தும், இந்திய அச்சுச்சட்டத்தைக் கண்டித்தும் பேசிவிட்டு,

"இந்தியா இதுபோன்று என்றும் அடிமைப்பட்டிருக்க முடியாது! பிரிட்டிஷாரால் இந்தியாவில் சில நன்மைகள் ஏற்பட்டிருப்பது உண்மையாயினும். நிரந்தரமாக பிரிட்டன் தன்மீது ஆட்சி செலுத்திக்கொண்டிருக்க இந்தியா இணங்காது. இந்தியா நமது சொந்தநாடு: மதிப்பிற்குரிய சொத்து. இறுதியாக அது எம்மிடமே மீண்டும் ஒப்படைக்க வேண்டிய பொருள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இதன் அதிபதிகள்; புதல்வர்கள்"

என்று குறிப்பிட்டார். பிறகு, கடந்த மகாநாட்டிலே நிறைவேற்றப்பட்டதைப் போலவே, தனித்தொகுதி தீர்மானத்தை ஆதரித்தும், எதிர்த்தும் பலர் பேசினர்.

ஆதரிப்போரின் வாதம்!

"முஸ்லிம்களின் உரிமைகளை இது பாதுகாப்பதால், வழமைபோல இப்போதும் இதை தீர்மானம் செய்ய வேண்டும்".

எதிர்ப்போரின் வாதம்,

"காங்கிரஸ் நம்முடன் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட முன்வருவதால், இந்தவருடம் இதை நிறைவேற்றக்கூடாது!"

இறுதியாக, பலத்த விவாதத்திற்குப் பின், ஓட்டெடுக்கப்பெற்று ஆதரிப்போருக்குச் சாதகமாக முடிந்தது.

பிறகு மகாகமிட்டியிலே பலர்பேசியபின், இந்திய அச்சுச் சட்டம், தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி ஆகியவைகளைக் கண்டித்தும், நீதி, நிர்வாகப் பிரிவினையை வற்புறுத்தியும், ராணுவத்தில் இந்தியர்களுக்கு உயர்தர பதவிகள் அளிக்கவேண்டுமென்றும், பஞ்சாபில் ஹைகோர்ட் ஏற்படுத்தும்படியும், பஞ்சாப், ஐக்கிய மாகாணங்களிலே சட்டசபைகளை நிறுவவேண்டி பிரிட்டனைக் கேட்டுக்கொள்வதாயும, வக்பு, சொத்துக்களை கவனிக்க ஒரு தனிக்கமிட்டி நியமிக்க வற்புறுத்தியும், பைஜ் ஆபாதிலே பசு குர்பானியைத் தடை செய்ததையும், கலகம் நிகழ்ந்ததையும் கண்டித்தும், மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முஹம்மது அலி ஜின்னாஹ் லீகிற் சேர்ந்தார்!

இம்மாகாகமிட்டியிலே நடந்த விசேஷமென்னவெனில், இதுவரை ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கும்; இதர முஸ்லிம்

சமூகத்தின் விசேஷ நலன்களுக்குப் பாடுபட்டுவந்தும் லீகிற்சேரா திருந்த ஜனுப் முஹம்மது அலி ஜின்னுஹ் இம் மகாநாட்டின்போது தம்மை லீக் அங்கத்தினராகப் பதிவு செய்துகொண்டார். லீக்-காங்கிரஸ் சார்பாக ஒரு தூது கோஷ்டியை இங்கிலாந்திற்கனுப்பி, குடியேற்ற நாடுகளில் இந்தியர் நிலைமை, அச்சுச்சட்டத்தின் கொடுமை, இந்தியக் கௌன்சில் அமைப்பு, நீதி நிர்வாகப் பிரிவினை ஆகியவை சம்பந்தமாகக் கிளர்ச்சிசெய்யவேண்டுமென்று ஜனுப் ஜின்னுஹ் அபிப்பிராயப்பட்டதை லீக்மகாநாடும் ஆதரித்தது.

இதே சமயத்திலே கராச்சியில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டிலும், இதே போன்று தீர்மானங்கள் ஜனுப் ஜின்னுஹ் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப் பட்டன. இதற்கேற்ப 1914-ல் இந்தத் தூதுகோஷ்டி இங்கி லாந்து புறப்பட்டது. இக்கோஷ்டியிலே ஜனுப் ஜின்னுஹ் வும் முக்கியத்தும் பெற்றிருந்ததினலேயே, தக்க பலனும் ஏற்பட்டது. நிற்க ஷெ லீக்மகாநாட்டிலே ஜனுப் ஜின்னுஹ் இந்தியா மந்திரி, அவர் நிர்வாகச்சபை சம்பந்தமாக பின் வரும் நீண்டதொரு தீர்மானத்தைப்பிரரேபித்தார். அவை யாவன:—

1. இந்தியா மந்திரியின் சம்பளத்தை இங்கிலாந்து சர்க்காரே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

2. அவருடைய நிர்வாக சபையின் மொத்த அங்கத் தினர்கள் தொகை ஒன்பதுக்குக் கிழ்ப்படக்கூடாது! அதன் ஒரு பகுதி நியமனம்பெற்றவர்களாயும், மறுபகுதி தேர்ந் தெடுக்கப்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.

3 தேர்ந்தெடுக்கப்பெற்ற மொத்த அங்கத்தினர் களின் தொகை, மூன்றிலொரு பாகத்திற்குக் குறைவு

ஏற்படக்கூடாது! மேலும், அவர்கள், மத்திய - மாகாண சட்டசபைகளின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாயிருக்கவேண்டும்

4, நியமன அங்கத்தினர்களின் மீதிப்பேர்; இந்தியாவிலேயே குறைந்தாவது 10-வருடங்கள் வரை ஊழியம் புரிந்தவர்களாயும், இருவருடங்களுக்குள் நீங்கப்பெறுதவராயும் இருத்தல் அவசியம்.

5. இந்தியா மந்திரியின் நிர்வாக சபைக்கு ஆட்சி முறையிலுள்ள அதிகாரங்கள் ஒழித்துவிடப்பட்டு, யோசனை சொல்லும் சபை"யாக மட்டும் இருக்கும் தோரணையிலே திருத்தியமைத்து, ஒவ்வொருவரின் உத்தியோக காலமும் ஐந்துவருடங்கள் என நிர்ணயிக்கவேண்டும்.

மேற்கண்ட இந்த ஐந்து விஷயங்கள்கொண்டதைப் பல அறிஞர்களும் ஆதரித்துப் பேசினார்கள். ஆனரபிள் ஜனுப் ரபீயுத்தீன் அஹ்மத் அவர்கள், பின்கண்ட திருத்தப் பிரேரணை செய்தார். அதாவது:

> "இந்திய மந்திரி, தமது நிர்வாக சபையை திருத்தி அமைக்கும்போது முஸ்லிம்களுக்கும் போதிய பிரதிநிதித்வமும் அளிக்கப்பட வேண்டும்,"

என்பதே. இதை ஜனுப் ஜின்னுஹ்வும் அங்கீகரித்துக் கொண்டதால், தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. ஐக்கிய மாகாண கவர்னரின் தீர்ப்பை உதறித் தள்ளி, முஸ்லிம்களின் மார்க்க உரிமையைக்கொடுத்த இராஜப்பிரதிநிதி (வைஸ்ராய்)யைப் பாராட்டியும், லீகின் மூல

நிதிக்கு நான்கு இலட்சம் ரூபாய் நிதிதிரட்ட ஒரு சப்கமிட்டியும் தேர்ந்தெடுக்கப்பட்டபின், மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மகாநாடு இனிது முடிந்தது.

மகா யுத்தமும் முஸ்லிம்களின் நிலையும்.

1914-ஜுலை மாதத்திலே ஐரோப்பாவில் பயங்கரமான மஹாயுத்தம் துவங்கியது. ஜெர்மனி, ஆஸ்ட்ரியா ஒரு பக்கம், பிரிட்டன், பிரான்ஸ, ரஷ்யாமுதலிய இதர ஐரோப்பிய நாடுகள் மறுபக்கமாக நின்று போரிட்டன. இந்த இரண்டாவது மஹாயுத்தத்தைவிடக் கோரத்திலே குறைவானதாயிருந்தாலும், அச்சமயம் அதைவிடப் பயங்கரமான யுத்தத்தை அதற்குமுன் மக்கள் கண்டதில்லை. நிற்க, பிரிட்டன், இந்தியாவின் முழு ஆதரவையும் தன்பக்கம் வேண்டி நின்றது, ஆனால், அச்சமயத்திலே முஸ்லிம்களின் மனோநிலை வேறு விதமாயிருந்ததினாலும், பிரிட்டன் இழைத்த துரோகங்களை எண்ணியும் இந்தியமுஸ்லிம்கள் ஒத்துழைக்காவிடினும் விரோதவேலைகள் செய்யாதிருந்தனர்.

அந்த நிலையிலே துருக்கி, ஜெர்மனியுடன் சேர்ந்துக்கொண்டது. துருக்கி அரசர் கலிபாவா (உலக முஸ்லிம்களின் மார்க்கத் தலைவரா) கவிருந்ததால், உலக முஸ்லிம்களின் கவனம்முழுவதும் துருக்கியின்பால் இருந்துவந்தது. இந்திய முஸ்லிம்களோ, துருக்கியர்களின் அணுவணுவான கஷ்ட நஷ்டங்களையும் தமதாகப் பாவித்து மனம் புண்பட்டனர். இதையுணர்ந்த பிரிட்டன், அன்றைய வைஸ்ராயான லார்டு ஹார்டிஞ்ச் மூலம், 1914-நவம்பர் 20-ந் தேதி விடுத்த நீண்ட அறிக்கையிலே,

"துருக்கியிலுள்ள முஸ்லிம்களின் பரிசுத்த பூமிகள் பாதுகாக்கப்படும். அவைகளுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்

படாது. இதற்கு இந்திய முஸ்லிம்கள் கவலைப்படத் தேவையில்லை"

என்று குறிப்பிட்டிருந்தது. இதனால், சிறிதளவு மன ஆறுதல் கொண்ட முஸ்லிம்கள், காளாவட்டத்திலே உறுதி மொழி காற்றில் சலர்கப்படுவதைக்கண்டு உள்ளம் கொதித்தனர்.

பிரிட்டன் செய்த கொடுமை!

தந்த உறுதிமொழி தண்ணீராய் மாரியதை முன்பே உணர்ந்துக்கொண்ட மௌலானா முஹம்மத் அலி அவர்கள், தமது "காம்ரேட்" பத்திரிகை மூலமாகத் துருக்கிக்கு ஆதரவு தரும் முறையிலே கட்டுரைகள் பல எழுதிவந்தார். இதைக்கண்ட அதிகார வர்க்கம், சீறிக்கொண்டு 'காம்ரேட்' பத்திரிகையையும். அதன் ஜாமீன் பணத்தையும் பறிமுதல் செய்துவிட்டது. இதைக்கண்ட இந்திய முஸ்லிம்களின் இரத்தம் பன்மடங்கு கொதிக்கவாரம்பித்தது. பத்திரிகையைப் பறிகொடுத்த மௌலானா, பிரசாரமூலம் தமது தீவிர மனோபாவத்தை பாரெங்கும் பரிணமிக்கச் செய்தார்.

நடக்கவேண்டியிருந்த லீக் மகாநாடு இவ்வருடத்திய பயங்காயுத்தத்தை யொட்டி ஒத்திவைக்கப்பட்டது. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கென்று லீக் - காங்கிரஸ் ஆதரவின் பேரிலே ஜனாப் ஜின்னாஹ் பெரிதும் இச்சமயத்திலே தீவிர வேலைசெய்து வந்தார். ஹிந்து-முஸ்லிம்களின் நம்பிக்கை இவர்மீது பலப்பட்டது இதே சமயத்திலே, புதிய அரசியல் சட்டம் 1917-ல் கொடுக்கப்படுமென்று அதிகார வர்க்கம் பிரகடனப்படுத்தியிற்று. எனவே, காங்கிரஸ் - லீக் சபைத்தலைவர்கள், சீக்கிரம் தம்மிடையே ஒற்றுமைகொண்டு

ஒரு திட்டம் ஏற்படுத்தி வைஸ்ராயிடம் சமர்ப்பிக்கவேண்டி முனைந்தனர்.

1915-ம் வருடம் இந்திய பாதுகாப்புச் சட்டப்பிரகாரம் மௌலானா முஹம்மத் அலி, மௌலானா ஷௌகத் அலி உட்பட பல முஸ்லிம் தலைவர்களை கைதுசெய்து காவலில் வைத்தனர். இதைக் கண்டித்து ஜூன் 7-ந் தேதி லீக் கௌன்ஸில் கூட்டத்திலே ஓர் தீர்மானமும் நிறைவேறியது. ஜனாப் ஜின்னாஹ் அவர்கள், 1915-ம் வருட லீக் மகாநாட்டை, காங்கிரஸ்மகாநாட்டுடன்சேர்ந்து பம்பாயிலேயே நடத்தவேண்டுமென்று செய்த முயற்சி ஒப்புக்கொள்ளப் பட்டது.

14. முஸ்லிம்லீகின் 8-வது மகாநாடு (1915)

ஜனாப் ஜின்னாஹ், ஸெய்யித் வஜீர் ஹுஸைன், மஜ்ஹருல் ஹக் ஆகியோர்களின் தீவிர முயற்சியாலே, 1915-டிசம்பர் இறுதியிலே பம்பாயில் மௌலானா மஜ்ஹருல்ஹக் அவர்களின் தலைமையின்கீழ் அ. இ. மு. லீகின் 8-வது மகாநாடு கூடிற்று. ஏராளமான காங்கிரஸ் தலைவர்கள் வாலண்டியர்கள் இதில் பங்கெடுத்துக்கொண்டனர். சுருங்கக் கூறுமிடத்து, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு இதிலே விதையூன்றப்பட்டது என்றுரும் மிகையாகாது! சிறையிலிருந்த அலி சகோதரர்கள் மகாநாட்டிலே கலந்துகொள்ள முடியாமைக்கு வருந்தியும், வெற்றிகரமாக நடக்கப் பிரார்த்தித்தும் தந்தி அனுப்பினர் தலைவர், தமது தலைமையுரையிலே, பல முக்கிய விஷயங்களைப்பற்றிப் பேசி ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தை அழகாய் விளக்கினர். மேலும் அதைப்பற்றி கூறும்போது அவர் குறிப்பிட்டதாவது:

கூறினர் மீண்டும் குழப்பம் நிகழ்ந்தது. "தலைவர் பூரணக் காங்கிரஸ் மனப்பான்மையுடன் நடக்கிறு"ரென மக்கள் கூப்பாடு போட்டனர். நிலைமையைச் சமாளிக்க முயன்ற தலைவர், கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதென்றும் அடுத்த கூட்டம் தாஜ்மஹால் ஹோட்டலிலே நடைபெறு மெனவும் அறிவித்தார். அதன்படியே கூட்டம் தக்க போலீஸ் பந்தோபஸ்துடன் தாஜ்மஹால் ஹோட்டலிலே நடந்தது. தலைவரின் வேண்டுகோளின்படி ஜனுப் ஜின்னுஹ் பேசும்போது, "ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குத் திட்டம் தயாரிப்பதற்கும், முஸ்லிம்களின் உரிமைகள் பாதிக்கப்படாத வகையிலே காங்கிரஸ் கமிட்டியுடன் ஒன்றுபட்டு வேலை செய்வதற்கும் ஒரு ஸப் கமிட்டி நியமிக்க வேண்டுமென்று" ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதை ஆதரித்து மௌலவி ஏ. கே. பஜ்லுல் ஹக், மௌலானு அபுல்கலாம் ஆஸாத், ஜனுப் அப்துர் ரசூல் பாரிஸ்டர், ஜனுப் குலாம் ஹுஸைன் ஆகியோர் பேசினர். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. தனித்தொகுதியை ஆதரித்துக் கொண்டுவந்த தீர்மானம் ஜனுப் யாகூப் ஹஸன்சேட் உட்பட்ட பல தலைவர்களால் ஆதரிக்கப்பட்டு, பெரும்பாலான வாக்குகளால் நிறைவேறியது. இறுதியாக முடிவுரை கூறும்போது மகாநாட்டுத் தலைவர் ஜனுப் ஜின்னுஹ்வின் சேவைகளைப் பாராட்டி, "இந்திய முஸ்லிம்களின் சார்பாக ஜனுப் ஜின்னுஹ்விற்கு என் மனப்பூர்வமான நன்றி" என்று குறிப்பிட்டார். நீண்ட கோஷத்திடையே மகாநாடு முடிவு பெற்றது.

காங்கிரஸ் லீக் ஒத்துழைப்பு

ஸர் சத்தியேந்திர பிரஸன்ன ஸின்ஹ தலைமையின் கீழ், அ. இ காங்கிரஸின் 30-வது மகாநாடு பம்பாயிலே

"நான் ஒரு இந்திய முஸ்லிம்; இந்திய முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில், முடிவிலும், ஆரம்பத்திலும் நான் ஒரு இந்தியன்! ஆனால், அல்லாஹ்-ரசூல் (மார்க்க) சம்பந்தமான விஷயங்களுக்கு முதலிலும், முடிவிலும் நான் ஒரு முஸ்லிம்தான்"

மேலும் அவர், இந்திய அச்சுச் சட்டம், பாதுகாப்புச் சட்டம் இவைகளின் கீழ் அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்டதையும், முஸ்லிம் செய்தித்தாள்களான 'காம்ரேட்' 'அல்ஹிலால்' 'ஹம்தர்த்' 'முஸ்லிம் கெஜட்' ஆகியவைகள் நிறுத்தப்பட்டதையும் கண்டித்தார் இத்துடன் முதல் நாள் கூட்டம் முடிந்தது.

இரண்டாவது நாள் கூட்டம்!

இரண்டாவது நாள் கூட்டம் ஆரம்பித்ததும் தீர்மானங்கள் மீது விவாதங்கள் ஆரம்பமாயின இராஜ விஸ்வாசப் பிரமாணம் செய்துகொண்டபின், வைஸ்ராய் லார்டு ரீடிங் உத்தியோக காலத்தை நீடிக்கவேண்டியும், ஹிந்து-முஸ்லிம் சமூக ஒற்றுமைக்கு வேண்டி ஒரு கமிட்டி நியமிக்கவேண்டியும் முடிவு செய்யப்பட்டது. இது கண்டு மௌலானா ஹஸ்ரத் மோஹானி பி.ஏ. அவர்கள், இதுவிஷயமாகப் பேச அனுமதி கோரியதைத் தலைவர் நிராகரித்துவிட்டார். இதுவுமன்றியிலே தலைவர் விவாதத்தை ஆங்கில மொழியிலேயே ஆரம்பித்தார். இதனால், கூட்டத்திலே குழப்பம் மிகுதிப்பட்டு, மக்கள் ஆத்திரம் கொண்டதால் ஹஸரத் மோஹானிக்குப் பேச அனுமதியும், விவாதம் உருதுவிலே செய்யவும் தலைவர் இணங்கிவிட்டார்.

ஹஸரத் மோஹானி பல முக்கிய விஷயங்களைக் குறித்துப் பேசிவிட்டு மகாநாட்டுத் தலைவர்மீது சில குறைகளையும்

கூறினர் மீண்டும் குழப்பம் நிகழ்ந்தது. "தலைவர் பூரணக் காங்கிரஸ் மனப்பான்மையுடன் நடக்கிறு"ரென மக்கள் கூப்பாடு போட்டனர். நிலைமையைச் சமாளிக்க முயன்ற தலைவர், கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதென்றும் அடுத்த கூட்டம் தாஜ்மஹால் ஹோட்டலிலே நடைபெறுமெனவும் அறிவித்தார். அதன்படியே கூட்டம் தக்க போலீஸ் பந்தோபஸ்துடன் தாஜ்மஹால் ஹோட்டலிலே நடந்தது. தலைவரின் வேண்டுகோளின்படி ஜனுப் ஜின்னுஹ் பேசும்போது, "ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குத் திட்டம் தயாரிப்பதற்கும், முஸ்லிம்களின் உரிமைகள் பாதிக்கப்படாத வகையிலே காங்கிரஸ் கமிட்டியுடன் ஒன்றுபட்டு வேலை செய்வதற்கும் ஒரு ஸப் கமிட்டி நியமிக்க வேண்டுமென்று" ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதை ஆதரித்து மௌலவி ஏ. கே. பஜ்லுல் ஹக், மௌலானு அபுல்கலாம் ஆஸாத், ஜனுப் அப்துர் ரசூல் பாரிஸ்டர், ஜனுப் குலாம் ஹுஸைன் ஆகியோர் பேசினர். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. தனித்தொகுதியை ஆதரித்துக் கொண்டுவந்த தீர்மானம் ஜனுப் யாகூப் ஹஸன்சேட் உட்பட்ட பல தலைவர்களால் ஆதரிக்கப்பட்டு, பெரும்பாலான வாக்குகளால் நிறைவேறியது. இறுதியாக முடிவுரை கூறும்போது மகாநாட்டுத் தலைவர் ஜனுப் ஜின்னுஹ்வின் சேவைகளைப் பாராட்டி, "இந்திய முஸ்லிம்களின் சார்பாக ஜனுப் ஜின்னுஹ்விற்கு என் மனப்பூர்வமான நன்றி" என்று குறிப்பிட்டார். நீண்ட கரகோஷத்திடையே மகாநாடு முடிவு பெற்றது.

காங்கிரஸ் லீக் ஒத்துழைப்பு

ஸர் சத்தியேந்திர பிரசன்ன ஸின்ஹ தலைமையின் கீழ், அ. இ. காங்கிரஸின் 30-வது மகாநாடு பம்பாயிலே

கூடியது. முஸ்லிம் தலைவர்களும் இதற்கு விஜயஞ் செய்திருந்தனர். கூட்டத் தலைவர், தமது தலைமையுரையிலே, "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ், இந்தியா சுய ஆட்சி பெறுவதென்பதுதான் காங்கிரஸின் இலட்சியம்" என்று குறிப்பிட்டுவிட்டு, லீக் மகாநாட்டிலே நிறைவேறிய தீர்மானங்களை ஆதரித்துப் பேசினார். மகாநாட்டிலே பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 19-வது தீர்மானத்திலே, பொதுப்படையான சில விஷயங்களைக் குறிப்பிட்ட பின்னர் "மேற்கண்ட திட்டத்தின்மீது ஒரு சரியான வேலை திட்டத்தைத் தயாரித்து அ. இ. கா. கமிட்டியினரால், அ. இ. மு. லீக் சபையினரால் நியமிக்கப்படும் கமிட்டியுடன் இதைப்பற்றி கலந்தலோசித்து, அதன் முடிவை 1916 செப்டம்பருக்குள் பொதுக்காரியதரிசிக்கு அனுப்பிவைக்க வேண்டியது" என்று நிறைவேற்றப்பட்டது.

மேற்காணும் தீர்மானத்திற்கேற்ப, பல மாகாண பிரதிநிதிகளைக் கொண்ட காங்கிரஸ் கமிட்டியார் 1916 ஏப்ரல் 22-ந்தேதி அஹ்மதாபாத்தில் கூடி ஒரு திட்டத்தைத் தயாரித்துவிட்டு, லீக் கமிட்டியின் அபிப்பிராயத்தை எதிர்பார்த்திருந்தனர். ஏற்கனவே, லீக் கமிட்டியாரும், தீர்மானப்படி ஒரு திட்டத்தைத் தயாரித்திருந்தனர். இரு சபைகளின் பிரதிநிதிகள் கொண்ட கூட்டுக்கமிட்டி 1916 ஆகஸ்ட் 21-ந்தேதியிலே இலட்சுமணபுரியில் கூடி பரிசீலனை செய்தனர். இச்சமயத்திலே, ஜனுப் ஜின்னுஹ்வின் அபார முயற்சியைப் பாராட்டாதாரில்லை. இருவரும் ஒப்புக்கொள்ளும்படியான திட்டம் தயாரிக்கப்பட்டு இரு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்டன. லீகின் திட்டம் ஒவ்வொரு லீக் கௌன்ஸில் அங்கத்தினருக்கும் அனுப்பப்பட்டது.

காங்கிரஸ் லீக் தயாரித்த திட்டத்தின் நகல் வைஸ்ராய்க்கு அனுப்புவதற்காக இந்திய சட்ட சபையைச் சேர்ந்த 19 மெம்பர்கள் பொறுக்கி யெடுக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் தத்தம் அபிப்பிராயங்களையும் அத்துடன் சேர்த்து 11—10—1916-ல் வைஸ்ராய் முன் சமர்ப்பித்தனர். ஒற்றுமையுடன் செய்த வேலையைக்கண்டு பொறுமைகொண்டு ஹிந்து மாசபை திட்டத்தைப் பலமாக எதிர்த்ததோடல்லாது, முயற்சி கைகூடாதவாறு தனது சக்திக்கேற்பக் கிளர்ச்சியும் செய்தது. எனினும் சூழ்ச்சிகள் பலியாது சோர்ந்துபோய்விட்டது.

ஒற்றுமைத்திட்டத்தின் தோற்றம்!

ஜனாப் ஜின்னாஹ்வின் யோசனைக்கிணங்க மீண்டும் திரு சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் காங்கிரஸ் லீக் மெம்பர்களின் கூட்டுக் கமிட்டி 1916 நவம்பர் 17, 18-ல் கல்கத்தாவிலே கூடியது. இரு பிரிவினர்களின் அபிப்பிராய பேதங்களைத் தெளிவுபடுத்தவும் இதர ஒவ்வொரு விஷயங்களிலும் பூரண ஒற்றுமைப்பட்டு முடிவுக்குவரவும் இக்கூட்டத்தில் எல்லோராலும் நன்கு விவாதிக்கப்பட்டது.

பஞ்சாப் வங்காளம் தவிர எல்லா மாகாணப் பிரதிநிதிகளும் பூரணமாக ஒப்புக்கொண்டதால் இரண்டு மகாணங்கள் விஷயம் அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது. இக் கூட்டத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் லீக் சார்பாக அச்சடிக்கப்பட்டு அதையும் லீக் கௌன்ஸில் அங்கத்தினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது

முன்பேசெய்த தீர்மானத்தின்படி அடுத்த கூட்டம் 1916 டிஸம்பர் 25, 26, 27 தேதிகளிலே மீண்டும் கூடி இறுதியாக எல்லோரும் ஒரு முடிவிற்கு வந்தனர். எனி

னும் நடக்கப்போகும் இலட்சுமணபுரி லீக் மகாநாட்டிலே அங்கீகரிக்கும் வேலைமட்டும் பாக்கியாயிருந்தது. இத்திட்டம் சரித்திரப் பிரசித்தமாக "லக்னோ பாக்ட்" (இட்சுமணபுரி ஒப்பந்தம்) என்று வழங்கப்பட்டு வருகிறது. இந்த சமயத்திலேதாம் முஸ்லிம் லீக் மகாசபை "அரசாங்கத்தின் பொம்மை" யென கருதி வந்த பலரின் கண் திறக்கப்பட்டு உண்மையான சுயவாட்சிக்கு லீகும் உண்மையிலேயே பாடுபடுகிறதென உணர்ந்தனர்.

இலட்சுமணபுரி ஒப்பந்தச் சுருக்கம்!

பேர்பெற்ற இலட்சுமணபுரி ஒப்பந்தத்தின் சிறு பகுதியை இங்கே கூறுகிறோம். இந்த ஒப்பந்தம் பல பக்கங்கள்கொண்டது. அதிலே "மாகாண சட்டசபைகள்" என்ற தலைப்பின்கீழ் 4-வது பிரிவு.

(4) முக்கிய சிறுபான்மையினர்களுக்குப் பிரதிநிதித்துவம் சட்டசபைகளிலே கிடைக்கும்படியாகப் போதுமான அளவு ஏற்பாடுசெய்யவேண்டும். மாகாண சட்டசபைகளிலே முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் தனித்தொகுதிகள் மூலம் கீழ்காணும் விகிதப்படி கொடுக்கப்படவேண்டும்.

ஜனப்பிரதிநிதிகளால் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளில்:

பஞ்சாப்	100-க்கு	50 விதம்
ஐக்கியமாகாணம்	,,	30 ,,
வங்காளம்	,,	40 ,,
பீஹார்	,,	25 ,,
மத்திய மாகாணம்	,,	15 ,,
சென்னை	,,	15 ,,
பம்பாய்	,,	33 ,,

முஸ்லிம்கள் பொதுத்தொகுதிகளிலே மாகாண சட்டசபைகளுக்கோ அல்லது இம்பீரியல் (இந்திய) லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலுக்கோ வேறெந்த தேர்தலுக்கும் அபேட்சகராக இருத்தல் கூடாது. ஆனால் விசேஷத்தொகுதிகளிலே அபேட்சகர்களாய் நிற்கலாம். உத்தியோகப் பற்றில்லாத மெம்பர் எவரேனும் ஏதேனுமொரு மசோதா பிரேரணை அல்லது மசோதாவிலே ஒரு பிரிவுகொண்டு வரின் சட்டசபை சமூக மெம்பர்களிலே நான்கில் மூன்று பாகத்தினர் இப் பிரேரணை மசோதா, மசோதாவின் பிரிவு இவைகளை எதிர்ப்பார்களாயின் மாகாண சட்டசபைகளோ அல்லது இம்பீரியல் (இந்திய) லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலோ இப்பிரேரணை மசோதா, மசோதாவின் உட்பிரிவு இவைகளை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது.

III. "இம்பீரியல் சட்டசபை" என்ற தலைப்பின் கீழ் 4-வது பிரிவு வருமாறு.

4. இம்பீரியல் லெஜிஸ்லேட்டிவ் கௌன்ஸிலுக்கு தெரிந்தெடுக்கப்படும் இந்தியப் பிரதிநிதிகளிலே மூன்றிலொரு பாகத்தினர் முஸ்லிம்களா யிருத்தல்வேண்டும் முஸ்லிம்கள் பற்பல மாகாணங்களிலிருந்தும் முஸ்லிம் தனித் தொகுதியால் தெரிந்தெடுக்கப்படவேண்டும். மாகாணக் கௌன்ஸிலுக்கு முஸ்லிம் பிரதிநிதிகள் எந்த அளவிலே தெரிந்தெடுக்கப்படுகிறார்களோ அந்த அளவின் விகிதாசாரப்படி பிரதி மாகாணமும் இம்பீரியல் கௌன்ஸிலுக்கு முஸ்லிம் பிரதிநிதிகளை முஸ்லிம்களே தெரிந்தெடுக்க வேண்டும்.

மேலும் ஒப்பந்தத்தின் ஷரத்துகள் முழுவதையும் வரைந்தால் விரிவுபடுமென விடுத்தனம்.

15 முஸ்லிம் லீகின் 9-வது மகாநாடு 1916

ஹிந்து முஸ்லிம் சமாசம் செய்து வைப்பதிலே தீவிரமாக நின்று வேலைசெய்து வெற்றிபெற்ற ஜனுப் ஜின்னுஹ் அவர்களே 1916 டிஸம்பர் 30-ந் தேதியில் இலட்சுமணபுரியிலுள்ள "கைஸர் பூங்கா" வனத்திலே கூடிய 9-வது அ. இ. மு. லீக் மகாநாட்டிற்கு தலைமைவகிக்கப் பொது மக்கள் விரும்பினர். ஆகவே அவர் மகாநாட்டின் தலைவராக ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். மகாநாட்டிற்கு வந்திருந்த காங்கிரஸ் தலைவர்கள் பலரிலே திருமதி சரோஜனி நாயுடுவும் ஒருவர். 1913-ல் நடந்த மகாநாட்டிற்கு தலைமை வகித்த ஜனுப் ஸையித் நபியுல்லா அவர்கள் இம் மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவராக இருந்து தமது பிரசங்கத்தை நிகழ்த்தும்போது "இந்திய பாதுகாப்புச் சட்டம், அச்சுச் சட்டம், ஆயுதச் சட்டம் ஆகியவைகளினுல் முஸ்லிம்கள் அடக்கப்பட்டு வருவதைக் கண்டித்து அதிகாரவர்க்கம் அவைகளை உடனே அகற்றவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

நீண்ட கரகோஷத்தினிடையே ஜனுப் ஜின்னுஹ் எழுந்து நின்று தமது தலைமை யுரையை நிகழ்த்தும்போது ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை தனிக் கமிட்டி முடிவுகளின் மீது திருப்தி, இந்தியாவிற்கு சுய ஆட்சி அளிக்கப்பட வேண்டிய அவசியம், மேற்கொண்டு லீக் செய்யவேண்டியதென்ன ஆகியவைகளை விளக்கியும், மேற்கொண்டு பல விஷயங்களைப்பற்றியும் தெளிவாக்கி முதல்நாள் நடவடிக்கையை முடிவாக்கினுர்.

இரண்டாம்நாள் மகாநாட்டில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் மீது விவாதங்கள் நடைபெற்றன. முதல்

தீர்மானமாக "லக்னோ பாக்ட்" (சென்ற பம்பாய் மகாநாட்டில் நியமிக்கப்பட்ட கமிட்டியினரும் காங்கிரஸ் கமிட்டியினரும் சேர்ந்து தயாரித்தது) ஒப்பந்தத்தை ஆதரிக்கும் படி பம்பாய் ஆனரபிள் ஜனாப் ஷரீப் தேவ்ஜி கான்ஜி. ஜஹாங்கீர் ஆபாத் மகாராஜா ஆகியோர்களால் பிரேரிக்கப் பட்டும், ஆமோதிக்கப்பட்டும் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. இரண்டாவதாக "காங்கிரஸ் லீக் செலக்ட் கமிட்டியால் தயாரிக்கப்பட்டு இந்திய கவர்ன்மெண்டாரிடம் சமர்ப்பிக்கப்பெற்ற திட்டப்படி சென்ற மஹா யுத்தம் முடிந்த பின் இந்தியாவிற்கு சுயவாட்சி கவர்ன்மெண்ட்டை அளிக்கும்படி வேண்டுகிறது" என்ற இரண்டாவது தீர்மானத்தை ஜனாப் அப்துர்ரசூல் பார்-அட்-லா பிரேரிக்க மௌலவி ஏ கே பஜ்லுல் ஹக் ஆதரிக்க அது நிறைவேறியது முதலாவது தீர்மானத்தைக் குறித்துப் பிரசங்கம் செய்ய தலைவர் வேண்டுகோள்படி இசைந்து மௌலானா யாகூப்ஹஸன் சேட், ஸையித் ஆல் நபி, முகம்மத் உமர், நவ்வாப் நஸீர் ஹுஸைன், திருமதி சரோஜனி நாயுடு ஆகியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்திக்கொண்டிருக்கும் போது ஐக்கிய மாகாணக் கவர்னர் ஸர் ஜேம்ஸ் மிஸ்டன் தமது பரிவாரங்களுடன் பிரவேசித்தும், தலைவரும் சபையினரும் கௌரவப்படுத்தி வரவேற்புசெய்து, சபையினர் சார்பாக தலைவர் தமது வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொண்டார். கவர்னரும் பதில் கூறும் தோரணையிலே சிறு பிரசங்கம் புரிந்து சபையினரின் உள்ளங்களைக் கவர்ந்தார், பிறக

"அ. இ. மு. லீகிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற 15 நபர்களே லீகால் அங்கீகரிக்கப்பெற்ற ஒப்பந்தத்தைத் தொடர்ந்து எல்லாக் காரியாதிகளையும் செய்துவர வேண்டுமென்றும் அ. இ. மு. லீக் கௌன்சிலுக்கு பின்கண்ட

அதிகாரத்தை அளிக்கப்படுகிறது. அதாவது 'யுத்தம் முடிந்தபின் துரிதமாக தூதுகோஷ்டி யொன்றை பிரிட்டனுப்பி அங்குள்ள காங்கிரஸ் தூதுகோஷ்டியுடன் கலந்து இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டிலும் பொதுமக்களிடத்திலும் ஒற்றுமைத் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட உழைக்க வேண்டும்' என்று மூன்றுவது தீர்மானமாக ஜஹாங்கீர் ஆபாத் ராஜா பிரேரிக்க பலர் ஆதரித்தபின் இதுவும் நிறைவேறியது.

மேலும் சுமார் 18 தீர்மானங்கள் "ஆயுதச் சட்டம் ஆச்சுச் சட்டம் அகற்றப்படவேண்டுவதும்" அலி சகோதரர்கள் அபுல் கலாம் ஆஜாத், ஜபர் அலிகான் ஆகியவர்களை அரசாங்கக் காவலிலிருந்து விடுவிக்கவேண்டுவது 'உறுதிற்கு எதிராக துவேஷப் பிரசாரம் புரிவதைக் கண்டிப்பது" "பிரிட்டனின் குடியேற்ற நாடுகளில் இந்தியர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அகற்ற வற்புறுத்தல்" "ஐக்கியமாகாண முனிசிபல் சட்டமியற்றியதற்குப் பாராட்டுதல்" "டாக்காவிலே சர்வகலாசாலை ஸ்தாபிக்க வற்புறுத்துதல்" ஆகியவைகளை முஸ்லிம் லீக் கொள்கைகளிலே சிறிது மாறுதல்செய்யும் தீர்மானமும்கொண்டு நிறைவேற்றப்பட்டன. இத்துடன் மகாநாடு முடிவுற்றது.

காங்கிரஸ் மகாநாட்டில் லீக் தலைவர்கள்

திரு அம்பிகாசரண முஜும்தார் தலைமையிலே அ. இ. காங்கிரஸின் 31-வது மகாநாடு 1916 டிஸம்பர் 26-ந் தேதி இலட்சுமணபுரியிலே நடந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் 12-வது தீர்மானம் இரண்டாவது (B) பிரிவிலே "அ. இ கா கமிட்டியும், அ. இ. மு லீக் கமிட்டியும் கலந்து ஏகோபித்து வெளியிட்டுள்ள சீர்திருத்தத் திட்

டத்தை இந்தியத் திருத்தங்களின் முதல்படியாகக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது, என்று ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதை ஆதரித்துப்பேசிய மௌலானா மஜ்ஹருல் ஹக் குறிப்பிட்டதாவது,

"எனது வாழ்க்கையின் முக்கிய இலட்சியம் இந்து முஸ்லிம் ஒற்றுமை ஒன்றே! இவ்வாண்டிலே அது சித்தி பெற்றது. இதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி! இதிலே மஹ்முதாபாத் ராஜாவின் ஊழியத்தைப் போற்றுகிறேன். அவர் இந்தியாவின் ஒப்பற்ற மாணிக்கம்! விண்வேலையை விட்டொழித்து ஒற்றுமையுடன் ஆக்க வேலையிலிறங்குவோம்"

மகாநாட்டில் ஏராளமான லீக் தலைவர்கள் கலந்து கொண்டனர். காங்கிரஸ் லீக் ஒன்றுபட்டதும் இரு மகாநாடுகள் ஒரே யிடத்திலே நடந்ததும் ஹிந்து முஸ்லிம் ஒப்பந்தம் செய்துகொண்டதும், ஒவ்வொரு விஷயத்திலும் இரண்டறக்கலந்துக்கொண்டதும். இந்திய அரசியல் சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களிலே பொறிக்கப்பட வேண்டியது. வெறும் தீர்மானங்களை ஏட்டளவோடு நிறைவேற்றிவிட்டு வெறும் பதவிகள்மட்டும் ஏற்று பொம்மைகளாயிருந்த காங்கிரஸ் தலைவர்கள் கூட லீக் இணைப்பினால் உணர்ச்சிகொண்டு வேலைசெய்ய வாரம்பித்தனர். இந்த ஐக்கிய மனோபாவம் அதிகார வர்க்கத்தையே ஆட்டங் காணச் செய்துவிட்டது அத்தகைய "இலட்சுமணபுரி ஒப்பந்தம்" நிறைவேற ஆக்கவேலை புரிந்த ஜனாப் முகம்மதுஅலி ஜின்னாஹ், மௌலானா மஜ்ஹருல்ஹக், மௌலானா ஹஜரத் மோஹானி, மஹ்முதாபாத் ராஜா ஆகியோர்களுக்கு இந்தியமக்கள் என்னும் நன்றிசெலுத்த கடமைப்பட்டுள்ளார்கள்.

சுதந்திரக் கிளர்ச்சி

1916 காங்கிரஸ் லீக் மகாநாடுகள் செய்துகொண்ட தீர்மானத்தின்படி 1917 முதல் இரு சபைகளும் கலந்துழைக்க வாரம்பித்தனர். 1916 செப்டம்பரிலே மிஸஸ் அன்னிபெஸண்ட் அம்மை ஆரம்பித்த சரித்திரம் பிரசித்தமான "ஹோம் ரூல்" லீக் சபையுடனே இவை யிரண்டும் ஒன்றுசேர்ந்துகொண்டன. ஏனெனின் "ஹோம்ரூல் லீக்" சபையின் பிரதான நோக்கமும் இந்திய சுயாட்சி பெறுவதேயாம்.

இவை மூன்றும் ஒன்றுபட்டுப்போனது அதிகார வர்க்கத்தினருக்கு அடிவயிறுபற்றி எறிந்ததுபோலாயிற்று. காங்கிரஸ் லீக்கைவிட "ஹோம் ரூல் லீக்" சபைமீது அவர்களுக்கு அளவிற்குமீறி ஆத்திரம்! எனவே தாம் பெஸண்ட் அம்மையின் ஒவ்வொரு காரியங்களையும் கருத்தோடு கணித்துக்கொண்டிருந்தனர். அத்தோடு அவருடைய கிளர்ச்சி பலங்கொண்டதாயும் பலத்த ஆதரவு பெற்றதாயும் அமைந்துவிடவே அதிகார வர்க்கத்தினரின் கோபம் எல்லை மீறிவிட்டது.

அதிகாரத் திமிர்

அம்மையாரின் "நியூ இந்தியா" "காமன் வெல்த்" ஆகிய பத்திரிகைகளுக்கு 20,000 ரூபாய் ஜாமீன் கட்டும்படி உத்திரவாயிற்று அடுத்து அத்தொகையைப் பறிமுதலும் செய்யப்பட்டது. கேட்கவேண்டுமா! பொதுமக்கள் கொதித்தெழுந்தனர். அத்துடன் அதிகாரவர்க்கத்தின் அதிகாரத்திமிர் பன்மடங்கும் பெருகி அது 1917-ஜூன் 15 ந் தேதியிலே சென்னையில் பெஸன்ட் அம்மை, அவரின் சகாக்களான மிஸ்டர் அருண்டேல், மிஸ்டர் வாடியா ஆக எல்லாரையும் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது

செய்தது. தேசம் படபடத்தது; தேசமக்கள் சீறி எழுந்தனர். கைதுசெய்யப்பட்ட 12-வது நாள், முஸ்லிம் லீக் ஒரு அவசரக்கூட்டம் போட்டு, கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு தீர்மானித்தது.

காங்கிரஸ் - லீக் கூட்டம்.

"ஹோம்ரூல் லீக்" பலத்த தீவிரமாகக் கிளர்ச்சி செய்துகொண்டிருக்கும்போதே ஜனுப் ஜின்னாஹ்வும் பெரும் ஊக்கத்துடன் வேலைசெய்துவந்தார். 1917-ஜூலை 27-ந் தேதி பம்பாயில், அ. இ. கா. கமிட்டியும் அ. இ. மு லீக் கௌன்ஸிலும் கூட்டாகக் கமிட்டிக் கூட்டம் நடத்தின அதில் "ஜனுப் ஜின்னாஹ், ஜனுப் ஸெய்யித் வஜீர் ஹஸன், திரு சீனிவாச சாஸ்திரி அல்லது ஸி.பி. ராமஸ்வாமி அய்யர், ஆனரபிள் டாக்டர் தேஜ் பஹாதுர் சப்ரு ஆகியோர் செப்டம்பர் மதத்தியிலே இங்கிலாந்துசென்று அரசாங்கத் தலைவர்கள், முக்கியஸ்தர்களுக்கு, இந்திய அரசியல் பொது நிலைமைகளைத் தெளிவுபடுத்துவதுடன் காங்கிரஸ் - லீக் திட்டங்களை ஏற்று நிறைவேற்றிவைக்கும்படி வற்புறுத்த வேண்டும்" என்றும், "ஒவ்வொரு மாகாண காங்கிரஸ்-லீக் சபைகள், தத்தம் மாகாண நிலைமைகளைப்பற்றிய விபரங்களை 27-ந் தேதியிலிருந்து 6-வாரத்திற்குள்ளாக அ. இ. கா. காரியதரிசிகளுக்கு அனுப்பிவைக்கவேண்டும்" என்றும், "திரட்டப்பட்ட விபரங்கள்பற்றி அக்டோபர் கடைசிவாரத்திலே காங்கிரஸ்-லீக் கூட்டுக்கமிட்டிக்கூட்டத்தில் ஆலோசனைக்குப்பின் முடிவுசெய்யப்படுமென்றும், பெஸன்ட் அம்மை, அவரின் சகாக்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், கண்டனக்கூட்டம் போடவிருந்த கல்கத்தா பகிரங்கக்கூட்டத்தை தடைப்படுத்தியதைக் கண்டித்தும், அலி சகோதரர்களை உடனே விடுதலைசெய்யும்படியும் ஆகப் பல

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, காங்கிரஸ் - லீக் திட்டம் நிறைவேறுவதற்குவேண்டி, வேலைகள் செய்வதற்குப் பல சப் கமிட்டிகள் நியமிக்கப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

இந்தியா மந்திரி அறிக்கை,

அச்சமையத்தின் இந்தியா மந்திரியான ஸர் ஆஸ்டன் சேம்பர்லின் ராஜிநாமா செய்யவே, மிஸ்டர் மாண்டேகு இந்தியா மந்திரியானார். மாண்டேகு இதற்குமுன் பலதடவைகள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்தும், இந்தியமக்கள் பால் பெரும் அன்பு கொண்டும் விளங்கியவர். இவர் பதவி ஏற்றதும், ஏதாவது விமோசனம் கிடைக்குமென்று நம்பிய மக்கள் எண்ணப்படியே 1917 ஆகஸ்டு 20-ந் தேதி அறிக்கையொன்று வெளியிட்டார். அவ்வறிக்கையிலே இந்தியாவிற்குக் கூடியசீக்கிரமாகவே சுய ஆட்சி தந்துவிடப் பிரிட்டன் எண்ணி வருகிறதென்றும், இனி கால நிலையை அனுசரித்துத் தக்க உதவிகள் செய்யப்படுமென்றும் கூடிய சீக்கிரமே இந்தியச் சீர்திருத்தத் தலைவர்களைத் தாம் நேரில் கண்டுபேசப் போவதாயும் குறிப்பிட்டிருந்தார் அறிக்கை வெளியான அதே தினமே கைதியான பெஸண்ட் அம்மை, அவரின் சகாக்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.

ஆகஸ்ட் 27-ந் தேதி அ. இ. மு. லீக் கௌன்ஸில் கூடி மாண்டேகு வெளியிட்ட அறிக்கையைப் பாராட்டி யுத்தம் முடிந்ததும் காங்கிரஸ் - லீக் திட்டத்தை நிறைவேற்றி வைக்கவேண்டியும், உடனே அலி சகோதரர்களையும் விடுவிக்கும்படிவேண்டியும் தீர்மானங்கள் செய்யப்பட்டு அதை இந்திய மந்திரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

சத்தியாக்கிரஹம் செய்வதா? வேண்டாமா?

காங்கிரஸ் லீக் கூட்டுக்கமிட்டிக் கூட்டம் இலாஹாபாத்தில் அக்டோபர் 20-ந் தேதி கூடிற்று. "சத்தியாக்கிரஹம்

நடத்துவதா வேண்டாமா? என்பதுபற்றி காங்கிரஸ்-லீக் மாகாணக் கமிட்டிகளிடமிருந்துவந்த திட்டங்களைப் பரிசிலனைசெய்து முடிவிலே சத்தியாக்கிரஹம் அவசியமில்லையென்றும் அதற்குப்பதிலாக வைஸ்ராயிடம் தூது கோஷ்டி அனுப்பிவைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. ஆனரபிள் ஸெய்யித் வஜீர் ஹஸன், திரு என் சுப்பராயன், பந்துலு ஆகியோர்கள் அங்கத்தினராகவும் திரு ஸி பி. ராமஸ்வாமி அய்யர் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கோரிக்கைகளைத் தயாரிப்பதற்காக ஸெய்யித் நபியுல்லாஹ் பார்-அட்-லா, டாக்டர் முக்தார்அஹ்மத்அன்ஸாரி, ஸர் யதீந்திரநாத் பானர்ஜி, மிஸஸ் அன்னி பெஸண்ட், திரு சீனிவாஸ சாஸ்திரி ஆகியோர்கொண்ட கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது.

தூதுகோஷ்டியினர் ஜாபிதா:

தீர்மானித்தபடி தூதுகோஷ்டிக்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதிலே கீழ்காணுபவர்கள் முக்கியத்துவம் பெற்றவர்களாவர்.

ஜனுப் முஹம்மத்அலி ஜின்னாஹ், மஹ்முதாபாத்ராஜா முஹம்மத் அலி முஹம்மத் கான் பஹதூர், ஸெய்யித் நபீயுல்லா (லக்னோ), ஜனுப் மஜ்ஹருல் ஹக் (பாட்னா), ஜனுப் ஸெய்யித் வஜீர் ஹஸன், ஸர் இபுருஹீம் ரஹ்மதுல்லா (பம்பாய்). மிஸஸ்அன்னிபெஸண்டு (மதராஸ்), திரு அம்பிகாசரண முஜூம்தார், நவாப் செய்யித் முஹம்மத் பஹதூர் (மதராஸ்), பண்டித மதன்மோஹன மாளவியா, ஸர் யதீந்திரநாத் பானர்ஜி (கல்கத்தா). ஸர் ராஷ்பிஹாரி கோஷ்(கல்கத்தா), திரு எம். கே. காந்தி(அஹ்மதாபாத்), திரு பாலகங்காதர திலகர், திரு சீனிவாஸ சாஸ்திரி (மதராஸ்),

ஜனுப் ஸெய்யித் ஹஸன் இமாம் (பாட்னு), பண்டித மோதிலால்நேஹ்ரு, ஜனுப் ஸெய்யித்பஜ்லே ஹுஸைஸன், மௌலவி ஏ. கே. பஜ்லுல் ஹக் (கல்கத்தா), ஜனுப் யாஅகூப் ஹஸன் சேட் (மதராஸ்), திரு சிந்தாமணி, திரு சி. பி. ராமஸ்வாமி அய்யர் (மதராஸ்), மௌலானு முஹம்மது அலி.

இத்துடன் எல்லா மாகாணக் காங்கிரஸ் லீக் பிரதிநிதிகளையும், இதர அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் இத்துடன் இணைக்கப்பட்டு இக்கோஷ்டி, இந்தியா மந்திரி, வைஸ்ராய் ஆகியவர்களைப்பேட்டி காணுவதோடு காங்கிரஸ். லீக் சீர்திருத்தத் திட்டத்தையும் அமுலில்கொண்டுவரமுயலவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அலி சகோதரர்களை விடுவிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது. இத்துடன் கூட்டம் முடிவுற்றது.

அலி சகோதரர்களை விடுவிக்க முயற்சி

காங்கிரஸ்-லீக் கூட்டம் நடந்ததற்கு முன்தினமே முஸ்லிம் லீக் கௌன்ஸில் கூட்டம்கூடி டிஸம்பரில் நடக்கவிருக்கும் லீக் மகாநாட்டிற்கு சிறையிலிருக்கும் மௌலானு முஹம்மத் அலியைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. எனவே சிறையிலிருக்கும் அலி சகோதரர்களை விடுவிப்பதிலே அபார முயற்சி எடுக்கவேண்டியதாயிற்று. ஒப்பற்ற சேவகர் ஜனுப் முஹம்மத் அலி ஜின்னும் இதற்குப் பெரிதும் முயற்சித்து அலி சகோதரர்கள் சிறைப்பட்டிருக்கும் "சிந்துவாரா" விற்கு அடிக்கடி போய்வந்தார்.

எவ்வித விசாரணையுமின்றி சிறை வைக்கப்பட்டிருக்கும் அலி சகோதரர்களை விடுவிப்பதிலே இதர தலைவர்களும் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்டனர். 1917 ஸெப்டம்பர் 26 ந் தேதி நடந்த இந்தியா சட்டசபைக் கூட்டத்

-ர்கள் வகு

தியிலே ஜனாப் ஜின்னாஹ் இதைக்குறித்துப் பலமாக வாதாடினார். உடனே அதன் பலன் கிட்டியது. அரசாங்கத்தினர் "ஸிந்துவாரா" போலீஸ் அதிகாரிக்கு "சிலநிபந்தனைகளுக்கு அலி சகோதரர்கள் இணங்கினால் விடுதலை செய்துவிடுக" என உத்திரவிட்டனர். ஆனால் அலி சகோதரர்கள் இதற்கு இணங்கவில்லை. இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்ட இதர தலைவர்களான மௌலானா ஜபர் அலி கான், மௌலானா அபுல்கலாம் ஆஸாத், ஹஸரத்மோஹானி, மௌலானா மஹ்மூத் ஹஸன் தேவ்பந்தி ஆகியோர்களையும் நிபந்தனையின்றி விடுவிக்க லீக் தலைவர்கள் பெரிதும் முயற்சித்தும் முடியவில்லை.

இந்தியா மந்திரியின் விஜயம்:

முன் கூறியிருந்தபடி இந்தியா மந்திரியான மிஸ்டர் மாண்டேகு 1917 நவம்பரில் இந்திய வைஸ்ராயுடன் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம்செய்து பற்பல அரசியல் கட்சித் தலைவர்களையும் கண்டு பேசினார். மௌலானா முஹம்மத் அலியையும் கண்டுபேச இந்தியாமந்திரி ஆவாக் கொண்டிருந்தும் இந்திய அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை. இதேசமயத்திலே நவம்பர் 14-ந் தேதி லீக் கமிட்டிக்கூட்டம் நவாப் முஹம்மத் இஸ்ஹாக்கான் தலைமையில் இலட்சுமணபுரியிலேகூடி, இந்தியா மந்திரியைக் கண்டு பேச ஒரு தூதுகோஷ்டி நவாப் முஹம்மத் இஸ்ஹாக்கான் தலைமையிலேபோய்ச் சந்திக்க வேண்டுமென முடிவுசெய்து அதன்படியே தூதுகோஷ்டி புறப்பட்டது. ஆனால் கோஷ்டியின் அறிக்கையிலே அலி சகோதரர்களை விடுவிக்கும் பிரச்னையை நீக்கினாலொழிய இந்தியா மந்திரியைக் காண முடியாது என அரசாங்கம் தடுத்துவிட்டது. எனவே தூதுகோஷ்டி இதைமறுக்கவே சந்திப்பு தடைபட்டது.

ஜும்ஸ்லிம் கலாட்டா!

பகுர்பானி செய்ததாகப் பாட்னாவிலே ஹஜ்ஜுப்பெரு நாளன்று பலத்த ஹிந்து முஸ்லிம் கலகம் நிகழ்ந்தது. இதனால் முஸ்லிம்களுக்கு பெருத்த உயிர்ச்சேதம், பொருட்சேதங்கள் ஏற்பட்டன. இக் கலகத்திற்கு திரைமறைவில் ஹிந்து மகாசபை பெரிதும் தூண்டுகோலாயிருந்தது. இவ்வக்கிரமங்களைக் கண்டித்து காங்கிரஸ் தலைவர்கள் வாய் கூடத்திறவாதிருந்தது பெரும் ஆச்சரியமே! இதனால் முஸ்லிம்களுக்கு பெருத்த மனத்தாங்கலேற்பட்டது.

கலகம் நடந்துகொண்டிருக்கும்போதுதான் மேற்காணும் லீக் கௌன்ஸிலும் நடந்துகொண்டிருந்தது. அவ்வமயம் பிரசன்னமாயிருந்த "முஹம்மதாபாத்" நகரசபைத் தலைவரான ஜனாப் முஹம்மத் யாகூப் சாஹிப் காங்கிரஸ்-லீக் திட்டங்களை நிரந்தரமாக அங்கீகரிக்கும்படி ஓர் தீர்மானம் கொண்டுவந்தார். பலத்த விவாதங்களுக்குப்பின் இது நிறைவேறியது. மேலும் "எந்த மாகாணங்களிலே உருது மொழி நடைமுறையிலிருக்கிறதோ அது மேலும் அப்படியே இருக்கப்படவேண்டும். முஸ்லிம்களின் மார்க்கக் கடமைகளைச்செய்வதிலே அரசாங்கமோ இதர சமூகங்களோ தடைஏற்படுத்தாதிருக்க அரசாங்கம் தக்க பாதுகாப்புசெய்யவேண்டும், முஸ்லிம்களின் மஸ்ஜித்போன்ற பரிசுத்த இடங்களும் பாதுகாக்கப்படவேண்டுமென்" றும் தீர்மானிக்கப்பட்டது. பீஹார், ஐக்கியமாகாணங்களில் ஏற்பட்ட கலகங்களில் பலத்த நஷ்டத்திற்கிலக்கான முஸ்லிம்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், மௌனம்சாதித்த ஹிந்துத் தலைவர்கள்மீது வருத்தம் தெரிவித்தும், கஷ்ட நஷ்டமடைந்த முஸ்லிம்களுக்கு உதவிசெய்யப்பெரும்நிதி திரட்ட வேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது. அதே

கூட்டத்திலேயே பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் வசூலிக்கப்பட்டன. நவம்பர் 26உ காங்கிரஸ்-லீக் ஐக்கியக் கமிட்டியின் தூது கோஷ்டி இந்தியா மந்திரியைக்கண்டு யாதாஸ்தைச் சமர்ப்பித்தனர். அன்புடன் ஏற்றுக்கொண்ட அவர் ஆலோசனை செய்வதாக வாக்களித்தார்.

16. முஸ்லிம் லீகின் 10-வது மகாநாடு (1917)

முஸ்லிம் லீகின் 10-வது மகாநாடு வெகு விநோதமான முறையிலேயே நடந்தது. 1917 டிஸம்பர் இறுதியிலே கல்கத்தாவிலே வெகு விமரிசையாகக்கூடி மக்கள் ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தனர். தலைமைதாங்கி நடத்தக் கூடிய தலைவர் சிறையிலே சோர்ந்துகிடக்க அவர் அமரும் இடத்திலே அவரது உருவப்படம் * வைக்கப்பட்டிருந்தது.

மௌலானா முஹம்மது அலியை விடுவிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் கானல் நீராயின. கொதிப்படைந்த மக்கள் சோர்ந்துவிடவில்லை. தலைமையுரையை மௌலானா சார்பாக அவரது தாயார் பானுபீ அம்மாள் அவர்களால் சுருக்கமாக நிகழ்த்தப்பட்டது. இந்தியாவிற்கு உடனே சுய ஆட்சி அளிக்கவேண்டுமென்றும் துருக்கிக்கு அநுதாபம் காட்டவேண்டுமென்பதுமே தலைமையுரையின் சாரம்.

---

* குறிப்பு:— உருவப்படம் வைப்பதும் அதைக் கௌரவப் படுத்துவதும் இஸ்லாத்தில் விலக்கப்பட்டிருக்கிறது. இது தவறானசெய்கையே என்பதை வாசகர்கள் மறந்து விடக்கூடாது. (மௌலவி ஷாதலி)

வரவேற்புக் கமிட்டித் தலைவரான ஜனாப் அப்துல் லதீப் அஹ்மத்ஜகரிய்யா சாஹிப் நீண்ட அர்த்தபுஷ்டி கொண்ட சொற்பொழிவு நிகழ்த்தினார். நிறைவேற்றிய பல தீர்மானங்களில், அலி சகோதரர்கள் இதர இஸ்லாமிய தலைவர்களனைவரையும் உடனே விடுவித்துவிடவேண்டு மென்பதே முக்கியமானது. இத்துடன் இம்மகாநாடு முடிவுற் றது இதே சமயத்திலே கல்கத்தாவில் காங்கிரஸின் 32-வது மகாநாடு பெஸண்ட் அம்மையாரின் தலைமையில் நடை பெற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் அலி சகோ தரர்களை விடுவிப்பதும் ஒன்றாயிருந்தது ஒரு விசேஷமே.

மௌலானா முஹம்மது அலி மேற்கண்ட முஸ்லிம் லீக் மகாநாடுபற்றி பின்னொருதடவை தமது "ஹம்தர்த்" பத்தி ரிகையிலே குறிப்பிட்டதாவது:—

"முஸ்லிம்களுக்கென்று முதன் முதலில் பிரதிநிதித்து வம் வாய்ந்த அரசியல் ஸ்தாபனமான முஸ்லிம் லீக், 1906-ல் என்னாலேயேயித்திடப்பட்டது என்றும் கூறலாம். 1917-ல் லீகின் தலைவனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டேன். சிறை பட்டிருந்ததால் எனது உருவப்படம் நானிருக்குமிடத்தில் வைக்கப்பட்டிருந்தது. என்னைத் தெரிந்தெடுத்ததற்காக என் மனமார்ந்த நன்றி என்சமூகத்தவருக்கு! எனினும், அச்சம யத்திலே எனக்கு பொங்கிய உணர்ச்சி சிறு கவிதையாய் உருமாறியது. அக்கவியின் சாரம் "ஜௌஹரே! இவ்வக்கி ராசனம் உனக்கு மங்களகரமானதாகுக! எனினும் மறு மையின் வெகுமதிகளுக்கு உரித்தாகுவதென்றால் அதற் குரிய கருமங்கள் வேறு இருக்கின்றன" என்பதேயாம்.

மாண்டேகு சீர்திருத்தம்!

இந்தியா மந்திரி லார்டு மாண்டேகு முன்பு இந்தியாவிற்கு விஜயம்செய்தாரல்லவா? அவர் இங்கிலாந்து திரும்பியதும், இந்திய அரசியல் சம்பந்தமாக ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதைப் பார்லிமெண்டில் சமர்ப்பித்து அங்கீகாரம்பெற்றபின் அத்திட்டத்தை "மாண்டேகு சேம்ஸ்போர்டு அறிக்கை" என்ற திருநாமத்தால் அலங்கரித்து இந்தியாவிற்கு அனுப்பினர். இதில் காங்கிரஸ்-லீக் திட்டத்தின் சில பகுதிகள் அங்கீகாரம் பெற்றிருந்தாலும் பூரணமாக ஒப்புக்கொள்ளப்படவில்லை. எனினும் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் இதை ஆதரித்துக்கொள்ளவாரம்பித்தனர். இதன் பயனாகவே பம்பாயில் "மிதவாதக் கட்சி" தோன்றியது.

காங்கிரஸின் விசேஷ மகாநாடு

1918 ஆகஸ்ட் 29-ந் தேதியிலே ஜனாப் ஸெய்யித் ஹஸன் இமாம் தலைமையிலே அ, இ. காங்கிரஸின் விசேஷ மகாநாடு ஆரம்பமாகி தொடர்ந்தாற்போல நான்கு நாட்கள் நடைபெற்றது. பல லீக்தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர். இறுதியாக "காங்கிரஸ்-லீக் கோரிக்கையிலே கண்ட சுயவாட்சிக்குக் குறைந்த எந்தத்திட்டமும் இந்திய ராஜீய அபிலாஷைகளைத் திருப்திசெய்விக்க முடியாதென்பதை மீண்டும் வற்புறுத்துகிறது" என்ற தீர்மானம் உட்படப் பல தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன. இம்மகாநாட்டில் வங்கச் சிங்கம் திரு ஸி. ஆர் தாஸ் பேசும்போது, 'காங்கிரஸும் முஸ்லிம் லீகும்தான் தேசத்தின் பிரதிநித்துவம் பெற்ற சபைகள் என்பது நமது திடமானகோள்கை" என்று குறிப்பிட்டார்.

லீகின் விசேஷ மகாநாடு

புதிய அரசியலை ஆராய்ந்து பார்க்கும் நிமித்தம் அ. இ. முஸ்லிம்லீகின் விசேஷமகாநாடு பம்பாயிலே ஆகஸ்ட் 31-உ மஹ்மூதாபாத் ராஜா ஸர் முஹம்மத்அலிமுஹம்மத்கான் பஹதூர் கே. ஸி. ஐ. இ. அவர்களின் தலைமையில் கூடியது. வரவேற்புக்கமிட்டித் தலைவராக ஸர் பஜ்போபாயி கரீம் பாய் கே. பி. ஸி. பி. இ. நியமிக்கப்பட்டிருந்தார். அவரது சொற்பொழிவு முடிவுற்றதும் தலைவர் தமது நீண்ட அழகிய பிரசங்கத்தினூடே, புதிய அரசியல் திட்டத்திலுள்ள ஏற்க முடியாத குறைகளைத் தெளிவுபடக்கூறி, மற்றும் பல முக்கியப் பிரச்சினைகளைப்பற்றியும் விளக்கினார். பிறகு தீர்மானங்கள்பற்றி வாதம்எழுந்தது. காங்கிரஸ்-லீக்திட்டம் மீண்டும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. புதிய அரசியல் திட்டத்தை மாற்றியமைக்க லீகின் சார்பிலே 19 குறிப்புகளடங்கிய நிபந்தனைத் திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டன. மேலும் அலி சகோதரர்களை விடுவிப்பது, லீக் கோரிக்கைகளை விளக்கிவைக்க இங்கிலாந்துக்கு ஒரு தூதுகோஷ்டி அனுப்புவதென்றும் 1917-ன் இறுதியில் தோற்றுவிக்கப்பெற்ற "ரவ்லட்" * கமிட்டியின் ரிப்போர்ட்டை பலமாகக் கண்டிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

* ஹோம்ரூல் கிளர்ச்சிக்குப்பின் தேசத்திலே ஏற்பட்ட கொந்தளிப்பைச் சமாளிப்பதற்காக இந்திய கவர்ன்மெண்டார் ஸர் ஸிட்னி ரவ்லட் தலைமையிலே திரு குமாரசுவாமி, திரு பர்வேஸ்சந்தர், திரு சாஸ்திரி ஆகியோரடங்கிய "ரவ்லட் கமிட்டி" ஒன்று ஏற்படுத்தினர். இக்கமிட்டி முஸ்லிம்கள்மீது பற்பல பொய்க்குற்றங்கள் சாட்டிற்று. முஸ்லிம்கள்செய்த நேர்மையான கிளர்ச்சிகளுக்கு மாசு சற்பித்தது. குறிப்பாக துருக்கிக்கும், கிலாபத்திற்கும் முஸ்

முயற்சி தோற்றது

மேற்படி லீக் விசேஷ மகாநாட்டிலே தீர்மானித்திருந்தபடி அலிசோதரர்களை விடுவிக்கும் விஷயத்திலே அதிகார வர்க்கம் கவனித்து விடுவிக்கும் பிரச்சினையைக் குறித்து பரிசீலனைசெய்வதற்கு ஆராய்வதற்காக லீக் சார்பிலே ஒரு கமிஷனை 1918 செப்டம்பரிலே ஏற்படுத்தினர். இதுவரை பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்ததற்கு அக்கமிஷன் ஆதரவு காட்டி உடனே அவர்களை விடுவிக்குமாறு சிபார்சுசெய்து ஒரு அறிக்கையை அதிகார வர்க்கத்தினரிடம் சமர்ப்பித்தது. ஆனால் அவர்கள் ஏற்க மறுத்தனர். எனவே அலி சகோதரர்கள் விடுபடவில்லை.

மகாயுத்தம் முடிந்தது!

1918 நவம்பர் 11-ந் தேதியோடு மகாயுத்தம் முடிவுற்றதும் இந்திய முஸ்லிம்கள் மாபெரும் கவலைகொண்டனர். காரணம் ஐரோப்பாவிலே நடைபெறும் "சமாதான மகாநாட்டிலே" துருக்கிபற்றி என்ன முடிவு செய்யப்படுகிறதோ? கிலாபத் பதவியும், புண்ணிய ஸ்தலங்களும் எப்பாடுபடுகிறதோ? துருக்கியை எந்தவகையிலே சின்னாபின்னப்படுத்த இதரநாட்டினர் முனைந்துள்ளனரோ? என்றெல்லாம் இந்திய முஸ்லிம்கள் அல்லும் பகலும் ; அல்லற்பட்டுக்கொண்டிருந்தனர். வெறும் ,அரசியல் விவகாரங்களில் மட்டும் இதுவரை முனைந்திருந்த லீக்கூட இப்பொழுது சற்று

லிம்கள் அனுசரணையாக இருந்தார்களாம்! எனவே தாம் இல்லாததும் பொல்லாததுமான பற்பல குற்றச்சாட்டுகளை முஸ்லிம்கள்மீது "ரவ்லட்" கமிட்டி சாட்டியதற்காக முஸ்லிம்லீக் அதைப் பலமாகக்கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியது.

இதுபோன்ற மத விஷயத்திலே தீவிரமாக தலையிட முனைந்து நின்றது.

ஜமீஅத்துல் உலமா கூட்டம்!

இதையெல்லாம் நன்குணர்ந்த முஸ்லிம் மார்க்க அறிஞர்கள் (உலமாக்கள்) இதைப்பற்றி நன்கு யோசிக்கவும் தங்களிடை ஒரு மகாநாடு நடத்தி அதன் தீர்மானங்களை அண்மையில் நடக்கவிருக்கும் லீக் மகாநாட்டிலே சமர்ப்பிக்கவும் 1918 டிஸம்பர் 30-ந் தேதி டில்லி ஜாமிஆமஸ்ஜிதில் காலை 9 மணிக்கு உலமா மாநாடு நடத்தினர். இந்தியாவிலுள்ள பெரும்பாலான மார்க்க அறிஞர்கள் இதில் கலந்துகொண்டு 8 தீர்மானங்கள் நிறைவேற்றி அத் தீர்மானங்களைத் தங்களது பிரதிநிதிகளான மௌலானா முப்தி கிபாயதுல்லா ஸாஹிப் உட்பட்ட சிலர் லீக் மகாநாட்டிற்குக் கொண்டுசெல்வதென முடிவு செய்யப்பட்டது.

17. முஸ்லிம்லீகின் 11-வது மகாநாடு (1918)

முஸ்லிம் லீகின் 11-வது மகாநாடு 1918 டிஸம்பர் 30-ந் தேதி காலை 11 மணிக்கு டில்லியில் மௌலவி ஏ. கே. பஜ்லுல் ஹக் அவர்கள் தலைமையில் கூடியது. இந்திய முஸ்லிம் உலகின் எதிர்கால நலனைக் குறித்துக்கூடிய மகாநாடாதலால் விசேஷமாக பல திக்கிலிருந்தும் ஏராளமான முஸ்லிம்தலைவர்கள் இதில்பிரசன்னமாகியிருந்தனர். முக்கியமான இந்திய மார்க்க அறிஞர்கள் அனைவரும் இதற்கு விஜயஞ் செய்திருந்தனர். முஸ்லிமல்லாத காங்கிரஸ் தலைவர்களும் பார்வையாளர் நிதியிலே வந்திருந்தனர். அவர்களுள் பெஸண்ட் அம்மை, திருமதி சரோஜனி நாயுடு, மிஸஸ் ஹாார்னிமன், அருண்டேல், ஜெயராமதாஸ், ஸி. விஜய

ராகவாச்சாரியார், ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், பட்டேல் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

வரவேற்புரை பறிமுதல்

திருமறையின் (குர்ஆன் ஷரீபின்) சில வாக்கியங்களைக் கொண்டு மகாநாடு ஆரம்பமாயிற்று. வரவேற்புக்கமிட்டித் தலைவர் டாக்டர் முக்தார் அஹ்மத் அன்ஸாரி வாசிப்பதாயிருந்த அச்சடித்தவரவேற்புரையை ராஜத்துவேஷம் இருப்பதாகக்காரணம்கூறி அதிகாரவர்க்கம் அதைபறிமுதல் செய்து விட்டதால், மிகச்சுருக்கமானமுறையிலே வரவேற்புரை நிகழ்த்தினார். பின், தலைவர் அர்த்தபுஷ்டிகொண்ட தமது நீண்ட தலைமையுரையை ஆற்றும்போது:—

"கிலாபத் பிரச்னையை முடிவு செய்யக்கூடிய பொறுப்பு முஸ்லிம்கள் வசமேயிருக்கவேண்டும் அவர் அவர்களின் பரிசுத்த ஸ்தலங்கள் இதரர்களின் ஆதிக்கத்தினின்று விடுபடவேண்டும்! நாம் ராஜவிசுவாசிகளாக இருக்க விரும்புகிறோம்! ஆனால் அந்த விஸ்வாசம் நமது மார்க்கத்தின் வரையறைக் குட்பட்ட முறையிலிருக்க வேண்டும்! இறைவனின் சட்டத்திற்கு அரசனின் சட்டம் முரண்படுமேயானால் முஸ்லிம்கள் தங்கள் உயிரையும் பெரிதாக நினையாது இறைவனின் சட்டத்தையே மதித்து நடப்பார்கள்" என்று கர்ஜித்தார். மேலும், அலி சகோதரர்களை விடுவித்தல், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஆகியவைகளைப்பற்றி வற்புறுத்தி விட்டு, மகாநாட்டிற்கு அழைப்பை ஏற்று விஜயஞ் செய்த மார்க்க அறிஞர்களைப் பாராட்டிப் பேசினார். பின், சிறந்த அறிஞரும், மார்க்க விவேகியுமான மௌலானா அப்துல் பாரி (லக்னோ) அவர்களைச் சொற்பொழிவு நிகழ்த்துமாறு வேண்டிக்கொண்டார்.

மௌலானாவின் ஆவேசம்!

மௌலானா அப்துல் பாரி சாமான்யப்பட்டவரன்று! அலி சகோதரர்கள் ஹஜரத் மோஹானி போன்ற பல அறிஞர்களுக்கு குருவாயும், பிரபல மேதாவியாகவும், கிலாபத் ஊழிய சங்க ஸ்தாபகராகவும் இந்திய முஸ்லிம்களின் மதிப்பிற்குரியவராகவுமிருந்தார். முன்பெல்லாம் எந்த ஸ்தாபனங்களின் மகாநாடோ, கூட்டமோ நடந்தால் தங்கள் கட்சிக் கொடியுடன் யூனியன் ஜாக் கொடியையும் சேர்த்து பறக்கவிடுவது வழக்கம். அதன்படியே, அன்றைய மகாநாட்டிலே லீக் கொடியுடன் பிரிட்டிஷாரின் யூனியன் ஜாக் கொடியும் சேர்த்து பறக்கவிடப்பட்டிருந்தது. பேச எழுந்த மௌலானா அப்துல் பாரி அவர்கள் கண்களுக்கு யூனியன் ஜாக் கொடி எதிர்ப்பட்டதும் அவரையுமறியாது ஆவேசங்கொண்டார்! கண்கள் சிவந்தன: மீசை துடித்தது. உறுமிக்கொண்டு,

"எதுவரை இங்கிலீஷ்காரனின் "யூனியன் ஜாக்" என்னும் சாபக்கேட்டின் சாயலான இக்கொடி, இங்கு பறக்கிறதோ, அதுவரை இந்த மேடையின்மீது மார்க்க சம்பந்தமான பிரச்னைகளைப்பற்றி ஹிருதயபூர்வமாக ஒரு வார்த்தை கூறுவது கூட ஹராமாக (மார்க்க விலக்காக) இருக்கும்!"

என்று கர்ஜித்தார்! என்னே, இஸ்லாமிய வீர உணர்ச்சி! என்னே, அஞ்சா நெஞ்சம்! இம்மாதிரி அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களினால்தான் இஸ்லாம் இன்றளவும் வாழ்ந்தோங்கி வளர்ந்து நிற்கிறது.

"யூனியன் ஜாக்" சிதைந் தழிந்தது!

மௌலானாவின் இவ்வாக்ரோஷமிக்க உணர்ச்சிமிக்க வாக்கியங்களைக் கேட்டதும் கூடியிருந்தவர்கள் ஒருவித

மின்சார உணர்ச்சிபெற்று ஆவேசம் கொண்டனர். மகாநாட்டுத் தலைவரான மௌலவி ஏ. கே. பஜ்லுல்ஹக் வீர உணர்ச்சி பெற்றவராக கோபத்துடன் சட்டென எழுந்து வானளாவப்பறந்துகொண்டிருந்த "யூனியன் ஜாக்" கொடியைக் கீழே இறக்கி தாறுமாறாகக் கிழித்தெறிந்தார். கொடி கிழிக்கப்பட்டதும் கூட்டத்தவர்கள் சாந்தி கொண்டனர். மௌலானா அப்துல்பாரியும் புன்னகை பூத்தவாறு மீண்டும் பேசுகையிலே இலாபத், புனித ஸ்தலங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென உணர்ச்சி ததும்பப் பேசினர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

முடிவாகப்பல தீர்மானங்கள் பலத்த வாக்குவாதத்திற்கிடையே நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களிலே முக்கியமானவையாவன:—

"புண்ணிய ஸ்தலங்கள் பெரும் பகுதியை பிரிட்டிஷார் கைப்பற்றியிருப்பதைக் கண்டித்தும், கிலாபத் பிரச்சினை முடிவுசெய்யும் உரிமை முஸ்லிம்களுக்கே உண்டென்றும், லண்டன் சமரஸ மகாநாட்டிலே புண்ணிய ஸ்தலங்கள் பாதுகாப்புபற்றி பேசவேண்டுமென்றும் அலி சகோதரர்களை இதுவரை விடுவிக்காததுபற்றி கண்டித்தும், உடனே விடுவிக்குப்படி வற்புறுத்தியும், அச்சுச் சட்டம் ஆயுதச்சட்டம், இந்திய பாதுகாப்புச் சட்டம் முதலிய அடக்குமுறைச் சட்டங்களை வாபஸ் பெறவேண்டுமென்றும் சமாதான மகாநாட்டிலே இந்தியாவிற்கும் பிரதிநிதித்வம் கொடுத்ததை பாராட்டியும், அதில் முஸ்லிம்களின் பிரதிநிதித்வம் பெற்ற முஸ்லிம் லீகின் சார்பிலும் பிரதிநிதி நியமிக்கவேண்டி வற்புறுத்தியும், கிலாபத் புண்ணிய

ஸ்தலங்கள் பாதுகாப்புபற்றி இங்கிலாந்திற்கு தூதுகோஷ்டி அனுப்புவதுபற்றி ஆவன செய்ய ஹஸரத் மோஹானிக்கு அதிகாரம் கொடுத்தும், இதை அவர் உடனே முயற்சிக்க வற்புறுத்தியும், மாகாணங்களுக்கு சுயவாட்சி தரவேண்டு மென்றும்" இன்னும் பல தீர்மானங்கள் நகல்கள் இந்தியா மந்திரி, வைஸ்ராய், டில்லி சீப் கமிஷனர் ஆகியோர்களுக்கும் அனுப்பப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மான விவாதங்களிலே ஹக்கீம் அஜ்மல்கான், ஹஸரத்மோஹானி, டாக்டர் ஸைபுத்தீன்கிச்லு, அப்துர்ரஹ்மான்சித்தீகி, ஸெய்யித்ஹஸன் இமாம், மௌளவி முஹம்மத் யஅகூப், ஸெய்யித் வஜீர் ஹஸன் போன்றவர்கள் பங்கெடுத்துக்கொண்டனர். புதிய வருடத்திற்கென்று மஹ்மூநாபாத் ராஜா தலைவராகவும் ஜனுப் ஜின்னாஹ் உப தலைவராகவும், ஸெய்யித் வஜீர்ஹஸன் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். லீக் மகாநாடு நடந்த நான்கு நாட்களுக்குப்பின் டில்லியில் காங்கிரஸின் 33-வது மகாநாடு பண்டித மதன்மோஹன மாளவியா தலைமையிலே கூடி, அலி சகோதரர்களை விடுவிக்க வற்புறுத்தியும், லண்டன் சமாதான மகாநாட்டிற்கு லீக் மகாநாட்டுந் தலைவர் மௌலவி ஏ. கே. பஜ்லுல் ஹக்கையும் ஒருவராக அனுப்பு வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இம் மகாநாட்டிலே ஜனுப் ஜின்னாஹ், ஹஸரத் மோஹானி போன்ற பல லீக் தலைவர்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

''ரவ்லட்'' சட்டத்தின் பயங்கரம்!

அதிகார வர்க்கத்தினரால் நியமிக்கப் பட்டிருந்த ரவ்லட் கமிட்டி 1919, ஜனவரி 19-ம் தேதி தனது யாதாஸ்தை வெளியிட்டது. இதை அனுமானித்து இந்திய கவர்ன்மெண்டும் 'ரவ்லட் பில்' என்ற பெயர் கொண்ட

மசோதாவைச் சட்டசபையிலேகொண்டுவரத் தயாராயிருந்தது. இதில் இருந்த கொள்கை யாதெனில் மனிதனின் வாழும் உரிமைகூடப் பாதிக்கப்பட்டதுதான்!

"கிளர்ச்சி நடக்கும் மாகாணங்களிலேமூன்று ஹைகோர்ட் ஜட்ஜகளைக்கொண்ட நீதிமன்றம் நியமிக்கப்படும். இம்மன்றத்தின் முடிவே தீர்மானமானது. முடிவை மாற்றவோ, அப்பீல்செய்துகொள்ளவோ முடியாது. மேலும், இதற்கு சந்தேகமானவர்களைக் கைதுசெய்யவோ, தண்டிக்கவோ விசாரணையின்றிப் பாதுகாவலில் வைக்கவோ, ஜாமீன் கோரவோ, நாடு கடத்தவோ அதிகாரமுண்டு"

இதுதான் மசோதாவின் முக்கிய நோக்கம்! இந்திய மக்கள் அனைவருமே ஒருமுகமாக இதைக் கண்டித்தனர். அப்போது இந்து முஸ்லிம் அன்பிற்குப் பாத்திரமான வரும் தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம் நடத்தி வெற்றிபெற்றவருமான திரு மோஹனதாஸ் கரம் சந்த் காந்தி அவர்கள் மசோதா சட்டமாக்கப்பட்டால் அதை எதிர்த்துச் சத்தியாக்கிரஹம் நடத்தப்படுமென்றும், ஒத்துழையாமை ஆரம்பிக்கப்படுமென்றும் பிப்ரவரி 24ம் தேதி ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

"மார்ஷல் லா" உதயம்!

இத்தனை எதிர்ப்புகளையும் ஆர்ப்பாட்டங்களையும் சிறிதும் சட்டைசெய்யாத அதிகார வர்க்கம் முடிவில் மார்ச்சு 3-வது வாரத்திலே மசோதாவைச் சட்டமாக்கிவிட்டது. கிளர்ச்சியும் குழப்பமும் வலுக்கவே தற்காப்பு வேண்டி மார்ஷல் லா என்னும் ராணுவச் சட்டத்தைப் பிரயோகிக்க மாகாண கவர்னர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது. இதைக்கண்டதும் திரு: காந்தி மார்ச்சு 30 முதல் பெரும்

போராட்டத்தை உண்டுபண்ணி அதை ஏப்ரல் 6-ந் தேதி வரை நடத்தினர். அதன் பயனாகத் தேசமெங்கும் கண்டனக் கூட்டங்களும், ஹர்த்தால்களும் நடைபெற்றன. டில்லி பஞ்சாப் போன்ற இடங்களிலே தடியடிப் பிரயோகமும் நடத்தப்பட்டுப் பல தலைவர்கள் கைதுசெய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர்.

பயங்கரப் புயல்!

ரவுலட் சட்டத்தை ஹிந்து முஸ்லிம் என்ற இரு கூட்டத்தினரும் ஒற்றுமையுடன் பலமாகக் கண்டிக்க ஆரம்பித்தனர். இந்த ஒற்றுமை யுணர்ச்சி பஞ்சாபில்தான் குறிப்பாக "அமிர்த சரஸ்" நகரிலே பாலர் முதல் வயோதிகர் வரை அமிதமாகக் காணப்பட்டது. ஏனெனில் இங்குதான் அடுத்த காங்கிரஸ் லீக் மகாநாடுகள் நடத்த முடிவுசெய்யப்பட்டு அதற்கு ஆனவேலையும் நடந்துகொண்டிருந்தது. இதே சமயத்திலே ஏப்ரல் 5-ந் தேதியன்று ஜில்லா மாஜிஸ்திரேட், டாக்டர் ஸைபுத்தீன் கிச்லு, டாக்டர் சத்யபாலு ஆகியோர்களுக்கு வாய்ப்பூட்டுப்போட்டு 10-ந் தேதி அவர்களிலொருவரையும், மற்றும் பல தலைவர்களையும் கைது செய்துவிட்டார். அடுத்தநாள் முதல் பொதுமக்களால் கொள்ளை, கொலை போன்ற பல பயங்கரமான சம்பவங்கள் நிகழ்த்தப்பட்டன. இக் கிளர்ச்சி நகரைச் சுற்றிலும் பரவியது.

பஞ்சாப் படுகொலையின் கோரம்!

நிலைமை வரவர மோசமாகிக்கொண்டு வரவே மருண்டுவிட்ட பஞ்சாபின் அக்காலக் கவர்னரான ஸர் மைக்கேல் ஓட்வியர் "மார்ஷல் லா" எனும் பயங்கர ராணுவச்சட்டத்தைக்கொண்டு நிலைமையை அடக்குமாறு ஜனரல்

டயர் என்பாருக்கு அதிகாரமளித்தார். இவர் அதிகாரம் பெற்றதும் ஆடிய திருவிளையாடல்கள் அனந்தம். அதன் பயனாகத் திரு காந்தி உட்பட பலர் கைதுசெய்யப்பட்டு பின் விடுவிக்கப்பட்டனர்.

அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைகளைக் கண்டிப்பதற்காக ஏப்ரல் 13-ந் தேதியன்று அமிர்தசரஸிலுள்ள ஜாலியன்வாலா பாக் என்ற இடத்திலே சுமார் 20,000 மக்கள் கொண்ட பெருங் கூட்டமொன்று கூடியது. கூட்டம் ஆரம்பிக்கப்படும் சமயத்திலே டயர் 100 சிப்பாய்கள், 50 ஆங்கில சோல்ஜர்கள் சகிதம் படையெடுத்து வந்தார். உடனே கூட்டத்தைக் கலைத்துவிடுமாறு உத்திரவிட்ட மூன்று நிமிடங்களுக்குள் அதாவது கலைவதற்குப் போதிய அவகாசம் கொடாது மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு உத்திரவிட்டார். உடனே பயங்கரமான வேட்டுச் சப்தங்கள் வானைப் பிளந்தன! அந்தோ! கொடுமை!, பயங்கரம்!! பரிதாபம்!!! சுமார் 500 பேர்களுக்கு மேலாகவே குண்டுகளுக்கு அதே நிமிடத்திலே பலியாயினர். 2000 பேர்களுக்குமேல் பலத்த காயமடைந்தனர்.

ஜனாப் ஜின்னாவின் அரிய தியாகம்!

16-ந் தேதி முடிவதற்குள் இதுமாதிரி எண்ணிலடங்கா நிகழ்ச்சிகள் எழுதுவதற்கும் கைகூசும்விதத்திலே நிகழ்ந்துவிட்டன, இந்தியாவெங்கணும் ஒரே அல்லோல கல்லோலம்! மக்கள் பயங்கரநிலை எய்தினர். "மார்ஷல் லாவை" உடனே அகற்றுமாறு வைஸ்ராய்க்கும், இந்தியா மந்திரிக்கும் எண்ணிலடங்காத் தந்திகள் மக்கள் சார்பிலே பறந்தன விபத்திலே சிக்கிய துன்புற்றவர்களுக்கெனக் காங்கிரஸ் லீக் சார்பிலே இலட்சக்கணக்கான ரூபாய்கள் வசூலிக்கப்பட்டு

உதவப்பட்டன. இதையெல்லாம் நன்குணர்ந்த ஜனுப் ஜின்ஞு, ஸர் சங்கரன் நாயர் முதலியோர் அதிகார வர்க்கத்தின் ஆணவத்தைக்கண்டு வெறுப்படைந்து தத்தமது இராஜாங்கசபை மெம்பர் பதவியை உதறித்தள்ளினர்,

துருக்கியைச் சிதைத்த சமாதான மகாநாடு!

சென்ற லீக் 11-வது மகாநாட்டிலே தீர்மானித்தபடி ஹஸ்ரத் மோஹானி இங்கிலாந்து சென்றதும், அவரைப் பின்தொடர்ந்து லீக் தூதகோஷ்டியும் மௌலாஞு யஅகூப் ஹஸனைக் காரியதரிசியாகக்கொண்டு இங்கிலாந்து புறப்பட்டது. 1919 மே மாதத்தில் நேச தேசத்தினர் ஏற்படுத்திய சமாதான மகாநாடு பாரிஸ் நகரில்கூடியது. பலத்த விவாதங்களுக்குப்பின் அது துருக்கியின் தலைமீது கைவைத்து அதன் ஆட்சிக்குட்பட்ட ஷாம் (ஸிரியா) இராக் பலஸ்தீன், ஸமர்ஞபோன்ற முக்கிய நாடுகளைப் பங்குபோட்டதில் வசீகரமிக்க "ஸமர்ஞ" நகரம் கிரேக்கர்களுக்குக் கிடைத்துவிட்டது. துருக்கியின் அக்காலத் தலைநகரான "கான்ஸ்டாண்டிநோபிள்" எடுப்பார் கைப்பிள்ளையாக எல்லோருக்கும் பொதுவான பிரதேசமாக்கப்பட்டது. பங்குபோட்டதை இந்தியா மந்திரி மாண்டேகு, பிக்கானீர் மஹாராஜா, லீக் தூதகோஷ்டி ஆகியோர் எவ்வளவோ கண்டித்தும்,எதிர்த்தும் பிரயோஜனப்படாதமுடிவில் பங்குபோட்டது ஸ்திரமாயிற்று. நியாய நோக்குடைய எல்லோருமே இதைப் பலமாகக் கண்டித்தனர்.

கிரேக்கரின் கொடுமை

"ஸமர்ஞ" கிரேக்கர்களுக்குக் கிடைத்ததுதான் தாமதம்! குரங்கு கையில் அகப்பட்ட பூமாலைபோன்று அதிலிருந்த துருக்கியர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். அக்

கொடுமை வரம்புமீறி, மனிதத்தன்மைக்கு அப்பாற் பட்டிருந்தது. உலக முஸ்லிம்களின், சிறப்பாக இந்திய முஸ்லிம்களின் உள்ளம் நடந்த நடவடிக்கைகளைக்கண்டு ஹற்றுக் கொதிப்பும் ஆத்திரமும் கொண்டது. பிரிட்டனும் இதர நேச தேசத்தினரும் முஸ்லிம்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன. துருக்கியின் உதுமானிய ஏகாதிபத்தியம் சீர்குலைக்கப் பெற்று சின்னாபின்னப்படுத்தப்பட்டது. புனித பூமிகள் நாடுகள், கிலாபத் கிளர்ச்சி எல்லாம் நசுக்கப்பட்டன. இம் மாதிரி அடுத்தடுத்து முஸ்லிம் உலகிற்கு இழைத்த தீங்கு மகாகோரமானது.

இலட்சக்கணக்கான கண்டனக் கூட்டங்கள்

பாரிஸில் நடைபெற்ற "சமாதான மகாநாடென்னும்" சித்திரவதை மகாநாட்டையும், அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும்பற்றி முஸ்லிம்லீகும், மற்றக்கட்சிகளுமாகச்சேர்ந்து மூலைமுடுக்குகளிலெல்லாம் இலட்சக்கணக்கான கண்டனக் கூட்டங்கள்போட்டுச் செய்த தீர்மானங்கள், இந்திய வைஸ்ராய், இந்தியா மந்திரி, இதர அதிகார வர்க்கத்தினர் ஆகியஎல்லோருக்குமே அனுப்பிவைக்கப்பட்டன. ஜுலை 5-ந் தேதி லீக் தலைவர்கள் பம்பாயில் கூடி "கிலாபத் கமிட்டி" நிறுவி அதன்மூலம், கிலாபத், முதலிய புனித ஸ்தலங்கள் பாதுகாக்கத் தீவிரமாக உழைக்கலுற்பட்டனர்.

முஸ்லிம்லீகின் விசேஷ மகாநாடு

லீக் கௌன்ஸிலின் வேண்டுகோளின்படி இலட்சுமண புரியிலே 1919 செப்டம்பர் 21-ந் தேதியன்று அகில இந்திய முஸ்லிம் லீகின் விசேஷ மகாநாடு கூட்டப்பட்டது. அதில் நடந்த விபவகாரங்களைப்பற்றி விவாதிக்கப்பட்டபின்

நேச தேசங்களின் துரோகச்செயல்களைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றி அதைப் பிரதம மந்திரிக்குத் தந்தி மூலம் அறிவித்தது. சுருங்கக் கூறுமிடத்துக் கிலாபத் பீடம் வீழ்த்தப்பட்டதும், பஞ்சாப் படுகொலை செய்யப்பட்டதுமான சம்பவங்களெல்லாம் ஹிந்து முஸ்லிம்களுக்கு தங்களிடையே ஐக்கியம்ஏற்படுத்திஒருவருக்கொருவர் ஒரே தாய் வயிற்றுக் குழந்தைகளாய் மாறச்செய்ததோடல்லாமல் அதிகாரவர்க்கத்தின் கொடுங்கோலாட்சியை ஏக முகமாக எதிர்க்கவும் செய்தன அச்சமயம், காங்கிரசை லீகும், லீகை, காங்கிரசும்(ஒன்றையொன்று) தழுவிகின்றன.

படுகோலை விசாரணை.

பஞ்சாப் 'ஜாலியன் வாலா பாக்'கில் ஜெனரல் டயர் செய்த படுகொலையைப்பற்றியும், இராணுவச்சட்டம் கையாண்டதைப்பற்றியும், அதையொட்டி மௌலானா ஜபர் அலிகான், டாக்டர் ஸைபுத்தீன் கிச்லு ஆகியோர் உட்பட அநேகர் கைதுசெய்யப் பட்டதையும் விசாரணை செய்ய வேண்டுமெனக் காங்கிரஸ்-லீக், கிலாபத் கமிட்டி ஆகியவைகள் வற்புறுத்தியதின்பேரில், அதிகாரவர்க்கம், தனது தாசர்களைக்கொண்டு ஒரு சிறு கமிட்டியை நியமித்து, விசாரணை 1919-நவம்பர் முதல் ஆரம்பமாகுமென்று அறிக்கை வெளியிட்டது.

பொம்மலாட்டம் வேண்டாம்!

வெறும் மண் பொம்மைகளான சர்க்கார் தாசர்கள் கொண்ட இக்கமிட்டியால் பிரயோஜனமில்லையென்றும், நேர்மையான நியாயம் பிறக்காதென்றும், சாட்சியங் கூறுவதற்குக்கூட சிறையிலுள்ள தலைவர்களை அஜர்படுத்தமாட்டார்களென்றும், கமிட்டி என்பது அதிகாரவர்க்கத்தின் ஏமாற்

முதலான வெறும் பொம்மலாட்டமென்றும் அபிப்பிராயப் பட்ட காங்கிரஸ் லீக் தலைவர்கள் ஒன்று கூடி, சர்க்கார் தாசர்களற்ற அ. இ. மு. லீக்மகாநாட்டுத் தலைவர் மௌலவி பஜ்லுல் ஹக், காந்திஜீ, ஸி. ஆர். தாஸ், ஜனாப் அப்பாஸ் தயாப்ஜீ, திரு கே. சந்தானம், திரு ஜெயக்கர் ஆகியோர்கள் கொண்ட விசாரணைக்கமிட்டியை நியமித்தனர். இக்கமிட்டி செய்த விசாரணையை அதிகாரவர்க்கம் ஒப்புக்கொள்ளாவிடினும், அதைத் தனி ரிப்போர்ட்டாகத் தயாரித்தனர்.

புதிய அரசியல் சட்டம்!

டிசம்பர் 23-ந் தேதியன்று ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி கையெழுத்திட்ட புதிய அரசியல் சட்டமான மாண்டேகு சேம்ஸ்போர்டு சீர்திருத்தம் அமுலுக்கு வரப்போவதாக அறிக்கை வெளியாயிற்று. இதில் லீக்-காங்கிரஸ் கோரிக்கைகள் சில ஒப்புக்கொள்ளப்பட்டனவாயினும் திருந்தாலும் திருப்திபடும் நிலையில் இல்லாதிருந்தது.

18 முஸ்லிம்லீகின் 12-வது மகாநாடு (1919)

சமீப காலத்தைய சம்பவங்களால் அ. இ. மு. லீகின் 12-வது மகாநாடு 1919 டிஸம்பர் 30-ந் தேதியன்று அமிருதசரஸில் கூடியதாலும் அதற்கு ஹக்கீம் அஜ்மல் கான் தலைமைதாங்கியதாலும், பிரபல காங்கிரஸ் தலைவரான பண்டிட் மோத்திலால் நேரு இதற்கு விஜயஞ் செய்ததாலும் ஒரே பரபரப்பும் புதுமையும் உண்டுபண்ணியிருந்தது. ஸ்டேஷனிலிருந்து பந்தல்வரை தலைவர்களின் பொதுமக்களின் ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாய் விளங்கியது. லீக் மகாநாடுகளிலே இதுவே இதுவரையில் கூடினவைகளைவிட சிறப்புற்று பல விஷயங்களிலும் மேன்மைபெற்றிருந்தது.

வரவேற்புக் கழக உபதலைவரான மௌலவி ஸனாவுல்லாஹ் சாஹிப் தமது வரவேற்புரையை கூறி முடித்ததும் தலைவர் தமது தலைமையுரையை நீண்ட கரகோஷத்தினிடையே ஆரம்பித்து வைத்து, கிலாபத், புண்ணிய ஸ்தலங்கள், ஜாலியன்வாலா பாக் படுகொலை, பசுகுர்பானி, முதலியவைகளைப்பற்றி விளக்கிவிட்டு கிலாபத் கிளர்ச்சியில் முஸ்லிம்களுடன் ஹிந்துக்களும் குறிப்பாக திரு காந்திஜீயும் கலந்துழைத்துவருவதைப் பாராட்டினார்.

அலி சகோதரர்கள் விஜயம்

அதே சமயத்திலே ஜிந்தாபாத் கோஷங்களுடனே ஒப்பற்ற தியாகிகளான அலி சகோதரர்கள் மகாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்தனர். அவர்களைக்கண்ட உடனேயே சபையினரின் முகங்களிலே சொல்லொண்ணா மகிழ்ச்சியும் குதூகலஉணர்ச்சியும் உள்ளப் பூரிப்பும் கூத்தடின. மகாநாட்டு மேடையிலே அலி சகோதரர்கள் இருவரும் உள்ளமுருகும் விதத்திலே சொன்மாரி பொழிந்து மகாநாட்டையும் மக்களையும் கண்ணியப்படுத்தினர்.

பின் பல தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஸிந்து மாகாணத்திலே "கிலாபத்" விஷயத்தில் அதிகாரவர்க்கம் காட்டிய மனோபாவத்தைக் கண்டித்தும், பம்பாய் கவர்னர் "கிலாபத்தி"ற்கென்று காட்டிய அனுதாபத்தைப் பாராட்டியும், சர்க்கார் பதவிகள், சர்வகலாசாலைகளில் முஸ்லிம்களுக்குப் போதிய அளவு பங்கு வேண்டுமென்றும் உருது வளர்ச்சிக்காகவும் 1919-ம் வருடத்திய இந்திய அரசியல் சட்டத்தைப்பற்றி ஆராய்வதற்காகவும் காங்கிரஸ் - லீக் கூட்டுக்கமிட்டி அமைக்கப்பட்ட

வேண்டுமென்றும் "கிலாபத்" கிளர்ச்சியில் ஹிந்துக்கள் ஒத்துழைத்து வருவதைப்பாராட்டும் அறிகுறியாக பசு தவிர இதரபிராணிகளையே முஸ்லிம்கள் அறுக்கவேண்டுமென்றும், இராஜகுமாரரின் இந்தியா விஜயத்தைப் பாராட்டியும் ஜெனரல் டயர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வேண்டியும் வைஸ்ராயைத் திரும்பி அழைத்துக் கொள்ளுமாறு பிரிட்டனை வேண்டியும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பிறகு தலைவரால் கொண்டுவரப்பட்ட "நாட்டுத்துணிகளையே ஆதரிக்கவேண்டுமென்ற" தீர்மானமும் இராணுவச்சட்டம், பாதுகாப்புச் சட்டம் ஆகியவைகளால் கைது செய்யப்பட்ட தலைவர்களை விடுவிக்கும்படி கோரியும், இந்தியா மந்திரி மாண்டேகுவைப் பாராட்டியும் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

"ஜமீஅத்துல் உலமா" உதயம்!

ஏறக்குறைய மேற்காணும் தீர்மானங்கள்படியே காங்கிரஸ் மகாநாட்டிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது பாராட்டத்தக்கது! இதே சமயத்திலே "ஜமீஅத்துல் உலமா என்ற நாமங்கொண்டதொரு சபையும் சுன்னத் வல்ஜமா அத் மார்க்கத்தலைவர்களால் நிறுவப்பட்டது. தலைவராக மௌலானா முப்திகிபாயதுல்லாவும் காரியதரிசியாக மௌலானா அஹ்மத் ஸைய்யிதும் நியமிக்கப்பட்டனர்.

வைஸ்ராய் கைவிரித்தார்!

பிரிட்டன் முஸ்லிம்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில்பறக்கவிட்டதையும் துருக்கிக்கு இழைத்த அநீதிபற்றியும் விளக்கிக்கூறி பிரச்சாரம்புரிய இங்கிலாந்து

பிரான்ஸ், ரோம் ஆகிய இடங்களுக்குச்செல்ல வேண்டு மென முஸ்லிம் தலைவர்கள் எண்ணினர். இதையொட்டி "கிலாபத்" கமிட்டித் தலைவர்களான அலி சகோதரர்கள் 1920 ஜனவரி மத்தியில் ஒரு அறிக்கை வெளியிட்டனர். ஜனாப் முஹம்மத்அலி ஜின்னாஹ், மௌலானா முஹம்மத் அலி ஹக்கீம் அஜ்மல்கான், காந்திஜீ, மோதிலால் நேஹ்ரு, டாக்டர் அன்சாரி, அபுல்கலாம் ஆஸாத், டாக்டர் கிச்லு முதலியோர் கொண்ட தூதுகோஷ்டியொன்று இதற்காக வென்று வைஸ்ராயைப் பேட்டிகண்டு விளக்கமான யாதாஸ்து ஒன்றை சமர்ப்பித்தது. அதற்குப் பதிலளித்த வைஸ்ராய்,

"தாங்கள் கூறிய யாவையையும் நான் பிரிட்டனுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும் தீர்ப்புக்கட்டும் விஷயம் பிரிட்டன்மீதுமட்டுமில்லை" என்று கூறி கையை விரித்துவிட்டார். இதனால் தூதுகோஷ்டியினர் பெரிதும் அதிருப்திகொண்டனர்.

அதிகார வர்க்கத்திற்கு எச்சரிக்கை

வைஸ்ராய் கைவிரித்ததைபற்றி யோசிக்க பிப்ரவரியில் பம்பாயிலே கிலாபத் 3-வது மகாநாடு கூடி "சமாதான நிபந்தனைகளிலே முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்படுமோயின் முஸ்லிம்கள் தங்களின் இராஜ விஸ்வாஸத்தை தகர்த்தெறியவேண்டிய காலம் வந்துவிடும்" என்ற எச்சரிக்கையான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு "கிலாபத் தூது கோஷ்டி" மீது முழு நம்பிக்கையும் தெரிவிக்கப்பட்டது. "கிலாபத்" கிளர்ச்சியில் மக்கள் பெரிதும் கவனம் செலுத்தி வரலாயினர். அக் கமிட்டியின் மூலம் என்ன உத்திரவு பிறக்கிறதென ஆவலுடன் எதிர்நோக்கி நின்றனர்.

பிரிட்டன்மீது வெறுப்பு

வரவர தேசமக்களுக்கு பிரிட்டன்மீதும் 1917-ம் வருடத்திய இந்திய அரசியல் சட்டத்தின்மீதும் அளவற்ற வெறுப்பு ஏற்படலாயிற்று. "கிலாபத்" கிளர்ச்சி வலுக்க வலுக்க லீகின் செல்வாக்கு ஒடுங்கலாயிற்று. காரணம், "புதிய அரசியல் சட்டத்தை இலேசாக ஆதரிக்கலாம்" என சென்ற 12-வது மகாநாட்டிலே லீக் செய்த தீர்மானமே! தீவிரவாதிகள் சிலருக்கு இது பிடிக்கவில்லை! இதே சமயத்திலே லீக் காரியதரிசியான ஜனாப் ஸையீத் ஜாஹூர் அஹ்மத் எழுதிய "நமது நடைமுறை" என்ற புத்தகம் வெளியிடப்பட்டு ஒவ்வொரு லீக் அங்கத்தினர் பார்வைக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. இதற்கிடையே பிப்ரவரி 29-ல் லீக் கௌன்ஸில் கூட்டம்கூடி,

'கிலாபத் பிரச்சினை விஷயத்திலே தூது கோஷ்டியின் கோரிக்கைகளை பிரிட்டன் அங்கீகரிக்க மறுத்தால் அதிகாரவர்க்கத்தின் மீது இந்திய முஸ்லிம்களுக்குத் தாங்க முடியாத வெறுப்பேற்பட்டு அதனால் பல கொடிய விளைவுகள் ஏற்படுமென்று பிரிட்டனுக்கு எச்சரிக்கின்றோம்" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

தேசமெங்கும் ஹர்த்தால்

1920 மார்ச் மாதம் மௌலானா முஹம்மத் அலி தலைமையில் "கிலாபத்" தூதுகோஷ்டி இங்கிலாந்து சென்றது. இந்தியா மந்திரி வரவேற்றார்; தூதுகோஷ்டியினர் பிரதம மந்திரியுட்பட பல பிரமுகர்களைக்கண்டு பேசினர். தமது வாதாஸ்த்தையும் சமர்ப்பித்தனர். மார்ச் 17-ந் தேதி பிரதம மந்திரி பதிலளிக்கையில்,

"துருக்கியர்கள் நிறைந்த பாகங்கள்மட்டுமே துருக்கி வசம் ஒப்புவிக்கப்படும்; மற்றவை ஒப்புவிக்கப்பட மாட்டாது"!

என்று முடிவுகூறிவிட்டார். இதைக் கண்டித்து மௌலானா ஷௌகத்அலி விருப்பப்படி மார்ச் 19-ந் தேதி நாடெங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு கண்டனங்கள் தெரிவிக்கப் பட்டன இதைக்கண்டு அதிகாரவர்க்கம்கூடச் சிறிது ஆட்டங்கானத்தான் செய்தது,

பஞ்சாப் படுகோலே வாரம்!

பஜ்வுல்ஷக் காந்திஜீ போன்றவர்கள் தயாரித்த பஞ் சாப் படுகொலே விசாரணையின் அறிக்கை இதே சமயத்தில் இந்தியாவில் வெளியாயிற்று. இதையொட்டி ஏப்ரல் மாதத்தில் "பஞ்சாப் படுகொலே வாரம்" நாடெங்கும் கொண்டாடப்பட்டது. மே 14-ல் துருக்கிக்கு விதிக்கப் பட்ட நேசதேச நிபந்தனைகளைக் கண்டித்து மே 28-ந் தேதியிலே பம்பாயில் நடந்த 'கிலாபத்'' கமிட்டிக் கூட் டத்தில்,

"இந்த நிபந்தனைகள், இந்தியர்களைப் பிரிட்டனுடன் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தும்படி தூண்டுவதுபோலிருக்கிறது"

என்று தீர்மானிக்கப்பட்டது. ஏனெனின் கடந்த 1920 ஏப்ரல் 18-ந் தேதியில் மௌலானா ஷௌகத்அலி தலைமை யில் சென்னையில் "கிலாபத்" மகாநாடுகூடி ஒத்துழையாமை ஆரம்பிப்பதற்கு முடிவுசெய்யப்பட்டு, அதற்குரிய திட்டங் களும் வெளியிடப்பட்டிருந்ததும், அதையே காங்கிரஸ் கமிட்டி மே 30-ந் தேதி கூடி ஆதரித்ததும் குறிப்பிடத் தக்கது.

சர்வகட்சிக் கூட்டம்

இலாஹாபாத்தில் 1920 ஜூன் 2-ந் தேதி ஹிந்து முஸ்லிம் தலைவர்களடங்கிய சர்வ கட்சிக்கூட்டம்கூடி "ஹிண்டர் கமிட்டி பஞ்சாப் படுகொலை சம்பந்தமாக வெளியிட்ட பொய்பான அறிக்கையைக் கண்டித்தும் நேச தேசங்களின் ஒர வஞ்சனை நியாயத்தைப் பகிஷ்கரித்தும் எனவே இச்சமயத்திலே தேசம் உய்யவழி ஒத்துழையாமை ஒன்றே என்றும் இது சம்பந்தமாக ஒரு முடிவிற்கு வர கல்கத்தாவிலே லீக் காங்கிரஸ் விசேஷ மகாநாடு கூட்டவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

லீக் கௌன்ஸில் கூட்டம்

ஜூலை 18-ந் தேதி லீக் கௌன்ஸில் கூட்டம் கூடி "முஸ்லிம்களின் கோரிக்கைகளை ஏறக பிரிட்டன் மறுத்தால் முஸ்லிம்கள் தங்களின் போக்கையே அடியோடு மாற்றிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டுவிடுவார்கள்" என்று தீர்மானித்தது.

"கிலாபத்" போராட்டம்!

"கிலாபத்" கமிட்டி அறிவித்திருந்தபடி முஸ்லிம்கள் தீவிரபோராட்டத்திலிறங்கி சட்டசபைகள் கவர்ன்மெண்ட் ஆதரவுபெற்ற கலாசாலைகள் பள்ளிக்கூடங்கள், நீதிமன்றங்கள் சர்க்காரைச்சார்ந்த விருந்துகள், கூட்டங்கள், போன்றவைகளை யெல்லாம் முழு மூச்சுடன் பகிஷ்கரிக்க ஆரம்பித்தனர். இதற்குள், இங்கிலாந்து சென்ற தூது கோஷ்டியும் இந்தியா திரும்பியது. அலிசகோதரர்கள் காந்திஜீயுடன் நாடு பூராவும் சுற்றுப்பிரயாணம்செய்து ஒத்துழையாமை இயக்கத்தைத் தீவிரமாகப் பரப்பினர். திலகர், மாளவியா,

லஜபதிராய் போன்ற இந்த தலைவர்கள் இதற்கு எதிரிடையாக வேலைசெய்ய வாரம்பித்தனர். எனவே மௌலானா அபுல்கலாம் ஆஸாதின் யோசனைக்கிணங்க எல்லைப்புரம் லிந்தைச்சார்ந்த முஸ்லிம்கள் ஆப்கானிஸ்தான் போன்ற இஸ்லாமிய நாடுகளுக்குப் பிரயாணம் (ஹிஜ்ரத்) செய்ய வாரம்பித்தனர். இதனால் தேசத்திலே பலத்த கிளர்ச்சி எழுந்தது!

காங்கிரஸ் விசேஷ மகாநாடு

லாலா லஜபதிராய் தலைமையில் கல்கத்தாவிலே காங்கிரஸ் விசேஷ மகாநாடு நடைபெற்றது. காந்திஜீ, பஞ்சாப் படுகொலை நியாய விசாரணைக்கும் "கிலாபத்" கிளர்ச்சிக்கும் இந்தியர் கோரிக்கைக்கும் அதிகாரவர்க்கம் இணங்காததால் சென்னை "கிலாபத்' மகாநாட்டிலே செய்த ஒத்துழையாமை தீர்மானத்தைச் சில திருத்தங்களுடன் சபையிலே பிரேரித்தார். ஸி. ஆர். தாஸ் போன்ற அநேகர் அதை எதிர்த்தும் பிரேரணை நிறைவேறிற்று. காந்திஜீயின் பிரேரணையை எதிர்த்தும் எதிர்த்து திருத்தம்கொண்டு வந்தவர்களை ஆதரித்துப்பேசும்போது ஜனுப் ஜின்னாஹ்,

அம்ருதசரஸுக்குப்பிறகு நாட்டில் நடைபெற்ற சம்பவங்களைக்கொண்டு என் மனம் அடியோடுமாறிவிட்டது. பூரணசுயவாட்சிக் கோரிக்கை உடனே வேண்டுமெனும் கொள்கையை நான் ஆதரிக்கிறேன். மிஸ்டர் காந்தி உண்மையிலே எதிர்காலத்தைப்பற்றி அறிவுடையவர் என நினைக்கிறேன் எனினும் அவர் திட்டம் பிசகானது அவருடைய ஒத்துழையாத கருமத்தின் இலட்சியத்தைமட்டும் நான் முழுமையுடன் ஒப்புக்கொள்கிறேன். சட்டசபை பகிஷ்காரம் ஒரு பயனற்ற முயற்சியாகும்" என்று குறிப்பிட்டார்.

காந்திஜீ திட்டத்தில் குறை

காந்திஜீ கொண்டுவந்த திட்டங்களில் பட்டதாரிகள் தமது பட்டங்களையும் கௌரவ உத்தியோகங்களையும் விட்டுவிடவேண்டும். கவர்ன்மெண்ட்டைச் சார்ந்த தர்பார்களுக்கும், பட்டஞ்சூட்டும் வைபவங்களுக்கும், விருந்துகளுக்கும் செல்வதை நிறுத்த வேண்டும். சர்க்கார் பள்ளிக்கூடங்களையும் உதவிபெற்று நடைபெறும் கல்விச்சாலைகளையும் பகிஷ்கரிக்கவேண்டும். தேசீயப் பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டும். வக்கீல் தொழில், பட்டாளத்தில் கலக்கக் கூடாது. சட்டசபைகள், அன்னியச்சாமான்கள் பகிஷ்கரிக்கப்படவேண்டும்'' இன்னும் இதுபோன்ற சிலவைகளையே சிலர் பலமாக எதிர்த்தும் தீர்மானம் நிறைவேறி விட்டது.

லீக் விசேஷ மகாநாடு

செப்டம்பர் 7, 8-ந் தேதிகளில் ஹக்கீம் அஜ்மல்கான் தலைமையில் லீகின் விசேஷ மகாநாடு, கல்கத்தாவிலேயே கூடியது. ஒத்துழையாமை தீர்மானம பலமாக ஆதரிக்கப் பட்டதுடன் வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன. லீக், காந்திஜீ நிபந்தனைகளுடன் வேறு சில நிபந்தனைகளையும் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்த்தது. அத்துடனில்லை, லீக் கட்டளைக்கிணங்கி முஸ்லிம்கள் எல்லோரும் ஒத்துழையாமையை ஆரம்பித்துவிட்டனர். ஆனால் காங்கிரஸின் கட்டளைக்காக காத்திருக்கவில்லை. மாறாக வங்காளம், மஹாராஷ்டிரம் முதலிய இடங்களிலே பலத்த எதிர்ப்புகள் தென்பட்டன. ஹிந்துக்கள் அனைவரும் அடுத்துவரும் நாகபுரி காங்கிரஸ் மகாநாட்டையே எதிர்நோக்கி யிருந்தனர். அலிகர் சர்வகலாசாலையை அதிகார

வர்க்கத்தின் பிடியினின்று விடுவிக்கவேண்டுமென, அலி சகோதரர்கள் டாக்டர் அன்ஸாரி முதலியோர் எவ்வளவோ முயற்சித்தும் முடியவில்லை.

"ஜாமியா மில்லியா இஸ்லாமியா" தோற்றம்!

முயற்சியில் பலன் காணாத அலி சகோதரர்களும் அன்ஸாரியும் அதனால் சோர்ந்துவிடவில்லை. மேற்காணும் திருநாமங்கொண்டதொரு கல்விச்சபையை நிருவி அதைச் சக்திபெறச் செய்தனர்! ஏராளமான அலிகர் கலாசாலை மாணவர்கள் இதில் வந்து படிக்க ஆரம்பித்தனர். அதனால், எண்ணற்றவர் உத்தியோகப் பதவி துறக்கவேண்டியதாயிற்று; ஏராளமானபணம் செலவழிந்தது! அதே சமயத்திலே துருக்கியையும் மறந்துவிடாது. அதற்கும் ஏராளமான பொருளுதவிசெய்துவந்தனர். ஆயிரக்கணக்காகவும், இலட்சக் கணக்காகவும் அத்தொகை சென்றுகொண்டிருந்தது.

சந்தோஷத்தோடு சிறைவாசம்

முஸ்லிம்கள் ஒத்துழையாமையை ஆரம்பித்துச்செய்த தியாகங்கள் அனந்தம்! சிறைசெல்வதை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வதோடல்லாது அதைப் பெருமையாகவும் கருதினர். பல முஸ்லிம்கள், பட்டங்கள், பதவிகள், கௌரவ உத்தியோகங்கள், வக்கீல் தொழில், கலாசாலைகள் எல்லாம் பகிஷ்கரித்துவிட்டு தேசிய கலாசாலைகள் அமைப்பதிலே முனைந்தனர். அலி சகோதரர்களின் திருநாமம், இந்திய முஸ்லிம் ஒவ்வொரு ஆண். பெண், இளைஞர், முதியோர் எல்லோர் ஹிருதயத்திலுமே மனனமாகிக்கொண்டிருந்தது, இவ்வளவு நடந்தும், ஹிந்துத்தலைவர்கள் இதுவரை இதைப்பற்றி வாய்மூடி மௌனிகளாயிருந்துவந்தனர்

என்பது இங்கு குறிப்பிடத்தக்கது!

காங்கிரஸ் 35-வது மகாநாடு

சேலம்விஜயராகவாச்சாரியார் தலைமையில் காங்கிரஸின் 35-வது மகாநாடு 1920-டிஸம்பரில் நாகபுரியிலே கூடியது. இவரும் ஒத்துழையாமை இயக்கத்திற்கு விரோதியே! முன்போலவே, மாளவியா, ஸி ஆர். தாஸ் வங்க, அஸ்ஸாம் பிரதிநிதிகள் மனம் மாறுதிருந்தனர். இம்மகாநாட்டிற்கு இங்கிலாந்து தொழிற்கட்சி பிரதிநிதியான கர்னல் வேட்ஜ்வட்பென் கூட வந்திருந்தார், அச்சமயத்திலே ஜனுப்ஜின்னுஹ்வும் ஒத்துழையாமையில் நம்பிக்கையற்று காணப்பட்டார். இருந்தும், மௌலானுமுஹம்மத் அலி தலைமையிலே ஏராளமான முஸ்லிம்களும், காங்கிரஸ்காரர்களும் பூரண ஆதரவளித்து ஒத்துழையாமைக்கு ஒத்தாசை செய்துவந்தனர். இறுதியாக ஸி.ஆர்.தாஸ் மௌலானுவின் அபிப்பிராயத்தை ஏற்ருர். ஒத்துழையாமை வேண்டுமென்ற தீர்மானத்தை மௌலானு மகாநாட்டிலே பிரேரித்து பலத்த விவாதங்களுக்குப்பின் அதை நிறைவேற்றியும் வைத்தார்.

ஜனுப் ஜின்னுஹ்வின் எதிர்ப்பு

ஹஸரத் மோஹானி காந்திஜீயால் தயாரிக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஒருதிருத்தம் கொண்டுவந்தாரெனினும் அது தோற்கடிக்கப்பட்டது. ஜனுப் ஜின்னுஹ் அதை எதிர்க்கும்போது குறிப்பிட்டதாவது:—

"இந்தியா இன்னும் இப்போராட்டத்திற்குத் தயாராகவில்லை! இதுதான் எனது எதிர்ப்பின் நோக்கம். மிக முக்கியமான பிரச்னையாகிய 'ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைப் பிரச்னை' இன்னும் நம்முன் முடிவடையாதிருக்கின்றது.

மகாநாட்டிலே காந்திஜீ, தீர்மானத்தை எதிர்ப்பதை ஆக்ஷேபித்துக்கொண்டுவந்ததீர்மானத்திலே' 'இந்தியதேசிய மகாசபையின் நோக்கம் நீதியும் அமைதியும் பொருந்திய எல்லா வழிகளாலும் சுயராஜ்யம் அடைவதாகும்'' என்று குறிப்பிட்டார். இதைப்பற்றி ஜனுப் ஜின்ஞ மேலும் கூறியதாவது.

''அதிகார வர்க்கத்தின்மீது லாலாஜீ சாட்டிய குற்றங்களை நான் ஒப்புக்கொள்கிறேன். அதிகாரவர்க்கத்தினர் அடுக்கடுக்காகப் பல குற்றங்கள்செய்து நமது உதிரம் கொதிக்கும்படியும் செய்திருக்கிறார்களென்பதை நான் மறுக்கவில்லை. ஆனல் சாத்வீக வழிகளிலே சமாதானம் கொண்டு இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்கப்படுமென மிஸ்டர் காந்திநம்புகிறார்.

[காந்திஜீயை ஜனுப் ஜின்ஞ ''மிஸ்டர் காந்தி'' எனக் குறிப்பிட்டதும் கூட்டத்திலே பரபரப்பேற்பட்டது. சிலர் ''மகாத்மா காந்தி'' என்று குறிப்பிடுமாறு வாதித்தனர். பலத்தவிவாதம் நிகழ்ந்தும் ஜனுப் ஜின்ஞ அதை ஏற்றுக் கொள்ளாதுமேலும் தொடர்ந்து பேசினர்].

......இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் கிடைக்குமென நீங்கள்(காந்திஜீ)நம்புவதுபெருத்த பிழைசெய்ததுபோலாகும்! இப்போது நீங்கள்செய்த தீர்மானம் சமயோசிதமான தன்று என நினைக்கிறேன். இத்தீர்மானத்தை நீங்கள் நிறைவேற்றிவிட்டால் பிரிட்டிஷார் சம்பந்தத்தை நீக்க வேண்டாமென்று நினைக்கிறவர்களுக்கு இங்கே இடமுண்டா? எங்களுடைய குறைகளை நிவர்த்திக்காவிட்டால் உங்களுடைய சம்பந்தத்தை அறுத்துக்கொண்டுவிடுவோம்'' என்று பிரிட்டிஷாருக்கு ஒரு நோட்டீஸ் கொடுங்கள்.

நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும் பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்தை இவ்விதவழிகளால் அழித்துவிடமுடியாது. அதற்குப்பதிலாக ஆத்திரமும் படபடப்பும்தான் மிஞ்சும்''.

ஜனப் ஜின்னாவின் பிரசங்கம் முடிந்ததும், ஒத்துழையாமைத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மகாநாடும் பூர்த்தியாயிற்று. இம்மகா நாட்டோடு ஜனப் ஜின்னா ஒரே அடியாக காங்கிரஸிலிருந்து விலகிக்கொண்டார்.

19. முஸ்லிம்லீகின் 13-வது மகாநாடு (1920)

காங்கிரஸ் மகாநாடு நடந்த அதே நாகபுரியிலே அதே பந்தலுக்கருகிலே அ. இ. மு. லீகின் 13-வது மகாநாடு டாக்டர் முக்தார் அஹமத் அன்ஸாரி அவர்களின் தலைமையில்கூடியது.

மகாநாட்டில் பல விஷயங்கள்பற்றி பலத்த விவாதங்கள் பலரால் நிகழ்த்தப்பட்டன. ஒத்துழையாமைத்தீர்மானம் பல திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டு புதிய வருடத்திற்கு தலைவராக ஜனப் ஜின்னா தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டசபை பகிஷ்கார விஷயத்திலே, லீக் மெம்பர்கள் ஒத்துழையாமையை ஆதரிக்காததால் புதிய சட்டப்படி சட்டசபை மெம்பர்களாக பல லீகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் பலதீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டபின் மகாநாடு வெற்றியோடு முடிந்தது.

''திலகர் நிதி''

நாகப்பூர் மகாநாடுகள் முடிவுற்றபின் கிளர்ச்சி தேசத்திலே வலுப்பட்டது. அலி சகோதரர்கள் மூலைமுடுக்குகளிலெல்லாம்சென்று பிரசாரம் செய்துசுதந்திரகிளர்ச்சியை கிளறிவிட்டனர். இதே சமயம் காந்திஜீ ''திலகர்நிதி'' என்ற

பெயருடன் ஒரு நிதி திரட்டவாரம்பித்து ஏராளமான பணம் சேர்த்தார். முஸ்லிம் தலைவர்கள் செல்லுமிடமெல்லாம் காந்திஜியும் இறண்டறக்கலந்துக்கொள்வார். இதைக் கண்டு பொருமைத் தீ கொழுந்துவிட்டெரிந்த ஹிந்து மகா சபையும் மாளவியா போன்ற ஹிந்துத் தலைவர்களும் காந்திஜியை இதினின்று பிரித்துவிட முஸ்லிம் தலைவர்கள்மீது அவதூறுகள் பல சுமத்தி சூழ்ச்சிகள்செய்து காந்திஜியைக் கலக்கவிடாதபடித் தடுத்தனர்.

"ஸமர்ணு" பிடிபட்டது.

நிலைமை இங்கு இவ்விதமிருக்கையிலே மேல்நாட்டில் துருக்கிய முஸ்லிம்கள், காஜி அத்தாதுர்க்' கமால் பாட்சாவின் தலைமையில் வீறுகொண்டெழுந்து போராடி கிரேக்கர்களைபுறமுதுகிட்டோடச்செய்து கைவிடப்பட்ட "ஸமர்ணு" எனும் வனப்புமிக்க நகரை மீட்டினர் முஸ்லிம் உலகிற்கே இது பெரும் வெற்றியையும் கண்ணியத்தையும் மன ஆறுதலையும் அளித்தது.

கிலாபத் மகாநாடு; அதிகாரவர்க்கத்தின்கிலி

ஜுலை 8-ந் தேதி கராச்சியிலே மௌலானு மூஹம்மத் அலியின் தலைமையில் "கிலாபத்மகாநாடு" கூடிற்று. அதில் "முஸ்லிம்கள் பட்டாளத்தில் சேரவோ உதவிசெய்யவோ கூடாது" என்று முடிவுசெய்யப்பட்டது. இதை ஆதரித்து அலீ சகோதரர்கள் உட்பட பல முஸ்லிம் தலைவர்கள் விரவுரைகள் நிகழ்த்தினர். அதே மாதம் 21-ந்தேதி கராச்சி ஈத்காஹ் மைதானத்திலே மௌலானு முஹம்மத் அலி மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை ஆதரித்து நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினுர். இதையெல்லாம் கண்ணுற்றுவந்த அதிகாரவர்க்கம் உண்மையிலேயே அலி

சகோதரர்கள்மீது கிலிகொண்டு அவர்கள் நடபடிக்கையின் மீதேகோட்டமிட்டுக்கொண்டுவந்தது. அலி சகோதரர்கள், மௌலானா ஹுஸைன் அஹ்மத், டாக்டர் கிச்லு, நிஜார் அஹ்மத், பீர்குலாம் முஜத்தித், ஸ்வாமி சங்கராச்சாரியார் ஆகியோர்களை ஆகஸ்ட் 14-ந் தேதியன்று கைதுசெய்து இறுதி விசாரணையின்போது சுவாமி சங்கராச்சாரியாரை மட்டும் விடுதலைசெய்து மீதமுள்ளவர்களுக்கு தலா 2 வருட கடுங்காவல் தண்டனை விதித்தது. இந்த காரச்சி விசாரணை சரித்திரப்பிரசித்திபெற்றது.

உலமாக்களின் "பத்வா"

தலைவர்கள் கைது செய்யப்பட்டதும் தேசத்திலே கொந்தளிப்பேற்பட்டது. காங்கிரஸ், கிலாபத், லீக் மகாஜனங்கள் எல்லோருமே சீறிக்கொண்டுகிளம்பினர். காரச்சி மகாநாட்டுத் தீர்மானம் பலமாக ஆதரிக்கப்பட்டது. 500 மார்க்க அறிஞர்கள் (உலமாக்கள்) தீர்மானத்தை ஆதரித்து நீண்டதோர் மார்க்கத் தீர்ப்பு (பத்வா) வெளியிட்டனர் இதைக் கண்ணுற்ற முஸ்லிம் உலகிற்கு எரிகிற வீட்டில் எண்ணைபிட்டது போலாயிற்று. பொதுமக்கள்சீற்றமும், அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறையும் ஒன்றையொன்றுபோட்டியிட்டன.

மலையாளம் மூண்டி நின்றது!

"கிலாபத்" கிளர்ச்சி வலுப்பட்டு மலையாளத்திலும் வேரூன்றியது. வடமலையாள முஸ்லிம்கள் உண்மையிலேயே மத பக்தி, தியாக புத்தி, தன்மானம்மிகுந்தவர்கள்! எனவே அங்கு, சென்னை மௌலானா யஃகூப்ஹஸன் சேட் பிரசாரம் புரிந்ததைக் கண்ணுற்ற அதிகார வர்க்கம் அவரைக் கைது செய்துவிட்டது. இதைக்கண்டித்து அங்குள்ள முஸ்லிம்

கள் ஆயிரக்கணக்கிலே கள்ளிக்கோட்டையில் கூடினர். கூட்டம் நடவாதபடி போலீஸார் தடிகொண்டு தாக்கிக் கோரமாகக் கூட்டத்தைக் கலைக்க முயன்றதிலே நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் படுகாயப்பட்டனர். ஒப்பற்ற பல முஸ்லிம் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

போர் மூண்டது!

மலையாளமே அல்லோல கல்லோலப் பட்டது! மாப்பிள்ளை முஸ்லிம்களின் இரத்தம் கொதித்தது!! பொறுமையிழந்தவர்களாய், பயங்கரமான போர் ஒன்று ஆகஸ்டிலிருந்து துவக்கினர். யுத்த முறைப்படி நடந்த இப்போரிலே மலையாள முஸ்லிம்களுடன் முதலில் ஒத்துழைத்துவந்த மலையாள ஹிந்துக்கள், ஜமீந்தார்களிலே பெரும்பாலோர், அதிகார வர்க்கத்தின் பெரும்பாலான பட்டாளத்தைக் கண்ணுற்றுக் கோழைகளாய் அவர்களிடம் சரண் புகுந்ததோடல்லாமல் முஸ்லிம்களைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களாயும் மாறினர்.

கூட்ஸ் வண்டிகளில் மலையாள முஸ்லிம்கள்!

முஸ்லிம்கள் காட்டிக்கொடுக்கப்பட்டதும் போரின் போக்கு வேறு விதத்திலே மாறிவிட்டது! எதிர்பாராத பல அசம்பாவிதங்கள் நிகழ முஸ்லிம்கள் கண்டனர். பயங்கரப் போராட்டத்திலே சூழ்ச்சியில் சிக்கிச் சிதைந்த முஸ்லிம் மாப்பிள்ளைமார்கள், ஏராளமான பேர்கள் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும், நாடு கடத்தப்பட்டும் தூக்கிலிடப்பட்டும், அப்பப்பா! சொல்லி முடியா விதத்திலே சித்திரவதை செய்யப்பட்டனர். இவையும் மிஞ்சி அதிகார வர்க்கம் ஒரு சமயம் மலையாள முஸ்லிம் சகோதரர்கள் 100 பேரை, சுற்றி மூடப்பட்ட கூட்ஸ் வண்டிகளில் புளி மூட்

டைகளுக்குப் பதிலாகத் திணித்து ஏற்றி அனுப்பிவைத்த தில், சுவாசிக்க முடியாது 70 பேர்கள் வரை உயிரிழந்தும் மீதமுள்ள 30 பேர்கள் அபாயஸ்திதியிலும் இறந்துபார்க்கும் போது காணப்பட்டனர். அந்தோ! பரிதாபம்!!பரிதாபம்!!!

மருமகள் உடைத்தது பொன் சட்டியா?

நவாப் சிராஜ்-உத்-தௌலா காலத்திலே கல்கத்தாவில் ஆங்கிலேயர்களை இருட்டறையில் அடைத்துக் கொன்றூர்கள் என்ற கற்பனைக் கதையை மெய்யென நம்பியவர்கள், ''ஹால்வெல்'' என்ற ஞாபகச் சின்னத்தை யமைத்ததற்கு, வருங்கால இந்திய முஸ்லிம்கள் ''கூட்ஸ் வண்டி'' கோரத்தை ஞாபகச்சின்னமாக ஏன் நிலைநாட்டமாட்டார்கள்? இனி எத்தனை ஞாபகச்சின்னங்கள் தோன்றுமோயாரறிவர்?

ஞாபகார்த்தம் கொண்டாடுக!

சுதந்திரத்தை நிலைநாட்டத் தியாகம் செய்ததிலே முஸ்லிம்களுக்கு நிகர் வேறு யாருளர்? ''ஜாலியன் வாலாபாக்'' தினம் கொண்டாடும் காங்கிரஸ், ''மலையாள முஸ்லிம்கள் தின''மும் ஏன் கொண்டாடக்கூடாது? அதுவுமன்றி அவர்களைப்பற்றி ஒரு வரியையும் தனது (காங்கிரஸ்) சரித்திர ஏட்டிலே எழுதிவைக்கவில்லை! மாருக அவர்களைப்பற்றி தூஷணையாகவே அஹமதாபாத் காங்கிரஸ் மகாநாட்டிலே குற்றப்பத்திரிகை வாசித்துள்ளதே. என்னே பாரபட்ச மனப்பான்மை! முஸ்லிம் லீகும் கிலாபத் கமிட்டியும் மாப்பிள்ளை முஸ்லிம்களுக்கு எண்ணற்ற உதவிகள் செய்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.முஸ்லிம்மாப்பிள்ளைமார்கள் ஞாபகார்த்த தினம் கொண்டாட முஸ்லிம் சகோதரர்கள் முற்படுவார்களாக.

வேல்ஸ் இளவரசருக்குக் கருப்புக்கோடி

இந்திய நிலைமை ஒரே குழப்பமாய்விட்டனதக்கண்டு நிலைமையைச் சீர்படுத்தவும் மக்களைச் சாந்தப்படுத்தவும் வேல்ஸ் இளவரசர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் நோக்கத்துடன் 1921 நவம்பரில்பம் பாய்த்துறைமுகத்திலே வந்திறங்கினர் புரட்சிசெய்துகொண்டிருந்தமக்கள் பம்பாய் உட்பட நாடெங்கும் வேலைநிறுத்தம்செய்து கருப்புக் கொடி காட்டிச்செய்த ஆர்ப்பாட்டத்திற்கோ அளவில்லை போலீஸ் தடியடிப் பிரயோகங்களும் குறைவில்லாது நடைபெற்றன. எனினும் கிளர்ச்சிமட்டும் ஒடுங்கவில்லை.

மௌலானா ஆஜாதின் மாபெறும்தவறு

அலி சகோதரர்கள் உட்பட பல உண்மைத் தலைவர்கள் சிறை பட்டதும், "கிலாபாத்" கிளர்ச்சியின் போக்கு வேறு விதமாக மாறிவிட்டது. ஆரம்பத்திலே காங்கிரஸ், கிலாபத் கிளர்ச்சியிலே அணுவளவும் சம்பந்தப்படவில்லை! முஸ்லிம் கள்தான் கிலாபத் கமிட்டியாரின் அனுமதியின்பேரில் போரைத் துவக்கினர். 1921 நாகபுரி காங்கிரஸ் மகாநாட் டிற்குப் பிறகுதாம், வேறு பல நிபந்தனைகளோடு கிலாபத் கிளர்ச்சியில் காங்கிரஸ் கலந்துகொண்டது. ஆனால் காந்திஜீ தான் இதற்குச் சர்வதிகாரி போன்று நடந்துகொண்டார். அதற்கேற்றாற்போல மௌலானா அபுல்கலாம் ஆஜாத், கிலாபத் கிளர்ச்சியின் முழுப் பொறுப்பையும் காந்தியிடம் ஒப்படைத்தது மாபெரும் தவறாகும். அதன் எதிரொலி யாக நாடெங்கும் உள்ள முஸ்லிம்கள் ஆஜாதைக் கண்டித் தனர். காரணம் காந்திஜியை அன்று முஸ்லிம்கள் அவ்வ ளவு தூரம் நம்பவில்லை. ஹஸ்ரத் மோஹானி, ஆஜாதின் செய்கையை கண்டித்து, "காந்திஜீ நடுக்கடலில் கப்பலை

மூழ்கடித்து விடக்கூடியவர்" என்று குறிப்பிட்டார். காலம் செல்லச்செல்ல, முஸ்லிம்கள் அரும்பாடுபட்டு வளர்த்த "கிலாபத் ஒத்துழையாமைப் போர்" முடிவில் காந்திஜீ காங்கிரஸ் கைப்பொம்மையாகப் போய்விட்டது.

20 முஸ்லிம்லீகின் 14-வது மகாநாடு (1921)

தேசமெங்கணும் கிளர்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமயத்திலே அ. இ. மு. லீகின் 14-வது மகாநாடு 1921-டிஸம்பர் இறுதியில், ஒப்பற்ற தலைவர் மௌலானா பஜ்லுல் ஹஸன் ஹ்ஜரத் மோஹானி அவர்களின் தலைமையின்கீழ் அஹ்மத்ஆபாதிலே கூடியது.

மகாநாடு நடைபெற்ற இடத்திற்கு "முஸ்லிம் நகர்" என நாமமிடப்பட்டு வெகுச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது! ஏராளமான தலைவர்களும், பிரதிநிதிகளும் விஜயஞ் செய்திருந்தனர். ஹஜ்ரத் மோஹானி

"அதிகாரவர்க்கம் தனது கொள்கையை "கிலாபத்' விஷயத்திலே தளர்த்தாவிடில்,-நேர்மையாக நடக்காவிடில் முஸ்லிம்கள் தங்களின் 'திருமறை'யின் ஆணைப்படி (அதாவது: "எங்கு நீங்கள் அவர்களைப் பெற்றுக்கொண்டாலும் அவர்களைக் கொன்றுவிடுங்கள்" என்பது) அமல் நடத்த வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டுவிடும்"

என்று குறிப்பிட்டு நீண்டதோர் பிரசங்கம் நிகழ்த்தினார். மேலும், இம்மகாநாட்டில் மலபார் முஸ்லிம்களுக்கு அனுதாபம் காட்டியும், அவர்களுக்கு உதவிசெய்து, நடந்த விஷயங்களை விசாரணைசெய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டும், துருக்கி அங்காரா கவர்ன்மெண்டுக்கு உதவிசெய்யும்

படி தேசயக்களை வேண்டியும் பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

சுதந்திரத்திற்குக் காந்திஜி, ராஜாஜி முட்டுக்கட்டை!

லீக் மகாநாடு நடந்த அதே சமயத்திலே கிலாபத் காங்கிரஸ் மகாநாடுகளும் நடைபெற்றன. இதற்கு ஹக்கீம் அஜ்மல் கான் தலைமை தாங்கினர். லீக்தலைவர் ஹஜரத் மோஹானி அவர்கள் "காங்கிரஸின் இலட்சியம் பரிபூரண சுயராஜ்யம் தான்; பிரிட்டிஷ் அதிகாரத்திற்குப் புறம்பான சுயேட்சை ஒன்றே நமது இலட்சியம் என்ற தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசினர். காந்திஜியும், இராஜகோபாலாச்சாரியாரும், இவர்களது கோஷ்டியினரும் அத்தீர்மானத்தை எதிர்த்து "இந்தியா பூரண சுயேச்சைக்குத தகுதியில்லை." என்ற கருத்துக்கொண்ட நீண்ட பிரசங்கங்கள் செய்து பெருவாரியான ஓட்டுக்களால் தீர்மானத்தைத் தோற்கடித்தனர். மேலும், மலையாளக் கலவரத்திற்குக் கிலாபத் ஒத்துழையாமை இயக்கங்கள் காரண மல்லவென்றும், தீர்மானித்து மாப்பிள்ளை முஸ்லிம்களை காட்டிக் கொடுத்துவிட்டனர். எனவே, காங்கிரஸ்கார ஹிந்துக்களும் ஹிந்துமகாசபை மனப்பான்மை கொண்டுள்ளன என்பது இப்போதே தெளிவாயிற்று.

ஹஜரத் மோஹானி, ஆஜாத் கைது!

லீக் மகாநாட்டிலே தலைமைப் பிரசங்கம் நிகழ்த்திய ஹஜரத் மோஹானியை, மன்னருக்கு விரோதமாகப் போர் புரிய மக்களைத் தூண்டிய குற்றத்தின் கீழ் கைது செய்து 20-வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு பிறகு அப்பீலில் அது இரண்டு வருடமாகக் குறைக்கப்பட்டது. அதேபோல குற்றம்சாட்டப்பட்ட மௌலானா அபுல்கலாம்

ஆஜாதையும் அப்பால் கைதுசெய்துவிட்டனர். எனவே கிலாபத் கிளர்ச்சியின் இரு தூண்கள் கைதுசெய்யப்பட்டதும் மக்கள் திகைத்தனர் எனினும் பின்னர் சமாளித்துக் கொண்டனர்.

ஒத்துழையாமைப் போர் நின்றது-

கிலாபத் ஒத்துழையாமை இயக்கங்களின் சூட்சமக் கயிறுமுற்றிலும் காந்திஜி கைக்கு மாற்றப்பட்டதும் ஹிந்து மகாசபைக் காரர்கள் அந்த இயக்கங்களை நசுக்கிவிடுமாறு காந்திஜியை வேண்டிக்கொள்ளவே, அவரும் அதற்கு சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். அவ் வியக்கங்களை வளர்த்த முஸ்லீம் தலைவர்கள் அனைவரும் அடைபட்டிருந்ததால், காந்திஜியைத் தட்டிப்பேச ஆட்களில்லாதுபோயிற்று! அவருக்கு அனுசரணையாக கோரப்பூரைச்சார்ந்த சௌரா சௌரி யிலே 1922-பிப்ரவரி 5-ந்தேதி அடக்குமுறையால் ஆத்திரம் கொண்டிருந்த மக்களால், அங்குள்ள போலீஸ்ஸ்டேஷன் கொளுத்தப்பட்டுச் சாம்பலாயிற்று. அதனால், இன்ஸ்பெக்டர் உள்பட 22-பேர் மாண்டுபோயினர். உடனே,

"நமது ஒத்துழையாமைப்போரில் பலாத்காரம்கலந்து விட்டது; இனி தொடர்ந்து போரை நடத்துவது உசிதமன்று" எனக் காந்திஜீ 12-ந்தேதி ஒரு அறிக்கை வெளியிட்டு ஒத்துழையாமைப்போரை நிறுத்திவிட்டார்! இதை டில்லியில் நடந்த காங்கிரஸ் காரியக் கமிட்டியும் அங்கீகரித்தது.

நடுக்கடலில் கப்பலை மூழ்கடித்த கோரம்!

காந்திஜீ திடுசாக்கிற்நாகத் திடீரென்று போரைநிறுத்தியதும், முஸ்லிமல்லாதார் உள்பட இந்திய முஸ்லிம்கள்

அனைவருமே ஏராளமான கண்டனக்கூட்டங்கள் போட்டுத் தங்கள்எதிர்ப்பை வெளிப்படுத்தினர். கூண்டிலடைபட்ட சிங்கங்களான அலி சகோதரர்கள் செய்திகேட்டு அலறினர்! ஆயின், அந்தோ! அச்சமயம் அவர்களால் யாது சாதித்துவிட்டிருக்க முடிந்திருக்கும்? இச்சமயத்திலே, அன்றொருநாள் ஹஜரத் மோஹானி கூறியது போல் காந்திஜீ நடுக்கடலில் ஒத்துழையாமைக் கப்பலை மூழ்கடித்துவிட்டார்" என்பது பொருத்தமாய்ப் போய்விட்டது.

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது!

அதிகார வர்க்கத்தினரையும், இந்துமகாசபைத்தோழர்களையும் சந்தோஷப்படுத்தவும், அடிவருடவுமே திரு காந்தி ஒத்துழையாமைப்போரை நிறுத்தியது! ஆனால், அவர் பிடித்த பிள்ளையார், முடிவில் குரங்காய் மாறியது! அதிகார வர்க்கம் பல காரணங்களைக்காட்டி மார்ச் 22-ந்தேதி அவரைக் கைதுசெய்து 7-வருட தண்டனை சன்மானம் அளித்தது. இதற்குப்பின் மக்களும் ஒத்துழையாமைப்போரை மாற்றி "ஒத்துழைப்புப் போ"ரைச் சிறுகசிறிதாகத் துவக்கினர்.

லீகிற்கு "சர்மா" அளித்த சர்ட்டிபிகேட்.

முஸ்லிம் லீகினால் காங்கிரஸ் அடைந்த நன்மைகள், அதற்குமுன் அது இருந்த தாழ்ந்த நிலை, முஸ்லிம்களால் காங்கிரஸிற்கு அளிக்கப்பட்ட புத்தியிர்-புத்துணர்ச்சி முதலியவைகளைப்பற்றி, ஒருபக்கா காங்கிரஸ் பெருச்சாளியும் பல தடவை சிறைசென்றவரும், தியாகியும், பெருந்தலைவருமான திரு, கிருஷ்ணசாமிசர்மா எழுதிய "முஸ்லிம் தலைவர்களான அலி சகோதரர்களின் ஜீவிய சரிதைகளும், உபன்யாசங்

களும், விசாரணையும்'' என்றநாமங்கொண்ட புத்தகமொன்று 1922-ல் சென்னை சௌக்கார்பேட்டை காங்கிரஸ் விளம்பர சபையின் ஆதரவில் அதன் 22, 23-வது பக்கங்களில் வெளியிடப்பட்டது லீகிற்கு அளிக்கும் சர்டிபிகேட்டாவது.

''காங்கிரஸின் பக்கபலம் முஸ்லிம் லீகே! காங்கிரஸ் மகாசபையின் ஜனநாயகத்தைக் காப்பாற்றியதும், அதற்குத் தீவிர உணர்ச்சியூட்டியதும் முஸ்லிம் லீகே! முஸ்லிம் லீக்முளைத்திராவிட்டால், காங்கிரஸ் நாமதேயமற்றுப்போய் விட்டிருக்கும்! கிலாபத் கிளர்ச்சிக்கும், பஞ்சாப் படுவதைக்கும் முஸ்லிம்லீக் உதவியதால்தான், 32-வருடகாலமாகத் தூங்கிக்கொண்டிருந்த காங்கிரஸ், இரண்டு மூன்று வருடகாலங்களுக்குள் அகில பாரதமெங்கணும் 31½-கோடி (அக்காலை ஜனசங்கிக் கணக்குப்படி) மக்களுக்கு ஜனநாயக உணர்ச்சியையும், புத்துணர்ச்சியையும் ஊட்டமுடிந்தது. இந்திய ஜனநாயகத்தின் ஸ்தாபகர் மௌலானா முகம்மத்அலி அவர்' 1906-ல் இவர்முஸ்லிம்லீகை ஸ்தாபிக்காதிருப்பின்-1912-ல் பத்திரிகைகளை தோற்றுவிக்காதிருப்பின் - 1916-ல் தமதுசகோதாருடன் சிறைபடாதிருப்பின் பாரதநாட்டிலே ''ஜனநாயகம்'' என்பதே பூக்காதிருக்கும்! அலி சகோதரர் களின் ஒத்துழைப்பின் சாயலே ஜனநாயகம்! அதன் அஸ்திவாரமாகும்!!

சர்டிபிகேட் அளித்த அன்பர் ஒரு பிராமணராக இருந்தும், அவர் தேசத்திற்கும், காங்கிரஸிற்கும் லீக் — தலைவர்கள் செய்த சேவைகள், தியாகங்கள் ஆகியவைகளை மறைக்க முடியவில்லை! இதுவே, லீக்செய்த பொதுநலத் தொண்டிற்குச் சான்று. அவர் வெளியிட்ட புத்தகமும் அவர்சொந்த ஹோதாவிலில்லாது காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயே வெளியிட்டார் என்பதையும் உன்னவேண்டும்.

"காங்கிரஸ் கேட்டது பிச்சைதான்"

சர்மா அளித்த சர்ட்டிபிகேட்டிற்கு அநுசரணையாகவே, 1922-வது வருஷத்திய காங்கிரஸ் (கயா) மகாநாட்டில் வரவேற்புக் கழகத் தலைவரான டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் பேசும்போது, "1920-வது வருடத்திற்கு முன் வரை காங்கிரஸ், மகஜர்கள் அனுப்பியும், காகிதத்திலே தீர்மானங்கள் உழுதி ஏட்டளவோடு நிறுத்தியும், ஆக அது "ராஜீயப் பிச்சை' தான் கேட்டுவந்தது!" என்று குறிப்பிட்டார், எனவே, லீகினால், காங்கிரஸ் எத்துணை தூரம் நன்மையடைந்ததென்பதை மேற்கொண்டு விளக்கவும் வேண்டுமோ?

காானல் நீர் மோகம்

காங்கிரஸ் - லீக் ஒப்பந்தமும், ஒத்துழையாமைப் போரும், காங்கிரஸை முஸ்லிம்கள் உள்பட எல்லோருமே நம்பும்படியாகிவிட்டது. அத்துடன் அதன் செல்வாக்கும் பெருகியது. "தூரத்திலே காணப்படுவது வெறும் கானல்; நீர் அல்ல" என்பதை உணராத சில முஸ்லிம் தலைவர்கள் "ஒரு காங்கிரஸே போதும்; லீக் இனி அவசியமில்லை" என அபிப்பிராயப்பட்டனர் எனவே, கானல் நீரை நம்பிய முஸ்லிம் பாமரர்களின் கவனத்தைக் காங்கிரஸ் ஈர்த்தது; லீக்மீதிருந்த அக்கரை குறைபலாயிற்று. அலிசகோதரர்கள் கவனம் கிலாபத்கிளர்ச்சியிலே வலுத்திருந்ததால், முஸ்லிம்களைத் தப்புவிக்க அவர்களால் சாத்தியப்படாதுபோயிற்று. மேலும் லீக் தலைவர்களில் மற்றும் சிலர் ஒப்பந்தங்களை அறுத்துக்கொண்டும் நிபந்தனைகளுக்கு உட்படாதும் எதிர்ப்புக் காட்டிக்கொண்டே வந்தனர்.

க்டுகு சிறத்தும் காரம் போகவில்லை!

முஸ்லிம்லீக் வளர்ச்சி குன்றி, தத்தளித்துக்கொண்டிருக்கும்போது, சில தலைவர்களின் அபார முயற்சியால் அது மீண்டும் மறு மலர்ச்சிபெற ஆரம்பித்தது. லீக் கோட்டையின் கல்தூண்களிலொருவரான ஜனுப் ஜின்னு ஆரம்பத்திலே ஒத்துழையாமை இயக்கத்தில் அவ்வளவாகக் கலந்துகொள்ளவில்லையெனப் பலர் அவர்மீது குற்றம் சாட்டினும், இதர காரியங்களை அப்பழுக்கின்றி செய்யப் பின்வாங்கவில்லை! ஆகவே, ஜின்னுமீது எல்லோருக்குமே ஓர் அலாதி செல்வாக்கு இருக்கத்தான் செய்தது! காந்திஜீ மீது அவர் எப்பொழுதுமே தப்பபிப்பிராயம் கொண்டுவந்ததற்குக் காந்திஜீ தமது பிற்கால நடவடிக்கைகளையே காரணமாகக்கொண்டார். எப்படியோ ஒருவாறுக நிலைதடுமாறிய லீக் மீண்டு உரம்பெற்றது குன்றியிருந்த சமயம்கூட அது தன் 'கார'த்தை மாற்றிக்கொள்ளாது வேலைசெய்தது.

ஜனுப் ஜின்னுவின் சாட்சி.

'1920-முதல், இதே தேசவிடுதலை, சுயேச்சை என்ற பெயரால் காங்கிரஸ் பறை சாற்றியதை நம்பி, முஸ்லிம்கள் அதில் கலந்து ஒப்பற்ற தியாகங்கள் செய்தனர். அவர்களின் தியாகத்தால் காந்திஜி தமது சமூகத்தை வலுப்படுத்திக் கொண்டார்! தேசவிடுதலை, சுயேட்சைப் பெயரால் முஸ்லிம்களின் மூலம் வெளிப்பட்ட இரத்தப் பிரவாகத்தைக் கொண்டு செத்துப்போன காங்கிரஸிற்கு காந்திஜீ உயிர் கொடுத்தார். அதன் காரணமாகவே, முஸ்லிம்லீக், தனது அங்கத்தினர்களை அச்சமயம் இழக்க நேரிட்டது!"

லீக் எப்படி சக்தி குன்றியது என்பதுபற்றி ஜனுப் எம், ஏ. ஜின்னு பின்னெருசமயம் (31—1—38ல்) டில்லியில்

நடந்த கூட்டத்தில்கூறியது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்!

மழைவிட்டும் தூறல் விடவில்லை.

இவ்வளவு தூரம் லீக் - காங்கிரஸ் அபிப்பிராயபேத மேற்பட்டும், தலைவர்களிடை மனக்கசப்பேறபட்டும் லீக்—காங்கிரஸ் ஒப்பந்தம் முறியவில்லை; லீக் கூட்டங்களில் காங்கிரசாராலும், காங்கிரஸ் கூட்டங்களில் லீக்காலும் கலந்து கொள்ளாமலும் இருக்கமுடியவில்லை! ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை மேலும் வலுப்பட்டுக்கொண்டே சென்றது! இரு பிரிவினருமே விட்டுக்கொடுத்துக்கொண்டு, சகிப்புத்தன்மையும், தளரா உணர்ச்சியும் காட்டிக்கொண்டே வந்தனர். 'மழைவிட்டும் தூறல் விடவில்லை' என்பதுதான் ஒத்துழையாமைக் காலத்திய உண்மை நிலை!

ஆதாயமில்லாது செட்டி ஆற்றேடு போகவில்லை!

"கிலாபத்?" ஒத்துழையாமைக் கிளர்ச்சியிலே, சம்பந்தமற்ற முஸ்லிமல்லாதார்களும், காந்திஜீயும், காங்கிரஸின் தலைவர்களும் ஏன் இவ்வளவு உற்சாகத்துடனும், அக்கறையுடனும் கலந்துகொண்டனர் என்பதற்குக் காரணமில்லாமலில்லை! இதே கேள்விக்குப் பதிலாகத்தான் செட்டி ஆற்றேடு ஏன் போகிறுன்? என்ற கேள்வியைக் கேட்கவேண்டியதாகிறது. மௌலாஞ ஷௌகத் அலி அவர்கள் 1931—நவம்பரில் லண்டனில் நடந்த இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றிருந்தசமயம், லண்டன் பத்திரிகை நிருபர் கேட்ட கேள்விக்குப்பதிலளிக்கும் முகத்தான், கூறிய பதிலையும், காங்கிரஸ் மகாசபைத் தீர்மானங்களிலெல்லாம் கிலாபத்துடன் சுயராஜ்யமும் வேண்டும் என அடிக்கடி சேர்க்கப்பட்டதையும், பிரசங்கங்களிலும், அறிக்கைகளிலும், அவர்கள் "சுயராஜபம்" என்ற பதத்தைத்தான்

அதிகம் எடுத்துக்காட்டிவந்ததையும் நாம் ஊன்றிக் கவனித்தல் வேண்டும்!

மௌலானுவின் பதில்

லண்டன் நிருபர் மௌலானுவிடம் கேட்ட கேள்வி யாவது: "ஹிந்துக்களுக்கு அக்கரையில்லாத "கிலாபத்" கிளர்ச்சியிலே முஸ்லிம்களோடு அவர்கள் கலந்துழைத்திருக்க, அவ்வித ஒற்றுமை ஒப்பந்தத்தை முஸ்லிம்களே முறித்துக்கொள்ளவில்லையா?"

இதற்கு மௌலானு அளித்த பதிலாவது:

"இது சுத்தப் பொய்யும், முஸ்லிம்கள்மீது சுமத்தும் அபாண்டமான பழியுமாகும்! கிலாபத் கிளர்ச்சி ஆரம்பத்தில், காந்திஜீயுடையவும், இதர முஸ்லிமல்லாதார்களுடையவும் உதவியின்றியே முஸ்லிம்கள் அதிகாரவர்க்கத்தினருக்கு விரோதமாகக் கிளர்ச்சிசெய்துகொண்டிருந்தனர். அச்சமயத்திலெல்லாம்காந்திஜீ அதிகாரவர்க்கத்தினருக்குப்படைக்கு வேண்டிய ஆள்சேர்க்கும் வேலையிலீடுபட்டிருந்தார். அலி சகோதரர்களாகிய நாங்கள் சிறையிலகப்பட்டிருந்தும் விடாத கிளர்ச்சி நடத்திவந்தோம். சிறைக்கோட்டத்தினின்று வெளிப்பட்டதும் கிளர்ச்சியை அதிவிமரிசையாக நடத்திவந்தோம்! முஸ்லிம்களின் பலம், தைரியம், ஊக்கம் எவ்வளவு என்பதைக் காந்திஜீ உணர்ந்திருப்பார். முஸ்லிம்களைச் சுயராஜ்யப் போராட்டத்தில் இழுத்துப்போட நோக்கங்கொண்டு தாமும், இக்கிளர்ச்சியில் கலந்துழைத்து முஸ்லிம்களைக் காங்கிரஸ் பக்கல் கவர்ந்தார்! தமது வர்க்க ஹிந்துக்களின் நன்மைகருதியே அவர் அவ்வாறுசெய்தார்!"

(ஹை. இ. 2-12-31)

நம்பிக்கைத் துரோகம்!

முஸ்லிம்களால் ஒத்துழையாமைப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே, முஸ்லிம் தலைவர்களும் இதர பல முஸ்லிம்களும் சிறைபட்டு அவதியுறுங்காலை, காங்கிரஸ் தலைவர்களும், ஹிந்துத்தலைவர்களும், விடுதலையாகியும், நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டும் பலர் வெளியாகி முஸ்லிம்களின் கிளர்ச்சிக்கு விரோதமாக ஒத்துழைப்புப் போர் ஆரம்பித்தனர். வைதீக ஹிந்துக்கள் சிலர் இதுதான் சமயமெனக்கருதி சுத்தி சங்கதன், ஹிந்துமகாசபை முதலிய இயக்கங்களைத் தோற்றுவித்து முஸ்லிம்களைப் பலவிதத்திலும் நம்பிக்கைத் துரோகம் செய்து பெருத்த இன்னல்களுக்கு உட்படுத்தினர்.

சுத்தி-சங்கதன் தோன்றிய கதை.

'சாமி சிர்த்தானந்தர்' என்றழைக்கப்படும் 'லாலா முன்ஷிராம்' என்பவர் ஹிந்துக்களில் பிரபலமானவர். ஒத்துழையாமையில் சிறைபட்டு, தவணைமுடியுமுன் விடுதலைசெய்யப்பட்டவர். வெளிவந்ததும் "சுத்தி" இயக்கத்தைத் தோற்றுவித்துத் தீவிரப் பிரசாரம் புரியவாரம்பித்தார். அவருக்கு ஒத்தாசையாகப் பண்டித மதன் மோஹன மாளவியா 'சங்கதன்' இயக்கத்தைத் தோற்றுவித்தார். இந்த "சுத்தி சங்கதன்" இயக்கங்களுக்குப் பல காங்கிரஸ் ஹிந்துத் தலைவர்கள் மறைமுகமாகவும், பகிரங்கமாகவும் ஒத்தாசைபுரிந்துகொண்டிருந்தனர்.

முஸ்லிம்கள் பலவந்தமாய் ஹிந்துக்களாக்கப்பட்டனர்!

"சுத்தி சங்கதன்" வலுப்பெற்றுச் செய்தவேலைகள் இவைதாம், போதிய மார்க்கஞானமும், வயிற்றுப்பிழைப்புமில்லாத "மால் கானு" வாசிகளான முஸ்லிம்களை நயவஞ்ச

கத்தினாலும், பயமுறுத்தியும் சுத்திசெய்து ஹிந்துக்களாக்கிற்று! மற்றும் பல, அப்பாவிகளையும் நிர்ப்பந்த மூலம் ஹிந்துக்களாக்க முயற்சித்துக்கொண்டிருந்தது! முஸ்லிம்களின் மனம் புண்படும்படி வகுப்புப் பூசல்களை விளைவித்தது! ஆங்காங்கு பசுபலி (குர்பானி) யைத் தடுக்க பலாத்காரத்தால் முயன்றது! இதனால்விளைந்த குழப்பங்கள் அனந்தம்! ஏற்பட்ட கஷ்டங்களுக்கு அளவில்லை.

தூயதூதரும், திருக்குர்ஆனும் அவமதிக்கப்பட்டது.

இயக்கம் அத்துடன் நிற்கவில்லை! உயிரினும் பெரிதாக முஸ்லிம்களால் மதிக்கப்படும் திருக்குர்ஆனை அவமதித்தது! தூயதூதர் (ஸல்) அவர்களையும், அவர்களின் வாழ்க்கைத் துணைவிமார்களையும், இதர இஸ்லாமியப் பெரியார்களையும் தூஷித்தது! அவர்களைப் பரிகசிக்கும் பான்மையில் பல கிண்டலான நூல்களை வெளியிட்டது! இத்துடன் முடித்துக்கொள்ளாது, முஸ்லிம்கள் இந்தியாவிற்கு அன்னியர்களென்றும், அவர்களை இந்தியாவினின்றும் விரட்டிவிடுவதே சரியென்றும் பகிரங்கமாகப் பிரசாரம் புரிந்தது! காங்கிரஸ்-லீக் ஒப்பந்தங்களெல்லாம் காற்றில் கலக்கவிட்டது. அடுத்தடுத்து இவைகளைக்கண்ணுற்ற இந்தியமுஸ்லிம்கள் கொதித்தெழுந்தனர். காங்கிரஸ்தலைவர்களின் நம்பிக்கைத்துரோகத்தைக்கண்டு ஏங்கினர்.

முள்ளுடன் மோதுவதா?

சுத்தி, சங்கதன், மகாசபை ஆகியவைகளின் திருவிளையாடல்கள் வலுத்தன. தாங்கள் மோதுவது முள்ளுடன் என்பதை அவைகள் அறியமுடியவில்லை! முஸ்லிம் சமூகம் வீறிட்டெழுந்தது. சிறையினின்று விடுபட்ட பல முஸ்லிம் தலைவர்கள், வெளியிலிருக்கும் முஸ்லிம் தலைவர்களுடன்

கலந்து அந்த இயக்கத்திற்குத் தக்க புத்தி கற்பிக்க முயன்றனர். மௌலானா ஸையத் குலாம் பேக் நைரங் அவர்கள் "அம்பாலா" நகரில் மத்திய "தப்லீகுல் இஸ்லாம்" சங்கத்லைத நிறுவிப் பலருடைய பக்கபலத்துடன் ஒரு பக்கம் முனைந்து நின்றார். மறுபக்கம், பஞ்சாபைச் சார்ந்த டாக்டர் ஸைபுத்தீன் கிச்லு அவர்கள் "தன்ஸீம்" இயக்கத்தைத் தோற்றுவித்தார். எனவே இஸ்லாமியப் பிரச்சாரமும், முஸ்லிம் சமூகப் புனருத்தாரணமும் வலுத்துவிடவே, அதன் பயனாக மதமாற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் இஸ்லாத்தில் இழுக்கப்பட்டுவிட்டனர். ஹிந்துத் தலைவர்களின் சதிச் செயல்கள் சமாதிகொண்டன.

விழிகண் குருடர்.

முஸ்லிம்கள்மீது இவ்வாறு அநீதிகள் இழைக்கப்பட்டும், இன்னும் சில காங்கிரஸ் முஸ்லிம்கள், தங்கள் மூடபக்தியைத் தளரவிடாது, காங்கிரஸை வலுவாகப் பற்றிக்கொண்டும், காங்கிரஸின் தீர்மானங்களுக்குக்கட்டுப்பட்டும் கண்ணிருந்தும் குருடர்களாயிருந்துவந்தனர். அந்தோ! என்ன பைத்தியக்காரத்தன்மை! முஸ்லிம் தலைவர்கள் எவ்வளவு நேர்மையாக நடந்துகொண்டும், ஹிந்துத்தலைவர்கள் சதியாலோசனைகளைப் புரிந்துகொண்டேதான் வந்தனர். எனவேதாம் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, ஏட்டளவோடே நின்றுகொண்டது!

முஸ்லிம் லீக் விசேஷ மகாநாடு.

1922-ல் இந்தியமுஸ்லிம்களும், முஸ்லிம் லீகும் எதிர்பாராவிதமாய்ப்பலவீனப்பட்டுச்சக்திகுன்றிகாணப்படவே, மீண்டும், முன்போல லீகும் முஸ்லிம்களும் சக்திகொள்ளச் செய்யவும், ஒற்றுமை உண்டுபண்ணவும், கிலாபத் கமிட்

டியைய, லீகுடன் இணைப்பதுபற்றி ஆலோசித்து முடிவு செய்ய அ. இ மு. லீகின் விசேஷ மகாநாடு இலட்சுமண புரியிலே 1922டிசம்பர்மாதம்இறுதியில் ஷேய்க்குலாம்பர்கரி தலைமையில் கூடியது. உருக்கமான பிரசங்கங்களுக்குப்பின், பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இருந்தும், கிலாபத் - லீக் ஐக்கியம் சாத்தியப்படாது போயிற்று!

காங்கிரஸிலும் பிளவு

முஸ்லிம்களில் இரு பிரிவு போல் காங்கிரஸிலும் பிளவேற்பட்டது! ஒரு பிரிவு "சட்டசபையைக் கைப்பற்ற வேண்டும்" என்றது. மற்றொன்று "ஒத்துழையாமையே தகுந்த" தென்றது. முன்னைய பிரிவிலே ஸி. ஆர். தாஸ், பண்டித மோத்திலால்: பிந்தியபிரிவிலே டாக்டர் அன்ஸாரி, ஹக்கீம் அஜ்மல் கான், வி· ஜே பட்டேல், ராஜகோபாலாச்சாரி ஆகியோர் முக்கியஸ்தர்கள் இப்போராட்டம் உச்சஸ்தானத்தை யடைந்தது!

21. முஸ்லிம் லீகின் 15-வது மகாநாடு -(1923)

முஸ்லிம்லீகை எப்படியும் வலுவடையச் செய்துவிட வேண்டுமென்ற அவா ஒவ்வொரு தலைவருள்ளத்திலும் வேரூன்றியது! எனவே, இவ்வருடத்திலே தக்க தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்ற துடிதுடிப்பும் காணப்பட்டது! சட்டநிபுணத்துவத்திலும். அரசியல் அனுபவத்திலும், நிர்வாக ஆற்றலிலும் திறமைவாய்ந்தவரான ஜனுப் முஹம்மத் அலி ஜின்னு அவர்களையே தேர்ந்தெடுப்பதென முடிவுசெய்யப்பட்டது. ஆதலால் அச்சமயத்தில் இங்கிலாந்திலிருந்த அவரை, மகாநாட்டின் தலைமைதாங்க

வரும்படி ஏகோபித்த அழைப்பு அனுப்பப்பட்டது! அவரும் அதற்கு இசைந்து உடனே இந்தியா பிரயாணமானார். பல தலைவர்களைக்கண்டு கலந்துபேசி இந்திய முஸ்லிம்கள் உய்ய வழி எதுவெனக்காண்பித்தார் முடிவாக அ. இ. மு. லீகின் 15-வது மகாநாடு லாஹூரில் மே 1923-ல் ஜனுப் ஜின்னுவின் தலைமையில் கூடியது!

முஸ்லிம்லீகில்தான் கதிமோட்சம்!

ஜனுப் ஜின்னு தலைமையுரை நிகழ்த்தும்போது, முஸ்லிம்கள் இனி ஒன்றுபட்டு வாழ்வதற்குரிய முறைகளையும், திட்டங்களையும் விளக்கமாக எடுத்துக்காட்டி, கிலாபத் கமிட்டி முஸ்லிம் லீகுடன் ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு முஸ்லிம்கள் தங்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கட்டுப்பாட்டுடன் போராடவேண்டுமென்றும் வற்புறுத்தினுர். பின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுள், "முஸ்லிம் சமூக, அரசியல் முன்னேற்றத்திற்கு ஜனுப் ஜின்னுவினுல் தயாரிக்கப்பட்ட திட்டம். "இந்தியாவிற்குப் பூரணப் பொறுப்பாட்சியே வேண்டும்! அதில், முஸ்லிம்களின் உரிமைகள், பாத்தியதைகள் பாதுகாக்கப்பட்டிருக்கவேண்டும்." என்ற இரண்டு தீர்மானங்களும் மிக முக்கியமானவை. தீர்மான விவாதத்திலே பல தலைவர்களும் கலந்துகொண்டனர், மேலும், "முஸ்லிம்லீகினுல்தான் முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படமுடியும்" என்ற எண்ணம் மீண்டும் முஸ்லிம் உலகில் நன்கு பதிந்துபோய்விட்டது.

காங்கிரஸ் மகாநாட்டிற்கு மௌலானு தலைவர்!

சுத்தி-சங்கதன் தொல்லையால், நாடெங்கும் ஹிந்து முஸ்லிம் பிணக்கு வலுத்துவரும் சமயத்திலேதான், காங்

கிரஸ் மகாநாடு 1923-டிஸம்பரில் மௌலானா முஹம்மத் அலியின் தலைமையில் காக்கிநாடாவிலே கூடிற்று! நாடெங்கணும், சமூகச்சண்டைகள், கட்சிச்சண்டைகள் தலைசிறந்து நின்றகாலை இம்மகாநாடு கூடினது குறிப்பிடத்தக்கது. சுத்தி-சங்கதன்செய்யும் அட்டூழியங்களைப்பற்றி மௌலானா தமது மூன்னுரையில் குறிப்பிட்டது சரித்திர ஏடுகளிலே பொன்னெழுத்துக்களிலே பொறிக்கப்பட வேண்டியது. இம்மகாநாட்டுடன் கிலாபத் மகாநாடும் மௌலானா ஷௌகத் அலி தலைமையின்கீழ் நடந்தது!

மௌலானா முஹம்மத் அலியின் வீர கர்ஜனை!

“தீண்டாமையை ஒழித்து, தாழ்த்தப்பட்டவர்களையும் உயர்ஜாதியில் சேர்த்துக்கொள்ளும்பொருட்டு இந்த (சுத்தி-சங்கதன்) இயக்கங்கள் ஏற்பட்டிருக்குமாயின், ‘முஸ்லிம்’ என்ற ஹோதாவிலும், காங்கிரஸ்வாதி’ என்ற முறைமையிலும் நான் மிகவும் சந்தோஷமடைவேன்! முல்தானில் ஏற்பட்ட கலவரங்களுக்குப் பிறகு இந்த இயக்கம் பலமாக வலுக்கவாரம்பித்ததும், எனக்கும் ஒருவித சந்தேகம் வலுத்தது! சமூக நன்மைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமையை உபயோகிக்கும்போது, பலாத்காரத்திலிறங்கும் படியான தூண்டுதல் ஏற்படாமல் இருக்கும்படி இந்த இயக்கத தலைவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும்.

நான் ஹிந்துக்களின் விரோதியல்ல.

சுத்தி-சங்கதன் காரணமாக, ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு விசேஷபங்கம் ஏற்பட்டிருக்கின்றது! பிரச்சாரம் மூலமாக மதத்தைப் பரவச்செய்வதிலே எனக்கு நம்பிக்கையுண்டு. ஹிந்துக்கள் தங்கள் மதத்தைப் பிரச்சாரம் செய்

யாமலிருந்த வருவதைக் குறித்து நான் பலவருஷங்களுக்கு முன்னமேயே பேசியுள்ளேன். இத்தகைய மனோபாவங் கொண்ட நான், இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரச்சார இயக்கத்தைக்கண்டு வருத்தப்படுவது ஆச்சரியமாகவிருக்க லாம். "மால்கானு" ராஜபுத்திரர்கள் ஹிந்துக்கள் என்று கருதும்படி இஸ்லாமியத் தத்துவங்களை அறியாதவர்களாக விருந்தால், அவர்கள் தாங்களாகவே விரும்பிய மதத்திலே சேரும்படி விட்டுவிடுவது நல்லது. நேரடியாக மதமாற்றும் படி செய்வதற்கு இது சமயமல்ல. மலையாளத்திலே மாப் பிள்ளைமார்கள் செய்ததுபோல் பலாத்காரத்தினால் மத மாற்றுவதை எந்த உண்மையான முஸ்லிமும் ஒப்புக் கொள்ளமாட்டான்."

மௌலானாவின் வீரவுரையினின்று அவரின் அடக்க மான தன்மையையும், ஹிந்துமகாசபைக்காரர்களின் குரோ தமான செய்கைகளையும் அன்பர்கள் நிறையிடவேண்டும். காங்கிரஸ் மகாநாட்டிலே, வங்காளத்திலேற்பட்ட ஹிந்து - முஸ்லிம் ஒப்பந்தத்தைக் குறித்து ஆலோசிக்க வேண்டு மென்ற பிரேரணையின் மீது, அதை ஆதரித்தும், எதிர்த்தும் பலர் பேசினர் ஆதரித்துப்பேசிய தீவிர காங்கிரஸ்வாதி யான ஷேர்வானி சாஹிப் குறிப்பிட்டதாவது:

ஹிந்துத் தலைவர்களின் உண்மை சொரூபம்

"சென்ற 11-வருடங்களாக நான் காங்கிரஸ்வாதியாக விருந்துவருகிறேன். 'சுயராஜ்யம்'' என்பது ஹிந்து ராஜ்ய மாக இருந்தாலும் எனக்குச் சம்மதமே! பசுபலியைக் குறைக்க நான் அருப்பாடுபட்டிருக்கிறேன். எண்ணற்ற ஊர்வலங்களை மஸ்ஜித்களின் முன்பாக நடத்திச்சென்றிருக் கிறேன் சமூக ஒப்பந்தம் வேண்டியதில்லையென்று 'கடா'

யாமலிருந்தவருவதைக் குறித்து நான் பலவருஷங்களுக்கு முன்னமேயே பேசியுள்ளேன். இத்தகைய மனேபாவங் கொண்ட நான், இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரச்சார இயக்கத்தைக்கண்டு வருத்தப்படுவது ஆச்சரியமாகவிருக்க லாம். "மால்கானு" ராஜபுத்திரர்கள் ஹிந்துக்கள் என்று கருதும்படி இஸ்லாமியத் தத்துவங்களை அறியாதவர்களாக விருந்தால், அவர்கள் தாங்களாகவே விரும்பிய மதத்திலே சேரும்படி விட்டுவிடுவது நல்லது. நேரடியாக மதமாற்றும் படி செய்வதற்கு இது சமயமல்ல. மலையாளத்திலே மாப் பிள்ளைமார்கள் செய்ததுபோல் பலாத்காரத்தினுல் மத மாற்றுவதை எந்த உண்மையான முஸ்லிமும் ஒப்புக் கொள்ளமாட்டான்."

மௌலானுவின் வீரவுரையினின்று அவரின் அடக்க மான தன்மையையும், ஹிந்துமகாசபைக்காரர்களின் குரோ தமான செய்கைகளையும் அன்பர்கள் நிறையிடவேண்டும். காங்கிரஸ் மகாநாட்டிலே, வங்காளத்திலேற்பட்ட ஹிந்து - முஸ்லிம் ஒப்பந்தத்தைக் குறித்து ஆலோசிக்க வேண்டு மென்ற பிரேரணையின்மீது, அதை ஆதரித்தும், எதிர்த்தும் பலர் பேசினர் ஆதரித்துப்பேசிய தீவிர காங்கிரஸ்வாதி யான ஷேர்வானி சாஹிப் குறிப்பிட்டதாவது:

ஹிந்துத் தலைவர்களின் உண்மை சொருபம்

"சென்ற 11-வருடங்களாக நான் காங்கிரஸ்வாதியாக விருந்துவருகிறேன். 'சுயராஜ்யம்" என்பது ஹிந்து ராஜ்ய மாக இருந்தாலும் எனக்குச் சம்மதமே! பசுபலியைக் குறைக்க நான் அருப்பாடுபட்டிருக்கிறேன். எண்ணற்ற ஊர்வலங்களை மஸ்ஜித்களின் முன்பாக நடத்திச்சென்றிருக் கிறேன் சமூக ஒப்பந்தம் வேண்டியதில்லையென்று 'கடா'

வியேயே ஆட்சேபித்திருக்கிறேன். இவைகளிலிருந்து என்னுடைய சுவாபத்தை நீங்கள் தெரிந்திருக்கலாம்! இன்று விஷயாலோசனைக் கமிட்டியில், ஹிந்துத் தலைவர்கள் பலர் வங்காள ஒப்பந்தத்தை யோசனைக்கு எடுத்துக்கொள்ளவும் மறுத்துப்பேசிய தோரணை எனக்குப் பெரிய சந்தேகத்தை உண்டுபண்ணிவிட்டது.''

வங்காள ஒப்பந்த விபரம்-

ஜனாப் ஷேர்வானி குறிப்பிட்ட வங்காள ஒப்பந்தம், ஹிந்து - முஸ்லிம் இணைப்பிற்கு எத்தனை அவசியமானது என்பதை விளங்கிக்கொள்ள கீழ்க்காணும் அதன் ஷரத்துக்களே போதிய சான்று. இவ்வொப்பந்தம் 1924-ல் வங்காள மகாநாட்டிலே ஸி. ஆர். தாஸ் போன்ற பல பிரமுகர்களின் ஆதரவால் தீர்மானிக்கப்பட்டது. சுயவாட்சிக்கு அஸ்திவாரம் ஏற்பட்டதும் ஒவ்வொருவகுப்பினரின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வங்காளத்திலுள்ள ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் கீழ்க்கண்டவாறு நிர்மாணிக்கப்பட்டது.

1. வங்காள சட்டசபையில் பிரதிநிதித்துவம் ஜனத்தொகையைப் பொறுத்துத் தனி வாக்காளர் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அகில இந்திய ஹிந்து முஸ்லிம் ஒப்பந்தம். காங்கிரஸ் மகாசபைகளால்கிலாபத் திருத்தப்படலாம்.

2. ஸ்தல ஸ்தாபனங்களில் பிரதிநிதித்துவம், தொகுதியில் பெரும்பாலோராய் இருப்பவர்களுக்கு 100-ல் 60-ஸ்தான விகிதமும், சிறுபான்மையினருக்கு 40-விகித ஸ்தானமும் இருக்கவேண்டும். அதாவது: முஸ்லிம்கள் பெரும்பா

லோராய் இருந்தால் 60-விகித ஸ்தானம் அவர்களுக்கும்; ஹிந்துக்கள் சிறுபான்மையினராயிருந்தால் 40-விகித ஸ்தானமும் இருக்க வேண்டும். இதில் தனிவாக்காளர் தொகுதி ஏற்படுத்தவேண்டுமா? கலந்திருக்கலாமா? என்பது இரு வகுப்பினரின் அபிப்பிராயம் தெரியும் வரையில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

3. சர்க்கார் உத்தியோகங்களில் 100-க்கு 55-வீதம் முஸ்லிம்களுக்குக் கொடுக்கவேண்டும். அவ்வித நிலை ஏற்படும் வரை காலியாகும் உத்தியோகங்கள் முஸ்லிம்களுக்கே அளிக்கப்படவேண்டும். இடையில் ஹிந்துக்களுக்கு 20-விகிதத்திற்கு மேற்படாது ஸ்தானங்கள் அளிக்கலாம்.

4. எவ்வகுப்பினர் மதசம்பந்தமான தீர்மானங்களும், அவ்வகுப்பினரின் தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் 100-க்கு 75-விகிதம் சம்மதமளித்தாலன்றித் தீர்மானம் நிறைவேற்றக்கூடாது.

5. எவ்விதஊர்வலங்களும் மஸ்ஜித்கள், இந்துகோவில்கள் முன் மேளவாத்தியத்துடன் போகக்கூடாது.

6. மதசம்பந்தமாகப் பலியிடுவதற்குப் பசுக்கள் அறுக்கப்படுவதைத் தடுக்கலாகாது.

7. ஆகாரத்திற்காகப் பசு அறுக்கப்படுவதைப்பற்றி எவ்விதமான சட்டம்பற்றியும், சட்டசபையில் விவாதம் எழக்கூடாது.

8. ஹிந்துக்களின் மத உணர்ச்சிக்குப் பங்கம் நேராமல் பசுக்கள் கொல்லப்படலாம்.

9. ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு டிவிஷனிலும் பாதிப்பேர்கள் ஹிந்துக்களும், மறு பாதிப்பேர்கள் முஸ்லிம்களும் கொண்ட கமிட்டிகள் ஏற்படவேண்டும். இக் கமிட்டி இருவகுப்பினரிடை ஏற்படும் எல்லாவிதத் தகராறுகளையும் மத்தியஸ்தம்செய்து தீர்த்துவைக்கவேண்டும்.

இந்த ஒப்பந்தத்தை எந்த நியாய நோக்குடையோர்களும் எதிர்க்கமாட்டார்கள். இரு சமுகத்தவர்களும் ஏற்றுக்கொள்ளும் விதத்திலே ஆராய்ச்சியின்மீது கொண்டுவரப்பட்ட ஒப்பந்தத்தைத்தான், காங்கிரஸ் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தது! இதைக்கண்டுதான் பிரபல காங்கிரஸ் முஸ்லிமான ஜனுப் ஷேர்வானியும் தக்க வாயாப்பு கொடுத்ததும்!

தீர்மானமா திருட்டுத்தனமா?

காங்கிரஸ் தலைவர்களின் ஹிந்து மனோபாவமும், ஓரவஞ்சனையும் எத்தனை தூரம் ஓங்கியிருந்தது என்பதுபற்றி மற்றோர் சம்பவமும் தக்க ஆதாரமாயிருந்திருக்கிறது. 1921 ஆகஸ்டிலே நடந்த மலையாள முஸ்லிம்கள் சம்பந்தமாகக் காங்கிரஸார் சாட்டிய குற்றங்களை மறுத்து, டில்லி ஜமீஅத்துல் உலமா சபை விசாரணைக்கமிஷன் அறிக்கைவிட்டபிறகும்கூட, 1921-டிசம்பரில், அஹமதாபாதில்நடந்தகாங்கிரஸ் மகாநாட்டு 3-வது தீர்மானத்திலே, "மலையாளத்தில் பலாத்காரமாக ஹிந்துக்களை மதமாற்றுதல் நடந்ததற்கு மகாநாடு விசனிக்கிறது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இதற்கு நேர் மாற்றமாக, "மால்கான" முதலிய மற்றவிடங்களிலே, சுத்தி-சங்கதன் இயக்கத்தினால் பகிரங்கமாகவும், பலாத்காரமாகவும் முஸ்லிம்கள் மதமாற்றம் செய்யப்பட்டதைப் பட்டவர்த்தனமாக நிரூபித்தும்கூட காங்கிரஸ் மகா

நாடு அதைப்பற்றி வருந்தாது 1923-ஆகஸ்டில் நடந்த விசேஷ காங்கிரஸிலே இதைப்பற்றி 15-வதுதீர்மானமாக,

"சுத்தி-சங்கதன் இயக்க சம்பந்தமாக விசாரணைசெய்ய இதற்கென்று நியமிக்கப்பட்ட கமிட்டியார், குறிப்பிட்ட ஸ்தலங்களுக்கு நேரில் சென்று விசாரணைசெய்து, ஆங்குள்ள ஆசாரங்களையும், தப்பான வழிகள் எங்கேனும் கை-யாளப்பட்டால் அவைகளைத் தவிர்ப்பதற்காக உயரிய பரிகார முறைகளையும் கண்டறிந்து பிரசாரம்செய்யவேண்டும்"

என்று மழுப்பலாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இன்னும் என்ன மேற்கோள்கள் வேண்டும், காங்கிரஸ் ஹிந்துத்தலைவர்களின் ஓரவஞ்சனை மனப்பான்மையை விளக்க?

காந்திஜி வெளியில் வந்தார்! ஆனால்...?

1924-ம் வருடமும் பிறந்தது; அத்துடன் வகுப்புப் பூசல்களும், ஜாதிப்பேய்களும் தலைவிரித்தாடின. சுத்தி-சங்கதன் இயக்கங்கள் வெகு தீவிரமாகப் பிரச்சாரம் புரிந்தன, அதன் எதிரொலியாக மூலைமுடுக்குகளிளெல்லாம் ஹிந்து-முஸ்லிம் கலவரங்கள் பெருத்தன. இதே சமயத்திலேதான், "கடும்நோய்" என்ற காரணத்திற்காகப் பலவருடங்கள் தண்டனைக்காலம் மீதமிருந்தும், தவணைக்குமுன்பே காந்திஜி விடுதலை செய்யப்பட்டார். தேசத்தின் குழப்பமான நிலைகண்டு ஒன்றும் பேசாது மௌனம் சாதித்தார். செப்டம்பரில் சுத்தி-சங்கதன் தீவிரப் பிரச்சாரம் செய்ததின் பயனாக "கோஹட்" நகரிலே மாபெருங் கலகம் மூண்டெழுந்தது. உடனே, கலவரத்தின் உண்மை நிலவரத்தை அறிந்துகொள்ளும் பொருட்டு காந்திஜியும், மௌலானா

ஷௌகத் அலியும் ஸ்தலத்திற்குவிரைந்துசென்று விசாரணை நடத்தி, இருவரும் இரு அறிக்கைகளை வெளியிட்டனர்.

அறிக்கையிலும் அநீதியா?

மௌலானா ஷௌகத் அலி தமது அறிக்கையில், "இக் கலவரத்திற்குரிய பொறுப்பை முஸ்லிம்கள்மீது சுமத்துவதற்கு எவ்விதக் காரணமுமில்லை" என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், காந்திஜீ மே29-ந்தேதி வெளியிட்ட அறிக்கையிலோ, சுத்தி-சங்கதன்காரர்கள் செய்த சூட்சிகள் அனைத்தையும் மறைத்துவிட்டு, 'இக் கலவரத்தின் காரணமும், முழுப்பொறுப்பும் முஸ்லிம்கள் மீதே இருக்கிறது" என்று குறிப்பிட்டதோடல்லாது "முஸ்லிம்கள் தீரர்களாகவும், ஹிந்துக்கள் கோழைகளாகவுமிருக்கிறார்கள்"என்றுசப்பைக் கட்டு வேறு கட்டினர். அவர் அத்துடன் நிற்கவில்லை! முஸ்லிம் சமூகத்திற்கு விரோதமாக ஹிந்துக்களைத் தட்டிஎழுப்பும் தோரணையிலே, "யங் இந்தியா" பத்திரிகையில் தொடர்ந்து பல கட்டுரைகளும் எழுதினர்.

21-நாள் உண்ணு விரதம்!

காந்திஜியின் கட்டுரையின் எதிரொலியாக டில்லியிலும் மாபெரும் ஹிந்து-முஸ்லிம் கலவரம் மூண்டது! இதன் பயனாக நாடெங்கும் கொதிப்பும், ஆத்திரமும் இரு வகுப்பாருக்குமிடையே எழுந்தது. இதைக்கண்டு காந்திஜீ டில்லியிலுள்ள மௌலானா முஹம்மது அலியின் வீட்டில் 21-நாள் உண்ணுவிரதமிருந்தார். செப்டம்பர் 26-ந் தேதி முதல் அக்டோபர் 2-ந்தேதி வரை டில்லியில் ஒற்றுமை மகாநாடு கூட்டி ஒரு முடிவிற்கு வந்தனர். இம்மகாநாட்டில் முடிவு செய்தபடி டிசம்பரில் லாகூரிலே சர்வகட்சி மகாநாடு ஒன்

றும் கூடியது. அத்துடன் பஞ்சாபிலே பல கோர நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

அரசியலை விட்டு மதத்தைப் பிரிப்பதா?

சர்வ கட்சியிலே பல ஹிந்து, முஸ்லிம், சிக்கியத் தலைவர்களும் கலந்துகொண்டனர். எனினும், இம்மகாநாட்டில் எல்லா சமூகத் தலைவர்களுக்கும் நியாயம் வழங்க கடமைப்பட்டிருக்க, முஸ்லிம்கள்மீது மட்டும் பல நியாயமற்ற நிபந்தனைகளைச் சுமத்த முற்பட்டனர். ஹிந்துத் தலைவர்கள் சார்பாகப் பின்னாலும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. "முஸ்லிம்களுக்கு உறுதியான முறையில் பஞ்சாபில் பெரும்பான்மை ஏற்பட்டுவிடுமேயாயின், இது பஞ்சாபிற்கு மட்டுமின்றி ஹிந்துஸ்தான் முழுமைக்குமே பெருத்த ஆபத்து வந்து முடியுமாதலால், முஸ்லிம்கள் தங்கள் கோரிக்கைகளை விட்டுவிடவேண்டும். அரசியலை மதத்திலிருந்து பிரித்துவிட வேண்டும்! மேலும், முஸ்லிம்கள் வெளியிலுள்ள இஸ்லாமிய இராஜ்ஜியங்களின் தொடர்பை முறித்துக்கொண்டு முற்றிலும் இந்தியர்களாகவே மாறிவிடவேண்டும்; சுத்தி இயக்கத்தின்மீது ஆட்சேபிக்கக்கூடாது. "தன்ஸீம்" (முஸ்லிம் சமூகப்புனருத்தாரண) இயக்கத்தை முஸ்லிம்கள் விட்டுவிட வேண்டும். ஏனெனில், அது ஹிந்துக்களிடையே எதிர்ப்புணர்ச்சியை உண்டாக்கிவிட்டுவிடடது. தனிப்பிரதிநிதித்துவத்தின் தனித்தொகுதிமீது வற்புறுத்தக்கூடாது! ஜில்லா போர்டு, சட்டசபை, சர்வகலாசாலை, உத்தியோகம் இவைகளில் தனிப்பிரதிநிதித்துவத்தை நீக்கிவிடவேண்டும்" என்பதே. மேற்கண்ட நியாயமற்ற நிபந்தனைகளினால் சர்வகட்சி மகாநாடு தம்பிடிகூட பிரயோஜனமின்றிக் கலைந்துவிட்டது! "கிலாபத்" பதவி கைவிடப்பட்டது.

இந்திய முஸ்லிம்களிடையே இப்படி ஒரே குழப்பமும், கலவரமும் குடிகொண்டிருக்கும்போது அங்கே துருக்கியி

லேயும், ஒரு பெரிய அதிர்ச்சி கண்டது. மார்ச் 3-ந்தேதி நடந்த துருக்கி பார்லிமெண்டிலே, "கிலாபத்" பதவியை துருக்கியினின்றும் ஸ்திரந்தரமாக நீக்கிவிடுவதென்று ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது பிறகு அது அங்கீகரிக்கவும் பட்டுவிட்டது! இதனால் இந்திய முஸ்லிம்கள் அச்சமயத்திலடைந்த துக்கத்திற்கோரளவில்லை. 'கிலாபத்' பற்றி எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போலாயிற்றே என ஏங்கினர். இறுதியாக அக் 'கிலாபத்' பொறுப்பை இதர இஸ்லாமிய நாடுகளுக்கு அளித்துவிடலாமா? என்ற பிரச்சினையிலுழன்று கொண்டிருந்தது கிலாபத் கமிட்டி. முடிவாக அப்பொறுப்பை ஏற்கக்கூடிய வசதிகள் இல்லாததால் அப்பிரச்சினையேகழுவவிடப்பட்டது

22 முஸ்லிம்லீகின் 16-வது மகாநாடு (1924)

பலத்த குழப்பங்களும், மர்ச்சரியங்களும் நிறைந்து விளங்கிய சமயத்திலேதான், அ. இ. மு. லீகின் 16-வது மகாநாடு, 1924-டிஸம்பர் இறுதியில் ஸர் ஸையித் ரிஜா அலி தலைமையின் கீழ், ஜனாப் ஜின்னாவின் பெருமுயற்சியால் பம்பாயில் கூடியது. தலைவர், தமது தலைமையுரையில் இந்தியாவிற்கு சுயஆட்சி அரசியல் அவசியம் வழங்கவேண்டுமென்றும், இந்திய ராணுவத்தில் இந்தியர்களுக்கு முக்கியமான பொறுப்புள்ள பதவிகளைக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தியும், கிலாபத் கமிட்டி, மத சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கும்படி வேண்டியும், இதர அரசியல் விஷயங்களை முஸ்லிம் லீக் கவனிக்கவேண்டுமென்று கூறி, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை நிலவவேண்டுமென்றும் முஸ்லிம்களின் நியாயமான உரிமைகள் தக்கபடி பாதுகாக்கப் படவேண்டுமென்றும் குறிப்பிட்டார் மேலும்

அவர் பேசும்போது, 1918-முதல் 1924-வரை தேசத்தில் ஏற்பட்ட நிலைமைகளை விளக்கி, இனியாகிலும் ஒன்றுபட்டு வாழவேண்டுமென்றும் வற்புறுத்தினர். முடிவாக இலட்சுமணபுரி லீக்-காங்கிரஸ் ஒப்பந்தத்திற்குப் புறம்பாக ஹிந்துக்கள் சிலர் முஸ்லிம்களின் நியாயமான உரிமைகளைக் கைப்பற்றுவதை நிறுத்துமாறு வற்புறுத்தினர். மற்றும் பலர் பேசியபின், "சட்டசபைமுதல் எல்லா ஸ்தாபனங்களிலும் முஸ்லிம்களின் உரிமைகளைக் கவனித்துக்கொள்ளவும், இதர சபைகளுடன் கலந்துபேசி ஆவன செய்யவும், ஒரு பெரிய கமிட்டி நியமிப்பதென்றும்" இதுபோன்ற இன்னும் பல முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு மகாநாடு மங்களகரமாக முடிவுற்றது.

காந்திஜீ தலைமையில் காங்கிரஸ் மகாநாடு.

லீக் மகாநாடு பூர்த்திபெற்ற அதேடிஸம்பர் இறுதியில் அ. இ. காங்கிரஸ் மகாநாடும் கூடியது. அதற்கு காந்திஜீ தலைமை வகித்தார் காங்கிரஸ் மகாநாட்டுடன் அ. இ. பிராமணரல்லாதார் மகாநாடு, ஹிந்தியகாநாடு, ஹிந்துமகாசபை மகாநாடு, கோ (பசு) சம்ரக்ஷணை மகாநாடு ஆகியவைகளும் நடந்தன. காந்திஜீ தமது தலைமைப்பிரசங்கத்திலே, தனித் தேர்தல் தொகுதிகளையும், தீண்டாமையையும் வன்மையாகக் கண்டித்துப் பேசினர். அம்மகாநாட்டின் பத்தாவது தீர்மானம் தீண்டமைப் பேயை ஒழிப்பதென்பது. இம்மகாநாட்டில் பேசிய, மௌலானா முஹம்மத் அலி அவர்கள்

"இந்தியாவின் ஏழைமக்கள் தினம் இரண்டுவேளையாவது சரிவர உண்ணுதவரையில், இந்தியா விடுதலைபெற அருகதையற்றதே! தீண்டாமைபற்றியும் நான் இதுவே கூறுவேன். 'நீங்கள் தீண்டாமையை ஒழிக்காமல் விடுதலையைக்

கேட்பீர்களேயானால் அது சுத்த முட்டாள்தனம். தத்துவ ஞானிகள் என்று நீங்கள் உங்களைக் கூறிக்கொள்வதெல்லாம் வெறும் பாசாங்கேயாகும்''

என்று குறிப்பிட்டார். சுருக்கக் கூறுமிடத்து அம்மாநாடு தேசியப் போர்வையைப் போர்த்திக்கொண்டு தனி ஹிந்து சமூக சீர்திருத்தத்திற்காக வென்றே கூடியது எனலாம்.

புஸ் வாணம்: வேற்று வேட்டு!

வரவர வகுப்புப் பூசல்களும், கட்சிச்சண்டைகளும் வலுப்பெறுவதைத் தடுக்கவும், இந்திய மக்களிடையே ஒற்றுமை நிலவவும், 1925 ஜனவரி முதல்வாரத்தில் டில்லியிலே சர்வகட்சி மகாநாடு ஒன்று கூடியது. இதில் சகலரும் கலந்து கொண்டாலும், முதற்கோணலாக, ''முஸ்லிம்கள் தனிப் பிரதிநிதி ஏற்படுத்துவது தேசிய ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கும்'' என்று ஹிந்துக்கள் சார்பாக பண்டித மாளவியா எதிர்க்கவாரம்பித்தார். இலட்சுமணபுரி ஒப்பந்தத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கோரியதும் இதே பேர்வழிதான்! எனினும், முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதியாக ஜனாப் ஜின்னா தேர்ந்தெடுக்கப்பட்டார் மேலும் பஞ்சாப், வங்காள முஸ்லிம்கள் சிறுபான்மையாக்கப்பட்டாலும், இதர மாகாணங்களில் சிறுபான்மையோர்களுக்கு இலட்சுமணபுரி ஒப்பந்தப்படி உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், இதர உத்தியோகங்கள், பதவிகளின் விகிதாச்சாரம் தெளிவுபடுத்தப்படவேண்டும்'' என்றும் ஜனாப் ஜின்னா வற்புறுத்தினார் உடனே திடீரென்று, முஸ்லிம்களின் தனித்தொகுதியை ஆதரித்துவந்த லாலா லஜபதிராய் ஒரு பல்டி அடித்து அதை எதிர்க்கவாரம்பித்தார். குழப்பத்தைக்கண்ட அலி சகோதரர்கள் ''எல்லா விஷயங்களையும் கவனித்துத் திட்டம் தயாரிக்க ஒரு கமிட்டி நியமிக்கு''ம்படி வேண்டினார்கள் இறுதியாக அதன்படியே ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டது. எனினும் அக்கமிட்டி இறுதிவரை உறுதியுடன் நின்று வேலைசெய்யாது சமாப்தியடைந்தது.

ஆர்ப்பாட்டத்துடன் ஆரம்பித்த "சர்வகட்சி மகாநாடு முடிவு ஒன்றுமில்லாது புஸ் வாணம் வெற்று வேட்டாய் முடிந்தது.

காந்திஜீ கை விரித்தார்!

முயற்சியெல்லாம் இகழ்ச்சியாய் முடிந்துவிடவே, மே, மாதத்திலே கல்கத்தாவில் பிரசங்கம் புரிந்த காந்திஜீ, "ஹிந்து முஸ்லிம் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவர எவ்விதப்பரிகாரமும் எனக்குப் புலப்படவில்லை" என்று பகிரங்கமாகக்கூறிக் கைவிரித்து விட்டார்! அந்தோ! பாவம். இச்சமயத்திலே, பண்டித மாளவ்யா, லாலா லஜபதிராய், சிரத்தானந்தர் காங்கிரஸிலும், ஹிந்து சமூகத்திலும் அபரிமிதமான செல்வாக்குப்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது!

சுயராஜ்யம் வேண்டாம்! பதவிதாம் தேவை!!

அச் சமயத்திலேயுங்கூட காங்கிரஸ் தலைவர்கள், "மாகாண, மத்திய சட்டசபைகளிலே எவ்வளவு ஸ்தானங்கள் கைப்பற்றலாம் எனக் கனவு காணவாரம்பித்தனர். மற்றும் சிலர், மெம்பர்ஸ்தானம் மட்டுமா, மந்திரிபதவிகளையும் கைப்பற்றவேண்டுமென மார்புதட்டினர். எப்படியும் முன்னுக்கு வந்து ஹிந்து சமூகத்தைத் தூக்கிவிடவேண்டுமென்பதே அவர்களின் உள்ளக் கிடக்கையாயிருந்தது. பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பதற்கொப்ப, சொற்ப பதவி வந்துவிட சுயராஜ்ய ஆசையும் பறந்துவிட்டது!

முஸ்லிம் சர்வகட்சி மகாநாடு

ஹிந்துக்களுடன் சேர்ந்து நன்மைபெற முடியாதென்பதைக் கண்டுணர்ந்த ஜனாப் ஜின்னாஹ் பெருமுயர்ச்சியின் பேரில், பாரிஸ்டர் ஜனாப் முஹம்மத் இஸ்மாயில் கான் தலை

மையின் கீழ் அம்ரித்சாரில் ஒரு முஸ்லிம் சர்வகட்சி மகாநாடு கூட்டுவித்தார். இதற்குப் பிரபல முஸ்லிம் தலைவர்களும் விஜயஞ்செய்திருந்தனர். இம்மகாநாட்டின் முக்கிய நோக்கம், "முஸ்லிம் இந்தியமக்களை கட்டுப்பாடு செய்து நமது கோரிக்கைகள், இன்னதென்று முடிவு செய்வதே" யாகும்! எனினும் அப்பொழுதிருந்த நிலைமையைக் கண்ணுற்ற பல தலைவர்கள் இம்மகாநாட்டின் பெயரை தன்ஜீம கான்பரன்ஸ் என்று மாற்றிவைத்தனர். இதன் காரணமாக ஜனாப் ஜின்னாவின் முக்கிய நோக்கம் பாதிக்கப்பட்டாலும் தூக்கத்திலிருந்த முஸ்லிம் சமூகத்தைத் தட்டிஎழுப்பி கடமையை உணரச்செய்தபெருமை இந்த தன்ஜீம் கான்பரன்ஸைச் சார்ந்ததாகவே இருந்தது! முஸ்லிம்தலைவர்களாகவே முன்வந்து ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை உண்டுபண்ண முயற்சித்தும், அது இறுதியில் காங்கிரஸின் சுயநல நோக்கத்திலேயே வந்து முடிந்துகொண்டிருந்தது. எனினும், சமீபகாலமாகச் செய்த கிளர்ச்சிகளினால் 1922-க்குப் பின் சக்திகுன்றிய முஸ்லிம்லீக், மீண்டும் பிடரியை உலுக்கிவிட்டு எழ வசதி ஏற்பட்டது. இதன் காரணஸ்தர் ஜனாப்ஜின்னாஹ் என்றால், அது மிகையாகாது.

1925-காங்கிரஸைப் பற்றி மௌலானா

1925-டிஸம்பர் 2வது வாரம் வெளியான தமது "காம்ரேட்" பத்திரிகையில் மௌலானா முஹம்மத் அலி அவர்கள் அன்றைய காங்கிரஸின் உண்மை நிலை பற்றி எழுதிய தமது நீண்டதொரு கட்டுரையில் குறிப்பிடுவதாவது;

"..........காந்திஜீ காங்கிரஸில் ஈடுபடுவதற்கு முன் காங்கிரஸிலிருந்த மெம்பர்கள், முஸ்லிம்களையும், முஸ்லிம்களின் நிலைமையிலுள்ளவர்களையும் கவனியாமல் அலட்சிய

யாக இருந்தார்களேயானாலும், அந்தக் காங்கிரஸை, இந்தியக் காங்கிரஸென்றும், தேசியக் காங்கிரஸென்றும் கூறலாம். ஏனென்னில், காங்கிரஸில் எல்லா சமூகத்தினரும் வருவதற்கு அனுமதியும் இடமுமிருந்தது. முஸ்லிம்களை சேரவிடாமல் தடுக்கும் சமூக உணர்ச்சி இருந்ததில்லை! முஸ்லிம்கள் தாம் காங்கிரஸில் வந்துசேராமல் விலகிநின்றார்கள். ஏனெனில், முஸ்லிம்கள் காங்கிரஸ்மீது அவநம்பிக்கைகொண்டிருந்தார்கள். சீர்திருத்தங்களை நடத்திக் காட்டுவதில் ஊக்கங்கொண்டிருக்கிறவர்கள், தங்களுடன் சேர்ந்து வேலை செய்யும்படி ஒத்துழையாதார்களைக் கூப்பிட்டால், அவர்கள் மீது ஒத்துழையாதார்கள் எப்படி அவநம்பிக்கைக் கொண்டிருப்பார்களோ, அதே மாதிரி காங்கிரஸ்மீது முஸ்லிம்கள் அவநம்பிக்கைகொண்டிருந்தார்கள். ஹிந்துமகா சபையும், சங்கதன் இயக்கங்களும் காங்கிரஸில் ஆதிக்கம் கொண்டு, செல்வாக்குக்கொள்ள ஆரம்பித்ததால், அந்நிலைமையில் காங்கிரஸை தேசியக் காங்கிரஸென்றாவது, இந்தியக் காங்கிரஸென்றாவது சொல்லிக்கொள்ளமுடியாது! காங்கிரஸ் இயக்கங்களுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், சட்ட சபைகளுக்கும், காங்கிரஸ் தன்னுடைய கட்சி அபேட்சகர்களையே நிறுத்திவைக்கமுடியுமானால், முஸ்லிம்களைக் காங்கிரஸிற்குள் வரவொட்டாமல் தடுப்பதுடன் முஸ்லிம்களின் முகத்திற்கு எதிரே கதவை மூடித் தாளிடுவதுபோலுமாகும்.

இச்சமயதிலும் மௌலானா காங்கிரஸிலேயே இருந்து கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

23 முஸ்லிம்லீகின் 17வது மகாநாடு (1925)

அ. இ. மு. லீகின் 17-வது மகாநாடு அலிகரில் 1925-டிஸம்பர் இறுதியிலே, அக்காலைய வங்க கவர்னரின் நிர்வாக மெம்பரும், சென்னை ஹைகோர்ட் ஜட்ஜாக

யிருந்தவருமான ஜனாப் ஸர் அப்துர் ரஹீம் அவர்கள் தலைமையில் கூடியது. மகாநாட்டிற்குப் பலதிக்கிலிருந்தும் பல பிரபலஸ்தர்கள் வந்து கூடியிருந்தனர். தலைவர் தமது ஆரம்பவுரையை ஆரம்பிக்குமுன், "தூயதூதர் (ஸல்) அவர்கள், "முஸ்லிம்கள் இயற்கையில் நேர்மையான பாதையில் நடந்துகொள்வார்கள்! அவர்கள் எதுவரை ஒரே கூட்டமாய்ச்சேர்ந்து வாழ்வார்களோ, அதுவரை இறைவனின் அருள் அவர்கள்மீது சதமாயிருந்துகொண்டேயிருக்கும்" எனத் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்கள்" என்றுகுறிப்பிட்டு மேலும் கூறியதாவது;

"அகில இந்திய முஸ்லிம்லீகை ஆரம்பமுதற்கொண்டு ஸ்திரப்படுத்தியவர்களில் நானும் ஒருவன். எனினும், பிறகு ஏற்பட்ட எனது சொந்தக் கடமைகளைக் கருதி சிறிது ஒதுங்கி நிற்கவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது! ஆனால், இன்று மீண்டும் நான், இந்திய அரசியல் வானில் பயங்கரமான கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கும் இச்சமயத்திலே முஸ்லிம் லீகில் பங்கெடுத்துக்கொள்ள வசதி ஏற்பட்டமைக்கு மட்டற்ற மகிழ்ச்சி. சிறிது காலமாக அரசியலில் எதிர்பாராத பரபரப்பும், மாறுதல்களும் காண்கிறோம். ஹிந்துஸ்தானத்தின் இதர அரசியல் கட்சிகளின் குழப்பத்தைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால், இச்சமயத்திலே நாம், நமது திட்டம் இலட்சியங்களின் மீது உறுதியாக நிற்பது வேண்டற்பாலது. லீக் கோட்டைக்குள் இருந்துகொண்டே கலவரம் செய்யும் தோழர்களில் சிலர் நம்மிடை இல்லாமலில்லை. இருந்தாலும், (அக்காலையக் கணக்குப்படி) 7-கோடி முஸ்லிம்களின் உரிமைகளைப் பிறர் பறிப்பதைத் தடுக்கும் விஷயத்தில் மட்டும் எல்லோரும் ஒரே முகமாய் நிற்பதைக் கண்டு சந்தோஷிக்கிறேன். சில்லரை பிளவேற்பட்டதால்

'முஸ்லிம் லீக் ஹிந்துஸ்தானத்தின் நன்மைக்காக உழைக்கவில்லை' யென்று ஒரேயடியாகக் கூறிவிடுவது தகாது. இதர சமூகத்தவர்களின் ஹிருதயங்களில் தழும்பும் தேச பக்தி, சமுதாய உணர்ச்சி போலவே, முஸ்லிம்களின் உள்ளங்களிலும் தேச பக்தி, சமுதாய உணர்ச்சி பொங்கிக்கொண்டிருக்கிறது. லீகின் பிரதான இலட்சியமும், உறுதியான உழைப்பும் என்றென்றும் சத்தியத்தின்படியாகவும் நேர்மையாகவுமே இருந்துளது. குறுகிய நோக்கமும், குரோதமனப்பான்மையும்கொண்டவர்கள்தான், "முஸ்லிம் லீக் தேசபக்தியுடன் தொண்டாற்றவில்லை" என்ற பழி சுமத்தமுடியும்! இதைப்பற்றிநமக்குக்கவலையில்லை! 7 கோடி மக்களைக்கொண்ட முஸ்லிம் சமுதாயத்தை அடியோடு அழித்து, நிர்மூலமாக்குகிற நோக்கத்தோடு வேலை செய்துவரும் துரோகிகளின் எண்ணமும், செயலும் நாளடைவில் எத்தகைய கேவல ஸ்திதிக்கு உட்படுமென்பதை அரசியல் ஞானமுள்ள விவேகிகள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டிருக்க முடியும்" என்று கூறிவிட்டு, ஹிந்து முஸ்லிம் இருவரிடையேயும் இருந்துவரும், கலை, ஆச்சார அனுஷ்டானங்களிலுள்ள வேற்றுமைகளை விளக்கினார். மேலும், சுத்தி, சங்கதன், மகா; சபா ஆகியவைகளின் தன்மைகளைக் குறித்து பேசும்போது;

"ஹிந்துக்களின் சுத்தி, சங்கதன், மகாசபா ஆகிய மூன்று பெரும் பயங்கர இயக்கங்களைப் பற்றி இங்கு விளக்குவது அவசியமெனக் கருதுகிறேன். சுத்தி இயக்கத்தின் நோக்கம், குறிப்பாக முஸ்லிம்களை ஹிந்துக்களாக்குவதே! ஹிந்து சமூகத்தைத் தற்காப்புச்செய்து, அவர்களைத் தயார்படுத்தி முஸ்லிம்கள் மீது ஏவுவதே சங்கதன் செய்யும் வேலை. மகாசபா இக்கிளைகளையும் தன் பொறுப்பில் வைத்து நிருவகிப்பதற்கென்றே முளைத்திருக்கிறது. லாலா லஜபதி

ராய், சுவாமி சிரத்தானந்தர் ஆகிய சிலரே இதன் குட்சும தாரிகளாய் விளங்கிக் கொண்டிருந்தனர். இந்த இயக்கங் களைப்பற்றி முஸ்லிம்கள் பயந்து சோர்ந்து போய்விடவில்லை. ஹிந்துக்கள் தங்கள் மீது போர் தொடுக்க அறைகூவி நிற் கிறார்களென்றே இதைக் கருதினர். பல நூற்றாண்டு களுக்கு முன், பலஸ்தீன் புனித பூமியில் முஸ்லிம்களுக்கு எதிராகக் கிளப்பப்பட்ட சிலுவை யுத்தத்தைவிட மிகக் கொடியதாகவே இதைப்பாவித்து வருகின்றனர். ஹிந்துக் களுடைய இந்த இயக்கங்களின் அறைகூவல், வெறும் மதத் திற்காக மட்டுமல்ல! அரசியலிலும் முஸ்லிம்கள் தலை தூக்காவண்ணம் செய்யவேண்டுமென்பதே இந்த இயக்கங் களின் திட்டம்! இந்தப் பெரிய ஆபத்துக்களைத்தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், முஸ்லிம்கள் "தன்ஜீம்" இயக்கத்திற்கு அஸ்திவாரம் போட வேண்டிய தாயிற்று. இந்தியாவின் பூர்வீக சரித்திரத்தை யுணர்ந்த வர்கள், சமீப காலத்திய இவ்வித அரசியல் நெருக்கடிகளை யும், வகுப்புப்பூசல்களையும், மனஸ்தாபங்களையும் இதற்கு முன் கண்டிருக்கவேமாட்டார்கள்" என்று கூறினார். மேலும், சுத்தி, சங்கதன், மகாசபா ஆகியவை முஸ்லிம் சமூகத்திற்குஇழைத்துவந்த பெருங்கொடுமைகள், அநியாயங் கள் இந்தியாவிற்கு முஸ்லிம்சமூகம் செய்துள்ள சேவைகள் ஆகியவைகளை விளக்கிவிட்டு, மேலும் கூறியதாவது:

"இப்படிப்பட்ட தீய பிரசாரங்களினாலும் விபரீத காரியங்களினாலும் தேசத்திற்கு ஏற்படும் பயன்தா னென்ன? வகுப்புக் கலகங்களும் மாச்சர்யங்களும் வளர விடுவதைத் தவிர பிறிதொன்றும் எதிர்பார்க்க முடியாது! இதில் ஆச்சரியமென்னவென்றால், முஸ்லிம்களுக்கு விரோ தமாக இத்தனைச் சதிச்செயல்கள் புரியப்பட்டும், அரசியல்

வியவகாரங்களில் காங்கிரஸ் போன்ற கட்சிகள் முஸ்லிம்களுடன் தொடர்பு கொண்ட காலத்திலேயே அதுபற்றி வருந்தாது மகிழ்ச்சி கொண்டிருந்தன. அந்தோ! என்ன மடமை!! அகந்தாரம்!!'' என்று குறிப்பிட்டார். தலைவரின் பிரசங்கத்தினின்று சிற்சில பகுதிகளைக் கொண்டே அன்றைய முஸ்லிம்களின் நிலை எத்தகையதாயிருந்ததென விளக்கிக்கொள்ளலாம். பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் மகாநாடு இனிது முடிந்தது.

இம்மகாநாட்டிற்குப் பின், சில குறிப்பிடத்தக்க விஷயங்கள் நடந்தன. கான்பூரில் இதே டிஸம்பரில் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தலைமையில் கிலாபத் மகாநாடு நடைபெற்றது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்திய அரசியலைக் கவனிப்பதற்கு வேண்டி ஒரு கமிஷனை நியமித்திருப்பதாக அறிக்கை வெளியிட்டனர். ஹிஜாஸின் ஸுல்தான் இப்னு ஸுஊது அங்கிருந்த ஷரீப் ஹுஸைனை விரட்டிவிட்டு ஹிஜாஸ் மாகாணத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.

பயங்கர நிலை!

புத்தாண்டு பூத்தது; பின் தொடர்ந்தன பல இன்னல்கள். தேசமெங்கணும் வர்க்கப்பூசல், கட்சிப்பூசல், மதப்பூசல் தலைவிரித்தாடின. சுத்தி, சங்கதன், இந்துமகா சபை அனைத்தும் அவற்றிற்குத் தூபமிட்டன. காந்திஜீ உட்பட காங்கிரஸ் ஹிந்துத் தலைவர்கள் அனைவரும் ஒத்து ஊதினர். ஊடாகவே, காங்கிரஸில் பல பிரிவுகள் தோன்றி ஒன்றையொன்று முட்டிக்கொண்டன. இன்னல்கள் இவ்வளவு போதாதென்று இந்தியச் சட்டசபைத்தேர்தல் ஒன்றுவந்து நடுவில் புதிதாகக் குதித்தது! சட்டசபைக்கென்று போட்டிப் பிரசங்கங்கள் வலுத்தன; அத்துடன் ஆங்காங்கு சில்லறைக் கலகங்களும் கிளம்பின.

சுயராஜ்ஜியத்தின் அர்த்த மென்ன?

ஹிந்துத் தலைவர்கள் பெரும்பாலோரின் ஆதரவு அதிகாரவர்க்கத்தின்பக்கம்! அச்சமயத்திலும்கூட சில முஸ்லிம் தலைவர்கள் காங்கிரஸில் பிரதிநிதித்துவம் வகித்து வந்த போதும், காங்கிரஸின் பூரா நோக்கமும் ஹிந்து மனப்பான்மையாகவேயிருந்துவந்தது. "சுயராஜ்ஜியம் என்பதின் அந்தரங்கநோக்கம் ஹிந்து மெஜாரிடியினரின் ஆதிக்க ராஜ்ஜியம்" என்பதாகக் கருதி உழைக்கப்பட்டது. பிரசாரமும் இதேமாதிரி பலத்துநின்றது. முடிவுஎன்ன? விபரீதம்! பயங்கரம்!! மகாகோரம்!!!

110-பேர் இறந்தனர்; 975-பேர் காயம்!

1926-ஏப்ரலில், சுத்தி, சங்கதன், ஆரிய சமாஜ் ஆகியவைகள் போட்ட தூபத்தால், மூண்ட ஹிந்து முஸ்லிம் கலவரம், 110-பேரைக் கொன்று, 975-பேரைக்காயப்படுத்திய தோடு முடிந்தது! புதிதாக விஜயஞ்செய்த வைஸ்ராய் லார்டு இர்வின், நிலைமையைச் சமாளிக்கப்பட்ட கஷ்டங்கள் விழலுக்கிறைத்தநீராயின. கலகத்தின் மூல காரணமென்ன வென அன்பர்கள் ஐயமுறலாம். தூபம் எவ்வாரிடப்பட்டதென விளக்கம் காணுங்கள்:

'காங்கிரஸில்முஸ்லிம்களும்சேர்ந்திருக்கிறார்களென்று எடுத்துக் காட்டுவான் வேண்டியே, சில கூலி முஸ்லிம்களைப் பிடித்துப்போட்ட அந்த நாட்களை அதற்குள் மறக்கவில்லை! காங்கிரஸ், உண்மையில் ஹிந்துசமூக சபையே யாகும்"

இது லயால்பூரில் திரு. லாலா லஜபதி ராய் பிரசங்கம் செய்ததாக டில்லி "தேஜ்" பத்திரிகையின் 24—11—26

இதழின் இரண்டாம் பக்கத்தில் வெளியிடப்பட்டதிலிருந்த குறிப்பு.

"நான் ஹிந்து அல்ல' என்று செய்யப்படும் கிளர்ச்சி உண்மையற்றதாகும். நானோ பண்டித மாளவியா போன்ற பக்கா ஹிந்து. நான் ஓர் அடி முன் சென்று காங்கிரஸ் ஹிந்துச் சபையே என்பதை உறுதிப்படுத்துகின்றேன். 1920, 22-ல்தான் ஓர் சில முஸ்லிம்கள் அதில் சேர்ந்தனர். துவக்கத்திலிருந்தே காங்கிரஸ் ஹிந்துக்களின் சபையேயாகும்"

திரு. பண்டித மோதிலால் நேரு கான்பூரில் செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டதாக லாஹூர் "ஷேரே பஞ்சாப்" பத்திரிகையின் 19—2—26-இதழில் வெளியாயிற்று.

"காங்கிரஸைத் "தேசிய சபை" யென்று கூறிக்கொள்ளும் காங்கிரஸ் முஸ்லிம்கள், தங்கள் முகவிலாஸத்தைக் கொஞ்சம் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளட்டும்! அப்படியின்றி மேலும், மேலும் தங்கள் பல்லவிகளையே பாடிக் கொண்டிருப்பின், மேற்கொண்டு பல பூசல்களை வெளிப்படுத்த நேரிடும்!"

இது அதே மோதிலால் நேரு மற்றோரிடத்தில் குறிப்பிட்டதாக அஹ்மதாபாத் "பை காம்" பத்திரிகை வெளியிட்டது.

இதைவிட மிக மோசமாகவும், ஆத்திரம் மூட்டத்தக்கதாகவும், சிரத்தானந்தர், பண்டித மாளவியா, பாய் பரமானந்தர், டாக்டர் மூஞ்சே முதலானோர் பேசியும் அறிக்கைகள் விட்டும் இருக்கின்றனர். இதிலிருந்தே, ஹிந்துத் தலைவர்கள் முஸ்லிம் சமூகத்தின்மீது வைத்துள்ள அன்பு எத்

தன்மையானது என்பதை ஊகித்துக்கொள்ளலாமல்லவா? இதை உத்தேசித்துத்தாம் 1925-டிஸம்பர் 26-ல் தர்பங்கா வில் பேசிய "ஜமீஅத்துல் உலமாயே ஹிந்த்" சபை காரிய தரிசி மௌலானா அஹ்மத் ஸயித் சாஹிப் முன்கூட்டியே குறிப்பிட்டதாவது,

"இந்தியாவில் அக்காலே இஸ்லாமிய அரசாங்கம் நீங்கிய அச்சந்தர்ப்பத்திலே மாத்திரம் நாடு ஹிந்துக்கள் கைவச மாகியிருப்பின், முஸ்லிம்களின் கதி அதோகதியாய்ப்போ யிருக்கும். அடிமையாயிருந்துகொண்டே அவர்கள் செய் யும் கொடுமை, அப்பப்ப! எதிர்காலத்திலே இவர்கள் அதி காரிகளாகிவிட்டால், இவர்கள் என்னதான் கொடுமை செய்யமாட்டார்கள்?"

(—டில்லி, "அல் ஜமீ அத்" 10-1-26-ல் 9ம் பக்கம்.)

'மஹாஆத்மா'வின் பதுங்கல்!

அலி சகோதரர்கள், டாக்டர் அன்சாரி, அபுல்கலாம் ஆஜாத் போன்ற பல முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள், நாட் டில் சமரசத்தைப் புகுத்த எவ்வளவோ முயற்சிகள் செய் தனர். சுத்தி, சங்கதன் போன்ற குதர்க்கவாத சபைகளைக் கண்டிக்கும் முஸ்லிம்களையும் கண்டித்தனர். அமைதி நிலவ அறிக்கைகள் பல விட்டனர். ஹிந்து-முஸ்லிம் சமரசத்தில் அவர்கள் காட்டிய ஆர்வத்தில் ஆயிரத்திலொரு பங்குகூட காங்கிரஸ் தலைவர்கள் காட்டவில்லை! மகா ஆத்துமாவென புகழப்பட்ட காந்திஜீ, ஸபர் மதி ஆச்சிரமத்தில் பதுங்கிக் கொண்டார், மோத்திலால் நேரு போன்ற இதர தலைவர் களும் வாய்மூடி மௌனிகளாயினர். சமரசப்படுத்த முன் வரும்படி அவர்களை முஸ்லிம் தலைவர்கள் எவ்வளவோ வருந்தி அழைத்தும், பிரயோஜனப்படாது போயிற்று!

காந்திஜீக்கு அச்சமயத்திலே, சாமி சிரத்தானந்தர் ஹிருதயம்போலவும், மாளவியா, மூஞ்சே இருகண்கள்போலவும் இருந்துவந்தனர். காங்கிரஸ் ஹிந்துத் தலைவர்களின் மனோபாவத்தைக் கண்டித்துப் பல அறிஞர்கள்விட்ட அறிக்கைகளெல்லாம் அநாவசியமாய்ப் போய்விட்டன.

இஸ்லாத்தை தூஷித்தவர் கதி!

சாமி சிரத்தானந்தர் சர்வ சதாகாலமும் முஸ்லிம்களையும், இஸ்லாத்தையும், இஸ்லாமியப்பெரியார்களையும் தூஷிப்பதும், கண்டிப்பதும், பிரசுரங்கள்வெளியிடுவதுமாக இருந்துவந்தார். வரவர இவருடைய துர்ப்பிரசாரம் வலுத்துவந்தது. இறுதியாக அவர், தூய தூதர் (ஸல்) அவர்களையும் தூஷித்துப் பேசவும் எழுதவும் முற்பட்டார். முஸ்லிம்கள் மனம் கொதித்தனர்; ஆவேசம் கொண்டனர். மதபக்தி மிகுந்த முஸ்லிம்கள் முன்பு, அவர்கள் மதத்தையே துவேஷமாகப் பிரசாரம் செய்துவருவதைக் கண்டு எந்த உண்மை முஸ்லிம் தான் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? முடிவாக ஒரு நாள் சாமி சிரத்தானந்தர் தமது கர்மவினையின் பயனாக காஸி அப்துர்ரஷீத் என்பவரால் கொலையுண்டார்.

குருவி உட்கார பனம்பழம் வீழ்ந்தது!

காஸி அப்துர் ரஷீத் அவசரப்பட்டதனாலே அம்மாதிரி முடிந்துவிட்டது என முஸ்லிம் தலைவர்கள்கூட வருந்தினர். ஆனால், ஹிந்துக்கள் இதையே சாக்காக வைத்துக்கொண்டு முஸ்லிம் சமூகத்தின்மீதே பெரும் பழி சுமத்தினர்; எதிர்த்து அறிக்கைகள் பல விட்டனர்; கண்டனக்கூட்டங்களும்போட்டனர். இந்தக்கிளர்ச்சியிலே காந்திஜீயும்பெரும் பங்கெடுத்துக்கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது! முடிவாக இந்த எதிர்ப்புகளெல்லாம் ஓர் உருவாகி, 1926-டிஸம்

பர் 26-ந்தேதியில் கௌஹத்தியிலே நடந்த காங்கிரஸ் மகா நாட்டின் முதல் தீர்மானமாக முடிவுபெற்றது. தீர்மானத்திலே, "அவரது மரணத்தாலே நாட்டுக்கு ஈடுசெய்ய முடியாத மகத்தான நஷ்டம் விளைந்திருக்கிறதென அபிப்பிராயப்படுகிறது" என்று குறிப்பிட்டிருந்தது. மேலும், சிரத்தானந்தர் ஞாபகார்த்தநிதியாக 10-இலட்சம் ரூபாய் திரட்ட வேண்டுமென்றும், அந்நிதியிலிருந்து அவரால் இயக்கப்பட்டுவந்த (இஸ்லாமிய எதிர்ப்பு பிரசார) வேலைகள் தொடர்ந்துசெய்யவேண்டுமென்றும், நீண்டதோர் அறிக்கை மாளவியா, லஜபதிராய், சுரேந்திர நாத், காந்திஜி கையெழுத்துடன் வெளியிடப்பட்டது. இஸ்லாத்தையே இந்தியாவிலிருந்து விரட்டிவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் சிரத்தானந்தர் உழைத்துவந்ததை, மேற்கொண்டும் அவ்வேலையை தொடர்ந்து நடத்த காந்திஜீ உட்பட பலர் முயற்சித்ததை அன்பர்கள் ஊன்றிக் கவனிக்கவேண்டும்! காந்திஜி அந்தரங்கத்திலே முஸ்லிம்கள்பால் எத்தன்மைத்தாய நோக்கம் கொண்டிருந்தாரென்பதையும் முஸ்லிம் சகோதரர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

மற்றோர் எடுத்துக்காட்டு!

காங்கிரஸ் ஹிந்துத்தலைவர்கள் முஸ்லிம்கள்பால்கொண்டுள்ள மனோபாவத்தை விளக்கும் மற்றோர் எடுத்துக்காட்டையும் கவனியுங்கள்.

இந்தியாவின் இதர மாகாணங்களுக்கு அளிக்கப்பட்ட சீர்திருத்தத்தைப்போலவே, எல்லைப்புறமாகாணத்திற்கும் வழங்கப்பட வேண்டுமென்பது இந்திய முஸ்லிம்களின் கோரிக்கை! காங்கிரஸ் இதனை ஆதரித்தது என்றாலும், அதன் மற்றொரு சுயரூபமான ஹிந்து மகாசபை பலமாக

எதிர்த்து நின்றது. விஷயம், 1926-பிப்ரவரியிலே இந்தியா சட்டசபையில் பலத்த விவாதத்திற்கு இலக்காகும் பிரச்சினையாகவும் வந்து முடிந்தது. மாளவியா, லஜபதிராய் இவ்விருவர்களும் கோரிக்கையை மிகக் கேவலமாகத் தாக்கிப் பேசினர். சுயராஜ்யக்கட்சியின் தலைவரான மோத்திலால் நேரு தாமும் எதிர்த்தலோடல்லாது தமது கட்சியைச்சார்ந்த இதரர்களையும் பலமாக எதிர்க்கத்தூண்டினர். இதனால், அக்கட்சியிலிருந்த முஸ்லிம்களுக்கிடையே பிளவேற்பட்டது. சிலர்கீழ்ப்படிந்தனர்; சிலர் நேருவைஎதிர்த்து நின்றனர். மோத்திலாலை எதிர்த்து சுயராஜ்யக் கட்சியிலிருந்து முதன் முதலில் வெளியேறியவர், சென்னை தென் தொகுதிப் பிரதிநிதியாயிருந்த மௌலவி ஸெய்யித் மூர்த்துஜா சாஹிப்பஹதூர் ஆவர். பாட்னாவைச்சார்ந்த மௌலவி ஷபீதாவூதியும் அவரைப் பின் தொடர்ந்தார். மனவருத்தத்தையளிக்கக்கூடிய இச்சம்பவங்களைக் காண்பதற்கு. கடும் நோயையும் பொருட்படுத்தாது மௌலானா முஹம்மது அலி (ஜௌஹர்) அவர்களும் சட்டசபைக்குச் சென்றிருந்தார்.

மௌலானா ஜௌஹரின் சாட்டை!

மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் மேற்கூறிய சம்பவத்தை யொட்டித், தமது "ஹம்தர்த்" பத்திரிகையில் பின்வருமாறு எழுதினர்.

"நமது தேச சோதரர்கள் (ஹிந்துக்கள்) இதை உணர்ந்துகொள்ளவேண்டிய அவசியம்வந்துவிட்டது! அவர்களுடைய மதத்துவேஷ உணர்ச்சியானது, அவர்களுடைய எதிரிகளுக்குமட்டு மில்லாது என்னைப்போன்ற உண்மை நண்பர்களுக்கும் எவ்வளவு மனவருத்தத்தை உண்டுபண்ணிவிட்டதுஎன்பதை அவர்கள் அறிவார்களா? முஸ்லிம்களுக்கு

அவர்கள் எத்தனை பெரிய அநீதிகள் விளைத்தாலும், இவ்வுதவி (எல்லைப்புற மாகாணத்திற்கும் சீர்திருத்தம்) எந்நிலையிலும் அவர்கள் செய்யத்தான் வேண்டும்! இதை மோதிலால் நேரு இதர அவருடைய கட்சி மெம்பர்கள் உணர்ந்திருக்கத்தான் செய்வார்கள். முஸ்லிம்கள் செய்த உதவி சம்பந்தமாக இவர்கள் உத்தேசிக்கும் திட்டம் மிகவும் தவறானது என்பதை உணரவேண்டும்."

மற்றோர்சமயம் மௌலானா, மோத்திலால் நேருவைப்பற்றித் தமது "ஹம்தர்த்" பத்திரிகையில் குறிப்பிடும்போது,

"முதலாவதாக மோத்திலால் நேரு, காந்திஜீசிறையிலிருந்தகாலத்தில் அவருக்கு விரோதமாக கலகஞ்செய்து காங்கிரஸைத்துண்டாடினார். இரண்டாவதாக, காங்கிரஸிற்கு விரோதமாகக் கலகஞ்செய்த லஜபதிராயின் உதவி பெறுவதற்காக எல்லைப்புற மாகாணம், சுயராஜ்யக்கட்சி ஆகிய இரண்டிலும் முஸ்லிம்களுக்கிருந்த பாத்தியதையும், உரிமைகளையும் அபகரிப்பதற்கு இடங்கொடுத்து, சத்தியத்தின் மீது உறுதியாக நிற்கவில்லை! இதுதான் எங்களிருவரிடை பேதம் எழுந்ததற்குக்காரணம்." என்று எழுதினார்.

மீண்டும் சர்வகட்சி மகாநாடு; ஆனால்...!

தேசத்தின் நிலைமை, மக்களின் மனப்பான்மை, இவைகளடைந்த கேவலநிலைமை இதை எல்லாம் கண்டு மௌலானா ஜௌஹர் மனம் பதைத்தார். எப்படியும் ஒற்றுமை-சுபிட்சம் நிலவவைக்க முனைந்து, இதர தோழர்களையும் உடன் சேர்த்துக்கொண்டு அதே வருட இறுதியிலே டில்லியின் சர்வ கட்சி கான்பரன்ஸ் ஒன்று கூட்டுவித்தார். பல கட்சியினர்களும் இதிலே பங்கெடுத்தனர். எனினும் முடிவு

பலனற்றதாகிவிட்டபடியால், "கான்பரன்ஸ்" ஒத்திவைக்கப் பட்டது! இக் காண்பரன்ஸிற்கென்று அலி சகோதரர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி அபாரமானது! இதற்கு முன், மௌலானா ஜௌஹர் டில்லியில் மேமாதத்தில், "ஸ்பேஷல் கிலாபத் கான்பரன்ஸ்" கூட்டுவித்தார். அதைப்பற்றி அவர் தமது பத்திரிகையில்,

"பண்டித மோத்திலால் நேரு, ஹிந்து மகாசபைக்காரர் களைக் கண்டித்து ஒரு அட்சரங்கூட சொல்லமறுத்துவிட்ட போது, ஹக்கீம் அஜ்மல் கான் அவரை நோக்கி, "இனி நீங் கள் முஸ்லிம்களிடத்தில் எதையும் எதிர்பார்க்கவேண்டிய தில்லை" என்று கூறிவிட்டார். எங்கள் முயற்சிகள் அனைத் தும் பலிக்காமலாக்கிவிட்டதுடன், ஹிந்து மகாசபைக்காரர் களைக் கண்டித்து காங்கிரஸ் ஹிந்துத் தலைவர்களில் ஒருவர் கூட வாய்திறக்கவில்லை' பிறகுதான், நாங்கள் டில்லியில் "ஸ்பெஷல் கிலாபத்கான்பரன்ஸ்" கூட்டினோம். இதன் வர வேற்புக் கமிட்டித்தலைவராக ஹக்கீம் அஜ்மல் கானையும், தலைவராக மௌலானா ஸையித் சுலைமான் நத்வியையும் தேர்ந்தெடுத்தோம்."

என்று குறிப்பிட்டிருக்கிறார். மகாநாட்டின்நடவடிக்கை களும், தீர்மானங்களும் சமரச மனப்பான்மையுடனும் நீதி நேர்மையை அடிப்படையாகக்கொண்டும், ஒற்றுமை-ஐக்கி யம் ஆகியவைகளை வற்புறுத்தியும் இருந்தன. ஹிந்துத் தலைவர்கள் இம்மகாநாட்டை ஏறிட்டும்பார்க்கவில்லை; மாறாக அதன்மீது '.வகுப்புவாதப்" பழியைச் சுமத்தினர். பரிக சித்தனர்.

24. முஸ்லிம்லீகின் 18-வது மகாநாடு (1926)

குழறலும், கொந்தளிப்பும் மிகுந்த நேரத்திலே அ. இ. மு. லீகின் 18-வது மகாநாடு ஜனாப் ஸர் ஷேக் அப்துல் காதிர் சாஹிப் (பாரிஸ்டர்) அவர்களின் தலைமையின் கீழ், 1926-டிஸம்பர், 29, 30, 31-ந் தேதிகளிலே லாஹூரில் கூடியது. மகாநாட்டிற்கு, லீகின் செல்வாக்கு அபரிமிதமாகி விட்டபடியால் ஏராளமான பேர்கள் பல திக்கிலிருந்தும் விஜயஞ்செய்திருந்தனர். ஜனாப் கான் பஹாதூர் பீர் ஜாதா முஹம்மத் ஹுஸைன், M. A., அவர்களின் வரவேற்புரைக்குப் பின், தலைவர் தலைமையுரையை நிகழ்த்தினார். அதில் அவர் குறிப்பிட்டதாவது:-

“இப்பொழுது தேசமிருக்கும் நிலைமையில் முஸ்லிம்கள் ஒன்றுபட்டு நமது கோரிக்கைகளை வற்புறுத்தி நமது சமூகத்தைப் பாதுகாக்கவேண்டும். இது நமது முஸ்லிம்லீக் மூலமாகவே முடியுமாதலால், அவசியம் நாம் இந்த லீகைப் பலப்படுத்தவேண்டும். முன்பு இலட்சுமணபுரியிலே செய்யப்பட்ட ஹிந்து-முஸ்லிம் ஒப்பந்தத்தைப் புதிய முறையில் மீண்டும் காங்கிரஸ்-லீக் பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து சீர்திருத்தம்செய்யவேண்டும்! முஸ்லிம்களுக்கு சட்டசபைகளிலும், சர்க்காரிலும்போதிய அளவுபிரதிநிதித்துவம் ஏற்படவேண்டும்! தனித்தொகுதிகளின் முறையினால்தாம் முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்கமுடியும். வகுப்புக்கலவரங்களும், சச்சரவுகளும் நீங்க அதுவே சிறந்தபரிகாரம்! அதில் ஹிந்துக்கள்பயப்படுகிறவிதம் ஒன்றும்நிகழப்போவதில்லை!”

என்று கூறிவிட்டு முஸ்லிம்கள் யாவரும் ஒன்றுபட்டு சமீபத்தில் விஜயஞ்செய்யவிருக்கும் விசாரணைக் கமிஷன்

முன்பாகத் தங்களின் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டு மென்றும், சிரத்தானந்தர் மரணத்தைக்குறித்து அநுதாபம் காட்டியும் தமது பிரசங்கத்தை முடித்தார். மூன்றுநாட் கள் வரை மகாநாடு நடந்து பல தீர்மானங்கள் செய்யப் பட்ட பின் இனிது முடிவுற்றது.

டில்லித் தீர்மானங்கள்

நாட்டில் ஒன்றுமை ஏற்படுத்தவும், ஒன்றுபட்ட கோரிக்கைகளைத் தயாரிப்பதற்கும் வழியில்லாதுபோகவே, அலி சகோதரர்களும், ஜனுப் ஜின்னுவும் கலந்தாலோசித்து, "முஸ்லிம்களின் கோரிக்கைகள் என்ன?" என்பதை ஒரு முடிவான அபிப்பிராயத்திற்கு வர, எல்லாக் கட்சிகளையும், பல அபிப்பிராயம் கொண்ட அத்தனை முஸ்லிம் தலைவர் களையும் அழைத்து 1927-மார்ச் 20-ந்தேதி டில்லியில் ஒரு கூட்டம் கூட்டினர். இதற்கு ஜனுப் ஜின்னுவே தலைமை தாங்கினுர். முடிவாக 7-மணி நேரத்திற்குப்பின், கலப்புத் தொகுதிகளை ஒப்புக்கொள்ளலாமென்ற முடிவிற்கு வந்து கீழ்கண்ட மூன்று நிபந்தனைகளை முடிவுகட்டினர்.

1. ஸிந்துவைப் பம்பாயினின்று தனிமாகாணமாகப் பிரித்துவிட வேண்டும். எல்லைப்புரம், பலுச்ஸிஸ்தானம் ஆகியவைகளுக்கும், இதர மாகாணங்களில் அளிக்கப்பட்ட அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

2. பஞ்சாப், வங்காளம் ஆகிய இரு மாகாணங்களி லும் இப்போதிருப்பது போலவே முஸ்லிம்களின் பெரும் பான்மையை உறுதிப்படுத்தவேண்டும்.

3. மத்திய சட்டசபையில் முஸ்லிம்களுக்கு மொத் தம் மூன்றிலொருபங்கு ஸ்தானம் அளிக்கவேண்டும்.

கூட்டுத் தொகுதி வேண்டாம்!

மேற்காணும் நிபந்தனைகளுக்கு அரசியல் வட்டாரத்தினர் "டில்லி ஆலோசனைகள்" என்றநாமமிட்டனர். இந்த நிபந்தனைகள், காங்கிரஸிடமும், அரசாங்கத்திடமும் சமர்ப்பிக்கப்பட்டன. இந்தக் கோரிக்கைகளில், கலப்பாக கூட்டுத்தொகுதிகளை ஆதரித்திருப்பதை "கவிச்சக்ரவர்த்தி" டாக்டர் அல்லாமா ஸர் முஹம்மது இக்பால் அவர்கள் பலமாக ஆட்சேபித்தார். (அது அச்சமயத்தில் கவனிக்கப்படாவிடினும் 1929-ல் முஸ்லிம் தலைவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் இங்கு குறிப்பிடத்தக்கது.) முஸ்லிம் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆலோசனைகளைப் பற்றி பரிசீலிப்பதற்காக 1927-மார்ச் 21-ந்தேதி டில்லியில் ஹிந்துமகாசபைக்காரரான ஸர் ஹரி சிங் தலைமையில் ஒரு கூட்டம் கூடி, முஸ்லிம்கள் கூட்டுத்தொகுதியை ஒப்புக்கொண்டதைப் பாராட்டியும், இதர நிபந்தனைகள் ஏற்க முடியாதவைகளென்றும் தீர்மானிக்கப்பட்டது. டாக்டர் அன்ஸாரியின் முயற்சியால் மே 5-ந்தேதியில் நடந்த காங்கிரஸ் நிருவாக சபையிலும் இதை ஆதரித்து தீர்மானம் செய்யப்பட்டது! காங்கிரஸின் அச்சமயத் தலைவரான சீனிவாச அய்யங்கார் முஸ்லிம்களின் மேற்காணும் கோரிக்கைகளுக்கு பலமாக ஆதரவுகாட்டி, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு எப்படியும் வழிகோல முயன்றார்,

"ரங்கீலா ரசூலு"ம், ராஜ்பாலும்

ராஜ் பால் எனும் ஆரிய சமாஜிக்காரர் எம்பிரான் நாயகம் (ஸல்) அவர்களை மிகக் கேவலமான முறையில் முஸ்லிம்கள் மனம் புண்படும் விதத்திலே, "ரங்கீலா ரசூல்" என்ற தூஷணை நிரம்பிய நூலொன்றை எழுதி வெளியிட்டதினாலே, ஆரியசமாஜக்காரர்களுக்கும், முஸ்லிம்களுக்கு

யிடையே பெருத்த வகுப்புப்பூசல் கிளப்பிவிடப்பட்டு, பெருங் கலவரமும் மூண்டது! இதைப்பற்றி காந்திஜீயோ, காங்கிரஸோ எவ்விதமுயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. முஸ்லிம்கள் ராஜ்பால் மீது நடவடிக்கை எடுத்து கீழ்கோர்ட்டில் ராஜ்பால் தண்டிக்கப்பட்டும் ஹிந்துக்களின் முயற்சியால் ஹைகோர்ட்டில் விடுதலைசெய்யப்பட்டார்!

ஜட்ஜு மீது குற்றமில்லை!

ராஜ்பால் விடுவிக்கப்பட்டதும், முஸ்லிம்கள் "அநியாயம்! அநியாயம்!" என ஆர்ப்பரித்தனர், அலறினர். இதனை மௌலானா முஹம்மத் அலி அவர்கள், விஷயத்தை நுணுக்கமாயறிந்துகொண்டு "ஹைகோர்ட் ஜட்ஜ் மீது குற்றமில்லை; குற்றவாளியைத் தண்டிப்பதற்குத் தகுந்த சட்டம் இந்திய அரசாங்கத்தினிடமில்லை" என்று அறிக்கைவிட்டு, அதற்குரிய திட்டங்களிட்டு, அதை ஜனப் ஸர் துல்பகார் அலி கான் அவர்கள் மூலமாக இந்தியசட்டசபையில் ஒரு மசோதாவாகக் கொண்டுவரச்செய்து, அங்கீகரிக்கப்பட்டு, சட்டமாகவும் செய்யப்பட்டது. எனவே, அதன்மூலம், "எந்த மதத்தையோ, அதன் ஸ்தாபகரையோ தாக்கியெழுதினால் அது குற்றமாகும்" என்று தீர்மானிக்கப்பட்டது.

ஒற்றுமை வித்து முளைக்குமா?

நாட்டிலே நிலவும் சாதிச் சண்டை, சமயச் சண்டைகளை ஒழித்து ஒரு நிரந்தரமான ஒற்றுமை ஏற்படுத்துவதென்ற நன் நோக்கத்துடன், அலி சகோதரர்களும், ஜனப் ஜின்னாவும் இதர முஸ்லிம்தலைவர்களும் ஒன்றுகூடி மீண்டும் முயற்சிசெய்து ஒற்றுமைவித்தை முளைக்கவைக்க முற்பட்டனர். ஆகஸ்ட் 27-ந் தேதியன்று ஸிம்லாவில் மத்திய 'கிலாபத்' கமிட்டியின் கூட்டம் மௌலானா ஷௌகத் அலி தலை

மையில் நடந்தது. அதில் ஒற்றுமைக்கு வித்தப்போடும் முறையில், எல்லாச்சமூகத்தலைவர்களையும் அழைப்பதென்று முடிவுசெய்யப்பட்டது. தீர்மானம் ஹிந்துமகாசபை, காங்கிரஸ், இதர சபைகளின் தலைவர்களுக்கு மௌலானா ஷௌகத் அலி மூலம் அறிவிக்கப்பட்டது. இதன்படி இரு சமூகத் தலைவர்களும் ஆகஸ்ட் 29, 30 தேதிகளில் ஒன்று கூடி ஒற்றுமை மகாநாட்டிற்கு ஜனுப் ஜின்னாவைத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தனர். செப்டம்பர் 16-ந் தேதி மகாநாடுநடத்துவதென்றும், அதில்ஆலோசிக்கவேண்டிய விஷயங்களைப் பரிசிலனை செய்வதற்கு ஒரு ஸப்கமிட்டி நியமிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

கருவிலே குலைந்த ஒற்றுமைச் சிசு!

சப் கமிட்டி பல சமயங்களிலும் கூடிப் பலர்த ஆலோசனை செய்தது. முடிவாக, முன் அறிவித்திருந்தபடி செப்டம்பர் 16-ல் ஸிம்லாவிலுள்ள இந்தியா சட்ட சபையின் கமிட்டி அறையொன்றில் ஜனுப் ஜின்னு தலைமை தங்க மகாநாடு ஆரம்பமாயிற்று. மகாநாடு தொடர்ந்து 16, 17, 18-ந் தேதிகளில் நடைபெற்றது. மகாநாட்டில் ஹிந்து, முஸ்லிம், சீக்கியத்தலைவர்கள் ஏராளமாகக் கலந்துகொண்டனர். "பசு குர்பானி, மஸ்ஜித்முன் மேளம்" இந்த இரண்டு விஷயங்கள் குறித்து பலத்த விவாதம் நடைபெற்றது. முஸ்லிம் தலைவர்கள் எவ்வளவோ விட்டுக்கொடுத்தும், ஹிந்துத் தலைவர்களில் குறிப்பாக மாளவியா, முஞ்சே போன்றவர்கள் குறுகிய மனப்பான்மையும், பிடிவாதகுணமும் கொண்டிருந்ததால் முடிவான அபிப்பிராயத்திற்கு வர சாத்தியமற்றுப் போய்விட்டது. காங்கிரஸ் தலைவர்களான திரு எஸ். சீனிவாச ஐயங்கார் போன்றோர், முஸ்லிம் தலைவர்களின் அபிப்பிராயங்களை ஆதரித்தும் பிரயோஜனப்படாது முடி

வில், ஒற்றுமைச் சிசு கருவிலே குலைந்தது! மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டது. இதேபோன்று பல சமயங்களிலே இம்மாதிரி ஒற்றுமை மகாநாட்டிற்கு வித்துப்போட்டு, அது கருவிலே குலைவுற்றதற்கெல்லாம், திரு காந்திஜீ போன்ற ஹிந்துத் தலைவர்களின் குறுகியநோக்கமும் சரியான சமயத்தில் மௌனமுமே காரணமெனலாம்.

'ஸைமன் கமிஷன்' நியமனம்

நவம்பர் 3-ந்தேதி இந்தியா மந்திரி பர்க் கேன்ஹெட்டுடையவும், பார்லிமெண்டுடையவும் அநுமதிபெற்று இந்தியா விஜயஞ் செய்யப்போகும் விசாரணைக் கமிஷனைக் குறித்து, இந்திய வைஸ்ராய் லார்டு இர்வின் ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டார். அதில் விசாரணைக் கமிஷன் செய்யவிருக்கும் வேலைகள்பற்றி விவரிக்கப்பட்டிருந்ததுடன், கமிஷனைச் சார்ந்தோரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தது. மொத்தம் 6-பேர்களில், 4-பேர் பார்லிமெண்ட் மெம்பர்கள். அதன் தலைவர் ஸர் ஜான் ஸைமன் எனவே, இவ் விசாரணைக் கமிஷன் பெயர் "ஸைமன் கமிஷன்" என வழங்கலாயிற்று. இதரர்களின் பெயர்கள் வருமாறு, வை கௌண்ட் பர்ன்ஹாம், ஸ்டிராத் சோனு, ஈசாடோ கான், ஸ்ட்லீன் வாஷ் ஜார்ஜ லேன் பாக்ஸ், மேஜர் ஸி. ஆர். ஆட்டீ.

இந்தியர்களின் வெறுப்பு

ஸைமன் கமிஷனில் இந்தியர்கள் ஒருவரும் சேர்க்கப்படவில்லை யென்ற காரணமாக, இந்தியாவிலுள்ள அத்தனைக் கட்சிகளும், கட்சி சமூகத் தலைவர்களும், காங்கிரஸ் லீக் உட்பட எல்லோருமே முழு சக்திகொண்டு எதிர்த்

தனர். எனினும், இந்தியர்களின் எதிர்ப்பையும், வெறுப்பையும் இந்தியா மந்திரி சிறிதும் சட்டைசெய்யவில்லை! மாருகக் கேவலமாகவும் பேசித்தீர்த்தார். எனவே, இந்தியர்கள் அனைவரும் ஸைமன் கமிஷனை ஒருமுகமாகச்சேர்ந்து பகிஷ்கரிக்கத் துணிந்தனர்.

தலைவர்களிடையே தகராறு!

அடுத்துவரும் 1927-ம் வருட லீக் மகாநாட்டிற்குத் தலைவராக லாஹுர், ஜனுப் மிய்யான் ஸர் முஹம்மத் ஷபி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார் ஆனல் ஸைமன் கமிஷன் அமைப்பு விஷயமாக, அவருக்கும், ஜனுப் ஜின்னுவிற்கும் பல அபிப்பிராயபேதமுண்டாயிற்று. ஸர் முஹம்மத் ஷபி மகாநாட்டை லாஹுரிலேயே அதுவும் தமது தலைமையின் கீழே நடத்திக் காண்பிக்கப்போவதாய்க் கங்கணங்கட்டி நின்ருர் ஆனல், அலி சகோதரர்களும், ஜனுப் ஜின்னுவும், மகாநாட்டை கல்கத்தாவிலே ஸர் முஹம்மத் யாகூப் தலைமையில் நடத்துவதென உறுதிகொண்டனர். இதனல் லீகிலும், முஸ்லிம் தலைவர்களிடையிலும் பெருத்த பிளவேற்பட்டது. ஸர் முஹம்மத் ஷபி பிடிவாதத்தைவிடாது தாம் எண்ணியபடி, தமது தலைமையின் கீழ். லாகூரில் மகாநாட்டை நடத்தினர். அதிலே ஸைமன் கமிஷனை ஆதரித்துத் தீர்மானங்கள் செய்யப்பட்டன. வேறு பல தீர்மானங்களும் செய்யப்பட்டன. எனினும், முஸ்லிம் பொதுமக்கள் அம்மகாநாட்டை ஒப்புக்கொள்ள மனமிசையவில்லை. எனவே, அலி சகோதரர்கள், ஜனுப் ஜின்னு முதலியோர் அபிப்பிராயப்படியே மகாநாடு திரும்ப நடத்த முடிவு செய்யப்பட்டது.

25. முஸ்லிம்லீகின் 19-வது மகாநாடு (1927)

கல்கத்தாவில் 1927-டிஸம்பர் இறுதியிலே அ. இ. மு. லீகின் 19 வது மகாநாடு மௌலவி ஸர் முஹம்மத் யாகூப் தலைமையில் கூடிற்று. பல பாகங்களிலிருந்தும் ஏராளமான தலைவர்களும் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். தலைவர் தலைமையுரையிலே, இந்தியாவின் தற்கால நிலைமை பற்றி விளக்கி, முஸ்லிம்கள் தங்கள் உரிமைகளை அடையவும், அதைப் பாதுகாக்கவும் ஒன்றுபடவேண்டுமென்று விவரித்து, இந்தியாவிற்கு வரவிருக்கும் ஸைமன் கமிஷனை பகிஷ்கரிக்கக்கூடிய காரணங்களையும் தெளிவுபடுத்தினர். பகிஷ்கரிப்பதின் நோக்கத்தைப்பற்றி விளக்கி - அதை ஒரு தீர்மானமாகக் கொண்டுவந்த ஜனாப் ஜின்னா, நீண்டநேரம் காரசாரமாகப்பேசினர். தீர்மானத்தை ஆதரித்து மௌலானா முஹம்மத் அலி உட்பட பலதலைவர்கள் பேசினர்கள். பலத்த கரகோஷத்தினிடையே பகிஷ்காரத் தீர்மானம் நிறைவேறியது. மேலும், டில்லியில் முஸ்லிம் தலைவர்களால் செய்யப்பட்ட தீர்மானத்தை ஆதரித்தும், காங்கிரஸ் முதலிய இதர கட்சிகளுடன் கலந்து முஸ்லிம் சமூக உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய நிலைமையில் ஒரு அரசியல் திட்டம் தயாரிக்க லீக் கௌன்ஸிலுக்கு அதிகாரம் கொடுத்தும், பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு மகாநாடு இனிது முடிவுற்றது.

சென்னையில் காங்கிரஸ் மகாநாடு

இதே சந்தர்ப்பத்திலே சென்னையில் காங்கிரஸ் மகாநாடு டாக்டர் அன்ஸாரி தலைமையில் நடைபெற்றது. மகாநாட்டுத் தலைவரின் பெரு முயற்சியால், முஸ்லிம்களின் டில்லி தீர்மானத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேறிய

துடன், எதிர்கால அரசியலை நிர்ணயிப்பதற்காக இதர கட்சிகளுடன், கலந்து வேலை செய்ய ஒரு சப் கமிட்டி நியமிக்கப்பட்டது. காங்கிரஸின் இறுதி இலட்சியம் பூரண சுயேட்சையே என்றும், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை சம்பந்தமாக சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு, ஸைமன் கமிஷனை பகிஷ்கரித்தும் தீர்மானம் செய்யப்பட்டது. இம் மகாநாட்டிலே, அலி சகோதரர்கள் கலந்துகொண்டு ஆற்றிய சொற்பொழிவு பொன்னெழுத்துக்களால் பொறிக்கக் கூடிய நிலையிலிருந்தன. பண்டித மாளவியாவினுடைய பிரசங்கம் முஸ்லிம் சமூகத்திற்குச் சாதமாகவே யிருந்தது. இம் மகாநாடு வெற்றிபெற முடிந்ததற்கு முக்கிய காரணம் மகாகனம் S. சீனிவாசய்யங்கார் தாம்! இம் மகாநாட்டுச் சமயம்தான், ஸர் அப்துல்காதிர் சாஹிப் தலைமையின் கீழ் அகில இந்திய முஸ்லிம் கல்வி மகாநாடு நடந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

"ஸைமன் கமிஷனே திரும்பிப்போ"

1928 பிப்ரவரி, 3-ம் தேதி ஸைமன் கமிஷன் கோஷ்டியார் இந்தியாவில் காலடி எடுத்து வைத்தனர். உடனே இந்தியாவின் எட்டுத் திக்கிலும் எதிர்ப்புக் கூட்டங்கள் கோஷங்கள்-ஆர்ப்பாட்டங்கள்-கருப்புக்கொடிகள், கமிஷன் தலைகாட்டிய இடமெல்லாம் தலைவிரித்தாடின. எங்கு நோக்கினும் "ஸைமன் கமிஷனே திரும்பிப்போ!" என்ற கோஷமே வானைப் பிளந்தன. எதிர்ப்பைக் கண்டு அதிகார வர்க்கம் கலங்கி நிற்கவில்லை; மிஞ்சிவிட்ட இடங்களிலே, கூசாது தடிபடி தர்பார் நடத்தியது! துப்பாக்கியால் பதில் கொடுத்தது. எப்படியோ ஒருவாறுக, கமிஷன் தனது வேலையைத் துவக்கிற்று. சில ஹிந்துத் தலைவர்களையும்,

"ஷபி லீக்"கைச் சார்ந்த பல முஸ்லிம் தலைவர்களையும் கலந்து, பேசி, அவர்களின் கோரிக்கைகளை சமர்ப்பண மூலமாகத் திரட்டி, ஒருவாறாகத் தனது விசாரணையைப் பூர்த்தி செய்தது.

சர்வ கட்சி மகாநாடு

அதே வருட, அதே மாத இறுதியிலே அ. இ. சர்வ கட்சி மகாநாடு டில்லியில் கூடிற்று. இரண்டு மாதங்களில் 25 கூட்டங்களை நடத்தி பற்பல பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்தது. இறுதியாக மீண்டும் பம்பாயில் மே. மாத மத்தியில் மகாநாடு கூட்டுவிப்பதென்றும், எல்லா இந்தியக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டு மகாநாடு கலைவுற்றது.

இந்தியா ஹிந்துக்களுக்கே சொந்தமா?

சர்வ கட்சி மகாநாட்டு மூலம் ஹிந்து முஸ்லிம் பிணக்குகள் தீருவதை ஹிந்து மகாசபையும் அதன் தலைவர்களும விரும்பவில்லை! இரு சமூகத்தினிடையே எப்படியும் பிளவு படுத்திவிட, முஸ்லிம்களின டில்லி தீர்மானத்தை ஆட்சேபித்தும், "இந்தியா ஹிந்துக்களுக்கே சொந்தம்" என்றும் விஷமப் பிரச்சாரம் கிளப்பிவிட்டனர். இதிலே பெரும் பங்கெடுத்து அரும்பணியாற்றியவர்களில் முக்கியஸ்தர் திருவாளர் மூஞ்சே தான்! ஆனால், பாவம் திட்டப்படி வேலை செய்தும், எதிர்பார்த்த பலன் கிட்டாது போயிற்று!

இந்தியா மந்திரியின் அறைகூவல்:

நேஹ்ரு கமிட்டியின் தோற்றம்!

சரியாக மே. 19-ம் தேதி பம்பாயில் முன் அறிவித்திருந்தபடி, அ. இ சர்வ கட்சி மகாநாடு கூடிற்று. எதிர்

பார்த்தபடி பலர் அதில் பிரசன்னமாகவில்லை! மாறாக, முன் மகாநாடுகளிலே 'ஸபர்மதி' ஆசிரமத்தில் பதுங்கிக் கிடந்த திரு காந்திஜீ இதற்கு அதிசயப்படத்தக்க விதத்திலே ஆஜராயிருந்தார். மகாநாட்டில் பலரின் அபிப்பிராயங்கள் பரிசீலிக்கப்பட்டன. இறுதியாக, கூடியிருந்தவர்களுக்கே சலிப்பு தட்டிப்போய்,

"இம்மாதிரி மகாநாடுகள் அடிக்கடி கூட்டுவதும், பின் கலைவதும், ஆக இப்படியே இருந்துக் கொண்டிருந்தால் உருப்படியான காரியங்கள் ஒன்றும் நிகழா! எனவே, இந்தியாவின் எதிர்கால அரசியலைத் தயாரிப்பதற்கு ஒரு ஸப் கமிட்டி நியமித்துவிட்டு மகாநாட்டைக் கலைத்து விடலாம் அந்த சப் கமிட்டி அரசியல் திட்டம் தயாரித்தபின், அதை பரிசீலிப்பதற்காக-அவசியப்படின் - மகாநாடு கூட்டலாம்" என்ற முடிவிற்கு வரப்பட்டு, ஸப் கமிட்டிக்குத் தலைவராக மோத்திலால் நேஹ்ருவை யும், கமிட்டி அங்கத்தினர்களாக திருவாளர்களான ஆனே, ஜெயகர், ஸப்ரூ, என். எம். ஜோஷி ஜி. பிரதானி, சர்தார் மங்கள சிங், ஜனுப் ஷுஐப் குரைஷி, ஸர். அலி இமாம் மேலும் இன்னும் பலரைத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இம்மகாநாடு கூட்டி இம்மாதிரியான ஒரு சப் கமிட்டி ஏற்படுத்தியதின் அந்தரங்கக் காரணம், இந்தியா மந்திரியின் அறை கூவலே. "இந்தியாவிலுள்ள சகல கட்சிகளும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு அரசியல் திட்டத்தை இந்தியத் தலைவர்கள் ஒன்றுகூடி தயாரிக்கப்பட்டும், எங்கே பார்க்கலாம்?" என்றார் இந்தியா மந்திரி. "இதோ ஒன்று கூடி திட்டமிட்டு வேலை செய்கிறோம்" என்று காட்டவே நேஹ்ரு கமிட்டி தோன்றியது.

சுயராஜ்ய அமைப்பிலே சூன்யமேன்?

தோற்றுவிக்கப்பட்ட நேஹ்ரு கமிட்டி, பிறகு காரியத்திலிறங்கும்போது சில தடுமாறி விட்டது. "தட்டிக்கேட்க

ஆளில்லாவிட்டால் தம்பிசண்டப் பிரசண்டன்" என்பது போல், உடல் அசௌகரியமுற்றிருந்ததினால் டாக்டர்கள் வற்புறுத்தலின் பேரிலே மௌலானா முஹம்மத் அலி ஐரோப்பா சென்றுவிட்டார். ஜனாப் ஜின்னாஹ்வும் இங்கிலாந்திலேயே இருந்தார். எனவே, இவ்வரிய சந்தர்ப்பத்தை இழக்க மனமில்லா நெஹ்ரு கமிட்டியார், இலட்சுமணபுரியிலே மோத்திலால் நேஹ்ரு தலைமையின்கீழ், பல கூட்டங்கள் போட்டு, "சுயராஜ்ய அமைப்பு" என்ற பெயருடன் ஒரு அரசியல் திட்டம் வகுத்தனர். இதைத் தாம் பிற்கால மக்கள் "நேஹ்ரு திட்டம்"என வழங்கினர். இத் திட்டம் தயாரிப்பதற்கான சப் கமிட்டி கூட்டங்கள் எல்லாவற்றிலும் ஜேயகர், என். எம். ஜோஷி கடைசி வரை அறவே கலந்து கொள்ளவில்லை! ஸர் அலி இமாம் ஒரே ஆரம்பக் கூட்டத்தில்தான் பிரசன்னமாயிருந்தார். ஜனாப் ஷுஐப் குரைஷி நெஹ்ரு கமிட்டி தயாரித்த திட்டங்களின் பல பாகத்தை எதிர்த்து கமிட்டித் தலைவருக்கு எழுதி வந்தாரே தவிர, ஒரு ஒரு கூட்டத்திலும் கலந்துகொள்ளவில்லை. இம்மாதிரியான நெஹ்ரு திட்டத்தைத் தயாரித்த பல ருசிகரமான விஷயங்களை, அ. இ. கா. கமிட்டிக் காரியதரிசி வெளியிட்ட "சர்வ கட்சி மகாநாடு 1928" என்ற நூலில் விபரமாய் காணலாம்.

நேஹ்ரு திட்டத்தின் யோக்கியதை!

நெஹ்ரு கமிட்டி ரிப்போர்ட் ஒருதலைப்பட்சமாகவும் ஓரவஞ்சனையாகவும் இருந்திருக்கவேண்டுமென சொல்லத் தேவையேயில்லை! ஆம்: அதிலே முஸ்லிம் சமூகத்தின்பால் படுமோசமாக நியாயம் வழங்கப்பட்டிருந்தது. கல்கத்தா, பம்பாய், சென்னை, முதலிய இடங்களில் காங்கிரஸ் செய்த வகுப்புப் பிரச்சினை சம்பந்தமான தீர்மானங்கள் முற்றிலும்

அலட்சியம் செய்யப்பட்டிருந்தன. முஸ்லிம்களின் அருந் தியாகத்தின் மீதும், நெடுங்காலப் போராட்டத்தின் மீதும் கிடைத்த தனித் தொகுதிக்குப் பதிலாக, எக்கும் நிபந் தனையின்றி கூட்டுத் தொகுதியே நிலவவேண்டுமென்று வற்புறுத்தியும், சிந்துவை, பம்பாய் மாகாணத்தினின்று தனியாக்குவதற்கு அசாத்தியமான பல நிபந்தனைகள் விதிக் கப்பட்டும், முஸ்லிம்களின் டில்லி தீர்மானங்களைக்கூட நிரா கரித்தும், பல மாகாணங்களிலும், மத்தியிலும் முஸ்லிம் களின் நியானமான உரிமைகள் ஸ்தானங்கள் பாதுகாக்கப் படுவதற்கு எவ்வித வாக்குறுதிகளையும் அளிக்காமலும் மிண்டோ–மார்லி சீர்த்திருத்தத்தின்படி மாகாணங்களுக்கு இருந்துவந்த சுயேட்சை உரிமைகள் பறிக்கப்பட்டும், மத்திய சர்க்காருக்கு எல்லா விஷயங்களிலும் பரிபூரண ஆதிக்கம் கொடுக்கப்பட்டும், இந்தியா பூரண சுயேச்சை அடைவதற்குப் பாதகமான, பிரிட்டனின் ஆட்சியின் கீழ் "டொமினியன் ஸ்டேட்ஸ்" குடியேற்ற நாட்டந்தஸ்து) அங்கீகரிக்கப்பட்டும், முஸ்லிம்கள் சர்வ சதா காலமும், மார்க்க, சமூக ராஜீய உரிமைகளுடன் சுயேட்சையாக வாழாது, என்றென்றுமே 'பெரும்பான்மை' எனப்படு வோரின் தயவிற்கு உட்பட்டும் ஆக இம்மாதிரியான இலட் சணங்கொண்ட திட்டங்கள்தாம், நெஹ்ரு திட்டத்தின் அந்தரங்க யோக்கியதை! மேலும் இதிலே, 1916-ல் ஏற் பட்ட காங்கிரஸ் லீக் ஒப்பந்தங்களெல்லாம் காற்றிலே கலக்க விடப்பட்டன. இந்தியர்களின் வியாபாரத்தைவிட ஆங்கிலேயர்களின் வியாபாரத்திற்கு அதிகப் பாதுகாப்புகள் அளிக்கப்பட்டிருந்தன. ஆங்கிலேயரின் உதவியால் இந்தி யாவில் ஹிந்து ராஜ்யம் ஏற்படுத்தவே இந்த தந்திரம் கையாளப்பட்டது.

மீண்டும் சர்வ கட்சி மகாநாடு

நெஹ்ரு திட்டத்தை பரிசீலிப்பதற்காக, மீண்டும் 1928 ஆகஸ்ட் 28, 29, 30-ம் தேதிகளில் லட்சுமணபுரியில் டாக்டர் அன்ஸாரி அவர்களின் தலைமையில் கூடியது. எல்லாத் தலைவர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டிருந்ததால், ஹிந்து மகாசபையின் முப்பெருந் தலைவர்களான லாலா லஜபதி ராய், பண்டித மாளவியா, டாக்டர் மூஞ்சே முதலியோர்களும் "கிலாபத்" கமிட்டித் தலைவர் காரியதரிசிகளான மௌலானா ஷபீ தாவூதி, மௌலானா ஷௌகத் அலி, "ஜமீயத்துல் உலமா" தலைவர், காரியதரிசிகளான முப்தி கிபாயத்துல்லா, மௌலானா அஹ்மத் ஸயீது, லீக் தலைவர் ஸர் முஹம்மத் யஅகூப் இன்னும் இதர முக்கிய முஸ்லிம் தலைவர்களும், இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சி பிரதிநிதிகளும் கூடியிருந்தனர் மகாநாடு ஆரம்பமானதும் திட்டம் தயாரித்த நெஹ்ரு கமிட்டிக்கு நன்றி செலுத்துவதென முதல் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இதை பழம் பெரும் முஸ்லிம் தலைவரான ஹஸரத் மோஹானி அவர்கள் பலமாக எதிர்த்தார். ஏனெனில், கூடியிருந்த முஸ்லிம் தலைவர்கள் அனைவருமே திட்டத்தை எதிர்ப்பவர்களாயிருந்தனர். பிறகு நெஹ்ரு திட்டம் அங்கீகரிக்கவேண்டுமென தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதை ஹஸரத் மோஹானி, மௌலானா ஷௌகத் அலி ஆகியோர் பலமாக ஆக்ஷேபித்து முஸ்லிம்களின் டில்லி தீர்மானங்களை அனுசரிக்க வேண்டுமென வாதாடினர். ஷௌகத் அலி அவர்கள், "முஸ்லிம்கள் அநியாயமாக கொலை செய்யப் படுவதைக் கண்டு என்னால் பொறுக்க முடியா" தென்று கர்ஜித்து, திட்டத்திலுண்டான தவறுதல்களை விளக்கிக் காட்டினார். அவருடன் சேர்ந்து ஆஸாத், அன்ஸாரி தவிர இதர எல்லா முஸ்லிம் தலைவர்களும் திட்டத்தை எதிர்த்தனர்.

மெஜாரிட்டி மமதையா? வளர்த்த கிடா கதையா?

உண்மை முஸ்லிம் தலைவர்கள் எதிர்த்து நின்றதும் பிரசன்னமாயிருந்த எல்லா ஹிந்துத் தலைவர்களும் குறிப்பாகத் தமக்கு சிறிதும் செல்வாக்கில்லை என்று கூறிக்கொண்டு டில்லி, சிம்லா போன்ற இடங்களில் கூடிய ஒற்றுமை மகாநாடுகளிலும், சர்வ கட்சி மகாநாடுகளிலும் கலந்து கொள்ளாது ஒதுங்கிநின்ற திரு காந்திஜியும் வெகு ஆவலும் உணர்ச்சியும்கொண்டு ஆதரிக்க முனைந்தனர். எனவே, இதர காங்கிரஸ் வாதிகள் லஜபதி, மாளவியா, மூஞ்சே, ஆனே, கேர், கரே போன்றோர்கள் ஆதரித்ததிலே ஆச்சரியமென்ன? முஸ்லிம்களின் பலத்த எதிர்ப்புகள் கிளம்பியும், அங்கிருந்த ஆதரிப்பு ஹிந்து மெஜாரிட்டி மமதை கொண்டு, திட்டம் எவ்விதத் திருத்தமுமின்றி நிறைவேற்றப்பட்டது. "வளர்த்த கிடா மார்பிலே பாய்ந்தது" போல, தன்னை வளர்த்த சமூகத்தையே மண்ணைக் கவ்வ வைத்தது!

சிங்கம் கொண்ட சீற்றம்!

உடல் நலிவு காரணம் கொண்டு ஐரோப்பா சென்ற மௌலானா முஹம்மத் அலி, நடந்த விருத்தாந்தத்தைப் பற்றி கேள்வியுற்றார். மனம் பதைக்க, உடல் நலிவையும் பொருட்படுத்தாது உடனே இந்தியா திரும்பினார். வரும் போதே இஸ்லாமிய நாடுகளுக்கும் சென்றுவந்தார். நேற்று திட்டம் சம்பந்தமாகப் பல தலைவர்களுடன் கலந்து பேசினார். திரும்பிய சில நாட்களுக்குள், திசைதோறும் சென்று மக்களைத் தம் சிங்கநாதம் மூலமாகச் செம்மைப்படுத்தினார். தாம் தலைமை வகித்த காங்கிரஸ் கூட்டங்களிலும் இதுபற்றி சண்டமாருதம்போல் கர்ஜனை செய்தார்! இது சம்பந்தமாக மௌலானா முஹம்மத் அலி, ஹஸ்ரத்

மோஹானி முதலிய தலைவர்களின் அறிக்கைகளின் முக்கியப் பகுதிகளையும், பிரசங்கச் சுருக்கங்களையும் கண்டறிந்த பாமர முஸ்லிம்கள் கூட பீறிட்டு கிளம்பினர்.

கல்கத்தா கொண்ட யோகம்!

நேற்று திட்டத்திற்கு எதிர்ப்புகள் வலுக்கவே, மீண்டும் அதை இரண்டாம் முறையாக அங்கீகாரம் செய்துக் கொள்வதற்கு கல்கத்தாவிலே · மற்றொரு சர்வ கட்சி கன்வென்ஷன் மகாநாடு டிஸம்பரில் நடக்குமென அறிவிக்கப்பட்டிருந்தது. சுருங்கக் கூறுமிடத்து, கல்கத்தாவிற்கு யோகம் வந்துவிட்டதென்றே சொல்லலாம், ஏனெனில், சர்வகட்சி கன்வென்ஷன் மகாநாடு, லீக் மகாநாடு, கிலாபத் மகாநாடு, ஜமீயத்துல் உலமா மகாநாடு, காங்கிரஸ் மகாநாடு, ஹிந்து மகாசபை மகாநாடு ஆக இத்தனை மகாநாடுகளும் கல்கத்தாவிலேயே கூடத் திட்டமிட்டுக் கொண்டிருந்தன.

மௌலானா கற்ற பாடம்!

சர்வ கட்சி கன்வென்ஷன் மகாநாட்டிலாவது முஸ்லிம்களின் நலனைப் பாதுகாக்கவேண்டுமென முஸ்லிம் தலைவர்கள் பெரிதும் முயற்சித்தனர். இந்தச் சமயத்திலாவது காங்கிரஸ்காரர்கள் கைதூக்கி விடுவார்களா? காலை வாரி விடுவார்களா? என்ற கேள்வியுடன் முஸ்லிம் தலைவர்கள் முனைந்து நின்றனர். சர்வ கட்சி கன்வென்ஷனுக்காகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எல்லாக் கட்சிகளுக்கும் அளிக்கப்பட்டிருந்தது! காங்கிரஸ் முஸ்லிம்கள் சிலர், காங்கிரஸ் கட்சி பிரதிநிதியாக மௌலானா முஹம்மத் அலியைத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளில் ஒருவராகச் சேர்த்து வைக்க எவ்வளவோ முயற்சித்தும் சுயநல காங்

கிரஸ்காரர்களின் சூழ்ச்சியினாலும், தீவிர எதிர்ப்பினாலும், அவர்கள் எண்ணம் பூர்த்தியடையாது போயிற்று! காங்கிரஸிற்சென்று உழைக்கும் முஸ்லிமுக்கு என்ன நலன் கிடைக்குமென்பதை, தமது உதிரம் கொடுத்து வளர்க்குவித்து வந்த மௌலானா தாமும் கற்றார்: பிறருக்கும் போதித்தார். இதனை யுணர்ந்த கிலாபத், ஜமீயத்துல் உலமா இரு சபைகளும், தங்களது ஏகப்பிரதிநிதியாக மௌலானா அவர்களையே சர்வ கட்சி கன்வென்ஷனுக்குத் தேர்ந்தெடுத்தனர்.

26. முஸ்லிம் லீகின் 20-வது மகாநாடு (1928)

1928 டிஸம்பர் 21-ந்தேதி கல்கத்தாவில் மஹ்மூதாபாத் ராஜா சாஹிப் அவர்களின் தலைமையின் கீழ், அ. இ. மு. லீகின் 20-வது மகாநாடு, பல திக்கிலிருந்து பிரதிநிதிகள் படைசூழக் கூடியது. தலைவர் தமது சுருக்கமான தலைமைப் பிரசங்கத்தில், தற்காலய அரசியல் நிலைமையை விளக்கி நெஹ்ரு அறிக்கையை முழுவதும் நிராகரிக்காது, முஸ்லிம் லீகின், "குடியேற்ற நாட்டந்தஸ்"தின் இலட்சியப்படி "நெஹ்ரு திட்டம்" இருப்பதால், முஸ்லிம் சமூகத்தைப் பாதிக்கக்கூடிய பகுதிகளை மட்டும் நீக்கி விடவும், சிறுபான்மையினரிடம் நியாயமாக நடந்துகொள்ளும்படி காங்கிரஸ் தலைவர்களை வேண்டியும், கன்வென்ஷனுக்கு லீக் சார்பாக பிரதிநிதிகள் சென்று அதற்காகப் போராட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். பின்னர் ஜனாப் சாக்ஸி கொண்டு வந்த "ஜனாப் முஹம்மத் அலி ஜின்னாஹ்வின் தலைமையில் 23 பேர்களைக்கொண்ட பிரதி நிதிக் கோஷ்டி யொன்று தேர்ந்தெடுக்கப்பட்டு, அக் கோஷ்டி அங்கு சென்று "நெஹ்ரு திட்டம்" முஸ்லிம் சமூகத்தைப் பாதிக்காவண்ணம் திருத்தியமைக்க முயற்சிக்கவேண்டும்"

என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அதன் படி 23 பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்துடன் இம்மகாநாடு இனிது முடிவுற்றது.

காரசாரமான கன்வேன்ஷன் மகாநாடு

முஸ்லீம் லீக் மகாநாடு நடந்த அடுத்த நாள், கல்கத்தாவிலே "சர்வகட்சி கன்வென்ஷன் மகாநாடு" கூடிற்று. எதிர்பாராத விதமாய் ஏராளமாகப் பிரதிநிதிகள் கூடியிருந்தனர். முதன்முதலில் திரு. சென் குப்தா எழுந்து, "நெஹ்ரு ரிபோர்ட்டின் இலட்சியமான குடியேற்ற நாட்டந்தஸ்தை இப்பொழுது ஒப்புக்கொள்வோம், பிறகு பூரணசுயேச்சைக் கென்று முயற்சிசெய்வோம்" என்று வெகு காரசாரமாகப் பேசினர். நீண்ட நேரம் வரை இதனை சிலர் ஆதரித்த பின், ஹிந்து மகா சபையினர், தாம், திரு. கேல்கர் தலைமையில் முடிவு செய்திருந்தபடி, "இந்த நெஹ்ரு ரிபோர்ட்டில், எந்தவிதமான திருத்தமோ, மாற்றமோ, கூட்டலோ, குறைத்தலோ, இருந்தால் எங்களால் ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. அப்படி ஏதேனும் நிகழ்ந்தால், எங்கள் நீடித்த வலுவான எதிர்ப்பு நிச்சயம் தோன்றும்."

என்ற தீர்மானத்தை கூட்டத்தில் வற்புறுத்தினர். அபுல்கலாம்ஆசாத் உட்பட சிலர் இதை ஆதரித்துப்பேசினர் பலர் எதிர்த்தனர். எதிர்த்தவர்களுள் மௌலானா உட்பட அநேக லீக் தலைவர்களும் இருந்தனர்.

நெஹ்ரூ ரிப்போர்ட்டை எதிர்த்து மௌலானாமுகம்மத் அலி கர்ஜிக்கும்போது, "பூரண சுயேட்சைக்கு எதிராகவும் குடியேற்ற நாட்டந்தஸ்திற்கு ஆதரவாகவு மிருப்பவர்கள் வீரர்களல்ல; கோழைகளே!" என்று சாட்டை கொடுத்தார்

கூட்டத்திலே குழப்பமேற்பட்டது, "மௌலானா முஹம்மத் அலி உட்காரட்டும்; அவர்களது அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்ள நாம் தயாராயில்லை" என்று கூச்சலிட்டனர்; சிலர் பரிகசித்து எள்ளி நகையாடினர், சிலர் பேசவிடாது இடை யூறுகள் பல செய்தனர். எனினும், இக் கூச்சல்களைக்கண்டு சகிரவனும் வீரர் மௌலானா சட்டைசெய்யாது தொடர்ந்து பிரசங்கம் செய்தார்.

மோத்திலாலுக்கு வந்த ரோஷம்!

நிலைமை முற்றிக்கொண்டதும், மோத்திலால் நேஹ்ரு ரோஷங்கொண்டு "எனது ரிப்போர்ட்டை சபை, ஒன்று ஒருவிதத் திருத்தமுமின்றி ஒப்புக்கொள்ள வேண்டும் அல்லது ஒரேயடியாக நிராகரித்துவிடவேண்டும்!" என்று சீறினர். அதேசமயத்தில் ஜவாஹிர்லால் நேஹ்ரு தலைமையில் தயாரித்த யாதாஸ்து ஒன்று படிக்கப்பட்டது. அதிலே "தங்கள் இலட்சியம்பூரண சுதந்திரமே என்றும், எனினும் இம் மகாநாட்டில் நடக்கும் விவாதத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை,யென்றும்' குறிப்பிடப்பட்டிருந்தது.

சேத்த பாம்பைக் கோல்லும் சூரர்கள்!

விவாதம் பலத்த போட்டியிலிருந்து கொண்டிருந்த சமயம், மாலை (மக்ரிப்) தொழுகை வேளை வந்துவிட்டதால், மௌலானா அவர்கள் மகாநாட்டுத் தலைவர் அநுமதிபெற்று வெளியே சென்றார். இதுதான் சமயமெனக்கருதி, ஆளில் லாத நேரம் பார்த்து, செத்த பாம்பைக் கொல்லுவதுபோல, இந்த சுயநலச் சூரர்கள், தீர்மானத்தை ஓட்டிற்கு விட்டு நிறைவேற்றிக்கொண்டனர். முஸ்லிம் லீகின் பிரதிநிதிக் கோஷ்டித் தலைவராகச்சென்ற ஜனாப் ஜின்னாஹ், "நேஹ்ரு

திட்டத்திலுள்ள,முஸ்லீம் சமூகத்தைப்பாதிக்கும் பாகத்தை நீக்கிவிடும்படியும், டில்லி ஆலோசனைகளை அங்கீகரிக்கும்படியும், எவ்வளவோ வாதாடியும், கவனிக்குமாறு பலமுறை வேண்டிக்கொண்டும் என்ன கூறியும் பிரயோஜனப்படவில்லை. தொழுகைக்குச் சென்று திரும்பி வந்த மௌலானா, நடந்த விவரங்களையும், ஹிந்துத் தலைவர்களின் சூழ்ச்சிகளையும் கண்டு மிகவும் மனமுடைந்து உடனே அதைவிட்டு வெளியேறிவிட்டனர். பின்னர் அதில் அவர் கலந்துகொள்ளவேயில்லை. லீக் தூதுகோஷ்டியும் வெளியேறியது.

ஹிந்துமகாசபையைக் கண்டு கிலி கோள்வானேன்?

சர்வ கட்சி கன்வென்ஷனைக் குறித்து ஜனுப் சாக்ஸி பின்வருமாறு கூறினர்

"முஸ்லிம்கள் சம்பந்தமான சில முக்கியத் திருத்தங்களைச் செய்தபின், நெஹ்ரூ ரிப்போர்ட்டை அங்கீகரிக்க வேண்டுமென்பதற்காகவே, முஸ்லிம் லீக் தன்னுடைய பிரதிநிதிகளை சர்வகட்சி கன்வென்ஷனுக்கு அனுப்பிவைத்தது. ஆனுல், மகாநாடு ஹிந்துமகாசபையின் செல்வாக்கிற்கும், பயமுறுத்துதல்களுக்கும், பணிந்து, கிலிகொண்டு பயந்து இம்மாதிரி நடந்துகொண்டதற்குப்பதிலாக முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகளையும் விட்டுக்கொடுத்த மனப்பான்மையையும் மதித்திருக்க வேண்டுமென நான் வருத்தத்துடன் மகாநாட்டினரை கேட்டுக்கொள்கிறேன். முஸ்லிம்லீக் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் கன்வென்ஷனுக்கு வந்திருந்தனர். தங்களது கோரிக்கைகளையும் சமர்ப்பித்திருந்தனர். அதுவுமன்றி, அவர்களெல்லாம், திருத்தத்துடன் நெஹ்ரூ திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென வேண்டாமெனச்சொல்லிய தமது சமூகத்தாரிடம் சண்டை பிடித்து ஒப்புக்கொள்ளச் செய்தவர்கள். இப்படிப்பட்ட

முஸ்லிம்களுடனே செவிசாய்த்து கோரிக்கைகளை கவனித்து நியாயம் தரவில்லையாயின், பின் எந்த முஸ்லிம்களுடன் நாம் அக் கன்வென்ஷன் நியாயம்பேசி ஒத்துப்போகப்போகிறது? சக்தி கூடத்தான் வருமா? இதனை அது யோசித்ததா?''

"இந்த 23-பிரதிநிதிகளையும் "வகுப்புவாதிகள்'' என்று அவர்கள் நினைத்து அம்மாதிரி நடந்து கொண்டிருப்பார்களாயின், பிறகு இந்தியாவிலிருக்கும் எந்த முஸ்லிமைத்தாம் இவர்கள் "தேசியவாதி'' என்று தேர்ந்தெடுக்க முடியும்? முஸ்லிம் லீக் தைரியத்துடன் முரண்பாடு கொண்டிருந்த ஸர் ஷாபி பார்ட்டியினரை அப்புறப்படுத்தியிருப்பதுபோல் இந்த கன்வென்ஷனும் தைரியத்துடன் முன்வந்து டாக்டர் முஞ்சே, திரு. ஜெயகர் ஆகியோர்களை அப்புறப்படுத்தியிருக்கலாமே? இவர்கள் கூட்டத்திலே, "நாங்கள் வெளியேறிடுவோம், வெளியே விடுவோம்'' என்று அடிக்கடி பயமுறுத்தியதற்காக வென்று முஸ்லிம்களை கழுத்தறுப்பது?'' இம்மாதிரி ஜனப் சாக்ஸி கூறியிருப்பதைக்கொண்டே, சர்வ கட்சி கன்வென்ஷன் மகாநாடு நியாயம் - நேர்மையுடன் நடைபெறவில்லை யெனப் பட்டவர்த்தனமாகத் தெரிகிறதல்லவா?

மௌலானாவை மதித்தனரா!

மனமுடைந்த மௌலானா, நெஹ்ரு திட்டத்தை வன்மையாக ஆங்காங்கு சென்று கண்டித்துவந்தபோதிலும் ஹிந்து - முஸ்லிம் பிணக்கு வாராதபடி மிகவும் கவனம் கொண்டிருந்தார். ஹிந்துக்கள் மீதே குறையிருந்திடினும் முஸ்லிம்களைத்தாம் கண்டித்துக்கொள்வார். முக்கிய சந்தர்ப்பங்களில், ஹிந்துமகாசபையும், "தப்லீக்'' இயக்கமும் காங்கிரஸைக் குலைக்க முயன்றபோது எதிர்த்து நின்று குலைவு

றுதபடி காப்பாற்றினர் மௌலானா! காந்திஜீ போன்ற பெரும் காங்கிரஸ் பெருச்சாளிகள் மௌனம் பூண்டிருந்த சமயமும், இவர் தாமாகவே நின்று உழைப்பார்! இவ்விதமெல்லாம், காங்கிரஸிற்கென்று அல்லும்பகலும் உழைத்தும், "முஹம்மத் அலி இந்தக்காரியம்செய்ததுபோற்றத்தக்கதே" என்ற ஒரு இன்சொல்கூட ஒரு ஹிந்துக் காங்கிரஸ் தலைவா கூறிவிட்டில்லையாயின், இதரர்களைப்பற்றி என்னென்பது?

கிலாபத் மகாநாடு

கன்வென்ஷன் கூட்டத்திற்குப்பின். மௌலானா முஹம்மத்அலி அவர்களின் தலைமையின்கீழ் அ. இ. கிலாபத் மகாநாடு அதே டிஸம்பரிலே கல்கத்தா "ஹாலிடே பார்க்" கில் கூடியது. தலைவர் தமது தலைமை யுரையிலே, ஆரம்ப முதல் தாம் அரசியல் உலகில் ஈடுபட்டுக்கண்ட பற்பல மாறுதல்கள், தற்போதுள்ள அரசியல் நிலைமை, நெஹ்ரு ரிப்போர்ட்டினால் நாடு நலிவுகொள்ளும்விதம்; காங்கிரஸூம் அதன் ஹிந்துத் தலைவர்களும் தம்பால் நடந்துகொண்ட விதம், அவர்களின் மனப்பான்மை, எனவே, காங்கிரஸை தலைமுழுகிய காரணம் முதலியவைகளைக் கல்லும் கரையும் விதம்விளக்கினர். மேலும் அவர் பேசுகையில்,

"காங்கிரஸூடன் முஸ்லிம்கள் கலந்துழைத்தால், முஸ்லிம்களின் சமூக மார்க்க அரசியல் உரிமைகளுக்குக் குந்தகம் விளையா வண்ணம் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைக்கும்படி காங்கிரஸ் செய்யுமென்றெண்ணியே நானும் அதனுடன் ஒத்துழைத்தேன்; பிற முஸ்லிம்களையும் கலந்துழைக்குமாறு வற்புறுத்தி வந்தேன். நான் திரு காந்திஜீ போன்ற காங்கிரஸ் ஹிந்துத் தலைவர்களுடன் இரண்டறக்

கலந்து பழகிப் பார்த்ததிலே, அவர்களாலும், காங்கிரஸாலும் முஸ்லிம் சமூகத்திற்கு அணுவளவேனும் அனுகூலம் கிடைக்காதென்று உறுதியாக கண்டறிந்த பின்பே காங்கிரஸை விட்டுத் தலைமுழுகினேன் முஸ்லிம் சமூகம் ஒவ்வொரு விஷயத்திலுமே தன்கையே தனக்குதவி யென்று உழைத்தாலன்றி நமது நோக்கம் ஒன்றேனும் ஈடேற முடியாது என்றமுடிவிற்கு இன்றுவந்துவிட்டேன்" என்று குறிப்பிட்டார்.

ஒரு முஸ்லிம் காக்கைக்குஞ்சுகூடச் சட்டைபண்ணவில்லை!

1928 டிஸம்பர் இறுதியிலே மோத்திலால் நேஹ்ரு தலைமையின்கீழ் காங்கிரஸ் மகாநாடு கூடியது! ஆனால் கன்வென்ஷனின் எதிரொலியாக அம்மகாநாட்டை ஒருமுஸ்லிம் காக்கைக் குஞ்சுகூடச் சட்டை செய்யவில்லை! கன்வென்ஷனைக்குறித்து திரு பட்டாபி சீதாராமய்யா தமது "காங்கிரஸ் சரித்திரத்திலே" குறிப்பிடுவதாவது:-

"முஹம்மதியர் (முஸ்லிம்)களைத் தவிர இதரச் சிறுபான்மைச் சமூகத்தினர் ஒவ்வொருவராக வந்து வகுப்புப் பிரதிநிதித்துவத்தைக் கண்டித்துச் சென்றனர். இங்கிலாந்திலிருந்து திரும்பிய ஜனாப் ஜின்னாஹ் நெஹ்ரு அறிக்கையைப் பலமாகத் தாக்கிப் பேசினார். விரைவில் முஸ்லிம்களாலும் பகைமைக் காட்டப்பட்டது! சர்வகட்சி மகாநாட்டுக்கமிட்டியால் சமர்ப்பிக்கப்பட்ட உப அறிக்கையிலிருந்து, நெஹ்ரு அறிக்கை பலவிதமாகக் கண்டிக்கப்பட்டதென நாம் அறிகிறோம்" (கா. ம. தமிழ் சரிதை பக்கம்; 296)

முஸ்லிம்களைத் தவிர இதரச் சிறுபான்மையினர் அனைவரும் வகுப்புப் பிரதிநிதித்துவத்தைக் கண்டித்ததாகவும்,

ஜனுப் ஜின்னுஹ் மட்டும் தாக்கிப் பேசியதாகவும், உடனே முஸ்லிம்கள் பகைமை காட்டினரென்றும் திரு பட்டாபி சீதாராமையா பச்சைப் புளுகொன்று புளுகிவிட்டது ஆச்சரியமாயிருக்கிறது!

மூன்னுக்குப் பின் முரண்?

அதே பட்டாபி, அடுத்து தமது புத்தகத்திலே முன் னுக்குப்பின் முரணுக, அதாவது தன்மையுமறியாது உண் மையைக் கக்கிவிட்டார். கேளுங்கள் கதையை;

"வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக நெஹ்ரு யாதாஸ் தில் காணப்பட்டிருந்த தீர்ப்பை சீக்கியரும் முஸ்லிம்களும் இதர சிறுபான்மை வகுப்பினரும் ஏகோபித்து எதிர்த்து வந்த தால் மேற்குறித்த வகுப்பினர்களுக்கு பூரண திருப்தியளிக் காத எந்த முடிவையும், எதிர்கால ராஜீய அமைப்பில் காங் கிரஸ் ஏற்றுக்கொள்ளாது என சீக்கியருக்கும், முஸ்லிம் களுக்கும் இதர சிறுபான்மை வகுப்பினருக்கும் காங்கிரஸ் உறுதி கூறியது" (கா ம ச. பக்: 326)

எனவே திரு பட்டாபி கூற்றிலிருந்தே நெஹ்ரு திட்டத் தை எல்லா சமூகங்களும் எதிர்த்தனவென்றும், எனவேதான் காங்கிரஸ் அம்மாதிரி உறுதி மொழி (?) தந்தது என்பதும் வெள்ளிடைமலை.

சமாதி கொண்ட நேஹ்ரு திட்டம்!

நெஹ்ரு திட்டத்தைப்பற்றி காங்கிரஸ் விடுத்த உறுதி மொழி, திட்டம் வெளியான ஒரு வருடத்திற்குப் பின் 1930 ஜனவரியில் லாஹூரில் நடந்த காங்கிரஸ்-கூட்டத் திலே ஜாஹிர்லால் நேஹ்ரு பிரேரிப்பித்த தீர்மானத்தின்

சாரமாகும். ஏனெனில், இந்தத்திட்டத்தை எல்லா சிறுபான்மையினர்களும் வெறுத்ததோடல்லாது, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டும் அங்கிகரிக்க மறுத்துவிட்டது. எனவே, "நெஹ்ரு திட்டம்" செத்துப் போய் சமாதியடைந்தது போலாகி விட்டது. லாஹூர் காங்கிரஸிலே மேற்கூறியதுபோன்ற தீர்மானம் நிறைவேற்றியதற்குக் காரணம் என்ன என்பதை வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கவர்ன்மெண்ட் மட்டும் அத்திட்டத்தை ஒப்புக்கொண்டிருப்பின், யார் எதிர்த்தாலும், காங்கிரஸ் தலைவர்கள் விட்டுக் கொடுப்பார்களா? அதைப்பற்றி சிரத்தையாவது எடுப்பார்களா? என்பது சிந்திக்கக்கூடிய விஷயம். நெஹ்ரு திட்டத்தை ஹிந்து சமூகத்தைச் சார்ந்த நியாய குணம் படைத்த பல தலைவர்கள் கூட எதிர்த்தனர். மாஜி காங்கிரஸ் தலைவர் திரு S. சீனிவாச ஐயங்கார் கூட அதைப் பலமாக எதிர்த்ததுடன், "அத்திட்டத்தால், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படும் என்ற நம்பிக்கை கூட அற்றுப் போய்விட்டதே" எனக் கூறியிருக்கிறார். *

பூச்சாண்டி காட்டி மிரட்டுவதா?

நெஹ்ரு திட்டத்தை பிரிட்டன் நிராகரித்ததும், சர்வ கட்சி மகாநாடும், காங்கிரஸும் பிரிட்டனுக்கு பூச்சாண்டி காட்டி மிரட்டும் தோரணையிலே, "இந்த நெஹ்ரு திட்டத்தை பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் 1929 டிசம்பர் 31-ந் தேதிக்குள் ஒப்புக்கொள்ளவில்லையாயின், 1930 ஜனவரி முதல் 'பரிபூரண சுயராஜ்யமே நமது இலட்சியம்' என்ற முடிவிற்கு வந்து அதற்கான வேலைகளைத் துவக்கிவிடுவோம்" என்று அறிக்கை விட்டனர். (ஆனால், இந்த வெத்து வேட்டுகளுக்கெல்லாம் பிரிட்டன் பணியாது போகவே, 1930

* காலஞ்சென்ற S. சீனிவாச ஐயங்கார் அவர்களின் குமாரி எழுதிய 'என் தந்தையார்' புஸ்தகம் (பக்கம் 87)

ஜனவரி முதல், சும்மா பெயருக்கு மட்டும் "பூரண சுயேச்சைத் தீர்மானம்" நிறைவேற்றி வைத்துக் கொண்டனர். அந்தோ! வெட்கம்! வெட்கம்!!)

27. முஸ்லிம் சர்வ கட்சி மகாநாடு (1929)

காங்கிரஸ் கூட்டுவித்த சர்வ கட்சி கன்வென்ஷன் மகாநாடுகளினால், முஸ்லிம் சமூகத்திற்கு அணுவளவேனும் பிரயோஜனப்படாது, மாறாக, துன்பங்களும் அபாயங்களும் பெருகவாரம்பித்தன. எனவே, முஸ்லிம் தலைவர்கள் மௌலானா கூற்றுப்படி தம் கையைத் தாமே நம்பமுற்பட்டனர். பல முஸ்லிம் தலைவர்களும் ஒன்றுகூடி, "முஸ்லிம் சர்வ கட்சி மகாநாடு" ஒன்று கூட்டுவதென்றும், அதற்கு இந்தியாவிலுள்ள எல்லா முஸ்லிம் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்து, இந்திய முஸ்லிம்களின் ஏகோபித்த திட்டமொன்றை வகுப்பதென்றும் முடிவு கட்டி, மாகாண மத்திய சட்டசபையிலுள்ள எல்லா முஸ்லிம்களுக்கும் டாக்டர் அன்சாரி, ஸர் அலி இமாம், ஹஸன் இமாம், அபுல் கலாம் ஆஸாத் போன்ற எல்லா காங்கிரஸ் முஸ்லிம் தலைவர்களுக்கும் அழைப்புகள் விடுத்தனர். மகாநாட்டிற்குத் தலைவராக ஹக்கீம் அஜ்மல் கான் அவர்களையும் வரவேற்புக் காரியதரிசியாக மௌலானா மஜ்ஹருத்தீன் அவர்களையும் தேர்ந்தெடுத்து மகாநாட்டை டில்லியில் 31—12—28லும் 1—1—29லும் நடத்துவதென முடிவு செய்தனர்.

கட்சிகள் பலவாயினும் கோரிக்கைகள் ஒன்றே!

குறித்த காலத்தில் மகாநாடு ஸர் ஆகாகான் அவர்களின் தலைமையில் கூடியது. மாகாண, மத்திய சட்டசபை முஸ்லிம் மெம்பர்களும், முஸ்லிம் லீக், கிலாபத் கமிட்டி பிரதிநிதிகளும், "ஜமீயத்துல் உலமா" தலைவர்களான

மௌலானா முப்தி கிபாயத்துல்லாஹ், மௌலானா அஹ்மத் ஸயீத்போன்ற பல மார்க்க அறிஞர்களும் பிரசன்னமாயிருந்தனர். முஸ்லிம் லீக் மகா சபை, ஜின்னாஹ் லீக், ஷபி லீக் என்று பிளவுபட்டிருந்தாலும், உத்தியோகத் தோரணையில் பிரதிநிதிகளாகக் கலக்காவிடினும் 'தலைவர்கள்' என்ற தோரணையிலே யாவரும் விஜயம் செய்திருந்தனர் வரவேற்புரை, தலைமையுரை நிகழ்ந்தபின், இந்திய முஸ்லிம்களின் ராஜீய நிலைமையையும், எதிர்காலப் புதிய அரசியலைக் குறித்தும் தலைவர்கள் மனம்விட்டு விவாதித்து இறுதியாக யாவரும், "முஸ்லிம்கள் பல கட்சி கொண்டவர்களாயிருப்பினும், அவர்களது கோரிக்கை ஒன்றாகவே யிருக்கவேண்டுமென்ற முடிவிற்கு வந்தனர். தலைவர்கள் ஒன்று கலந்து ஏகோபித்த கோரிக்கையொன்றை தயாரித்தார்கள். இக் கோரிக்கையை ஸர் மிய்யான் முஹம்மத்ஷபி பிரேரபித்தார். அதை ஆதரித்து, மௌலானாக்களான முப்தி கிபாயதுல்லாஹ், மௌலானா முஹம்மது அலீ, அல்லாமா ஸர் முஹம்மத் இக்பால் ஆகியோர் பேசினர். மௌலானாமுஹம்மத் அலீ தமது நீண்ட அர்த்த புஷ்டி கொண்ட பிரசங்கத்தினிடையே கூறியதாவது;—

முஸ்லிம்கள் ஈயா? தேனீயா?

ஹிந்துக்கள், முஸ்லிம்களை ஈயின் அந்தஸ்தில் வைக்க ஆசைகொள்கின்றனர். ஈயின் குணம், நல்ல ஆகாரத்தின் மீது உட்கார்ந்து அதை அசுத்தப்படுத்தி அருந்த அருகதையற்றதாக்கிவிடுகிறது. ஆம்; அவர்கள் நம்மை ஈக்களாகவே மதிக்கட்டும்! ஆனால், சாதாரணஈக்களல்லாது தேனீக்கள் போலவேகருதட்டும்! தேனீக்களாகியநாம், தேன்தயாரித்து அதை அருந்த ஹிந்துக்களுக்கு அனுமதிக்கிறோம்; ஆனால் அந்தத் தேன்அருந்தும் ஹிந்துக்கள் தேனை அருந்து

வதோடல்லாது, தேனீக்களையும் துன்புறுத்த முற்படுங் காலை, நிச்சயம் அவர்கள் தேனீக்களின் விஷக்கொடுக்கிலிருந்தும் பலன்பெற தயாராக இருக்கட்டும்!"

("ஹம்தர்த்" 3-1-29.)

தலைவர்களின் ஆதரிப்புகளுக்குப் பின், தீர்மானம் ஏகமனதாகநிறைவேறியது! "முஸ்லிம்களின் இந்த ஏகோபித்த கோரிக்கைகளை காங்கிரஸ் ஒப்புக்கொண்டால் அதனுடன் சேர்ந்து ஒத்துழைப்பது; இன்றேல், கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படும்வரை, காங்கிரஸோடும், அதிகாரவர்க்கத்தோடும் கடைசிவரை போராடுவது" என்றுதலைவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

முஸ்லிம் சர்வகட்சி மகாநாட்டின் கோரிக்கைகள்

முஸ்லிம் சர்வகட்சி மகாநாடு நிறைவேற்றி தீர்மானமாக கொண்டுவந்த 13-கோரிக்கைளின் முழு விபரமாவது:

1. இந்தியாவின் விஸ்தீரணம், ஜனத்தொகை, பாஷை முதலியவைகளைக் கவனிக்குமிடத்து, இந்தியாவிற்கு "சமஷ்டி அரசாங்கம்" தான் சிறந்தது. இதில் சுதேச சமஸ்தானங்களும் சேர்ந்திருக்க வேண்டும். ஆனால், அச்சமஸ்தானங்களுக்குத் தங்கள் உள்நாட்டு விஷயங்களிலே பூரண சுயேட்சை இருக்க வேண்டும்! மத்திய அரசாங்கத்திற்குள்ள அதிகாரம், எல்லா மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் பொதுவான காரியங்கள் மட்டிலும்தான் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அதுவும் அரசியல்திட்டத்தின் மூலமாக அவ்வரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. மதசம்பந்தமான காரியங்களில் தலையிடக்கூடிய எந்த தீர்மானத்தையும், மசோதாவையும், திருத்தத்தையும்

மாகாண, மத்திய சட்டசபைகளில் கொண்டுவரக்கூடாது! அவ்வாறு கொண்டுவந்தால், அந்தச்சட்டம்,தீர்மானத்தால் பாதிக்கிற எம்மதத்தவர்களாயினும் சரி; அவர்கள் ஹிந்துக்கள் - முஸ்லிம்களாயிருந்தாலும் சரியே! அச்சட்டசபைகளிலிருக்கும் அச்சமூகத்தவர்களில் முக்கால்வாசி பேருக்கு அதிகமானவர்கள், அதனைப் பிரேரிப்பதை அல்லது விவாதிப்பதை அல்லது சட்டமாக்குவதை எதிர்த்தால் அதனை விட்டு விடவேண்டும்.

3. தற்சமயம் இந்தியச்சட்டசபைகளில், முஸ்லிம்கள் தனித்தொகுதியாகத் தேர்தல் நடத்தி அங்கத்தினராகின்றனர். இதை, முஸ்லிம்கள் தாமாகவே 'வேண்டாம்' என்று கூறுகிறவரை இம்முறையை கடைசிவரை மாற்றக்கூடாது.

4. தற்போது இந்திய சட்டசபைகளிலும் சரி; இதர சட்டப்படியுள்ள சபைகளிலும் சரி, முஸ்லிம்களுக்கு தனித்தொகுதிகளும், பிரதிநிதித்துவமும், தேர்தல் முறையும் இருப்பது அவசியமாக இருக்கிறது. அதுதான் சரியான ஜனநாயகமுமாகும்

5. வருகிற புதுச் சீர்திருத்த அரசியல் திட்டத்திலே முஸ்லிம்களுடைய உரிமைகளும், பாத்தியதைகளும்,போதுமான அளவிற்குப்பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி முஸ்லிம்களுக்குத் திருப்தி ஏற்படாதிருக்கும் வரையில், நிபந்தனையுடன் - அல்லது நிபந்தனை யில்லாமலே கூட்டுத்தொகுதியின் மூலமாகத் தேர்தல் நடைபெறுவதை முஸ்லிம்கள் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார்கள்.

6. ஆகவே மேற்கண்ட நோக்கம் நிறைவேறுவதற்காக, மத்திய சர்க்காரிலும், மாகாண சர்க்கார்களிலும், ஏற்படும் மந்திரி சபைகளில் முஸ்லிம்களுக்கு நியாயமான பங்கிருக்க வேண்டும்.

7. முஸ்லிம் ஜனத்தொகை பெரும்பான்மையாக உள்ள இடங்களில், அவர்களது பெரும்பான்மை அந்தஸ்திற்குப் பங்கம் வாராத முறையில், அங்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தையும், தனித்தேர்தல் முறையையும் ஏற்படுத்த வேண்டும். சிறுபான்மையினராக உள்ள மாகாணங்களில் தற்போது முஸ்லிம்கள் அடைந்து வருகிற விகிதாசாரம் குறையக்கூடாது!

8. மத்திய சட்டசபையில் முஸ்லிம்களுக்கு 33⅓-சதவிகிதம் பிரதிநிதித்துவமளிக்கவேண்டும்.

9. சிந்து மாகாணம் பம்பாயுடன் சேர்ந்திருப்பதற்கு பாஷை, பழக்கம், ஆசாரம், வர்க்கம் ஆக எவ்விதத்திலும் ஏற்றதாக இல்லாதிருப்பதால், சிந்துவை அவசியம் தனி மாகாணமாகப்பிரித்து, இதர சிவில் மாகாணங்களிலுள்ளது போல், சட்டசபை முதலியன ஏற்படுத்த வேண்டும். சிறுபான்மையினரான ஹிந்துக்களுக்கு, ஹிந்துக்கள் பெரும்பான்மையினராக உள்ள மாகாணங்களில், முஸ்லிம்கள் அடையும் சுயேட்சை விகிதாசாரத்தைப் பார்க்கிலும் அதிகமாகவே கொடுக்கப்பட வேண்டும்.

10. பலுசிஸ்தான், எல்லேபுறம் ஆகிய மாகாணங்களுக்கும் சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டு வருவது அவசியமாகும்! அங்குள்ள சிறுபான்மை வகுப்பினருக்கு முஸ்லிம்கள் சிறுபான்மையினராகஇருக்கும் மாகாணங்களில் அனுபவித்து வருகிற உரிமைகளை அளிக்கவேண்டும்.

11. இந்தியாவிலுள்ள தற்போதைய ராஜீய நிலைமையையும், வாழ்க்கை முறைகளையும் கவனிக்குமிடத்து, முஸ்லிம்களுக்கு அவர்களது மொழி, கல்வி, மதம்பர்ஸனல் லா (Persowal Law) முஸ்லிம் 'வக்பு' சொத்துக்களைப்

பாதுகாத்து அபிவிருத்தி செய்தல் முதலிய காரியங்களில் பாதுகாப்பு ஏற்பட வேண்டும். அத்துடன் முஸ்லிம்களது ஜனத்தொகை விகிதாசாரத்திற்கேற்றவாறு அரசாங்க உத்தியோகமும், இவர்களுக்குக் கிடைக்க வேண்டும்.

12. இந்தியாவின் சமஷ்டி அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தபின் அதில்சேர்ந்துள்ள மாகாணங்களும், சமஸ்தானங்களும், "அதனைத் திருத்தவேண்டும்" என்று ஏக மனதாகக் கேட்டுக்கொள்ளாதவரை அதனைமாற்றக்கூடாது!

13. மேற்காணும் பாதுகாப்புகளை அங்கீகரிக்காத எந்த அரசியல் திட்டத்தையும், எவர் அதை இயற்றிய போதிலும், அதனை இந்திய முஸ்லிம்கள் அங்கீகரிக்கமாட்டார்கள்.

இவைதாம், "இந்தியமுஸ்லிம்களின் 13-கோரிக்கைகள்" எனப் பின்பு பிரசித்த மடைந்தன. இதைமட்டும் ஹிந்துத்தலைவர்கள் ஒப்புக்கொண்டு, நியாயமான கோரிக்கைகளுக்கு சம்மதித்திருப்பாராயின், முஸ்லிம்கள், குடியேற்ற நாட்டந்தஸ்த்திற்குக்கூட ஒத்துழைத்திருப்பர். ஆனால், சுயநல ஹிந்துத் தலைவர்கள் கிஞ்சிற்றும் இதற்கு ஒத்துவரவில்லை! இறுதியாக முஸ்லிம்கள் தமது, தீர்மானப்படி, நிர்ப்பந்தமாக, அதிகார வர்கத்தினிடம் கோரிக்கைகளைக் சமர்ப்பித்து, பிரதம மந்திரி அளித்த வாக்குறுதிபடி பெரும்பாலான கோரிக்கைகளைப்பெற்று வெற்றி கண்டனர்.

ஜின்னாஹ், ஷபீ ஐக்கியம்

முஸ்லிம் சர்வ கட்சி மகாநாடு வெற்றியோடு முடிந்ததும், லீகிலிருந்த பிளவுகள் அகற்றப்பட்டன. முக்கியமான இரு லீகுகளான ஜின்னாஹ் லீக், ஷபீ லீக் இவ்விரு

லீகுகளுக்கிடையே இருந்துவந்த பெரும் பிளவு டாக்டர் ஸைபுத்தீன் கிச்லு அவர்களின் அபாரமுயற்சியினால் ஒன்று பட்டு விட்டது. கிழக்கும், மேற்கும் போலிருந்த ஜனுப் ஜின்னாஹ்வும், ஸர். முஹம்மத்ஷபி யும் ஒருவரையொருவர் கட்டித்தழுவிக் கொண்டனர். இதைக்கண்டு முஸ்லிம் உலகே புளகாங்கித மடைந்தது.

லீகின் விசேஷக் கூட்டம்

1929, மார்ச்சு 3-ந்தேதியில், டில்லியில், ஜனுப் ஜின்னாஹ் அவர்களின் தலைமையில் முஸ்லிம்லீகின் விசேஷ கூட்டமொன்று கூடியது. அபுல்கலாம் ஆஜாத், ஜனுப் ஷேர்வானி, மௌலானா ஜபர்அலிகான் உள்பட இதர எல்லா முஸ்லிம் லீக் தலைவர்களும் வந்திருந்தனர். தலைவர், தமது தலைமையுரையை நிகழ்த்தும்போது, அரசிய லரங்கத்திலே நடைபெற்ற பூர்வோத்திரங்களை விளக்கி, "நெஹ்ரு ரிப் போர்ட் ஹிந்துசமூக அரசியல்திட்டமே! 1927-ல் முஸ்லிம் கவ்ன்ஸிலில்செய்த தீர்மானத்திற்குத் தலைகீழாக இது தயாரிக்கப்பட்டது. அதை முஸ்லிம்களல்லாத இதர சிறுபான்மையினரும் வன்மையுடன் கண்டிக்கின்றனரென்றும்" பொருள்பட பேசி முஸ்லிம் சர்வகட்சி மகாநாட்டில் செய்த தீர்மானத்தை யொட்டி, தாம் தயாரித்த அரசியல் நுட்பமும், நுணுக்கமும் கலந்த 14-கோரிக்கைகளை சபையினர் ஆதரிக்க வேண்டுமென்று கோரி, நெஹ்ரு திட்டத்தைப் பற்றிய நீண்டதொரு தீர்மானத்தை பிரரேபிக்க அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது:-

"கல்கத்தாவில் நடைபெற்ற சர்வகட்சி கன்வென்ஷன் மகாநாட்டிலே அ. இ. மு. லீகின் பிரதிநிதிகள், நியாயமான தமது நோக்கங்களையும், கோரிக்கைகளையும் எடுத்துக்காட்டி நெஹ்ரு திட்டத்திலே திருத்தம் வேண்டினர். அவர்கள்

எவ்வளவோ வாதாடியும், பிரயோஜனப்படாது அத்திட்டம் சர்வாதிகாரத்துடன் நிறைவேற்றப்பட்டதைக் குறித்து, அ. இ. மு. லீக், அத்திட்டத்தையே நிராகரித்து விட்டது! மேலும், அ. இ. மு. லீக் நன்றாக ஆராய்ந்தபின், முஸ்லிம் சமூக பிற்கால நலனையும் நினைவிற்கொண்டு, முஸ்லிம் சர்வ கட்சியினால் ஒப்புக்கொள்ளப்பட்டு, இந்த லீகினால் அங்கீ கரிக்கப்பட்ட ஜனாப் ஜின்னாஹ் வின் 14-கோரிக்கைகளை அங்கீகரிக்காத எந்த அரசியல் திட்டத்தையும் முஸ்லிம்லீக் எக்காரணத்தைக்கொண்டும் ஒப்புக்கொள்ளாது!''

இத்தீர்மானத்திற்குப்பின், ஜின்னாஹ்வின் 14-கோரிக்கை களுக்கு ஆதரவு காட்டிப் பலர் பேசினர். பின்னர் அது நிறைவேறியது.

பிரசித்திப் பெற்ற பதினான்கு 'பாயிண்ட்ஸ்'!

சுருங்கக் கூறுமிடத்து, உண்மையாகவே, ஜனாப் ஜின்னாஹ் அவர்களின் இந்த 14-பாயிண்ட்கள், பிற்கால அரசியலுலகையே பெரும் கலக்கு கலக்கிவிட்டதென்பதை யாவருமறியலாம். இந்த 14-பாயிண்ட்கள், சுயநல ஹிந்துத் தலைவர்களை திக்குமுக்காடச் செய்துவிட்டன. எதிரிகள் ஏதேனும் சூழ்ச்சி செய்ய வியலாது அடித்துவிட்டன. எனவே, அந்த 14-பாயிண்ட்களின் விளக்கத்தை இவண் நோக்கலாம்:

1. இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டம் 'பெட ரல்' முறை ஆட்சியைக் கொண்டதாக யிருக்கவேண்டும். மாகாணங்களைப் பொறுத்த விஷயங்களுக்கெல்லாம் அவை களுக்கே அதில் சர்வாதிகாரம் இருக்கவேண்டும்.

2. எல்லா மாகாணங்களுக்கும் ஒரேவிதமான பூரண சுதந்திரம் கொடுக்கப்படல் வேண்டும்.

இதர சுயநல ஹிந்துக் கட்சிகளும் ஒப்புக்கொள்ளவே யில்லை. இந்தியா சட்டசபை, இராஜாங்க சபைகளிலுள்ள முஸ்லிம்கள் இந்தப் 14-பாயிண்ட்'களைப்பலமாக ஆதரித்து எல்லோரும் ஒப்புக்கொண்டதாக கையெழுத்திட்டு ஜூலை மாதமுதல் வாரத்தில் ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டிருந்தனர். அவ்வறிக்கையிலே காங்கிரஸூம், அதன் தலைவர்களும் முஸ்லிம் சமூகத்திற்கு இழைத்துவரும் இடையூறுகள் – இன்னல்கள் சதிகள் முதலியவை விளக்கப் பட்டிருந்தன.

துரோகிகளின் உதயம்!

சில முக்கியமான சமயங்களிலே தோன்றுவது சகஜம். அதே போன்று தோன்றினர், "ஜமீயத்-உல்-உலாமா" வைச்சார்ந்த சிலர்; ஆஜாத் அன்ஸாரி போன்று காங்கிரஸ் மீது மையல் கொள்ளத் தலைப்படவே, அவ் உலாமாச்சபை யிலே பெருத்த பிளவேற்பட்டது. உலாமாச் சபை, அலி சகோதரர்களையும், கிலாபத், லீக் கட்சிகளையும் ஆதரித்து வந்ததால் இந்திய முஸ்லிம்கள் அதை ஆதரித்து வந்தனர். ஆனால், மீர்ஜாபார்கள் கிளம்பி பிளவேற்படுத்தியதைக் கண்ணுற்ற சில முன்னேற்ற நோக்கங்கள் கொண்ட உண்மை மௌலானாக்கள், உடனே கான்பூரில் மௌலானா முஹம்மத் அலி அவர்களின் தலைமையின்கீழ்'ஜமீயத்துல்உலமா'மகாநாடு ஒன்று கூட்ட ஏற்பாடு செய்து, 1929 டிஸம்பரில் நடக்குமவ தென முடிவு செய்தனர். ஆனால், துரதிருஷ்ட வசமாக மகாநாடு அன்று மௌலானா உடல்நலிவு கொண்டமையால் தலைமைப் பீடத்திலமர்ந்து கொண்டு தமது பிரசங்கத்தை எழுதி இன்னொருவரைக் கொண்டு படிக்கச் செய்தார். பிறகு மகாநாட்டுக் கூட்டத்தில் ஜனப் ஜின்னாஹ் வின் 14-கோரிக்கைகளையும் ஆதரித்து தீர்மானம் செய்ததோடு

"அ. இ. ஜமீயத்-துல்-உலமா சபை" ஒன்று கான்பூரில் கிறுவினர். இன்றளவும்கூட இச் சபை லீக் கொள்கைகளை ஆதரித்து வருகிறது. அதேப்போன்று மத, விஷயங்களிலே லீகும் அச்சபையின் அபிப்பிராயங்களுக்கு ஆதரவளித்து வருகிறது. இம்மகாநாடு நடந்தசமயத்திலே, இதே மாதத்தில் லாஹூரில் கிலபாத் மகாநாடு கூடி, ஜின்னுஹ்வின் 14-கோரிக்கைகளை ஆதரித்து, முஸ்லிம்கள் இனி காங்கிரஸுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளக் கூடாதெனத் தீர்மானிக்கப்பட்டது. பெல்வாரில் நடந்த உலமாக்கள் மகாநாடும் ஜின்னுஹ்வின் 14-கோரிக்கைகளை ஆதரித்துத் தீர்மானம் செய்தது என்பதும் குறிப்பிடத் தக்கது.

முதற்கோணல், முற்றும் கோணல்!

அரசியல் சீர்திருத்தச் சட்டத்தை இந்தியாவிற்கு 1919-ல் அளிக்கும்போதே, அது அமுலில் வந்து பத்து வருடங்களுக்குப் பின் ஒரு கமிஷனை நியமித்து அரசியல் சீர்திருத்தச் சட்டம் ஒழுங்குபெற நடைபெறுகிறதா என்று பரிசிலனை செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தது. ஆனால், முதற்கோணல் முற்றும் கோணலாக, அது தோன்றியவுடனேயே அது உதவாக்கரையென்றும், அது அழிந்து அதிகச் சலுகைகள் கொண்ட சுயாட்சித் திட்டம் வேண்டுமென்றும் இந்தியாவிலுள்ள பலக் கட்சிகளும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிடவே, இவைகளைக்கவனித்து விசாரணை செய்ய ஸர். ஜான் ஸைமனைத் தலைமையாகக் கொண்டு ஒரு தூதுக்கோஷ்டி இந்தியா முழுவதும் சுற்றியதும் தூதுகோஷ்டியிலே ஒரு இந்தியர்கூட கிடையாதென்ற காரணத்தால் காங்கிரஸ், லீக் போன்ற கட்சிகள் கண்டனம் செய்ததும் முன்னடியாகவே விளக்கப்பட்டிருக்கிறது. எனினும், தூதுகோஷ்டியினர் லண்டன் சென்று தமது யாதாஸ்தை

28. வட்டமேஜை முதலாவது மகாநாடு (1930)

1930, டிசம்பர், 12-ந்தேதி லண்டனில் முதலாவது வட்டமேஜை மகாநாடு கூடியது. இந்தியப்பிரதிநிதிகள் ஒவ்வொரு சமூக, கட்சித் தலைவர்களும் அதில் கலந்து கொண்டனர். மகாநாடு பலவாரங்கள் தொடர்ந்து நடைபெற்றது. ஒவ்வொருவரும் தத்தமது அபிப்பிராயங்களை எடுத்துக் கூறினர். முஸ்லிம் தலைவர்கள் ஜனாப் ஜின்னாஹ் தயாரித்த 14-கோரிக்கைகளை அங்கீகரிக்க வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினர். அம்மாதிரி பேசியவர்களில் மௌலானாவின் பேச்சு பொன்னெழுத்துக்களிலே பொறிக்கக்கூடியது. ஒவ்வொரு இந்தியனும் ஆழ்ந்து நோக்கக் கூடிய கருத்துக்கள் அதிலே நிறைந்திருந்தன.

மௌலானாவின் வீர கர்ஜனை!

மௌலானா முஹம்மத் அலீ வட்டமேஜையிலிட்ட வீர கர்ஜனையின் சில பகுதிகளை இவண் தருகிறோம்.' இது 1930 டிஸம்பர் 19-ந்தேதியில் செய்த பிரசங்கத்திலுள்ளது;

"நான் இங்கு வந்தது வெறுங்கையுடன் திரும்பிச் செல்வதற்காக அன்று; அம்மாதிரி நான் செல்லவுமாட்டேன்! அடிமை நாட்டிலே சாவக்கூட எனக்கு இஷ்டமில்லை. இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுக்காவிடில் என்னை இங்கிருந்து சவமாகத்தான் நீங்கள் அங்கு அனுப்பிவைக்க முடியும்! அதேபோன்று நான் ஒரு அடிமை நாட்டில் சாவதைவிட சுதந்திர நாட்டிலே மனச்சாந்தியுடன் உயிர்விட அதிக விருப்பங்கொண்டுள்ளேன்."

"சுதந்திரம், சிநேகம், சமாதானம் இவைகளை நாடியே நாங்கள் இவ்வளவு தூரம் கடந்து இங்குவந்தது. அவைகளைப்

பெற்றே நாங்கள் திரும்பிச் செல்வோமென நினைக்கிறேன்.
அவையற்ற முறையிலே நாங்கள் திரும்ப நேரிடின், உங்க
ளுடன் சண்டை போடக்கூடிய எதிரிகளாகவே திரும்பு
வோம்.''

ரீடிங் பிரபுவை ஜெயிலில் அடைப்பேன்

ரீடிங் பிரபுவை ஜெயிலில் அடைப்பேன்
''அன்று ''ரீடிங் பிரபு'' வால் ஜெயிலில் தள்ளப்பட்ட
வர்களில் நானும், எனது சகோதரரும்தான் முதன்மை
பெற்றவர்கள். அதனால், நான் ரீடிங்மீது கோபப்படவில்லை.
ஆனால், அதிகாரம் என் கைக்கு வந்து, அச்சமயத்திலே
அதே ரீடிங் மீண்டும் அம்மாதிரி ஏதேனும் பிசகு செய்தால்
நானே ரீடிங்கைஜெயிலில் அடைப்பதற்கும் அதிகாரம்
இடம்தர வேண்டும்.''

''நான் இங்கு வந்தது ''குடியேற்ற நாட்டந்தஸ்து''
கேட்கவல்ல; அதுவேண்டுமென்றும் நான் விரும்பவில்லை!
பூரண சுதந்திரமேவேண்டும் இதையே நாம் 1927-ல் சென்
னையிலே நடந்த காங்கிரஸ் மகாநாட்டிலே கடைசி மூச்சு
கோரிக்கையாக்கினோம் 1928-ல் சர்வகட்சி மகாநாடு
கூடிற்று. அதிலே மோத்திலால்நேஹ்ரு கமிட்டியினரின்
''நேஹ்ரு திட்டம்''. அங்கீகாரம்பெற ஆலோசனைக்கு
வந்தது. அத் திட்டத்தின் முதல்பிரிவு ''குடியேற்ற
நாட்டந்தஸ்து'' பற்றியே! இன்று காங்கிரஸ் தலைவராக
விளங்கும் ஜவாஹிர்லால் நேஹ்ரு அச்சமயம் எனது காரிய
தரிசி! தந்தை காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, மகன்
(ஜவாஹிர்) பாடு பரிதாபமாயிருந்தது! சுதந்திரத்துடன்
பேசக்கூட உரிமையற்றிருந்தது. எனவே தான், ஜவாஹிர்
ஸ்தானத்திலே நான் வந்து நின்று குடியேற்ற நாட்டந்
தஸ்துப்பற்றி எதிர்த்து வாதாடினேன். ஜவாஹிரைக்கண்டு
நான் ஒன்றே ஒன்று கூறுவேன்; பூனையாய்ப் பிற, எலி
னும் உன் அப்பனுக்குப் பிள்ளையாய்ப்பிறந்திடாதே!என்று.''

28. வட்டமேஜை முதலாவது மகாநாடு (1930)

1930, டிசம்பர், 12-ந்தேதி லண்டனில் முதலாவது வட்டமேஜை மகாநாடு கூடியது. இந்தியப்பிரதிநிதிகள் ஒவ்வொரு சமூக, கட்சித் தலைவர்களும் அதில் கலந்து கொண்டனர். மகாநாடு பலவாரங்கள் தொடர்ந்து நடைபெற்றது. ஒவ்வொருவரும் தத்தமது அபிப்பிராயங்களை எடுத்துக் கூறினர். முஸ்லிம் தலைவர்கள் ஜனாப் ஜின்னாஹ் தயாரித்த 14-கோரிக்கைகளை அங்கீகரிக்க வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினர். அம்மாதிரி பேசியவர்களில் மௌலானாவின் பேச்சு பொன்னெழுத்துக்களிலே பொறிக்கக்கூடியது. ஒவ்வொரு இந்தியனும் ஆழ்ந்து நோக்கக் கூடிய கருத்துக்கள் அதிலே நிறைந்திருந்தன.

மௌலானாவின் வீர கர்ஜனை!

மௌலானா முஹம்மத் அலீ வட்டமேஜையிலிட்ட வீர கர்ஜனையின் சில பகுதிகளை இவண் தருகிறோம்.' இது 1930 டிஸம்பர் 19-ந்தேதியில் செய்த பிரசங்கத்திலுள்ளது;

"நான் இங்கு வந்தது வெறுங்கையுடன் திரும்பிச் செல்வதற்காக அன்று; அம்மாதிரி நான் செல்லவுமாட்டேன்! அடிமை நாட்டிலே சாவக்கூட எனக்கு இஷ்டமில்லை. இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுக்காவிடில் என்னை இங்கிருந்து சவமாகத்தான் நீங்கள் அங்கு அனுப்பிவைக்க முடியும்! அதேபோன்று நான் ஒரு அடிமை நாட்டில் சாவதைவிட சுதந்திர நாட்டிலே மனச்சாந்தியுடன் உயிர்விட அதிக விருப்பங்கொண்டுள்ளேன்."

"சுதந்திரம், சிநேகம், சமாதானம் இவைகளை நாடியே நாங்கள் இவ்வளவு தூரம் கடந்து இங்குவந்தது. அவைகளைப்

பெற்றே நாங்கள் திரும்பிச் செல்வோமென நினைக்கிறேன். அவையற்ற முறையிலே நாங்கள் திரும்ப நேரிடின், உங்களுடன் சண்டை போடக்கூடிய எதிரிகளாகவே திரும்புவோம்.''

ரீடிங் பிரபுவை ஜேயிலில் அடைப்பேன்

"அன்று ''ரீடிங் பிரபு'' வால் ஜெயிலில் தள்ளப்பட்டவர்களில் நானும், எனது சகோதரரும்தான் முதன்மை பெற்றவர்கள். அதனால், நான் ரீடிங்மீது கோபப்படவில்லை. ஆனால், அதிகாரம் என் கைக்கு வந்து, அச்சமயத்திலே அதே ரீடிங் மீண்டும் அம்மாதிரி ஏதேனும் பிசகு செய்தால் நானே ரீடிங்கைஜெயிலில் அடைப்பதற்கும் அதிகாரம் இடம்தர வேண்டும்.''

"நான் இங்கு வந்தது ''குடியேற்ற நாட்டந்தஸ்து'' கேட்கவல்ல; அதுவேண்டுமென்றும் நான் விரும்பவில்லை! பூரண சுதந்திரமேவேண்டும் இதையே நாம் 1927-ல் சென்னையிலே நடந்த காங்கிரஸ் மகாநாட்டிலே கடைசி மூச்சு கோரிக்கையாக்கினோம் 1928-ல் சர்வகட்சி மகாநாடு கூடிற்று. அதிலே மோத்திலால்நேஹ்ரு கமிட்டியினரின் "நெஹ்ரு திட்டம்''. அங்கீகாரம்பெற ஆலோசனைக்கு வந்தது. அத் திட்டத்தின் முதல்பிரிவு ''குடியேற்ற நாட்டந்தஸ்து'' பற்றியே! இன்று காங்கிரஸ் தலைவராக விளங்கும் ஜவாஹிர்லால் நேஹ்ரு அச்சமயம் எனது காரியதரிசி! தந்தை காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, மகன் (ஜவாஹிர்) பாடு பரிதாபமாயிருந்தது! சுதந்திரத்துடன் பேசக்கூட உரிமையற்றிருந்தது. எனவே தான், ஜவாஹிர் ஸ்தானத்திலே நான் வந்து நின்று குடியேற்ற நாட்டந்தஸ்துப்பற்றி எதிர்த்து வாதாடினேன். ஜவாஹிரைக்கண்டு நான் ஒன்றே ஒன்று கூறுவேன்; பூனையாய்ப் பிற, எனினும் உன் அப்பனுக்குப் பிள்ளையாய்ப்பிறந்திடாதே! என்று.''

"நட்பைசிதைக்க விடாதீர்கள்"

"ஒரு புதிய சுதந்தர நாடு பிறந்தா லொழிய நாங்கள் இந்தியா திரும்போம்! நஷ்டமான இந்தியாவை விட்டு அமெரிக்காவிற்குச் செல்லவும் நாங்கள் தயார்! ஏனெனின், அது பூரண குடியேற்ற நாட்டந்தஸ்தாய் விளங்குகிறது! பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்திடுவதாயிருப்பினும், அது இங்கேயே பலியாகட்டும்! வீணே நாம் பிரிட்டிஷ் நாட்டோடு கொண்டுள்ள நட்பை சிதைக்க விடாதீர்! அந்தரங்கத்திலே பிரிட்டன் மீது நமக்கு ஒருவித விஸ்வாஸமுண்டு. ஒன்று கூறுகிறேன், இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் நிலைபற்றி பிறிதொரு சமயம் விவரிக்கிறேன். இங்கிலாந்திலுள்ள பல தோழர்கள் என்னிடம் கேட்கின்றனர், "அரசியல் விஷயங்களிலே, முஸ்லிம் - ஹிந்து என்ற மதப் பிரச்னை ஏன்?" என்று.

மதம் மூடக் கொள்கை கொண்டதா?

"அரசியலுக்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லை என்கின்றனர் சிலர். அது தவறு, சுத்தத் தவறு! அரசியலை விட்டு மதத்தைப் பிரித்தால் அதன் அர்த்தம் தவறாகமாறும். 'மதம்' மூடநம்பிக்கையுமன்று; மதம்வெறும் சடங்குகளுமன்று. அதை வியாக்கியானப் படுத்தினால் 'வாழ்க்கை' என்ற பொருள் வரும், இது எனது சொந்த அபிப்பிராயமுங்கூட. நாகரீகம், உன்னதவாழ்வு, அரசியல்முறை இவையெல்லாம் இஸ்லாத்திலே பூரணமாகக் காண்கிறேன். இறைவனின் ஆக்ஞை சம்பந்தப்பட்டமட்டில், நான் முதலிலும் முஸ்லிம்; இரண்டாவதிலும் முஸ்லிம், கடைசியிலும் முஸ்லிமே! எனவே, நான் இஸ்லாமிய ஆசார, அனுஷ்டான, நாகரீக, அரசியலை விட்டு, நீங்கள் வசிக்கும் ராஜ்யத்திலோ, ஜாதியிலோ என்னால் கலக்க முடியாது! நீங்கள் வற்புறுத்தி-

னாலும் பயன் படாது! எனது சிரம், என்னைப் படைத்த இறைவனிட்ட கட்டளைக்கும், அவன் கடமைக்கும் சாய்ந்து பணியுமே யன்றி, மாட்சிமைத் தங்கிய மன்னருக்கோ எனது தோழர் டாக்டர் முஞ்சேயிக்கோ எக்காலத்தும் பணிந்து நிற்காது!"

தேசீயம் பிரிக்கிறது: இஸ்லாம் இணைக்கிறது!

"தேசீயம் என்கிற பதத்தை நான் வெறுக்கிறேன்; ஏனெனில், நான் ஒரு முஸ்லிம்! இறைவன் படைத்த மனிதர்களை, பேயால் படைக்கப்பெற்றவர்கள் எனத் தேசீயம் போதிக்கும் தோரணையிலிருக்கிறது. தேசீயம் எங்களைத் துண்டு துண்டாகப் பிரித்து விடுகிறது. ஆனால் எங்கள் இஸ்லாம் நம்மெல்லோரையும் ஒன்றாக இணைக்கிறது."

"100-க்கு 25% விகிதம் முஸ்லிம்களாகவும் 66% விகிதம் ஹிந்துக்களாகவும், இதே விகிதப்படி இந்தியா வெங்கணும் முஸ்லிம்கள் மைனாரிட்டியாகவே, ஹிந்துக்கள் மெஜாரிட்டியாகவே இருந்திருப்பின், எனக்கு 'நம்பிக்கை' என்ற ஒரு ரேகைகூட தென்பட்டிராது. நண்பர் முஞ்சே, வாழும் மாகாணத்தில் [மத்தியமாகாணத்தில்] முஸ்லிம்கள் 4 விகிதமா யிருக்கின்றனர். 'அதேபோன்று, முஸ்லிம்கள் 93 விகிதமாக வாழக்கூடிய நண்பர் அப்துல்லையும் வாழும் [எல்லைப்புறம்] மாகாணங்கள்போல அநேகமுண்டும். முஸ்லிம்கள் முதன்முதலில் குடியேறிய பழைய சிந்துமாகாணமிருக்கிறது, அங்கு முஸ்லிம்கள் 75-விகிதம் உள்ளனர்' பஞ்சாபில் 56-விகிதம். வங்காளத்தில் 54 விகிதம்! அது எங்களுக்கு இரட்சிப்பு அளிக்கின்றது. ஏனெனில் ஹிந்துக்கள் மெஜாரிட்டியாக உள்ள மாகாணங்களிலே நாம் முஸ்லிம்களை பிணை ஆட்களாக அளித்திருப்பதுபோல், நாமும்

நமது மெஜாரிட்டி பகுதிகளிலே பிணை ஆட்களை வேண்டு கிறோம்!''

ராம ராஜ்யத்திலேகூட 'பெரும்பான்மையினர்' ஆட்சிசெய்தது கிடையாதே!

''இந்தியாவில் செய்யப்பட்ட முதல் தப்பு பெரும் பான்மையினர் கையில் ஆட்சியை விட்டதே! இதற்குமுன் இந்தியாவை 'பெரும்பான்மையினர் என்ற ஹோதாவிலே ஆட்சிசெய்தது கிடையாது! ராமராஜ்யத்திலேகூட பெரும் பான்மையினர் ஆட்சி கிடையாது! இருந்திருப்பின் ராமர் வனவாசம் செய்யவேண்டிய காரண மேற்பட்டிராது! ராஜ்யங்களைச் சூதாடித் தோற்ற பாண்டவ கௌரவர்கள் கூட 'பெரும்பான்மையினர்' ஆட்சியை ஸ்தாபிக்கவில்லை! மஹ்மூத் கஜ்னவி, அக்பர், ஔரங்கஜீப் ஆகிய கீர்த்திபெற்ற முஸ்லிம் அரசர்கள் ஆண்டகாலத்தில்கூட 'பெரும்பான்மை யினர்' ஆட்சியில்லை! சிவாஜி காலத்திலுமில்லை! ரஞ்சித்ஸிங் பாஞ்சாலத்தை ஆண்ட காலத்திலுமில்லை! அதிகமேன்? இர்வின் காலத்திலும்கூட 'பெரும்பான்மையினர்' ஆட்சி யில்லை!

இரண்டும் இரண்டும் ஐந்தாகுமா?

''இரண்டும் இரண்டும் ஐந்து'' என்று 51-பேர் கூறி இரண்டும் இரண்டும் நான்கே என 49-பேர் மறுக்கினும் பெரும்பான்மையினரான 51 பேர் கூறுகிறபடி இரண்டும் இரண்டும் ஐந்துதான் என்று கூறிவிட முடியாது! 'பெரும் பான்மையினர்' கையில் ஆட்சியை ஒப்படைக்கிறவர்களுக்கு சிறுபான்மையினராகிய நான் கேட்கிறேன்! ஹிந்துக்கள் பெரும்பான்மையினராயுள்ள இடங்களிலே முஸ்லிம்கள்மீது அவர்கள் ஆட்சி செலுத்தட்டும்! ஆனால், முஸ்லிம்களின்

அதிருஷ்ட வசமாக, முஸ்லிம்களும் பெரும்பான்மையின ராக வாழும் இடங்களும் உள்ளன என்பதை ஞாபக மூட்டு கிறேன்!"

இந்தியாவிற்கு ஜின்னாஹ் பிரதம மந்திரி

இந்தியகவர்ன்மெண்டிலே தற்சமயம் மூன்றுமெம்பர்க ளுளர். அவர்களிலிருவர் என்னைப்போல சற்று வெளிர் நிறமாயுள்ளனர். மூன்றுமவர் சற்று கருப்பு! அவர்களிலிரு வர் நான் இங்கிலாந்தில் மாணவனாயிருக்கும்போது நிலைத்த நண்பர்கள். மூன்றுமவரும் அக்காலத்திலே லண்டனில்தான் படித்தவர். இவர்கள் சேனையை நிர்வகிக்கக் கூடுமானால், ஸர். தேஜ் பஹாதூர் ஸப்ரு அல்லது ஸர். முஹம்மத்ஷபி அல்லது ஜனாப்ஜின்னாஹ் இவர்களி லொருவர் ஏன் இந்திய பிரதம மந்திரியாக இருக்கலாகாது? ஏன் சேனா நிர்வாகம் புரிய இயலாது?"

பேச்சிலே சலிப்பு தட்டியதா?

"என் பிரசங்கத்தைக் கேட்டு உங்களுக்குச் சலிப்பு தட்டியிருக்கலாம்! ஆனால், என்னைப் பொறுத்த வரையிலே நான் அனைத்தும் பேசிவிட்டேன்; அத்துடன் களைப்பையும் உண்டாக்கிக்கொண்டேன்! இப்பொழுது பேச்சைமுடித்து எனது ஆசனத்திலமரப் போகிறேன்! அக்கிராசனாபதி அவர்களே! இங்கிலாந்து அடைந்த சுதந்திரம்போல் இந்தியா வும் அடையாதவரை, மறுபடியும் இனி என்னைப் பேசும்படி வற்புறுத்த மாட்டீர்களென நம்புகிறேன்"

மௌலானாவின் மணிமொழிகளைப் போல், இவ்வளவு அச்சமின்றி, நிர்த்தாட்சண்யத்துடன் அங்கு வேறு எந்தத் தலைவர்களும் பேசவேயில்லை. 12–11–30 முதல் 19–1–31 வரை ஆக 38-நாட்கள் மகாநாடு கூடியும், உருப்படியான முடிவிற்கு வர இயலாது போயிற்று! மகாநாடு காலவரை

யறையின்றி ஒத்திவைக்கப்பட்டாலும், இந்தியத் தலைவர்களின் உள்ளக்கிடக்கை என்னவென்பதை அதிகார வர்க்கத்தினர் ஒருவாறு லக்ஷித்துக்கொண்டனர்.

பிரதமர் மாக்டனல்ட் அறிக்கை!

மகாநாடு ஒத்திவைக்கப் பட்டாலும், இந்தியாவிற்குத் தாங்கள் கொடுக்க உத்தேசித்துள்ள அரசியல் சீர்திருத்தத்தைப்பற்றி அதிகார வர்க்கத்தினரின்சார்பாக பிரதமமந்திரி மாக்டனல்ட் 1931, ஜனவரி மூன்றுவது வாரத்திலே ஒரு அறிக்கை வெளியிட்டார். அதன் முக்கிய சாராம்சம் கீழே தரப்படுகிறது:-

"மன்னர்பிரான் சர்க்காரின் நோக்கம் என்னவெனில், இந்தியாவில் மாகாண, மத்தியசட்டசபைகளுக்குப் பொறுப்பாட்சி கொடுக்கவேண்டுமென்பதும், அச்சட்டம் அமுலுக்கு வரும் இடைக்காலத்திற்கு என்னென்ன பாதுகாப்புகள், அவசியங்கள் தேவைப்படுமென்பதும், சிறுபான்மையினருடைய அரசியல் சுதந்திரங்கள், உரிமைகளை பாதுகாக்க என்னென்ன செய்யவேண்டுமோ, அவைகளை முன்கூட்டிச்செய்து வைக்க வேண்டுமென்பதும், தற்காலீக ஏற்பாடாக செய்து வைக்கப்படும் பாதுகாப்புகள், புதிய அரசியல் திட்டத்திலே எவ்விதப் பாதகமும், தடையும் ஏற்படாதவாறு அமைக்கப்பட வேண்டுமென்பதுமேயாகும்."

இவ் வறிக்கை வெளியான பிறகே இந்திய தலைவர்கள் இந்தியா திரும்பினர். ஆனால், மௌலானா மஹம்மத் அலி மட்டும் கடும் நோய்காரணமாக அங்கேயே தங்கிவிட்டார்.

மறைந்த மாணிக்கம் மௌலானா!

மௌலானாவின் நோய் வரவர வலுத்தது! "சுதந்திரமற்ற இந்தியாவிலே சாவதைவிட சுதந்திரமுள்ள இங்கிலாந்திலே சாவதுமேல்" என்று மௌலானா அன்று கூறியதை

இறைவனும் ஏற்றுக்கொண்டான் போலும்! என்னே ஆச்சரியம்! இறுதியாக மௌலானா தமது விருப்பப்படியே பாருலகம் பரிதவித்துநிற்க, முஸ்லிம் உலகம் மனம்பதைத்து நிற்க, 1931 ஜனவரி 4-ல் லண்டனிலேயே தமது உயிரை நீத்தார். (இன்னலில்லாஹி) லண்டனில் உயிர் நீத்த மௌலானாவின் பூதவுடல் "பைத்துல் முகத்தஸ்" (ஜெருஸலம்) நகருக்குக் கொண்டு வரப்பட்டு, இலட்சக் கணக்கான மக்களின் பிரார்த்தனையுடன் ஜனவரி 23-ல் நல்லடக்கம் செய்யப்பட்டது! மௌலானாவின் வாழ்க்கை நமக்கு ஒரு பாடம்! இறைவன் நம்பினின்று நமது மௌலானாவைப் பிடுங்கிக்கொண்டான். எனினும், அவனருளால் கோடிக்கணக்கான மௌலானாக்கள் மீண்டும் உதயமாகட்டும்!

29. முஸ்லிம்லீகின் 21-வது மகாநாடு (1930)

அ. இ. மு. லீகின் 21-வது மகாநாடு இலாஹாபாத்திலே 1930 டிஸம்பர் 30-ந்தேதி நடக்கும்போது, முக்கியத் தலைவர்களெல்லாம் லண்டன் வட்டமேஜை மகாநாட்டிலே கலந்து கொண்டிருந்தனர். எனினும், மகாநாடு வழக்கப்படி வெகு விமரிசையாகவே நடைபெற்றது. மகாநாட்டின் தலைவராக ஒப்பற்ற கவி, ஆசிய ஜோதி! அல்லாமா டாக்டர் ஸர். முஹம்மத் இக்பால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது முஸ்லிம் சமூக சரித்திரத்திலேயே பெரும் விசேஷமாயமைந்திருந்தது. இம் மகாநாட்டிலே விசேஷமாகக் கருதக்கூடியது அல்லாமா வின் தலைமையுரையே! அவர் தலைமையுரையிலே, இந்தியாவிற்கும், முஸ்லிம்களுக்கும் உள்ள தாரதம்மியங்களைத் தக்க ஆதார பூர்வமாக விளக்கி, முஸ்லிம்கள் இந்திய நாட்டிற்கென்று செய்துள்ள மட்டற்ற நன்மைகளையும் எடுத்துக்காட்டி, இந்தியாவிலே இன்றுள்ள ஹிந்து-முஸ்லிம் பிரச்னையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க இந்தி

யாவைத் துண்டிப்பதே சிறந்தவழி யெனத் தக்க மேற்கோள்களுடன் எடுத்துக் விளக்கிவைத்தார்.

"பாக்கிஸ்தான்" பிதா!

இன்று எழுந்துள்ள முக்கியப்பிரச்னையான "பாக்கிஸ்தான்" வித்தை முதலில் விதைத்தவர் கவியரசர் இக்பால் அவர்களே! இந்தியாவைத் துண்டாடி முஸ்லிம்களுக்கென "தனிநாடு" ஒன்று வேண்டுமென்று துணிந்து கோஷித்து இந்திய முஸ்லிம் சமூகத்திலே ஒரு புதிய சகாப்தம் உண்டு பண்ணச்செய்த பெருமை பாக்கிஸ்தானின் பிதா அல்லாமா இக்பாலுக்கே உரித்தானது. இந்தியாவைத் துண்டாடி முஸ்லிம் நாடு தனியாகப் பிரியும்போது ஏற்படும் நன்மைகளைப்பற்றி அவர் குறிப்பிடும்போது கூறியதாவது,

என் பாக்கிஸ்தான் வேண்டும்?

"நமது நாட்டிலே முஸ்லிம்கள் சிறுபான்மையினராக எளியவர்களாக இருக்கின்றனர். இப்பிரச்னை இன்று மிக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது! எந்த சமூகமாயினும் சரி, அது இன்னொரு சமூகத்தின்பால் குரோதம்–கபடம் விரோதம் கொண்டிருக்குமானால்; அது இன்றில்லாவிடினும் நாளை நிச்சயம், தாழ்ந்து - சீர்குலைந்து - அழிந்தேபோகுமென்பது திண்ணம்! திண்ணம்!!"

"இன்றுள்ள சமூக வேற்றுமைகள் இன்னமும்வலுத்து எங்கும் வியாபித்துவிற்குமேயானால், பிறகு ஹிந்துஸ்தானம் போன்ற ஒரு சிறந்த தேசத்திலே, எல்லோருக்கும் உரித்தான பரிபூர்ண நிர்மாணத் திட்டங்களை ஏற்படுத்துவதென்பது குதிரைக்கொம்பாக வந்துமுடியுமென்பது உறுதியே!"

இந்தியா ஒரு "காட்சி சாலை"

"ஹிந்துஸ்தானம் எல்லா சமுதாயத்தினரையும் ஒரே வாழ்வு முறையிலே ஐக்கியப்படுத்த யோக்கியதை யின்றி

இருக்கிறது. ஐக்கிய மாகாணம் ஒரு தனி ரகமெனலாம்; எனினும் எல்லா மாகாணங்களும் ஐக்கிய மாகாணம் போலாவது துர்லபம். பாஷைகள் பல, வகுப்புகள்பல, ஆசாரங்கள் பல, மதங்கள் பல; அனுஷ்டானங்கள் பல ஆக பற்பலவித நூதனமாய், ஒரு நூறு மைலுக்குள் பலவிதமாயுள்ள இந்தியாவை ஒரு "காட்சி சாலை" என்பின் அது மிகையாகாது! அந்த வகையிலுள்ளது இந்த பிரமாண்டமான ஹிந்துஸ்தானம். எனவே, பற்பல விதங்கொண்ட மக்களை ஒரே கூட்டுறவுப் பண்ணையில் இறுக்குவது முடியாத காரியம்! இதுவரை அதற்கென உழைத்ததும் கானல் நீராயிற்று! முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதைமாதிரி."

ஹிந்துக்களே ஒன்றுபட்டு வாழ்ந்ததில்லை!

"சுருங்கக் கூறமிடத்து; ஹிந்துக்கள்கூட ஒரே ஜாதியினராய், ஒரே கொள்கை கொண்டவர்களாய் ஒன்றுபட்டு வாழ்ந்ததில்லை! எனவே, அதிகாரவர்க்கத்தினர் அளிக்கப்போகும் மெஜாரிட்டி ஆட்சியான குடியாட்சி முறையை, அரசியல் திட்டப்படி எல்லோருமே ஒப்புக்கொண்டு ஒன்றித்துப் போக முடியாது! வகுப்புவாரிப் பிரச்னைக்கொப்ப, ஒவ்வொருசாராருக்கும் பாத்தியதைகள் விசேஷமாக அளித்தேயாக வேண்டும்! எனவே,முஸ்லிம்களுக்கென இந்தியாவிலே 'முஸ்லிம் இந்தியா, என்ற ஒரு தனிப்பாத்தியதை-தனி நாடு-சிருஷ்டிக்கப்படுவது அத்தியாவசமானதே! அதற்கென கிளர்ச்சி செய்யும் முஸ்லிம்களின் கோரிக்கைகள் நியாயமானதே!"

இது டில்லி மகாநாட்டின் எதிரொலிதான்!

"அண்மையில் டில்லியிலே கூடிய முஸ்லிம் சர்வ கட்சி மகாநாட்டின் அடிப்படையான நோக்கமும் இதுவேதான்! அதன் தீர்மானங்களும் இந்நோக்கத்தின் அஸ்திவாரத்தின் மீதே எழுப்பப்பட்டன! எனவே, "முஸ்லிம் இந்தியா" திட்டப்படி நாமனைவரும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வந்து

விடுவோமேயானல், நம்மிலே பிளவு ஏற்படுவதோ அன்றி பிறர் நம்மை நசுக்கவோ முடியாது. அதற்குரிய முகாந்திரமும் ஏற்படாது! நாம் தூக்கத்தை விட்டுத்தள்ளி எழுவோமாக! சோம்பலைவிட்டுச் சீறிக் கிளம்புவோமாக!! இனி நமது இலட்சியத்தின் மீது நாம் குறிக்கோளாக நிற்கவேண்டும! சந்தர்ப்பம் கிட்டும்போது அதனைப் பயன்படுத்தி இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். இதுவன்றி, மாற்ற முறையிலே அரசியலமைப்பு ஏற்படுமாயின, நமது நினைவுகள் பகற்கனவாகிவிடும்! ஜாக்கிரதை! நம் இலக்ஷியப்படி அரசியலமைப்பு ஏற்பட்டுவிடின், பின் நமக்கு யாதொரு விதக் குறைவு மேற்படாது! நாமும் நிர்ப்பயமின்றி வாழலாம்! எனவே, இம் மகாநாடு இத் தீர்மானங்களை முழுமனதுடன் ஆதரித்து, அதை நடாத்திக் காண்பிக்க வேண்டும்" என்று கவியரசா கூறி முடித்ததும், மற்றும் பலர் பேசினர். பல முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு மகாநாடு இனிது முடிந்தது!

சகோதரர்களே! அன்று அல்லாமா இக்பால் விதைத்த "முஸ்லிம் இந்தியா" வித்துதான், இன்று செடியாகி, பூத்துக்காய்த்து பழமும் கொடுத்துவிட்டது. ஒவ்வொரு இந்திய முஸ்லிமும் உலகில் பாக்கிஸ்தானை மிகச் சிறந்த வல்லரசாக்க தன் தன் கடமையைச் செய்யவேண்டிய காலமிது! வித்திட்ட கவியரசனின் பூதவுடல் மறைந்து ஆண்டு பல ஆகிவிட்டாலும் அவரது சமாதி புனித (பாககிஸ்தான்) பூமியிலேயே இடம்பெற்றிருப்பது மிகப் பொருத்தமே. அம்மகாகவியின் கனவை நனவாக்கிய காயிதே ஆஜமையும் அவரைத் தலைவராகக்கொண்டு போராடி புனித பூமியைப் பெற்ற 10 கோடி முஸ்லிம்களையும் அவர் ஆத்மா பாராட்டுகிறது. நாமும் நமக்குச் சரியான லக்ஷியத்திற்கு வித்திட்ட அல்லாமாவுக்கும் அதை நிறைவேற்றித்தந்த அல்லாஹ்வுக்கும் நன்றிசெலுத்து முகத்தான் உண்மை முஸ்லிம்களாகத் திகழுவோமாக. ஆமீன்.

ஹமீது பிரஸ், தி-வி. p. I. C. No. 59. C. 1000